
# கொம்பறை



University of Jaffna
894.81105
KOM
135016(AR; Main)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாகமக் கிரியாபீடம்




This book was donated to the
University of Jaffna
by:
Thangarajah Sivapalu
*In memory of the late,*

**Prof. S. Vithiananthan**

(Former Professor of Tamil & Vice
Chancellor of the University of Jaffna)

* * *

This donation was made at the celebration commemorating the 10th anniversary of Prof. Vithiananthan in Toronto, Canada on May 15th 1999

ஆகமவிதிப்படி இந்துமத ... ர்த்தி ஹோமங்கள்
செய்வதற்கும் மற்றும் ... ர்த்தல் அத்துடன்
திருமணத்திற்கு தேவைய ... ம் நீங்கள் தொடர்பு

5 GREEN LEAF TERRACE
SCARBOROUGH, ON
M1B 4J6
**(416) 724-7180**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1998

வன்னிமண்ணை ஆண்ட இறுதித் தமிழ் மன்னன்

# மாவீரன் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன்



கி. பி. 1777 - கி. பி. 1811

2007
894.81105
KOM
AR
UNIVERSITY OF JAFFNA LIBRARY
ARCHIVES
135016
University of Jaffna
135016
Library
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா வன்னி நலன் புரிச்சங்கம்
## கனடா.
## Vanni Welfare Association of Canada.

தலைவர்:- க. கணபதிப்பிள்ளை   செயலாளர்:- சி. சிவலோகநாதன்   பொருளாளர்:- நடா. ஜெயச்சந்திரன்

உப தலைவர்:
க. இராஜலட்சுமி

உப செயலாளர்:
சு. மகேந்திரராஜா

நிர்வாக உறுப்பினர்கள்:

சி. யோகராசன்
கு. தேவராணி
ச. இராசேஸ்வரன்
பொன். தமிழ்மாறன்
செ. சுவேந்திரன்
க. பாலசிங்கம்
க. தனலிங்கம்
சே. சிவாசீலன்
கு. உதயகுமார்
ச. கேதீஸ்வரன்
இ. இராசமனோகரன்
டே. மரியதாஸ்
க. ஜெகராசா
த. பிரதீபன்
க. செழியன்

போஷகர்கள்:

ச.கு.ஸ்ரீதரக்குருக்கள்
ஜெயா இன்பநாயகம்
பி.எஸ்.சூசைதாஸன்
த. சிவபாலு
இ. சிவராசா

கொம்பறையில் இடப்பட்டுள்ள வித்துக்கள் சொந்தவித்துக்களே. உங்களது உள்ளத் தறைகளில் இவை விதைக்கப்படும்போது அறிவென்னும் விளைவாகி தேனமுதத் தமிழையும், தமிழ் மண்ணின் பெருமைகளையும், வன்னி மண்ணின் பாரம்பரியங்களையும் தேசமெல்லாம் பரப்பிவரும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர்கள் கனடா-வன்னி நலன்புரிச்சங்கத்தினர்.

அன்புத் தமிழ்க்கரங்களுக்கு உடைமையாக்கி தமிழினோர் சொத்தென முரசொலித்து எல்லோர் நெஞ்சத்திலும் மலரும் இந்தக் கொம்பறை மலர்........

தமிழ் மண்ணிற்காகவும், தமிழ் மொழிக்காகவும், இவற்றைப் பேணும் உடன் பிறந்த தமிழர்வாழ்வுக்காவும், தம்முயிரைத் தியாகித்த தூய தமிழ் நெஞ்சங்கட்கும், அங்கே அன்னியரால் உயிர்வருடப்பெற்ற பொதுமக்களுக்கும்,

**சமர்ப்பணம்**

மலர் தொடர்பான அனைத்துத் தொடர்புகட்கும்:-


**Comparaimalar**
9 Hancock - Cr
Scarborough, On
M1R 2A2.

**Comparaimalar**
64 Snow ball - Cr
Scarborough, On
M1B 1S1.

**Comparaimalar**
20 Graydon Dr #913
North York, On
M3A 3A1.


1998


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**வன்னிப்பிரதேசத்தில் நெல் மணிகள் சேமித்து வைக்க உபயோகிக்கும் நெற் களஞ்சியம் தான் "கொம்பறை" எனப்படும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னியன் கொடிக்கீதம்

வீரந்திகழ் கொடி வெஞ்சமர் வாட் கொடி
வெற்றி மணிக் கொடியே
பாரிலுயர் மன்னன் பண்டாரவன்னியன்
பண்பு நிறைக் கொடியே! உயர் பண்பு நிறைக்கொடியே!

மங்கல மஞ்சள் நிறத்திரு வாளுடன்
மாண்பு பெறப் பறக்கும்
செங்கதிரோன் ஒளி வீசிய செந்தமிழ்
வீர இசை பரப்பும் தமிழ் வீர இசை பரப்பும்

மேற்றிசை நாட்டின வெள்ளையர் வந்திங்கு
மேவு வணிபம் செய்தனரே - அவர்
பார்த்துப் பயந்து நடுங்கியே ஓடும்
மணிக் கொடி வாழியவே மணிக் கொடி வாழியவே!

ஆயிரம் மாயிரம் வன்னியின் வீரர்கள்
அடிதனில் வந்து நின்றே
தாயின் மணிக் கொடி தனை வணங்கிடும்
தனயர்கள் வாழியவே! தனயர்கள் வாழியவே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்பறை வாழியவே!

பிறந்த மண்ணில் சிறந்த வன்னி மண்ணே யெங்கும்
வளர்ந்த வெப்பல் முதிரை காயா பாலை மெய் பூண்டு
தவழ்ந்த முன்றில் தமிழ் மண்ணாடை போர்த்தி யென்
எழுந்த சிரசில் குவிந்தரு கீற்றுபைம்பூன் கொம்பறையே வாழி!

அளவினில் பெரிதும் சிறிதுமாய் அகத் தினில் மேலும் கீழுமாய்
தளத்தினில் நாற்செங் கோணமுடன் தளமேல் பரிதியும் கூம்பும்
வளத்தினில் ஈர்கெள்ளிடமும் கோவின்பாலொடு தேனும் வாகையும்
தரத்தினில் சிறக்க உறைவிடம் தந்திடும் கொம்பறையே வாழி!

முகப்பொலி தான் கொள்ளா சிறப்புடை வித்தகமாய் நல்
வைரப்பொலி தான் கொண்டு உயிர்ப்புடைக் கருவினையே
முழப்பொலி (வு)தான் சிறக்க நிறைவுறக் கங்காட்டியே
சிறப்பொலி வுடனே திகழ் முற்றத்துக் கொம்பறையே வாழி!

தாய் மண்ணிற்கோர் உயர் விதைப்பக மாய் தரணி போற்றிட
காய் பெருக்க விதையிறுக்கும் காலமதில் நிமிரும் கொம்பறையே
போய் விட்டாய் புகழ் விரிக்க வன்னியருட னாழி கடந்தே
சாய் (ந்)திடாமல் தமிழ் மணம் பரப்பும் கொம்பறையே வாழி!

முனைவினில் கொம்பறை முத்தான சொத்தென மூத்தோர் புகழ
நற்றமிழ் விதையினை நயம் பட பரவி முத் தமிழாக்கமாய்
தேசமெலாம் பிறந்திடும் தமிழர் நாவினில் தெவிட்டா அமுதமாய்
இன்பத் தமிழ் ஊற்றிடும் வன்னிக் கொம்பறையே வாழிய வாழியவே!

உயிரும் மெய்யும் சேர்ந் துன் னகத்தே வித்தாகிக் குன்றாப்
பொருளும் பெருக்கிச் சொல் விரிக்க விழைவாகி நித்திலமும்
தமிழும் மக்களும் உயர் பெறவே அறிவுக் குணவாகி என்றும்
மலரும் தேனமுதத் தமிழ்க் கொம்பறையே வாழிய வாழியவே!

கண்டே னிடமாறாக் கொம்பறையை வன்னியர் வளவினில்
கண்டே னிடமாறும் கொம்பறையை மானத் தமிழ்க் கரங்களில்
உண்டே னதன் சுவையைத் தெவிட்டா மலே உள்ளத்தால்
கொண்டே குறைவிலாப்பொருள் நிறைவாய கொம்பறையே வாழி!

பிறந்த மண்ணில் உன்வயதுக் கேதெல்லை என்றுரைத் தோரே
புகுந்த மண்ணில் உன்வய திரண்டெனச் செப்பினும் ஞாலத்தில்
மிகுந்த காலமிருந்துன் நற்றமிழ் விதைபரப்பி முத்தமிழ் காத்திட
சிறந்த ணிகள் நாற்றிடவரும் செந்தமிழ்க் கொம்பறையே வாழி!

...ஊற்று மைந்தன்

UNIVERSITY OF JAFFNA LIBRARY SRI LANKA
ARCHIVES



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்பறை போற்றி

கொம்பறை என்றறை
களப்பொலி காப்பறை
நம் விளை நெற்களை
நாளும் வைப்பறை - வாழுமே
வேளாண்மை விளைச்சல்
வெகுதானிய மணிகள்
ஆளால் அறுவடைகள்
ஏற்படும் பொழுது

நம் மண்ணில் நற்பறை
நாளும் ஒலித்திட
கொம்பறை போற்றி
கொண்டாடுவீர் தினம் - வன்னி
நல் தறைத் தோட்டம்
நிறைவுடன் விளையும்
ஏழ்மைப் பஞ்சம்
அகன்று நீங்கும்
இல்லறம் சிறந்து
இன் தமிழ் வாழும்

தெம்பும் துணிவும்
திறனாய் ஓங்கும்
துன்பம் சோதனை
துச்சமாய் போகும்
என்பும் தோலும்
எதிரியை வணங்கா
இலக்கினை மட்டுமே
ஆன்மா தேடும்

கொம்பிலும் கொடியிலும்
குடிமனை சமைத்தவன்
கம்பிலும் கல்லிலும்
அம்பிலும் வில்லிலும்
அரண் மனையே காத்தவன்
தமிழிலும் தமிழன்
திறனாய்வுகள் செய்தவன்
அமிழ்தெனத் தமிழை
அமை செய்தவன்
என்பதால் தமிழனின்

தாய் மொழி தமிழ் மொழி
தமிழரின் பழமொழி
வாய் மொழி வன்மொழி
வாழிய நம் மொழி
தேன் மொழி தொன் மொழி
தொல்காப்பிய தொல் மொழி
பா மொழி பொன் மொழி
பாவலர் பூ மொழி
மேன் மொழி மென் மொழி
மேதகு மற மொழி
யாழ் மொழி மறு மொழி
யாழ் சுர இசை மொழி
கோன் வளர் குல மொழி
குருகுலக் கனி மொழி
ஆரியத் தணிப்பிலும்
அசைபடா அருள் மொழி
ஓவியர் பார்வையில்
அழகிய தனி மொழி
மானிட முது மொழி
முதுமையில் மாமொழி
மணி மொழி முன் மொழி
மரபுடை மறை மொழி
அகத்திய அறிவொளி
அகராதி அரு மொழி
அறிவினைத் தரு மொழி
அகரமே இறை மொழி

இறைவனின் வழி மொழி
இன்புற அறி மொழி
என்றுமே தாய் மொழி
எங்களின் உயிர் மொழி
என்பதால் எம் மொழி
இருப்பிட வன்னியை
வாழ்த்தி வணங்குவோம்
வன்னி வாழ்ந்தால்
வாழ்வுறும் தாயகம்
எண்ணி மகிழ்வோம்
இனி யாவும் வெற்றியே!

- சிவா சின்னத்தம்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி......

ஈழத்தின் வன்னி மாவட்டத்தில் வாழ்ந்து, கனேடிய மண்ணில் குடியேறிய மக்களால் வெளியிடப்படும் கொம்பறை மலருக்கு ஆசிச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கொம்பறை வன்னி மக்களின் ஒவ்வொரு வீட்டிலும் காணப்படும் நெற்களஞ்சியமென விளக்கவேண்டிய நிலையில் எல்லாம் இன்று அழிந்தும், அழிக்கப்பட்டுமுள்ளது. வன்னிப்பிரதேச மக்கள் தாம் பிறந்த மண்ணைவிட்டு வெளியேறிய தற்காலிக நிலைமாறி மீண்டும் நம் தாய் மண்ணில் காலூன்றும் நாள்வரும். அதுவரை நமது மொழி, கலை, கலாச்சாரங்களைப் பேணிப்பாதுகாத்து எங்களது இளைய தலைமுறையினருக்குப் போதித்துவரும் உங்களது ஆக்கபூர்வமான பணி தொடரட்டும்.

எம்மவர்களில் வசதிபடைத்த ஒரு சிலர்மாத்திரம் மேலைத் தேசங்களில் வாழ்ந்த நிலைமாறி சென்ற இடமெல்லாம் எம்மவர்களே என்பதனைக் கண்கூடே கண்டவிடத்து என் மனம் எல்லையில்லா ஆனந்தமடைந்தது. அவர்கள் அங்கு பரவலாக வாழ்கின்றார்கள் என்பதல்ல முக்கியத்துவம் வாய்ந்தது. அவர்கள் எப்படி வாழ்கின்றார்கள் என்பதனையே நான் கூர்ந்தவதானித்தேன். கனடா வன்னி நலன்புரிச் சங்கம் ஒற்றுமையாகவும், மதிநுட்பத்தோடும் எமது மதம், மொழி, கலை, கலாச்சாரம், பிரதேச பண்பாடுகள் என்பவற்றைப் பேணுவதிலும், பாதுகாப்பதிலும், வளர்ப்பதிலும் தமது நேரத்தினையும், செல்வத்தினையும் செலவிட்டு வருகின்றது. இன்று மேற்குலகில் மிகக் குறுகிய காலத்தில் வீறுநடை போட்டுக் கொண்டிருக்கும் எம்மின நற் பண்பியல் கோலங்களின் சுவடுகள் எதிர்காலத்தில் பெருவிருட்சங்களாகி உலகப் பெருநிலப்பரப்பில் எல்லா இனமக்களதும் நன் மதிப்பைப் பெறுமென்பதில் எதுவித ஐயப்பாடுமில்லை.

வன்னி என்றால் நெருப்பு, வீரம் என பிரித்துப் பார்த்தால் பொருள் பெருகும் அத்துனைச் சிறப்புவாய்ந்தது. அங்கே குளமும், குளம்சார்ந்த விளைநிலங்களும், சுனைகளும், சுனைசார்ந்து கோவில்களும் என்றே அடுக்கில் குறையா இயற்செல்வ வளங்கொண்ட பசுமைக் காட்சிகள் நீங்கா நினைவுகளாகும். இன்று கனடாவில் ஏன் மேற்குலக நாடுகளில் பூமி சுழலும் வேகத்தினைவிடப் பொழுதுக்குப் பொழுது துயின்றெழும் காலையில் புதிதோர் விஞ்ஞானம் வீட்டு வாசலில் நின்று உள்வாங்கியிழுத்திட விளம்பரக் காகிதங்களாய் கதவில் தட்டும் சூழலிலும், பொருளாதாரம், குடும்பம் என்ற நிர்வகிப்புக்கே நேர வற்கடம் காரணமாய் வேகமாக ஆலையாடும் நீங்கள், உங்கள் வாரிசுகளது மன நின்மதிக்காகவாவது உங்கள் தாய் மண்ணிற்கு அவர்களையழைத்து, அவர்களும் அந்த இயற்கையழகைப் பகிர்ந்து நுகர வழி சமைக்க வேண்டும்.

இயற்கைச் செல்வம் குறையா திறைக்கும்
பாலும் தேனும் ஆறாய் ஓடும் - வளத்தில்
துஞ்சா நிலங்கள் சொரியும் விளைவு
மனைகள் தோறும் பொருளாய்த் தேங்கும்

வன்னியிலே இல்லை என்ற சொல்லேயில்லை. எல்லாம் பெற்றே நிறைந்த வாழ்வு என்றிருந்த மக்கள் வாழ்வில் தற்போது தோன்றியுள்ள பேரினவாதத்தின் அடக்கு முறை ஒடுக்கல்களினால் வளங்கள் அழிந்து, பொருள்கள் குறைந்து நலிவுற்றவராயினர்க்கு பொருளாதார ரீதியாக உயர் வாழ்வு கொடுக்க வன்னிச் சங்கத்தினால் எடுக்கப்பட்டுவரும் பொருளுதவி, கல்விசார் திட்டங்கள் விரிவடைந்து வெற்றிபெற எல்லாம்வல்ல இறைவனாசி கிட்டவேண்டும்.

திரு. சி. இராஜகுலேந்திரன்., FCMA
கொழும்பு-2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி....

உலகில் பாரிய சாம்பிராச்சியங்கள் பல பிரித்தானிய படையெடுப்பால் சரணடைந்தும் தோல்வியடைந்தும் கொண்டிருந்த வேளையில் வன்னி மன்னன் பண்டாரவன்னியனை போராட உந்திய சக்தியை எண்ணிப் பார்க்கையில் ஒரு விடயத்தை உணரத் தோன்றுகின்றது.

அன்னியருக்கு அடிமைப்பட்டு நாட்டையிழந்து அடிமையாக வாழ்வதைவிட கடைசிவரை போராடி இறப்பது மேன்மையானது என வன்னியின் மன்னன் எண்ணியிருக்க வேண்டும். இந்த முடிவில் தெளிவுடன்தான் அவன் களம் புகுந்திருக்கவேண்டும். இப்படியான முடிவுடன் போராடும் வீரர்களுக்கு வெற்றி அல்லது வீரமரணமே இறுதி முடிவாகும்.

இந்தப் போராட்டத்தில் வன்னியின் மன்னன் தோல்வியை களத்தில் தழுவியது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் எதிரி வஞ்சகமான போர் தந்திரங்களுடன் மட்டுமல்லாது நவீன போராட்ட ஆயுதங்கள், வாகனாதிகள், தொலைத்தொடர்பு சாதனங்களுடன் போராடும்போது வன்னி மன்னன் சாதாராண பாரம்பரிய ஆயுதங்களுடன் களப்பரீட்சயம் ஒன்றை மட்டும் தன்னுடன் சாதகமாகக் கொண்டு களம் புகுந்தால் போருக்கு போனதையே ஒரு வீரச்செயலாக நினைத்திருப்பான். தொடர்ந்த போராட்டத்தில் அந்தத் தளபதி வன்னி மன்னனின் திறமையை அறிந்திருப்பான். இந்தப் போராட்டத்தில் தான் வெற்றி பெற்றாலும் ஒரு மாவீரனுக்குக் கொடுக்க வேண்டிய கொடுக்கக்கூடிய உயர்ந்த மரியாதையைச் செலுத்த வேண்டியது தனது கடைமையென உணர்ந்துள்ளான். அதன் பலாபலன்தான் தனது வெற்றியையும் வன்னி மன்னனின் தனிச்சிறப்பையும் வெளிப்படுத்த கற்சிலைமடுவிலே நாட்டிய சிலையாகும். அந்தச்சிலையில் பொறிக்கப்பட்டிருக்கும் வார்த்தைகள் மிகவும் நுாதனமாகப் பிரயோகிக்கப்பட்டிருப்பது இரு பக்கத்திற்கும் வெற்றி என்ற சூழ்நிலையை உருவாக்கி நிற்கிறது.

இந்தச் சோகமான நிகழ்வில் தானும் ஒரு மனிதன் என்ற அடிப்படையில் செயல்பட்டு இந்த நிகழ்வை உலகின் ஒரு மூலையில் இடம் பெற்றுவிட்ட சாதாரண சம்பவமாக அழிந்து போகவிடாமல் சரித்திரமாக வேண்டுமென விரும்பியிருக்கிறான். அந்த வகையில் வன்னி மன்னன் வீரமரணத்தை தழுவியதோடல்லாமல் எதிரியால் பாராட்டப்பட்டு தோல்வியிலும் வெற்றியை கண்டிருக்கின்றான்.

இப்படியான ஒரு தியாக நிகழ்வை வருடா வருடம் நினைவு கூர்ந்து அம்மன்னனின் நினைவை உலகெங்கும் வியாபிக்க வைக்க உறுதி கொண்டிருக்கும் கனடா வன்னி நலன் புரிச்சங்கத்தின் முடிவானது நீங்கள் எல்லோரும் வன்னி மண்மீது கொண்டிருக்கும் அடங்காப்பற்றையே காட்டுகின்றது. அதற்கும் சிகரம் வைத்தாற்போல் அன்றைய தினத்தில் நீங்கள் வெளியிட இருக்கும் "கொம்பறை" மலர் வன்னி மன்னனின் புகழையும் அவன் ஆட்சி செய்த மண்ணின் வரலாற்றையும் உலகளாவிய ரீதியில் வாழும் தமிழர் மத்தியில் எடுத்து இயம்பி நிற்பதை நினைக்கையில் பெருமிதம் அடைகின்றேன். உங்களின் இந்த முயற்சியானது உலகில் பரந்து வாழும் எம்மவரின் நாளைய தலைமுறையினர் தமது வரலாற்றுப் பாரம்பரியத்தை அறிந்துகொள்ள ஒரு ஏதுவாக இருக்குமென்பதில் எதுவித அச்சமும் இல்லை.

அன்று முதன் முதலாக வித்தியானந்தாக் கல்லூரியின் அனுசரணையுடன் கற்சிலைமடுப் பாடசாலையில் பெரிய அளவில் நடாத்தப்பட்ட பண்டாரவன்னியன் நினைவு தின விழாவில் கற்சிலைமடு பாடசாலை மாணவர்கள் சார்பில் கலந்து கொண்டு கொட்டும் மழையில் கொடிக்கீதம் பாடிய காலம் தொடங்கி தொடர்ந்து வந்த விழாக்களிலும் ஏதோ வகையில் உங்கள் பலருடன் சேர்ந்து பங்கெடுத்தவன் என்ற வகையிலும் உங்களின் இந்த அரிய முயற்சி வெற்றி பெறவும் தொடர்ந்து வரும் காலங்களில் வன்னியின் முன்னேற்றத்திற்கான இன்னும் பல முயற்சிகளில் உங்களின் ஈடுபாட்டை காணும் ஆவலுடன் மனதார வாழ்த்துகிறேன்.

"மரம் வானளாவ வளரவேண்டியிருக்கலாம்-ஆனால்-
தான் வேரூன்றிய மண்ணை மறந்துவிடக்கூடாது"
குறிப்பாக அந்த எளிமையான வன்னி மண்ணை.

பொ.சிவரட்ணம், B. Sc.(Eng.)
அவுஸ்திரேலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி.....

வன்னி வழநாட்டின் பெருமையைப் பறைசாற்றும் கொம்பறை ஒன்றைக் கனேடிய மண்ணில் கட்டியெழுப்பியுள்ள வன்னி நலன்புரிச் சங்கத்தார்க்கு முதலில் எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். வீரம் விளையும் வன்னி மண்ணில் பிறந்து, செழுமையுடன் வளர்ந்து, கல்வியும் பயின்றோம். அதை மனத்திருத்தி இலண்டனிலும் வவுனியா முல்லைத்தீவு பாடசாலைகளை உள்ளடக்கிய பழைய மாணவர் சங்கம் ஒன்றைக் கடந்த ஆறு வருடங்களாக நடாத்தி வருகின்றோம். அந்தத் தகுதியுடன், எமது சகோதர சங்கத்திற்கு ஆசிச்செய்தியை வழங்குவதில் பெருமைப்படுகின்றோம்.

வன்னியின் மலருக்குக் கொம்பறை என்னும் பெயர் மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது. கொம்பறையா? என்ன அது? என்று புருவத்தைக் குவிப்பவர்க்கு, வளங்களைச் சேர்த்துவைத்து வாரிவழங்கும் வன்னி நாட்டின் பொக்கிஷம் என்று கூறுவதும் ஒருவகையில் பொருத்தமாகவே இருக்கின்றது. அதுவும் பண்டாரவன்னியனின் நினைவு நாளையொட்டி வன்னிவிழா எடுக்கும் இவ்வேளையில் கொம்பறை மலர் வெளியிடப்படுவது விழாவுக்கு மகுடம் வைப்பதுபோல் அமைகின்றது. இன்றைய சூழ்நிலையில் புலம் பெயர்ந்து எம் முகவரிகளைத் தொலைத்து நிற்கும் வேளையில் இத்தகைய விழாக்கள் தேவைதானா என்றும் சிலர் நினைக்கக்கூடும். கடலில் மழை பெய்வதுபோல நம் நாட்டில் பண்டாரவன்னியன் விழா எடுக்கும்போது அதனருமை பலருக்கும் புரிவதில்லை. அன்னிய நாடுகளில் இவ் விழாவை எடுக்கும்போது மொழி, பண்பாடு, வரலாற்று உண்மைகள் என்பவற்றை எமது பிள்ளைகள் தொடக்கம் ஏனையவர்களும் அறியும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

அன்னிய படையெடுப்புகளுக்கும் ஏகாதிபத்தியவாதிகளின் அடக்குமுறை ஆக்கிரமிப்புக்கட்கும் அன்று தொடக்கம் இன்றுவரை அடிபணிய மறுக்கும் வன்னி நாட்டின் தனித்துவத்தையும், புதைந்து கிடக்கும் சிறப்புப் புதையல்களையும் கொம்பறையிலிட்டு எல்லா இடங்களிலும் விதைக்க வேண்டும். வன்னியைப் பிரகடனப்படுத்தும் தனித்தன்மையான அடையாளத்துடன் வந்தாரை வரவழைத்து வழிகாட்டுவது வன்னி என்பதனையும் பிரகடனப்படுத்த வேண்டும். விருந்தோம்பல் மட்டுமன்றி, அழியா நட்புக்கும் இலக்கணம் வன்னி என்பதனைச் சுட்டிக்காட்டி நாமெல்லாம் பெருமைப்படவேண்டும். அன்று நயவஞ்சகத்துடன் நடந்து தன்னுயிருக்கே உலைவைத்தவனை இறுதிவரை நட்போடு அணைத்தவன் பண்டாரவன்னியன். நட்பின் சிறப்புக்கு இதைவிடச் சாண்றெதற்கு.

அன்றுமட்டுமின்றி இன்றும் மும்முனைத்தாக்குதல் நடந்தவண்ணமேயுள்ள வன்னியில் வானம் இருண்டு கிடக்கின்றது. விதைக்கப்படுகின்ற குண்டுகள் வெடித்ததனால் எழுந்துவரும் புகை மண்டலம், நிலத்தில் மறைத்து வைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் வெடித்ததனால் எழுந்துவரும் தூசி மண்டலம், எங்கிருந்தோ பாய்ச்சப்படுகின்ற எறிகணைகள், ஏவுகணைகள் எல்லாம் விழுந்து வெடித்ததனால் எழுந்துவரும் துகள் மண்டலம் என்பனவே இருட்டைத்தோற்றுவிக்கின்றன. இந்நிலையிலும் உயிர்வாழத்துடிக்கும் எம்மவர்க்கு எம்மாலானதை நிட்சயம் செய்ய வேண்டுமென ஒவ்வொருவரும் உறுதி பூணவேண்டும்.

நாம் எல்லோரும் பிறந்த தேசத்தின் நல் நாற்றங்கால்கள்தான். சந்தர்ப்ப சூழ்நிலைகளால் விஷப் பூண்டுகளாகவோ, சுயநலப் பூண்டுகளாகவோ மாறிவிடக்கூடாது. இதை எல்லோருக்கும் உணரவைக்கவும், எம்மண்ணை நேசிப்பவர்களைக் கௌரவித்துப் பெருமையடையவைக்கவும் தங்களால் எடுக்கப்படுகின்ற கூட்டுமுயர்ச்சி, "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்பதுபோல உறுதியாகவும், உயர்வாகவும் பல்லாண்டு காலமிருந்து சேவையாற்ற எமது ஆசிகள் என்றென்றும்,

"தாயின் மணிக்கொடிதனை வணங்கும்
தனையர் வாழியவே".

ந . பாஸ்கரதாஸ்
செயலாளர் (1997-1998),
வவுனியா, முல்லைத்தீவு பாடசாலைகளின் சமாசம்,
இலண்டன், இங்கிலாந்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தலைவரின் எண்ணத்தில்.....

கனடா வன்னி நலன்புரிச் சங்கம் இரண்டாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும்போது, அந்த இரண்டு வயதுக் குழந்தையினை வளர்ப்பதில் எனக்குத் தரப்பட்ட பொறுப்பையிட்டு நான் பெருமைப் படுகின்றேன். முதலாவது வருடத்தில் இச் சங்கத்தினைக் கட்டியெழுப்பி அதனை வளர்ப்பதற்கு அப்போதிருந்த நிர்வாகத்தினர் எத்தகைய சிரமங்களை எதிர் நோக்கியிருப்பார்கள் என்பதனை, நடை பழகும் பருவத்திலுள்ள சங்கத்தின் பொறுப்பையேற்று நிர்வகிக்கும் போதே உணர்ந்து கொள்ள முடிகின்றது. பல்முனைச் சிரமங்களை நடைமுறையில் எதிர் நோக்கியபோதும் சங்கத்தினது நலன், சங்கத்தினூடாக தாய் மண்ணில் வாழ்கின்ற தமிழ் மக்களது நலன் என்பவற்றையே பொருட்டாகக் கொண்டு சங்க நடைமுறைகளை வழி நடாத்திச் செல்கின்றோம். இவற்றைச் செவ்வனே செய்து முடிப்பதற்கு எல்லா வகையிலும் ஒத்தாசைகளையும், உதவியினையும் தந்த சங்க செயற்குழு உறுப்பினர்கட்கும், சங்க உறுப்பினர்கட்கும் எனது நன்றியறிதல்கள் முதற்கண்.

இன்று கனடாவில் வாழ்கின்ற நாங்கள் ஓரளவிற்காவது சர்வமும் பெற்று சந்தோசமாக வாழ்கின்றோமென எண்ணுகின்றேன். இதே போன்றே வருவாய் பெறத்தக்க வெளிநாடொன்றில் வாழும் அனைத்து ஈழத் தமிழர்களும் இவ் வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். ஆனால் எமது மண்ணில் எழுத்துக்களால் வடிக்கமுடியாத எண்ணற்ற அவலங்களைத் தம் தலையில் சுமக்க முடியாமல், அன்றாட வாழ்க்கையை எவ்வாறு ஓட்டுவது என்ற ஏக்க உணர்வுக்குள் சிக்கி, ஒரு காலடியைத்தானும் முன்னெடுத்து வைக்கமுடியாத அளவிற்கு தென் பகுதியிலிருந்து கொடுக்கப் படுகின்ற அனர்த்தங்களிடையேயும் வாழ்கின்ற எமது தமிழ்ச் சகோதரர்களது நிலையினை எண்ணிப் பார்த்தவாறே உள்ளோம்.

எண்ணிக் கொண்டிருப்பதனால் ஆகப்போவதொன்றுமில்லை என்பதனை நாம் அனைவரும் நன்கறிவோம். எண்ணம் செயல்வடிவமாக்கப்பட வேண்டும். வேறுபாட்டு நோக்கங்களைக் களைந்தெறிந்து, தமிழ் மக்களுக்கு உதவவேண்டும் என்ற ஒரே குறிக்கோளிலும், எம் அயலவர்களின் பிரச்சனைகளை நன்கு இனங்காணமுடியும் என்ற கோதாவிலும் இச் சங்கத்தின் மூலம் உதவிபுரியத் துணிந்துள்ளோம். பல்வேறு கோணங்களிலிருந்தும், பல்வேறு நோக்கங்கள் கருதியும் உதவிகள் ஈழப் பிரதேசத்தினைச் சென்றடையும்போது அவர்களது துயர்கள் முற்றாகத் துடைக்கப் படாவிட்டாலும், ஒரு பகுதியாவது குறைக்கப்படும் என்ற நம்பிக்கையுடையோம். இச் செயற்பாட்டில் நாம் காலடி எடுத்துவைத்துள்ளோம் என்பதனையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். நாம் ஒவ்வொருவரும் ஆழமாகச் சிந்தித்தால் ஏன் எமது மக்களுக்கு உதவிசெய்ய வேண்டும் என்பதனைப் புரிந்து கொள்ளலாம். வருவாய் தரத்தக்க நாடுகளில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் ஏதோ ஓர் வகையில் ஈழப் பிரதேசத்தில் உள்ளவர்கட்கு உதவி செய்யப் புறப்படுவோமாயின் பெரும்பான்மைச் சமூகத்தவரது பல்முனை அடக்குமுறைச் சர்வாதிகாரம் அர்த்தமற்றதாக்கப்பட்டுவிடும்.

இன்றுள்ளது போன்றே என்றும் கனடா வன்னி நலன்புரிச் சங்கமானது எல்லா ஈழத் தமிழர்களதும் ஒத்துழைப்பினையும், ஒத்தாசையினையும் எதிர்நோக்கி நிற்கின்றது. கலை, கலாச்சார வெளிப்பாடுகளை புதியமெருகூட்டி அதிசயிக்கத்தக்க படைப்புக்களாக வெளியிடுவதற்கும், எழுத்து வடிவிலான ஆக்கங்கள் மூலமாக புதைக்கப்பட்ட சரித்திரங்களைப் புத்துயிர் கொடுத்து மீண்டெழச் செய்யவும் அனைவரும் ஒன்று திரண்டு பாடுபடுவோமாக.

க. கணபதிப்பிள்ளை
தலைவர்
கனடா வன்னி நலன்புரிச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயலாளரின் சிந்தையிலிருந்து.....

வளம் கொளிக்கும் வன்னிமண்ணில் பிறந்து தவழ்ந்து விளையாடிய என் அன்னை பூமியாம் பொன்நாட்டை நினைதொறும் என் இதயத்தில் அந்த இனிய நினைவலைகள் நெஞ்சைக் குடைந்து அரித்து ரணமாக்கிக் கொண்டே இருக்கின்றன. அன்னியனின் வருகையாலும் அரசியல் உதிரித்தனத்தாலும் பொலிவிழந்து கொலுக்குன்றி நாணிக்கோணி நிற்க வைத்த வன்னி மண் இன்று போர்க்கோலம் பூண்டு இரத்தக்களரியில் மிதந்து கொண்டிருக்கும் என் இனிய தேசத்தின் நிலை அம்மண்ணின் மைந்தர்கள் யாரைத்தான் வேதனைக்காட்டிற்கு இழுத்துச் சென்றிருக்காது.

சொந்த மண்விட்டு ஏகி சீர், செம்மை, தண்மை, இனம், சுற்றம், சொந்தம், பந்தம் எல்லாம் இழந்து நின்ற வேளை *"ஈ இருக்கும் இடமேனும் நான் தரேன்"* என்று உரைத்த துரியோதனன் சொற்கேட்டும் மனந்தளரா பாண்டவர் போன்று மன உரம் படைத்த வன்னி மறவர்களின் உரமான போக்கு என் மனத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. பிறந்த மண்ணிற்கு ஏதாவது செய்தே ஆகவேண்டும் என்ற ஒரு உணர்வை, மனவேகத்தைத் தந்து நிற்பதன் விளைவாக *'செய் அல்லது செத்து மடி'* என்ற உத்வேகம் தான் எம் வன்னி நலன் புரிச்சங்கத்தின் உதயம் என உணர்ச்சி பூர்வமாகக் கூறிக் கொள்வதில் பெருமையும் மனநிறைவும் ஏற்படுகின்றது.

பண்டமாற்றுப் பொருளாதார அமைப்பைத் தன்னகத்தே கொண்டு தன்னிறைவுடன் செழித்து விளங்கிய வன்னி மண் சங்க இலக்கியங்கள் வர்ணிக்கும் சால்புகள் நிறையப் பெற்றதாய் பொலிவு பூண்டு விளங்கி வந்தது. *"தனி ஒருவனுக்கு உணவில்லை எனின் செகத்தினை அழித்திடுவோம்"* என்ற பாரதி கண்ட கனவை நடைமுறைப்படுத்தி வந்த பெருமை உடைத்து வன்னி மண்.

"நாமார்க்கும் குடியல்லோம்" என்று வாழ்ந்தவர்கள் வன்னியர்கள் பாலும் தேனும் பெருக்கெடுத்தோடிய வன்னியில் இன்று நோய்க்கு மருந்தின்றி, பாலகர்க்குப்பாலின்றிப் பரிதவிக்கும் நிலையில் உள்ளார்கள் என்று உணரும் போது புலம் பெயர்ந்து வாழும் நாம் எப்படித்தான் நின்மதிப்பெருமூச்சு விடமுடியும?. இவ்வித மனக்குமுறல்கள், கிலேசங்கள் ரணமாக மனதைக் குடைவதன் விளைவே வன்னி நலன்புரிச்சகங்கத்தின் பணிகளைத் தலையில் ஏற்றுக்கொள்ளத் தூண்டிய காரணிகளில் ஒன்றாகும். இத்துடன் வன்னி மண்ணின் பூர்வீக வரலாற்றுப் பின்னணிகள், விழுமியங்கள், பண்பாடு, கலாச்சாரம் என்பன முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்னும் ஆவலும் ஒட்டுசுட்டானில் பண்டாரவன்னியனின் எழுச்சி விழாவில் முன்னின்று உழைத்தவர்களின் ஈடுபாடும் தொடர்புகளும் என்னை இப்பணிகளில் மேற் கொள்ளவைத்த இதரகாரணிகளாகும்.

கடல்கடந்து வாழ்கின்ற வன்னிமாதாவின் புதல்வர்களாகிய நாம் வன்னிமண்ணில் வாழ்ந்து வருகின்ற எம்மவரின் அவலங்களில் கண்ணூன்றி அவர்களின் வாழ்வை வளம் பெறவைக்க எம்மாலான ஆக்க ஊக்க உதவிகளைச் செய்தல் எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடனாகும். இந்த நோக்கங்களை எல்லாம் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்ற ஒருமித்த கருத்துடைய நல்ல இதயங்களின் ஆக்க, ஊக்க முயற்சியின் பயனாக உதயமான கனடா-வன்னி நலன்புரிச்சங்கத்தின் நோக்கங்கள் ஈடேற நாம் எமது சிறார்களது கல்வி கலாச்சாரவிருத்திகளில் கருத்தூன்றுவதோடு மட்டும் நின்று விடாது எம் சொந்த மண்ணில் வாழ்கின்ற மழலைகளுக்கும் எம்மாலான வகையில் அவர்களின் கல்வி விருத்தியில் அக்கறைகாட்டும் பணியில் எமது சங்கம் அக்கறையோடு செயற்படத் தலைப்பட்டிருப்பது பெருமைக்கும் பாராட்டுக்கும் உரியதொன்றாகும்.

வன்னியின் பண்பாட்டுக் கலாச்சார சாயல்கள், அழிந்து வரும் வரலாற்று மரபுகளையெல்லாம் தன்னகத்தே தாங்கி கொம்பறையின் இரண்டாவது வெளியீடு தங்கள் ஒவ்வொருவருது கைகளிலும் தவழ்ந்து மாபெரும் பாராட்டைப்பெறும் என்பது எனது நம்பிக்கை. இப்பெருமுயற்சியில் தம்நலன்நோக்காது முன்நின்று உழைத்த, உழைத்துவருகின்ற சங்க உறுப்பினர்கள் ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும் தனித்துவமாகவும் சங்கத்தின் சார்பிலும் நன்றியறிதலைச் செலுத்தக் கடப்பாடுடையேன். வன்னிவிழாவில் பெரும் திரளாகக் கூடி உங்கள் அமோக ஆதரவை நல்கும் புலம் பெயர்ந்து வாழ்கின்ற உங்களுக்கு எங்கள் அமைப்பின் சார்பில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு தொடர்ந்தும் தங்கள் நேசக்கரங்களை நீட்டும் வண்ணம் பணிவன்போடு வேண்டுகின்றேன்..

இழந்தவற்றைப் பெற்று மீண்டும் தொடரும் எம்மிடுக்கு என்பதில் ஐயமில்லை!!

சிவப்பிரகாசம் சிவலோகநாதன்
கௌரவ செயலாளர்,
கனடா வன்னி நலன் புரிச்சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Kirupa (Dentist)

## பல் வைத்தியர்

DOWN TOWN

**ஞாயிறு, திங்கள், செவ்வாய், சனி**

St. Jamestown Family
Medical-Dental Centre
240 Wellesley Street East
Toronto, Ontario
M4X 1G5
(416) 928-2827 & (416) 928-9094

SCARBOROUGH

**வெள்ளி, சனி**

(Kennedy Subway Centre)
2475 Eglinton Avenue
Scarborough, Ontario
M1K 5G8
(416) 752-1143
**(சங்கர் அன்ட் கோவிற்கு மேல்)**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் பூத்த வன்னிமண்ணின் காவலன், பண்டாரவன்னியன்.

- முல்லைமணி வே. சுப்பிரமணியம். -

ஈழமணித் திருநாட்டில் அடங்காப்பற்று திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம் ஆகிய தமிழ்ப் பிரதேசங்களிலும் சிங்களப் பிரதேசங்களிலும் வன்னிமைகள் என அழைக்கப்படும் குறுநில அரசுகள் இருந்தன. வன்னிப் பிரதேசம் மிகவும் பழைமையான வரலாறுள்ள பிரதேசம். கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலேயே இங்கு சிற்றரசுகள் தோன்றியிருந்தன. அநுராதபுர, பொலநறுவை அரசுகளின் எழிச்சியினால் வன்னிக் குறிநில அரசுகள் தளர் நிலையடைந்தன. மீண்டும் 13ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வன்னி அரசுகள் எழுச்சி பெற்றன. ஈழத்தின் முப்பெரும் பிரிவுகளான ராஜரட்டை, மாயரட்டை, ரோகணம் என்பவற்றில் வன்னிமைகள் காணப்பட்டதற்கு வரலாற்றுச் சான்றுண்டு.

**அடங்காப்பற்று:**

இங்கனம் இலங்கையின் பலபாகங்களிலும் வன்னிமைகள் காணப்பட்டபோதும் அடங்காப்பற்றே 'வன்னி' என்னும் பெயருக்கு உரிமை பூண்டு நிற்கிறது. இப்பகுதி மன்னரும் மக்களும் வடக்கே யாழ்ப்பாண மன்னர்க்கோ தெற்கே அனுராதபுர அரசர்க்கோ அடிபணியாது வாழ்ந்ததாலேயே இப்பெயரைப் பெற்றதென்பர். வடக்கே யாழ்ப்பாணப் பரவைக் கடலையும் கிழக்கே திருகோணமலை மாவட்டத்தையும், தெற்கே அருவி ஆற்றையும் மேற்கே மன்னார் மாவட்டத்தையும் எல்லையாகவுடைய சுமார் இரண்டாயிரம் சதுரமைல் விஸ்தீரணமுடைய இந்தப் பிரதேசம் வன்னியர்களால் ஆளப்பட்டமையால் வன்னிநாடு எனப் பெயர் பெற்றது.

எல்லை வடக்கில் எழில்யாழ் பரவுகடல்
பல்லோர் புகழருவி தெற்கெல்லை - நல்லதிருக்
கோணமலை கீழ்பால் கேதிச் சரம்மேற்கில்
மாணத் திகழ்வன்னி நாடு

என்னும்பாடல் வன்னிநாட்டின் எல்லைகளை வரையறுத்துக் கூறுகின்றது. செட்டிக்குளம், பனங்காமம், மேற்பற்று, முள்ளியவளை, கரிக்கட்டுமூலை, தென்னன்மரபடி, கருநாவல்பற்று என்னும் வன்னிமைகளை உள்ளடக்கியது அடங்காப்பற்று. அடங்காப்பற்றில் வீரமும் அஞ்சாநெஞ்சும் சுதந்திரவேட்கையுமுடைய வன்னித்தலைவர்கள் பலர் ஆட்சிபுரிந்துள்ளனர். கயிலை வன்னியன் நல்லநாச்சியார், நல்லமாப்பாண வன்னியன், இலங்கை நாராயண வன்னியன், பண்டாரவன்னியன் ஆகியோர் பலவகையிலும் சிறப்பு வாய்ந்த மன்னர்களாகத் திகழ்ந்துள்ளனர்.

**பண்டாரவன்னியன்:**

உலகிலே சூரியனே அஸ்தமிக்காத சாம்ராச்சியத்தையுடைய பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுடன் அஞ்சா நெஞ்சுடன் சமர்புரிந்து உயிர்கொடுத்துப் புகழ்கொண்ட பண்டாரவன்னியன் வன்னிநாட்டின் இறுதிமன்னன் என்ற வகையில் சிறப்புமிக்கவனாகத் திகழ்கிறான். இவனை முல்லைத்தீவைச் சேர்ந்தவன் எனச் சிலரும், நுவரகலவியாவைச் சேர்ந்தவன் என வேறு சிலரும் கருதுகின்றனர். இம்மன்னன் சிங்கள இனத்தைச் சேர்ந்தவன் எனச் சிலர் வாதிடுகின்றனர். குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன் என்ற பெயரே இவன் தமிழ் மன்னன் என்பதை ஐயந்திரிபற பறை சாற்றுகின்றது. வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் நுவரகலவியாவில் சிறிதுகாலம் வசித்தமையால் நுவரகலவியாவே இவனது பிறப்பிடம் எனச் சிலர் மயங்கிநின்றனர். நுவரகலவியா அநுராதபுரத்திற்குத் தெற்கேயுள்ள பிரதேசமாகும். தற்பொழுது சிங்களப் பிரதேசமாகத் திகழும் நுவரகலவியா முன்பு தமிழ்மக்கள் வாழ்ந்த பகுதியாகத் திகழ்ந்திருக்கிறது.

கண்டி மன்னனின் சிறைக்கைதியாகப் 18 ஆண்டுகள் கண்டியில் வாழ்ந்த இளைய றொபேட் நொக்ஸ் தப்பியோடிச் சென்று நுவரகலவிய மக்களுடன் சிங்களத்தில் உரையாடியபோது அவர்களுக்கு அது விளங்கவில்லையென்றும் அவர்கள் தமிழ் மொழி பேசுபவர்களாக இருந்தனர் என்றும் குறிப்பிடுகின்றார். பண்டாரவன்னியன் நடவடிக்கைகள் யாவும் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலேயே இடம் பெற்றுள்ளன. முல்லைத்தீவு மேற்பற்றிலுள்ள பண்டாரக்குளம் இவனது இராஜதானியாகத் திகழ்ந்திருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதனால் முல்லைத்தீவே பண்டாரவன்னியன் வாழ்ந்து அரசோச்சிய இடமாகும் எனக் கொள்ளலாம். மேற்பற்று, முள்ளியவளை போன்ற பிரதேசங்களுக்கு இவன் வன்னியனாக இருந்திருக்கிறான் எனக் கருத இடமுண்டு. பண்டாரவன்னியன் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் (1658-1796) பிற் பகுதியிலும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் (1796-1948) முற்பகுதியிலும் வாழ்ந்து அரசோச்சியிருக்கிறான். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியிலேயே கீர்த்தி வாய்ந்த பனங்காம வன்னிமை அழிந்துவிட்டது. கி.பி. 1790ம் ஆண்டளவில் துரோகச் செயல்களில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டி பனங்காமத்து நல்ல மாப்பாண வன்னியனை ஒல்லாந்தர் சிறைப்படுத்தினர். அதன் பின் பனங்காம வன்னிமை அழிவுற்றும் பண்டாரவன்னியன் ஆட்சி நிலவியது.

1803 இல் ஆங்கிலேயருக்கும் கண்டியரசனுக்குமிடையே போர் நிகழ்ந்தபோது ஆங்கிலேயரை இலங்கையிலிருந்து தொலைத்துப் போடுவதாகச் சபதங்கூறி பண்டாரவன்னியன் கொட்டியாரத்தையும் முல்லைத்தீவையும் பிடித்தான். 1803 ஆகஸ்ட் 25ம் நாள் முல்லைத்தீவுக் கோட்டையையும் அரசாங்க இல்லத்தையும் தாக்கினான். கப்டன் வொன்றிபேக்கின் தலைமையில் முல்லைத்தீவில் இருந்தபடை வள்ளங்கள் மூலம் யாழ்ப்பாணத்திற்குப் பின்வாங்கியது. பண்டாரவன்னியன், கோட்டையிலிருந்த மூன்று பீரங்கிகளைக் கைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவைக் கைப்பற்றியது. பண்டாரவன்னியனுக்கு உதவி புரிந்ததற்காகக் குமாரசேகரமுதலியாரும் இன்னும் சிலரும் இராஜ துரோகக் குற்றம் சாட்டப்பட்டு தூக்கில் இடப்பட்டனர். இவர்கள் தூக்கில் இடப்பட்ட இடம் இன்றும் தூக்கு மரத்தடி என அழைக்கப்படுகின்றது. லெப்டினன் ஜோன் யுவெலின் தலைமையில் 19ஆவது றெஜிமென்ட்படை வன்னிநாடு நோக்கிச் சென்றது, இப்படையினர் பல வீடுகளை எரித்தனர், கால்நடைகளைக் கொள்ளையடித்தனர். மூன்றாவது படைப்பிரிவு கப்டன் றிபேக்கின் தலைமையில் மன்னாரிலிருந்து புறப்பட்டது. இப்படை எதிர்பாராதவிதத்தில் பண்டாரவன்னியன் படையுடன் மோதியது. 1803 அக்டோபர் 31ம் திகதி அதிகாலை 5 மணியளவில் இந்த யுத்தம் நடைபெற்றது இந்த யுத்தம் நடைபெற்ற இடத்தை ஒரு கிராமவாசி எனக்குக் காட்டினார் அவருக்கு அவர் தாத்தா காட்டினாராம். புளியமரங்களின் மத்தியில் அந்த இடம் இருந்தது அந்த புளியமரங்கள் பண்டாரவன்னியன்-டிறிபேக் யுத்தத்தைப் பார்த்திருக்கக்கூடிய வயதுடையவையாக இருந்தன. என 1895இல் ஜே.பி. லூயிஸ் என்னும் சிவில் சேவையாளர் எழுதிய வன்னி மாவட்டக் கைநூலில் (MANUAL OF VANNI DISTRICT) குறிப்பிட்டுள்ளார். கப்டன் வொன் றிபேக்கின் வெற்றியைக் குறித்த கல்வெட்டொன்று கற்சிலைமடுவில் உண்டு. இதையடுத்த இடத்திலேதான் 1803 அக்டோபர் 31ல் கப்டன் வொன்றிபேக் பண்டாரவன்னியனைத் தோற்கடித்தான் என்னும் கருத்துள்ள ஆங்கில வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. (HERE ABOUTS CAPTAIN VON DRIBERG DEFEATED PANDARA VAWNIYAN OCT 31st 1803) இந்தக்கல்வெட்டை பார்த்ததாக லூயிஸ் குறிப்பிடவில்லை. அந்நேரத்தில் இக்கல்வெட்டு காட்டினுள் மறைந்திருக்கலாம், இதனால் பொதுமக்களின் பார்வைக்கு எட்டாததாக இருந்திருக்கலாம். இக்கல்வெட்டு யாழ்ப்பாண வெள்ளைக்கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. இதனைக் கற்சிலை என்றே மக்கள் அழைக்கின்றனர், இதன் பெயராலேயே அக்கிராமத்திற்குக் கற்சிலைமடு எனப்பெயர் வந்தது எனக்கூறப்படுகிறது.

பண்டாரவன்னியனைத் தோற்கடித்ததற்காக கப்டன் றிபேக்கிற்குப் பரிசாக பண்டாரக்குளம் என்னும் கிராமம் கொடுக்கப்பட்டது.கப்டன் வொன்றிபேக் ஆங்கிலேயரின் கூலிப்படைப்பிரிவில் பணியாற்றிய டச்சுக்காரனாவான். இலங்கையின் கரையோரப் பிரதேசங்கள் ஏமியன் உடன்படிக்கையின்படி டச்சுக்காரர்களால் ஆங்கிலேயருக்குக் கையளிக்கப்பட்டபின்னர் அவர்களின் படையில் சேவையைத் தொடர்ந்திருக்கிறான். குளமும் கிராமமும் 1865ம் ஆண்டுவரை டிறிபேக்கின் சந்ததியாரிடம் இருந்தது. கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்த பலர் இங்கிருந்தமையால் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்று கட்டப்பட்டது. தற்போது இக்கிராமத்தில் கிறிஸ்தவர்கள் இல்லை, எனினும் இப்பெரிய கிறிஸ்தவ தேவாலயம் தற்போதும் இருக்கிறது.

1803ல் தோற்கடிக்கப்பட்டபோதும் பண்டாரவன்னியன் தன் எதிர்ப்பை கைவிடவில்லை. நுவரகலவியாவில் தற்காலிகமாக சிறிது காலம் வாழ்ந்தான். மேற்பற்றைச் சேர்ந்த கதிர்காமநாயக முதலியார் பண்டாரவன்னியன் நடவடிக்கைகள் பற்றி பிரித்தானிய நிர்வாகத்திற்குத் தகவல் கொடுத்துக் கொண்டிருந்தார். காக்கைவன்னியனே பண்டாரவன்னியனைக் காட்டிக்கொடுத்ததாகக் கர்ணபரம்பரைக் கதையுண்டு. உண்மையில் காக்கைவன்னியன் யாழ்ப்பாணத்தில் ஊர்காவல்துறைக்குத் தலைவனாக இருந்தான். வன்னிப் பிரதேசத்தில் இப்பெயருடைய ஒருவன் இருக்கவில்லை, எனவே கதிர்காமநாயக முதலியாரே காக்கைவன்னியன் என மக்கள் கருதியிருக்கலாம்.

1810ம் ஆண்டு மே மாதத்தில் கண்டிப்பிரஜைகள் சிலரது உதவியுடன் கிழக்குமூலை தெற்குப் பகுதியில் பண்டாரவன்னியன் தன் எதிர்ப்பைக் காட்டினான். இப்படையெடுப்பின்போது படையில் 15 வீரர்களே இருந்தனர், எனினும் பிரித்தானிய நிர்வாகம் இப்படையைக்கண்டு நடு நடுங்கினர். பண்டாரவன்னியன் வவுனியாவுக்கு அண்மையிலிருந்த கிராமம் ஒன்றைக் கொள்ளையடித்தான் என ஆங்கில அறிக்கையொன்று கூறுகின்றது. இந்தக் குறிப்பு பண்டாரவன்னியனைச் சுதந்திரப் போராட்ட வீரன் என்பதற்கு மாறாகக் கொள்ளைக்காரன் என வர்ணித்ததில் ஆச்சரியப்படுவதற்கில்லை. தமிழகத்தில் விடுதலை முரசு கொட்டிய வீரபாண்டிய கட்டப்பொம்மனையும் கொள்ளைக்காரன் என்றே பிரித்தானிய நிர்வாகம் வர்ணித்தது. இந்திய விடுதலை இயக்கத்தையும் இது போன்ற தேசியப் போராட்டங்களையும் வழிநடத்திய தலைவர்களுக்கு அந்நிய ஆளும் வர்க்கம் கொடுத்த பெயர் கொள்ளைக்காரர் என்பதே.

பண்டாரவன்னியன் படையெடுப்பிற்கு அஞ்சி எல்லைப் பகுதியான வெடிவைத்தகல், வவுனியா ஆகிய இடங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது. 1810 செப்டம்பரில் பணடாரவன்னியன் கண்டித் திசாவையின் உதவியுடன் மீண்டும் தாக்கவிருப்பதாக வன்னிப் பகுதிக் கலெக்டர் ரேணருக்குச் செய்தி எட்டியது. பாதுகாப்பு மீண்டும் அதிகரிக்கப்பட்டது. திருகோணமலை, யாழ்ப்பாணம் படைப்பிரிவுகளில் இருந்து கூடுதலான வீரர்கள் அனுப்பப்பட்டனர். 1811இல் பண்டாரவன்னியன் மீண்டும் வன்னியில் தாக்குதலை மேற்கொண்டான். உடையாவூரில் இடம் பெற்ற கடும் சமரில் பண்டாரவன்னியன் படுகாயம் அடைந்தான். இவனது படை வீரர்கள் இவனைப் பனங்காமத்திற்கு எடுத்துச் சென்றனர், அடுத்தநாளே மாவீரன் ஆவி பிரிந்தது.

போர் நடவடிக்கைகளைத் தவிர பண்டாரவன்னியன் வாழ்க்கை தொடர்பான மிகச் சில குறிப்புகளே நமக்குக் கிடைக்கின்றன. பண்டாரவன்னியன் தங்கையை நுவரவன்னியனின் மூத்த புதல்வன் குமாரசிங்க வன்னியன் திருமணம் செய்தான். முல்லைத்தீவில் நடந்த போரில் குமாரசிங்கன் வீரமரணமடைந்தான்.

செவிவழிச் செய்தியொன்றின்படி குருவிச்சி நாச்சி என்னும் இளவரசியைப் பண்டாரவன்னியன் காதலித்தான். போருக்குப் போகும் போது தன்னை மணந்து கொள்ளுமாறு இளவரசி வேண்டுகோள் விடுத்தாள். தந்தை இறந்து ஒரு வருடம் பூர்த்தியாகாததால் திருமணத்திற்குப் பண்டாரவன்னியன் சம்மதிக்கவில்லை. பலநாள் பழுதடையாமல் இருக்கக்கூடிய பொரிவிழாங்காய் என்னும் பலகாரத்தை செய்து தன் தோழி மூலம் காதலனுக்கு அனுப்பினாள். போரில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரவன்னியன் வீரமரணம் அடைந்ததைக் கேள்வியுற்ற குருவிச்சி நாச்சியார் நச்சுக் கிழங்கை உண்டபின் தென்னோலைப் பன்னாங்கில் படுத்திருந்து உயிர் நீத்தாள். பண்டாரவன்னியனின் காதலி வாழ்ந்த இடமே காதலியார் சம்மளங் குளமாகும். பேராற்றின் கிளையான குருவிச்சை ஆறு சம்மளங் குளத்தை ஊடறுத்துச் செல்கிறது. இது குருவிச்சி நாச்சியாரின் பெயராலேயே அழைக்கப்படுகிறது.

பண்டாரவன்னியன் மறைந்துவிட்டபோதிலும் அவன் மூட்டிவிட்ட விடுதலை வேட்கைத் தீ இன்றும் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறது.

"அன்னை பூமியென் றும்மடங் காப்பற்றாம்"
வன்னி மண்ணின் மானத்தைக் காத்திடத்
தன்னு யிர்கொடுத் துப்புகழ் கொண்டமா
மன்னன் மாவீரன் பண்டார வன்னியன்.

அடிக்குறிப்பு:


1. கா.இந்திரபாலா, கலாநிதி- அணிந்துரை. கள்ளியங்காட்டுச் செப்பேடுகள்.
2. சி.பத்மநாதன், கலாநிதி- வன்னியர்.
3. முல்லைமணி, -வரலாற்றுக் குறிப்பு, பண்டாரவன்னியன் நாடகம்.
4. Robert knox - Historical Relations of Ceylon.
5. முதலியார் குல.சபாநாதன் - வளமிகு வன்னி நாடு தமிழ் இன்பம் கட்டுரை.
6. முத்துத்தம்பிப்பிள்ளை - யாழ்ப்பாணச் சரிதம்.
7. வ. பொன்னம்பலம்,M.A. - தேசிய வீரன் பண்டாரவன்னியன், வித்தியாதீபம் கட்டுரை.
8. C. S. Navaratnam, - Vanni and Vanniyas.


## தற்கொடை

இது என்ன தற்கொடை, தற்காலிகமான கொடையா? அல்லது தனது (தனக்குச் சொந்தமான) கொடையா? எப்படி இதற்குப் பொருள் காண்பது. விரித்துப் பார்த்தால் பொருளும் புரிந்துவிடுமா? ஆம் என்கிறார்கள் பலர். அப்போ இலக்கணப் புணர்ச்சியில் விரித்துப் பார்க்கலாமே.

தற்கொடை = தன் + கொடை
"னண வல்லினம் வரட் றடவும் பிற வரின்
இயல்புமாகும்......"

எனவரும் நன்நூலாரின் புணர்வியல் சூத்திர விளக்கத்தின்படி, "தன்" என்பதில் வரும் "னகரம்" வேற்றுமையில் றகரமாக மாற்றமடைந்து தற்கொடையாகப் புணர்வுபெற்றுள்ளது. இப்போது இங்கு " தன் சக கொடை" என்பதன் பொருளைப் பார்த்தால், தன்னுடைய உடைமைகளைக் கொடை கொடுத்தல் எனப்பொருள்படுகின்றது. முன்னுள்ள காலங்களில் கொடை கொடுத்தல் என்பதன் பொருள், தனக்கு உடைமையான பொருட்களைக் கொடை வழங்குதல் என்னும் கருத்திலேயே அதிகமாகக் கொள்ளப்பட்டது. ஆனால் தன்னையே கொடையாக கொடுத்தல் என்ற பொருளில் அப்போது இது அர்த்தமாக்கப்படவில்லை. இன்று இச் சொல்லின் அர்த்தம் என்ன? அச்சொல்லினது அர்த்தமும், பெறுமதியும் அதிகரித்துவிட்டது. அது எப்படி?

தன் பொருளைமாத்திரம் கொடை கொடுப்பதோடு மாத்திரம் நில்லாது, தன் உயிரையுமே கொடை கொடுக்கும் நிலைக்கு மக்கள் மாறியுள்ளார்கள். அப்போ முன்னெப்போதும் தன்னுயிரைக் கொடை கொடுத்தல் நிகழ்வுகள் இடம்பெறவில்லையா? என்ற கேள்விக்கு இடம்பெற்றுள்ளது என்றே பதில் இறுக்கவேண்டும். ஆனால் அப்போதெல்லாம் அப்பெருங் கொடைக்கு தற்கொலை என்ற சொல்லையே பயன்படுத்தினார்கள். ஏதாவதொரு குடும்பத் தகராறு அல்லது வேறு ஓர் சொந்த விடயம் காரணமாக ஒருவர் தன்னை மாய்த்துக்கொண்டால் அதற்கும் இச்சொல்லே பயன்படுத்தப்பட்டது. தியாக உணர்வோடு தன் குடும்ப, இன, மத, மொழி, நாடு. என்ற பெரும் நன் நோக்கங்கட்காக ஒருவர் தன் உயிரைக் கொடைகொடுப்பாராயின் அதனை இவ் இழிவுப் பொருள் குறிக்கும் அதே சொல்லால் அழைக்கப்படாமல் அதற்கேயுரித்தான உயர்பொருள் குறிக்கும் ஓர் சொல்லால் அழைக்கப்படவேண்டியது அவசியமாகின்றது. இதன் பிரகாரமே இன்று தற்கொடை என்ற சொல் செயலது நோக்கங்கருதி தற்கொலைக்குப் பதிலாகப் பாவிக்கப்படுகின்றது.

இச் சொல் தற்கொலை என்ற சொல்லிருந்து மருவி வந்த ஓர் சொல்லலல்ல. கொடையினது உயர்வு நோக்கங்கருதி மாற்றப்பட்ட சொல்லாகும் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

வ. திசைபாலன், அவுஸ்திரேலியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம் கண்டிடுவோம்!

அன்புடை வாழ்வு வேண்டும் ஆங்கே
அரும் பெரும் செல்வம் வேண்டும்-பாரில்
பெரும் புகழெல்லாம் நிறையவே வேண்டும்
போலியாய்ப் பேசநாவில் மனிதநேயம்வேண்டும்!

உழைப்பினை உறிஞ்சிடல் வேண்டும்
உழைத்தவன் வீதியில் மாய்ந்திடவே-புவியில்
உன்னத வாழ்க்கையே கொள்ள மானிட நேயம்
உன்மத்தமாகவே கொள்ளல் நியதியோ ஐயா!

சொந்த நன் நாட்டில் வாழ்கின்ற போதினில்
சோம்பேறியாகவே வாழ்ந்திட்டாய் நீயும்-மனிதா
சோபையைப் பெருக்கிட நாட்டில் நீயோ
சுறு சுறுப்பாய் உழைத்திட வில்லை

அன்னிய தேசமே அதனில் பெரும்
அனியாயம் நிலவுகின்ற போதிலே-நீயோ
அறியாமல் உன் உழைப்பை நல்கின்றாய்
அறிந்திடுதல் உன்மனதில் கூடுமோ

ஒரு வேலை போதும் என்ற எண்ணமே
ஒரு போதும் உதித்ததுவும் இல்லையே-மானிடா
ஒரு நேரம் ஓய்ந்திடவும் முடியுமோ
ஒரு தனுக்கும் இயைந்திடாத வாழ்க்கையே

பல காத தூரம் நீயும் வந்துமே
பல வழியில் பொருள் தேடிய-உனக்கே
பல இன்னல் தருகின்ற வாழ்க்கையை
பல காலும் வாழ்ந்திடல் தான் நியதியோ

உன் உழைப்பால் உயர்ந்த நாடதுவோ
உன் முன்பே சிதைந்து அழிந்து-போகுதே
உன் அரிய வனப்பு மிக்க தேசமே
உருபு அழிந்து ஊனம் ஆகிப் போவதோ

பற்பல பேதங்கள் கொண்டுமே
பகுத்தறிவு இல்லாத வேலையே-மனிதன்
பாராள வேண்டும் என்ற ஆசையோ
பாமரர்கள் அழிந்து ஒழிந்து போவதோ

அன்பினைக் கொண்டிட்ட புத்தனின்
ஐமணிக் கொள்கைகள் எங்கேயோ-உயர்ந்த
அறிவினை மனதினில் அகற்றியே முழு
அரக்கராய் மாறினரே போலிகள் பாரடா

ஆட்டுக்கே அன்பு செய்த புத்தனே
ஆகாத வழி யென்று கூறினன்- ஏதும்
ஆதாரம் இல்லாத போதிலே
ஆபாசம் நியாமாக ஆனதே

ஆமியாக நின்று நாட்டைக்காப்பவன்
ஆகிநின்றே காமுகனாய் வந்துமே- நீக்கியே
ஆதாரமில்லாதார் ஆடையை அனியாயம்
ஆகிநின்றார் எம் இளைய அரம்பயர்

காவி உடை தரித்துவிட்ட போதிலே
காவியத்தின் நாயகராய் ஆகவோ-பாரினில்
காத்திட வேண்டியோரே கயமையை
காத்து நிற்றல் ஆகாதையா நாட்டிலே

சித்தாரத்தன் சொன்னதுவோ சிறப்பாமே
சித்தர்களாய் நிற்போரின் சிறுமையோ-யாரும்
சித்தரிக்க முடியுமோ இவ் உலகிலே
சித்தமே நீ கொண்டிடுவாய் மனிதனே!

புத்தனின் வழி வந்த மதமதோ
புதமையாய் பதினெட்டுக் கூறுகள்-ஆனதே
புதுமையாமோ பாவங்கள் சேர்வது
புண்ணியனின் பூர்வீகம் போனதே

பஞ்ச சீலக் கொள்கை என்று பிதற்றுவர்
பஞ்சமாகச் செல்லவேண்டும் என்றுமே-ஓட்டுடன்
பச்சையாகப் பிச்சை வேண்டும் என்பரே
பஞ்சமே ஒட்டாத சுகபோக வாழ்க்கையே

சுகபோக வாழ்க்கையே அது தானடா
சுகமாக வாழ்ந்திடவே அவன் தானடா-மாறியே
சுரண்டி நின்று குழப்புகின்ற கூட்டமே
சுத்தமாக நினைந்திடுதல் ஆகுமோ!

மானிடம் போற்றிடும் மாண்பினை
மாமனிதன் புத்தன் தன் வாழ்விலே-அன்பினை
மாவுலகம் புரிந்திடவே உரைத்தனன்
மாந்தைகளோ உணரவில்லைப் பாரிலே!

ஈழமதில் இணைந்திடவே நாமிங்கே
ஈனர்களாய் இருந்திடுதல் நியாயமோ-எழுந்து
ஈட்டி இன்பம் பெற்றிடவே நாம் ஒன்றாய்
ஈட்டிடுவோம் எம் உதிரம் உரமாக!

மனித நேயம் கண்டிடவே நாம் இங்கே
மனிதர்களாய் உழைத்திடுவோம்-உண்மையாய்
மனிதர்கள் படும் அவலம் நாட்டினிலே
மனிதத்துவமாய் உதவிடுவோம் நாமிங்கே!

முன்னெடுத்துச் சென்றிடுவோம் எம் முயற்சி
முன்வைத்த காலதனை நகர்த்திடவே-நாம்எல்லாம்
முழு மூச்சாய் உழைத்திடுவோம் உரமேற
முழு உலகும் புரிந்திடுமே எம் உழைப்பை!

காய்ந்து நின்றே அழிகின்றார் எம்மவர்கள்
காய்தலின்றி பார்த்திடவே நாம் இங்கே-ஒன்றாய்
காத்திடவே எம் உதிரம் நல்கிடுவோம்
காய்பவர்கள் மனதில் நிறுத்திடுவோம்

தூக்குமேடைப் பஞ்சுமெத்தைப் போலிகளை
தூக்கி எறிந்து விட்டே நாம் புது-முயற்சி
தூக்கமின்றி எடுத்திடுவோம் இயைபாக
தூக்கிடுவோம் புதுக்கோலம் எம் கையில்!

ஆக்கங்கள் அழித்து நிற்கும் ஈனர்களை
ஆக்கிடுவோம் அந்தரத்தில் சேதி-கொள்ள
ஆர்க்காட்டு நவாப்புடனே அனுப்பிடுவோம்
ஆதாரம் இல்லாது அலைத்திடுவோம்

வந்தாரை வாழவைக்கும் வன்னி புகழ்
வந்து நின்றே வாழ்த்திடுவோம்-நேயத்துடன்
வரம்பு கடந்து நின்ற பண்டாரவன்னியனை
வாயார வாழ்த்திடுவோம் நாம் ஒன்றாய்

--- குமளமுனையான் ----



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RAJU PHOTO

- Weddings
- Birthdays
- Puberty Ceremonies
  Any other occasions

- Enlargements
- Mounting



இந்து, கிறிஸ்தவ மங்கள மணவிழாக்களா? மழலைகளின் பிறந்த நாளா? மங்கையரின் பூப்புனித நீராட்டு விழாக்களா? எதுவாக இருந்தாலும் அழகாக படம் பிடித்துக்கொள்ள நாடுங்கள்!

Video and Wedding Cakes also Available!

Rajh

*Professional Photographer* - Tel: (416) 267-3666

# RJ'S PARTY TIME



*For all your party needs*

- Balloon Decoration
- Catering
- Limousine Service
- D.J. & Photography
- Wedding Hall
- Invitations
- Video Production
- Fresh Flowers
- Tables & Chairs

**1029 Ellesmere Road (Midland/Ellesmere)**
**Scarborough, Ontario**
**M1P 2X8**

**Tel: (416) 615-5555**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு 2000ல் கணனியின் அனர்த்தங்கள்

சிவா. சேனாதிராஜா

வானூர்திகள் வானில் இருந்தும் திடீரென விழ நேரலாம். வணிக நிறுவனங்கள்(Companies) முடங்கிப் போகலாம், வங்கி வைப்புக்கள் முன்கூட்டியே மீளப் பெறப்படுவதனால் வங்கிகள் செயலிழந்து போகலாம், போக்கு வரத்திற்கான சமிக்கை விளக்குகள்(Traffic Lights) செயலிழந்து போகலாம், தானியங்கிக் கதவுகள் செயற்பட முடியாது போகலாம், தொழிற்சாலை இயந்திரங்கள் இயங்க மறுக்கலாம், மின்சாரத் தடை ஏற்படலாம், தொலைநகல் கருவிகள், செய்திகள் பதிவு செய்யும் கருவிகள், உங்கள் கம்பியூட்டாகள் இயங்க மறுக்கலாம், ஏன் அரசுகள் கூட பதட்ட நிலையடையலாம்.

இதனால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளைத் தவிர்க்க வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டு வரினும், முழு விழைவுகளையும் முற்றும் உணர்ந்தவர் எவருமிலர். இது குறித்து ஒரு தவாறான கொள்கை எம்மவர் இடையே காணப்படுகின்றது.



1999 மார்கழி 31ம் நாள் நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர்தான் இந்த அனர்த்தங்கள் நிகழும் என்றில்லை. அதற்கு முன்னதாகவே சில பிரச்சனைகள் எழ நிறையவே வாய்ப்புக்கள் உண்டு.

## எதனால் இந்தப் பிரச்சனைகள்?

அரசாங்கங்கள், வங்கிகள், பெரும் வணிகநிறுவனங்கள் என்பன கம்பியூட்டர் மயமாக்கப்பட்டபோது, அவற்றின் சேகரிக்கும் இடமே மிகவும் அரிதாக இருந்தது. இதன் விளைவாக ஒவ்வொரு பரப்பும்(bit and byte) மிகவும் பெறுமதியாக கணிக்கப்பட்டு பதிவுகள் இயன்றவரை குறுக்கப்பட்டன. உதாரணமாக '1998' என்பது '98' எனப்பதிவாகியது. இப்பதிவு முறையில் 1999ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் திகதி நள்ளிரவுவரை எதுவித சிக்கலும் இருப்பதாக தெரியவில்லை. இந் நள்ளிரவு கழிந்ததும் ஆண்டு 2000 என்பதனைத் தெரியாத கணனிகள் அடுத்து வரும் ஆண்டினைப் பதிவு செய்வதற்கு, ஏற்கனவே இருக்கின்ற திட்டத்தின் சுருக்க முறைப்பிரகாரம் முதலிரண்டு இலக்கங்களையும்('20') விட்டுவிட்டு '00' எனப்பதிவு செய்து கொள்ளும். இந் நிலையில் கணனிகள் திரும்பவும் 1900ம் ஆண்டினையே நினைவு கூர்ந்து விடும். கணனி ஒழுங்கமைப்பாளர்கள்(Programmers) இதனை முன்கூட்டியே உணர்ந்தார் எனினும் ஏறத்தாழ 30 ஆண்டுகள் கழித்தும் இவை பாவனையில் இருக்குமென்பதில் நம்பிக்கை கொள்ளவில்லை. அவர்களின் தீர்மானம் ஏமாற்றமாய் விட்டது. விளைவு எமது கணனிகள் தமது குறியீடுகள், நினைவுகள் என்பவற்றைக் கடந்து நூற்றாண்டினின்றும் மாறுவதற்கு விடாப்பிடியாக மறுக்கின்றன.

## இதன் கருத்து யாது?

1900ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி ஒரு திங்கட்கிளமையாக இருந்த படியால் 2000ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதியும் ஒரு திங்கட்கிளமையாக இருக்கும் என கணனிகள் தவறாகக் கணித்துக் கொள்ளும். இதனால், வார இறுதி நாள் ஓர் வார நாளாகக் கணனிகளால் எடுத்துக்கொள்ளப்படும். மேலும் 2000ம் ஆண்டு ஒரு "லீப்"(Leap) வருடமாதலால் மாசி மாதம் 29 நாட்களைக் கொண்ட ஒரு ஆண்டாகும். கணனிகள் இந் நாளினையும் நினைவு கூரமாட்டாது. இதன் விளைவால், கணனிகள் எங்களைவிட ஒரு நாளால் முந்தி இருக்கவே வாய்புகள் அதிகம்.

சிறு கொதி நீர்க்கலம்(kettle) தொட்டு மோட்டார் வண்டி வரை கம்பியூட்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையங்களிலேயே (Computer Chips) தங்கியுள்ளது. இவ் இணையங்களின் கட்டுப்பாட்டின் கீழே நவீன கட்டடங்களில் இருக்கும் உயர்த்திகள்(Lifts), மின்விளக்குகள், வெப்பமேற்றிகள்(heating), பாதுகாப்பு(Security) முதலியவை செயற்படுகின்றன. பாரிய இயந்திரங்கள் கூட அவற்றின் தொழில்பாடுகளை வரை முறைப்படுத்த இந்த இணையங்கள் உதவுகின்றது. வழக்கத்துக்கு மாறான நிகழ்வுகள் ஏற்படும் போது அனைத்து தொழிற்பாடுகளையும் இவ் இணையங்கள் நிறுத்திவிடும்.

கணனிகளின் உன்னத செற்பாடு அலுவலக வேலைகளில் விரைவினையும், நவீன

**December 1899**

| S | M | Tu | W | Th | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 20 | 21 | 22 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

**January 1900**

| S | M | Tu | W | Th | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

**December 1999**

| S | M | Tu | W | Th | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

**January 2000**


| S | M | Tu | W | Th | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

**February 2000**

| S | M | Tu | W | Th | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | | | | |

மயத்தினையும் ஏற்படுததியது. 1980ம் ஆண்டு தொடக்கம் பயன்படுத்தப்பட்ட 286 ரக கணனிகள் தற்போதும் நீர்க்குளாய்(Plumbing) அமைப்பு, குளிரூட்டல்(Air Condition) திரவ ஒழுக்குப் பரிசீலனைகளின் பாவனையில் இன்றும் இருந்து வருகின்றன. இதனால் ஏற்படும் பிரச்சனை என்னவெனில் இவ் இணையங்களும் அவற்றில் இயங்கும் "Software"ம் 2000ம் ஆண்டு பிரச்சனைகளைப் பற்றி தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

கம்பியூட்டர் இணையம் கொண்டு கட்டுப்பாட்டு எல்லைகளை அவதானித்து கொண்டிருக்கும் அணு ஆயுத இயக்க நிலையங்கள், வைத்திய சாலைகளின் உயிர்க்காப்பு சாதனங்கள், போக்குவரத்து சமிக்கை



விளக்குகள் என்பவற்றில் ஏற்படப் போகும் தவறுகளை ஓரளவு சரிசெய்தாலும் இது முற்று முழுதான ஒரு தீர்வாக அமையும் என்பது ஐயமே.

## வியாபாரம்

பொதுசன ஊடகங்களின் கவனங்கள் விமான நிலையங்கள், மற்றும் வைத்திய சாலைகள் போன்றவற்றையே ஈர்க்கின்ற நேரத்ததில் 2000ம் ஆண்டு பிரச்சனைகளால் மிகவும் பாதிக்கப்படப் போவது வியாபார நிறுவனங்களே. ஆனால், வணிக நிறுவனங்கள் 2000ம் ஆண்டு ஜனவரி முதலாந் திகதிக்கு முன்னதாகவே புதுயுகப் பிரச்சினைகளை எதிர்கொண்டு விடும். அழிப்பிற்குரிய கணனிக் கோவைகளை ஒழுங்குபடுத்தும் போது 9.9.99 என ஒரு கற்பிதத் திகதி குறிப்பிடுதல் மரபு. இவ் 9.9.99 என்பது எதிர்வரும் வருடம் செப்ரம்பர் மாதத்தினைக் குறித்து நிற்கின்றது. இந்தத் திகதியில் இக் கோவைகள் மீளவும் நிலைப்படுத்தத் தவறின் நிலைக்க வேண்டிய பதிவுகளையும் கணனிகள் அழிக்கத் தீர்மானித்துச் செயற்பட்டுவிடும். கடந்த காலங்களில் கூட சில வணிக நிறுவனங்கள் திகதிகள் தொடர்பான பிரச்சனைகளுக்கு முகங் கொடுத்துள்ளன. குறித்த ஒரு வணிக நிறுவனம் 198- என்னும் பகுதியை "Software" உபயோகத்தில் உள்ளடுக்கி இருந்தது. இவ்வாறு அமைத்த கோவைகள் 1990.01.01இல் பயனற்றனவாயின. இது ஒரு Y2K பிரச்சனை அல்ல, Y90 என்பது குறிப்பிடத்தக்கது.

## இது என்னையும் பாதிக்குமா?

வணிகம், அரசு சம்பந்தமான கணனிகள் இயங்க மறுத்தால் அனைவரும் பாதிப்பிற்குள்ளாவர். உதாரணமாக இன்று உங்களுக்கு வயது 30 என்றால் இரண்டு ஆண்டுகளில் உங்களின் வயது -68 என்றாகிவிடும். சமூகக் காப்புறுதி, சாரதி அனுமதிப் பத்திரம், வாக்காளர் இடாப்பு, மருத்துவ வசதிகள், வங்கிக் கொடுப்பனவுகள் என்பன நீங்கள் இவ்வுலகில் இல்லை எனக்கருதி விடும். அத்துடன் 120 ஆண்டுகள் நீங்கள் உங்கள் ஓய்வூதியத்தினை பெற வாய்புகள் இல்லை. நடைமுறையில் உங்கள் வங்கிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பனவுகள், வங்கி வரவுகள் முற்றிலும் குழப்பமடையலாம். கணனிகள் தங்கள் கணக்குகளை முடக்கிவிடலாம் என்ற அச்சத்தில் வங்கி வைப்பாளர்கள் தங்கள் பணங்களை மீளப்பெறும் நிலை ஏற்படும். இதனால் வங்கிகள் மூடப்படும் நிலையும் தவிர்க்க முடியாததாகிவிடும். ஆராய்ச்சியாளர்கள் சிலரின் கருத்தின் படி 2000ம் ஆண்டில் 8%மான வணிக நிறுவனங்கள் செயலிழக்க நேரிடலாம். சில நிறுவனங்களைப் பொறுத்தவரை அவை தமக்கென தனியமைப்பினைக் கொள்ளாமை அவற்றின் செயலிழப்புக்குக் காரணமாகலாம். இன்னும் சில அவை சார்ந்துள்ள நிறுவனங்கள் தமக்கென்ற தனியமைப்பைக் கொள்ளாமை காரணமாய் செயலிழக்கலாம்.

## எனது பணி என்ன?

கம்பியூட்டரின் இணையங்கள் ஒவ்வொருவரையும் பாதிப்படையவே செய்கின்றது. சிறுவணிக உடைமையாளர்கள் தாக்கங்களை இலகுவாக சமாளித்துக்கொள்ள முடியும். உங்கள் தொலைக்காட்சி புதுவருடத்தன்று ஒரு ஒளி நாடாவைப் பதிவு செய்ய மறுப்பின் அதன் தயாரிப்பாளர்களுடன் தொடர்பு கொண்டு அது ஆண்டு 2000ல் சரிவர இயங்கக் கூடியதா என்பதை உறுதி செய்யவும். இச் செயற்பாடு திகதி, நேரம் என்பவற்றைக் கொண்ட சாதனங்கள் அனைத்திற்கும் பொருத்தமானதாகும். கணனி இணையங்கள் கொண்டு இயங்கும் சாதனங்களில் மிகவும் முக்கியமானவை. உதாரணமாக அலுவலகங்களில் ஒலி எழுப்பிகள், தானியங்கிக் கதவுகள்(Automatic door) போன்றவை முக்கியமானவை. பாரிய வைப்புப் பெட்டிகளின் தானியங்கிக் கதவுகள் வங்கிகளில் நிரந்தரமாக பூட்டப்பட வாய்ப்புக்கள் இருப்பதால் இவை போன்ற அமைப்புக்கள் உங்களிடமிருப்பின் அவற்றிக்கான மாற்று வழிகளைக் கையாளலாம். உதாரணமாக கதவினைத் திறந்தபடியே விட்டு தற்காலிக காவல் ஒன்றினை ஏற்படுத்துவது உங்கள் வைப்பினை எட்டமுடியாத நிலை ஏற்படுவதிலும் சிக்கனமானது.

தனி நபர் கணனிகள்(Personnel Computers) அண்மைக் காலத்தனவையாதலால் தாக்கங்கள் குறைவாக இருக்கும். இரட்டை எண் BIOS(Basic Input/Output System – The BIOS is the code that reads the operating systems from the disk or diskette into memory as the computer boots up and so the name of the BIOS and its manufacturer flashes up on screen as the computer starts ) கொண்ட முன்னய கணனிகள் 1900ம் ஆண்டினை மீளவும் நினைவு கூரும். இந்த BIOS ஐத் திருத்தாவிடின் உங்கள் கணனியில் உள்ள நாட்காட்டி, அல்லது அட்டவணைகள் போன்றவற்றில் திகதிகள் பிழைபடும். இதனால் வட்டி கணக்கிடல், அடைமான மீள் கொடுப்பனவுகள் என்பவற்றை கணக்கிட முடியாமல் போகலாம்.

உங்களின் கணனி WINDOW98ஐக் கொண்டதெனில் பிரச்சனைகளில்லை. காரணம் இது தானாகவே BIOS பிரச்சனைகளை கையாளக் கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது. 2000ம் ஆண்டில் Mac operating system and Apple Macintosh வகையான கணனிகள் பிரச்சனைகளைக் கொடுக்கமாட்டா. இவை அறிமுகமான நாள் முதல் திகதி, நேரம் போன்ற விடயங்களில் 2000ம் ஆண்டிற்கும் ஏற்றவாறே இயங்கி வருகின்றன.

2000 ஆண்டு கொண்டுள்ள பெருங்குறைபாடு கணனித் தொழில் நுட்ப வினையரின் தட்டுப்பாடே. கணனி ஒழுங்கமைப்பாளர்கள் (Programmers), கணணிப்பாஷை (Computer Language), ஒழுங்கு முறை(1960-1970) என்பனவற்றில் பாண்டித்தியம் உடையோர் மிகச் சிலராவார். இவர்கள்



கோருவதே மிக உயர்ந்த ஊதியம். பிரச்சனையை வளர்த்தவர்களுக்கே பிரச்சனைகளைத் தீர்க்க ஊதியம் வழங்குவது அனாவசியம்தான்.

2000 ஆண்டின் பின்நேர் விளைவு பற்றி பயந்து சாக வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லாவிடினும், நாம் எமது சொந்தத் தொழில் நுட்பங்களை கவனிக்கத் தவறின் விரக்தி, ஏமாற்றம், வீண்விரயம் என்பனவே எமக்கு மிஞ்சும். இப்பொழுதே தேவையான முன்னேற்பாடுகளை மேற்கொள்ளாவிடில், 2000 ஆண்டு பிறக்கும் போது கையில் மதுக்கிண்ணத்துடன் அடுத்த நூற்றாண்டை அனுபபிக்க இருக்கும் எம்மில் பலர், கையில் கோப்பியும் புத்தகமுகாக மூளையைக் குழப்பிக் கொண்டிருக்க வேண்டிய வாய்ப்புகளே அதிகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# K N R

## துரித பணமாற்றுச் சேவை

கனடாவின் எந்த நகரத்தில் இருந்தும் பணம் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

☑ Official Receipt வழங்கப்படும்.

☑ வெளிநாட்டு நாணயங்கள், காசோலைகள் மாற்றிக் கொடுக்கப்படும்.

**இலங்கை**
கொழும்பு, நீர்கொழும்பு, வவுனியா, திருகோணமலை

**இந்தியா**
சென்னை, திருச்சி, மதுரை உட்பட தமிழ் நாடு முழவதும் மற்றும் பெங்களூர், பம்பாய், டில்லி.

சிங்கப்பூர், கோலாலம்பூர், பாங்கொக், மொஸ்கோ.

## ஐரோப்பா எக்ஸ்பிரஸ்

ஒருமணி நேரத்தில் பணம் பெற்றுக்கொள்ளலாம்.

- லண்டன்
- பாரிஸ்
- டென்மார்க்
- நோர்வே
- ஜேர்மனி
- சுவிஸ்
- ஹாலண்ட்

**K. N. R. Money Express**

570 Parliament Street
Toronto
(416) 324-9640

885 Progress Avenue #115
Scarborough
(416) 438-5909




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வரலாற்று ஆய்வுகள்

## நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட வன்னி வரலாற்றுக் குறிப்புக்கள்

அமரர், கலாநிதி க. செ. நடராசா.

ஈழநாட்டின் ஆதித் தமிழ்ப் பிரதேசங்களுள்ளே, வன்னி நாடும் ஒன்றாகும். கிறிஸ்துவுக்கு முற்பட்ட எல்லாள மன்னன் காலத்துக்குப் பலபல நூற்றாண்டுகள் முன்னரே தமிழ் மக்கள் ஈழத்திலே குடிகொண்டு வாழ்ந்திருந்த போதும், அதற்கான வரலாற்றுக் குறிப்புக்கள் எதுவும் யாராலும் குறித்து வைக்கப்படவில்லை. ஆங்காங்கு காணப்படும் புதைபொருள் ஆதாரங்களளைக் கொண்டு அவ்வுண்மை இப்பொழுது நிலை நாட்டப்பட்டு வருகின்றதே தவிர, வேறு வரலாற்று ஆதாரங்களைக் காட்டி அதனை நிறுவுதல் மிகவும் கடினமான காரியமாயிருக்கிறது. ஆனால் வன்னி நாட்டைப் பொறுத்த அளவில், அதன் வரலாற்றினை அவ்வப்போது அறிஞர்கள் ஆங்காங்கு குறித்து வைத்திருப்பது மகிழ்ச்சியைத் தருவதாகும்.

வன்னிப் பிரதேசத்தின் வரலாறு பெரும்பாலும் வையாபாடலிலும், கோணேசர் கல்வெட்டிலும், மட்டக்களப்பு மான்மியத்திலும் குறிப்படப் பட்டிருக்கின்றது. அன்றியும் கல்வெட்டு, செய்யேடு என்ற வேறு இரு நூல்களும் அதன் வரலாற்றைக் குறிப்பிடுவனவாகும். கோணேசர் கல்வெட்டைப் போல, வன்னி வரலாறு குறிக்கும் ஒரு கல்வெட்டு நூலும் இருந்திருக்கின்றது. அதனைக் கல்வெட்டென்றே வழங்கிவந்தனர். செய்யேடு என்பது, அக் கல்வெட்டினை விளக்கி உரைத்துச் செய்யப்பட்ட நூலா, அன்றி வன்னி வரலாறு கூறும் மற்றொரு நூலா என்பது இப்பொழுது தெளிவாயில்லை. இக் கல் வெட்டுப்பற்றியும், செய்யேடு பற்றியும் வையா வசன நூல்களிலே குறிக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் அக் கல்வெட்டும் செய்யேடும் இப்பொழுது கிடைத்தல் இல்லை எனினும் குறித்த கல் வெட்டிலே காணப்பட்ட சில குறிப்புக்களை, இலங்கை சிவில் சேவையில் இருந்த ஜே. பி. லூயிஸ் என்பவர் 1895ம் ஆண்டு பிரசுரித்து வைத்த வன்னிக் கைநூல் (Manual of Vanni) என்ற புத்தகத்திலே காணக் கூடியதாக இருக்கிறது. அதன்படி,

> "இலங்கை மன்னர்களுள் ஒருவனான வாலசிங்க என்பவன், மதுரை மன்னனான சிங்ககேது என்பானது மகளாய சமயதூதி என்பவளை மணக்க விரும்பினான். அதையறிந்த சிங்ககேது மன்னன் தன் மந்திரிமார்களாய 60 வன்னியர்களை அழைத்துத் தன் மகளை இலங்கை மன்னனாய வாலசிங்க மகாராசாவிடம் அழைத்துச் செல்லுமாறு கட்டளையிட்டான். அவ்வன்னியர்கள் இலங்கையை அடைந்ததும் அவர்களுக்கு என்ன வெகுமதி வேண்டுமென வாலசிங்க மன்னன் கேட்க, அவர்கள் தமக்கு அடங்காப்பற்றைத் தருமாறு கேட்டனர். அப்படியே அம்மன்னன் அவர்களை அடங்காப் பற்றிற்கு அனுப்பி காடுகளைத் திருத்தி குளங்களைக் கட்டிக் குடியேற்றினர். அடங்காப் பற்றை அரசாண்டு, யாழ்ப்பாண மன்னனான கூழாங்கைச் சக்கரவர்த்திக்கு திறை கொடுத்து வாழுங்கள் என்றான். அந்த 60 வன்னியருள் ஒருவன் அனுராதபுரத்திலே திசாவையாக (Disawa) நியமிக்கப்பட்டான். ஏனைய 59 வன்னியரும் அடங்காப் பற்றுக்குச் சென்றனர். இது கல்வெட்டில் காணப் பட்டதாகும்."

என்று ஜே. பி. லூயிஸ் தனது நூலிலே குறிப்பிடுகின்றார். இந்த விபரம் வையாபாடலிலே உள்ள வன்னியர் வரலாற்றோடு பெரிதும் ஒத்திருக்கின்றது. ஆனால் ஒரு விடயத்தில் மட்டும் குறித்த கல்வெட்டின் இக் குறிப்பும் வையாபாடலும் சற்று வேறுபடுகின்றன. கல்வெட்டுக் குறிப்பின்படி, வன்னியருள் ஒருவன் திசாவையாக அனுராதபுரம் சென்றான் எனக் காணப்படுகின்றது. ஆனால் வையாபாடலோ, அந்த 60 வன்னியருள் ஒருவன் திசாவையாகக் கண்டிக்குச் சென்றான் என்று கூறுகின்றது. அவ்வளவுதான் அவ்விருவகையிலான வரலாற்றுக் குறிப்புக்களிலே உள்ள வேறுபாடு. அதனால் வன்னி வரலாறு பற்றி வையாபாடற் குறிப்பும் கல்வெட்டுக் குறிப்பும் ஒத்து நடக்கின்றன என்று கொள்ளலாம். இரு வேறுவாயிலாகப் பெறப்படும் வரலாற்றுக் குறிப்புக்களில் ஒற்றுமை காணப்படும் போது அவ்வரலாற்றில் உண்மையுண்டு என்று கொள்ள இடமேற்புடுகின்றது.

வையா பாடலின் படி , முதல் 60 வன்னியர்களும் இலங்கைக்கு வந்து அடங்காப்பற்றிலே குடியேறிய காலம் கி. மு. 50ம் ஆண்டளவிலேயாகும் என எமது வையாபாடற் பதிப்பிலே காட்டியுள்ளோம். மட்டக்களப்பு மான்மியத்தின்படி, வன்னியர் இலங்கையிற் குடியேறிய காலம் கி. பி. 100 வரையிலெனக் குறிக்கப்பட்டுள்ளது. இவ்விரு நூற் கணிப்புகளுக்குமிடையே 150 ஆண்டு வித்தியாசமே காணப்படுகின்றது. அப்போது இலங்கைக்கு வந்த 60 வன்னியருள் 54 வன்னியர் அடங்காப்பற்றிலிருந்த அசுரரோடு செய்த போரிலே பட்டொழிந்தனர் என்றும், திசாவையாகச் சென்ற ஒரு வன்னியனைவிட எஞ்சிய 5 வன்னியரும் அடங்காப்பற்றை ஐந்து பற்றாகப் பிரித்து அரசாண்டனர் என்றும் வையாபாடல் கூறும். இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னிருந்த வன்னி பற்றி லூயிஸ் குறிப்பிட்டிருப்பதாவது.

> வன்னி மாவட்டம் 10 பற்றுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அவையாவன கிழக்கு மூலை வடக்கு, நடுச் செட்டிகுளம், சின்னச் செட்டிகுளம் கிழக்கு, சின்னச் செட்டிகுளம் மேற்கு, மேற்கு மூலை, பனங்காமம், உடையாவூர், மேல் பற்றுத் தெற்கு, மேல்பற்றுக் கிழக்கு, என்பனவாம். கிழக்கு மூலை தெற்கு என்பது வன்னியின் தென்பாகமாகும். ஆங்கு வவுனியா என்ற கிராமம் உண்டு. ஆகக் கூடுதலான சனத்தொகை கொண்ட அக் கிராமத்திலே 2000 பேர் வாழ்ந்தார்கள். வவுனியா என்ற பெயர், 1750ம் ஆண்டளவில் அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த ஒரு கோயில் முகாமை ஆளராயிருந்த வவுனியன் என்ற வன்னியன் ஒருவன் பெயரிலிருந்து தோன்றியதாகும். அவனே பெரிய குளத்தைச் சீர்படுத்தியவன்.

மேலும் லூயிஸ் தெரிவிப்பதாவது

வவுனியா மாவட்டமும், முல்லைத்தீவு மாவட்டமும் சேர்ந்த பகுதியே அப்பொழுது வன்னி என்று அழைக்கப்பட்டது. வவுனியா மாவட்டத்தில் 76% தமிழரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 92% தமிழரும் வாழ்ந்தனர். 1891ம் ஆண்டிலே நடாத்திய குடிசனக் கணக்கெடுப்பின்படி, வவுனியா மாவட்டத்தில் 970 சிங்கள மக்களே இருந்தனர். முல்லைத்தீவு வட்டாரத்தில் இரண்டு சிங்களவரே வியாபாரத்தின் பொருட்டு மட்டும் காலியிலிருந்து சென்றிருந்தனர். இக் கணக்கெடுப்பு, யாழ்ப்பாணத்தில் உள்ள கரவெட்டியில் இருந்து நெசவுத் தொழிலாளர் நூறுக்கு மேற்பட்டோர் முள்ளியவளையில் சென்று குடியேறினர் என்று காட்டுகின்றது. மண்டுக்கோட்டை அல்லது மதுக்கந்தை என்று வழங்கப்படும் ஊரிலேயே முதற் சிங்களக் குடியேற்றம் ஏற்பட்டது. 1810ம் ஆண்டில் அங்கு 30 சிங்களக் குடிகளே இருந்தன. வவுனியாவில் அப்போது நான்கு தமிழ்ப் பொளத்தர்களும், மூன்று சிங்கள இந்துக்களும் இருந்தனரெனக் கணக்கெடுப்புக் காட்டுவதாக லூயிஸ் கூறுகின்றார்.

இந்தியாவிலுள்ள மருங்கூரிலிருந்து வந்து வன்னிப் பகுதியை அரசாண்ட வன்னியர்களின் பரம்பரையினரே வன்னியர்கள் என்பது லூயிஸ் அவர்களின் கருத்து. அவர் காலத்திலே பனங்காமத்தில் இரண்டு வன்னியர்கள் இருந்தனர் எனக் குறிபிட்டிருக்கிறார். பண்டாரவன்னியன் இறந்தபின் அவ்விருவருமே வன்னியரெனக் கணிக்கப்பட்டனர் என அவர் கூறுவதிலிருந்து, வன்னிப் பகுதியில் வாழும் எல்லோருமே வன்னியர் என்று கருத இடமில்லையெனத் தெரிகிறது. அக்காலத்திலுள்ள வன்னியின் எல்லைகளை அவர் பின்வருமாறு காட்டியிருக்கிறார்.

வடக்கே யாழ்ப்பாணக்குளம், தெற்கே அருவி ஆறும் நுவரகலாவிய மாவட்டமும், கிழக்கே திருகோணமலை மாவட்டம், மேற்கே மன்னார் மாவட்டம், இந்த எல்லைகட்குட்பட்டது வன்னியாகும். இதிலே ஏறத்தாழ கீழ் அரைப்பகுதி வவுனியா மாவட்டமும், மேல் அரைப்பகுதி முல்லைத்தீவு மாவட்டமுமாகும். வடக்குத் தெற்காக வன்னி நாட்டின் கூடிய நீளம் 71 மைலும், கிழக்கு மேற்காக அதன் கூடிய அகலம் 60 மைலுமாகும்.

வன்னியர் ஆட்சியிலிருந்தமையாலேயே அதற்கு வன்னிநாடு என்று பெயராயிற்று. அதற்கு முன் அப்பிரதேசம் அடங்காப்பற்று என்றே குறிக்கப்பட்டது. யாழ்ப்பாண ஆட்சிக்குள் அடங்காமலும், அனுராதபுரி ஆட்சிக்குள் அடங்காமலும் இருந்த பிரதேசமாகையால் அது அடங்காப்பற்று என்று வழங்கப்படலாயிற்று என்பது லூயிஸ் என்பவருக்கு முற்பட வாழ்ந்த ரெனென்ற் என்ற ஆங்கிலேயர் குறித்துள்ள கருத்தாகும்.

மேலும் வன்னிப் பகுதி அனுராதபுரப் பகுதி பற்றிய சில குறிப்புக்களை றொபேட் நொக்ஸ் எழுதிய நூலிலும் காணலாம். றொபேட் நொக்ஸ் என்ற ஆங்கில மாலுமி 1657ம் ஆண்டு இலங்கைக்கு வந்தபோது, அப்பொழுதிருந்த கண்டி மன்னனால் சிறைப்பிடிக்கப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டான். அவன் பின்னர் காவலிலிருந்து விடுவிக்கப் பட்டாலும் 1679ம் ஆண்டுவரை கண்டி இராச்சியப் பகுதியிலேயே வாழவேண்டியிருந்தது. 1679ல் அவன் கண்டியை விட்டுத் தப்பிச் செல்வதற்காக வடக்கு நோக்கிச் சென்றபோது, மல்வத்தோயாவைக் கடந்து அனுராதபுரம் சென்றானாம். அனுராதபுரப் பகுதியில் அப்பொழுதிருந்தவர்களுடன் சிங்களத்திலே பேச முடியவில்லை என்றும் அவர்கள் சிங்களவர்களிலிருந்து வேறுபட்ட இனத்தவர்களாகக் காணப்பட்டார்கள் என்றும், மலபார் மொழியிலேயே அவர்கள் தன்னிடம் கேள்விகள் கேட்டார்கள் என்றும், றொபேட் நொக்ஸ் தனது நூலிலே குறித்து வைத்திருக்கிறார். தான் அவர்களுடன் சிங்களத்தில் பேசியபோது அங்குள்ளவர்கட்கு எதுவுமே விளங்கவில்லையாம். அனுராதபுரத்திலே கண்டி மன்னனின் அதிகாரியாக இருந்தவனோடு கூடத்தான் சிங்களத்தில் தான் பேச முடியாமல் போனதென்றும், மொழி பெயர்ப்பாளர் மூலமே தான் அந்த அதிகாரியிடம் பேச முடிந்ததென்றும் றொபேட் நொக்ஸ் எழுதி வைத்திருக்கிறார்.

அனுராதபுரத்திற்கு அப்பால் வடக்கே சென்றால் மலபார் அரசனிடம் அகப்படவேண்டி வரும் என்று பயந்து, அங்கிருந்து மேற்குப் பக்கமாக மல்வத்தை ஓயா கரை மார்க்கமாக டச்சுக்காரர் கோட்டையை அடையும் நோக்கத்துடன் சென்றபோது கனதர (Kanadara) ஓயா என்ற அருவிக் கரையை அடைந்தானாம். அந்த அருவி கண்டியரசன் இராச்சியத்தையும், டச்சுக் காரருக்குத் திறை கொடுக்கும் மலபார் அரசன் இராச்சியத்தையும் பிரிக்கும் எல்லையென்று அப்போது தெரியவந்ததாம். அதனால் அக்கரையோரமாக மேற்கே சென்று அரிப்பு என்ற இடத்தை அடைந்தானாம்.

மலபார் மொழி என்பது தமிழ் மொழி என்றும், மலபார் அரசன் என்பது தமிழ் பேசிய வன்னிய அரசன் என்றும் கொள்ளலாம். கனதர ஓயா என்பது எந்த அருவியைக் குறிக்கிறது எனறு கண்டு கொண்டால், றொபேட் நொக்ஸ் எழுதிவைத்த மேற்காட்டிய செய்திகளிலிருந்து 1679ம் ஆண்டில் அனுராதபுரத்தின் மொழி நிலையையும், வன்னி இராச்சியததின் தெற்கெல்லையையும் தெரிந்து கொள்ளலாம். மல்வத்தை ஓயா மற்றொரு அருவியுடன் சென்று சேருகிறது. அது மதவாச்சிக்கும் அனுராதபுரத்துக்கும் இடையில் அமைந்திருக்கிறது. அதுவே கனதர


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓயாவென அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்விரண்டும் சேர்ந்துஅப்பாற் செல்வதே அருவி ஆறு. அதன் முகத்துவாரத்தை அண்டிய அரிப்பு என்ற இடமிருக்கிறது. லூயிஸ் அவர்களின் குறிகப்பட்டபடியும் அருவி ஆறே வன்னியின் தெற் கெல்லையாயிருந்தது என்று நொக்ஸ் கொள்வது பொருத்தமாகவே அமைகிறது. எனவே வன்னியின் தெற்கெல்லை அனுராதபுரத்திற்கும், மதவாச்சிக்கும் இடையில் இருக்கிறது என்பது தெளிவாகிறது.

# ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்....

சீவகன் என்னும் பெயருடைய ஒருவர் மரகுத்திக் கிராமத்தில் தனது குடும்பத்துடன் பல வருடங்கட்கு முன் வந்து குடியேறி வாழ்க்கை நடாத்தி வந்தார். அவர் காலப்போக்கில் அக்கிராமத்தில் பெரிய செலவந்தராகி பெருவாரியான விளைநிலங்களையும், இயந்திரங்களையும் தனது சொத்துக்களாக வைத்திருந்தார். அதைவிட வீடு நிறைய பொருளும், பொன்னும், பணமுமாக செல்வங்களையும் வைத்திருந்தார். தன்னுடைய சொத்துக்களிலிருந்து வருடம் முழுவதும் நிறையப் பணம் சம்பாதித்து வந்தார். அக்கிராமத்து சிறு நில உடைமையாளர்கள் இவரது உழவு இயந்திரத்தினை வாடகைக்கமர்த்தியே தங்களது விளைநிலங்களைப் பண்படுத்துவார்கள். அந் நிலங்கள் விளைவினைத் தந்தாலும், தராவிட்டாலும் அவர்கள் சீவகனால் சொல்லப்பட்ட பணத்தினைக் கொடுத்தாக வேண்டும். விளைவுகள் பாதிக்கப்பட்ட காலங்களில்கூட குறைவாகப் பணம் அறவிடும் பழக்கம் சீவகனிடம் ஒருபோதும் இருந்ததில்லை. அது மாத்திரமன்றி மரகுத்திக் கிராமத்தில் உள்ள குடும்பங்களில் அதிகமானவர்கள் சீவகனது வேலைத் தலங்களிலேயே வேலை செய்து ஊதியம் பெறுபவர்களாகக் காணப்பட்டனர். இவ்வாறு வேலை செய்து பெறும் அன்றாட ஊதியத்தினைப் பயன்படுத்தியே அவர்களும் தங்கள் குடும்பச் செலவுகளை நாளாந்தம் மேற்கொண்டு வந்தார்கள். இங்கு சீவகன் கொடுக்கும் ஊதியம் என்பது தன்னிடம் வேலை செய்யும் கூலியாட்களிடம் புளிந்தெடுக்கும் சக்திக்குச் சமமாக இருப்பதில்லை. நாள் ஒன்றிற்கு ஏறக்குறைய பத்து மணித்தியாலங்கள் வேலை செய்தால் அன்றைய சாப்பாட்டுச் செலவுகளைச் சமாளிக்கக்கூடிய அளவில்தான் கூலி கிடைக்கக் கூடியதாக அமையும். அதனை வைத்தே காலம்போக்கிவரும் சமயங்களில் ஏதோ பல காரணங்களால் சிலசமயங்களில் செலவுக்குப் பணம் போதாதிருப்பதும் வழக்கம்தான். அவ்வாறான சந்தர்ப்பங்களில் சீவகனிடம் அவர்கள் சென்று பணம் கேட்டால் முகத்தைச் சுழித்து, வாயில் வந்தபடி ஏசி பணம் கொடாது திருப்பி அனுப்பிவிடுவார். இவ்வாறு பலருக்கும் நடந்த சம்பவங்கள் அனேகம்.

காலங்கள் பல கடந்தன. சீவகனும் பெருகப் பெருகச் செல்வத்தினைச் சேர்த்துக் கொண்டே இருந்தான். தமிழர், சிங்களவர்கட்கு இடையேயான பிணக்குகள் உச்சக்கட்டத்தினை அடைந்தது. ஓர் நாள் திடீரென மரகுத்திக் கிராமத்தினைச் சுற்றிவளைத்த இராணுவத்தினர் கண்டபடி கிராமவாசிகளை அடித்தும், துன்புறுத்தியும் கிராமத்தைவிட்டு வெளியேற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டனர். இராணுவம் திடீரெனக் கிராமத்திற்குள் புகுந்ததனால் வீடுகளைவிட்டு வெளியேறிய மக்களால் தம் சொத்துக்களைத் தம்முடன் எடுத்துச் செல்ல முடியவில்லை. அனேகமானவர்கள் வெறுங்கையுடனேயே வீடுகளைவிட்டு வெளியேறினர். இந்தநிலையே சீவகனது குடும்பத்திற்கும் ஏற்பட்டது. கிராமத்தினை விட்டு வெளியேறியவர்களில் அனேகமானோர் பதினெட்டு மைல்களுக்கப்பால் உள்ள உயிலங்குளம் கிராமத்தின் சிறிய பாடசாலையில் குடியேறினர். அங்கேயே சீவகனது குடும்பமும் குடியேறியது.

அகதிகளாகப் பாடசாலையில் இருக்கும் காலம்வரைக்கும் சமத்துவக் கொள்கையே கடைப் பிடிக்கப்பட்டுவந்தது. அங்கு எதனையும் என்னுடையது, உன்னுடையது என்று சொந்தம் கொண்டாட முடியவில்லை. பாவனைப் பொருட்கள் யாவும் பொதுப்பொருட்களாகவே காணப்பட்டன. உணவுப் பரிமாற்றத்திலும் சமத்துவக் கொள்கையே இருந்தது. சீவகனால் இவைகள் அனைத்தையும் சீரணித்துக்கொள்ள முடியவில்லை. ஆனால் அவருக்கு நன்றாகத் தெரியும், தன்னால் எதையுமே இங்கு சாதித்துவிடமுடியாதென்பது. அதற்காகச் சீவகன் பேசாமடந்தையாகவே காலத்தைக் கழித்துவந்தான்.

இருபத்திரண்டு மாதங்கள் கழித்து ஓர் நாள் திடீரென அவர்கட்கு ஓர் அறிவித்தல், மரகுத்திக் கிராமத்திற்கு மக்கள் செல்லலாமெனக் கிட்டியது, அவ்வறிவித்தலைக் கேட்ட மாத்திரத்தே சீவகன் தானே முதலில் கிராமத்திற்குச் சென்றுவிட வேண்டும் என்ற எண்ணத்தினால் தன் குடும்பத்துடன் விரைந்து சென்றான். போகும் வழியிலேயே கண்ணுக்கெட்டிய தூரத்தில் தனது வீட்டுக் கூரைகள் பிரிக்கப்பட்டிருப்பதைக் கண்டான். வேகமாக நடந்த அவன் வீட்டுக் கதவைச் சென்றடைந்த போது அதுவும் உடைக்கப்பட்டிருந்தது. அதனைத் திறந்து உள்ளே பார்த்தான். வெறுமையான அறையே காட்சி கொடுத்தது. என்ன செய்வதென்றறியாத சீவகன் சிந்தித்தான். நான் ஒருவருக்கும் ஒரு சிறு துளியேனும் ஈயாமல் பெருகப், பெருகச் சேர்த்த செல்லவத்தினால் இன்று அடைந்த நன்மை என்ன? தீயார் என் பொருட்கள் முழுவதனையும் அபகரித்துச் சென்றதுதான் மிச்சம்.... ஆகவே நான் இனியாவது என் வாழ்வை மாற்ற வேண்டுமெனத் துணிந்தான்.

எஸ். மாக்கஸ்.
எளுத்தூர்,மன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளைகளைத் திறந்து பிழைகளைத்தர விரும்பாத
பழைய நிறுவனமே ஸ்ரீசிவா – எங்கும்
கிளைகளும் இல்லாத நிறுவனமே ஸ்ரீசிவா.

ஸ்ரீசிவா நகைமாளிகை

**SRISIVA JEWELLERY**

Tel: (416) 531-4867
721 Bloor Street West, Toronto, Ontario, M6G 1L5

**KUGAN STUDIO**

பருத்தித்துறை, சாவகச்சேரியிலும் இயங்கி வரும் எமது ஸ்தாபனம் இன்று சிறப்பாகக் கனடாவிலும்

HIGH QUALITY DIGITAL PRINTING

- ★ Passport Photos
- ★ Children Portraits
- ★ Wood Lamination
- ★ Citizenship Photos
- ★ Custom Prints
- ★ Black & White to Color
- ★ Family Portraits
- ★ Copy work

உங்களது திருமணம், பிறந்தநாள், அரங்கேற்றம், குடும்பப் படங்கள் சிறந்த முறையில் படம் பிடித்துக் கொள்ள நாடுங்கள்,

குகன் ஸ்ருடியோ
**Sri. S Bavan (Professional Photographer)**
671 Markham Road, Scarborough, Ontario, M1H 2A5.
**(Markham/Lawrence)**

**Bus: (416) 431-1771**
**Home: (416) 283-0265**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொலைந்து போன என் உறவுகள்......

எண்ணத்தில் என் நினைவு பன்னிரண்டாண்டுகள்
பின்னோக்கிச் செல்கிறது
என் நெஞ்சை விட்டுநீங்காத
எத்தனையோ நினைவுகளில்" பெத்தாச்சியின்"
நினைவே பெரிதாய் எழுகிறது

எனக்கு அறிவு தெரிந்த நாளிருந்து
கூனிய முதுகும் ஊண்டுதடியும்
குடு குடு நடையும்
வெள்ளை ஆடையில் பிள்ளையாய்
சிரிக்கும் பெத்தாச்சி

தண்ணியூற்றிலிருந்து நெடுங்கேணிக்கு
மாதமிருமுறை மறக்காமல் வந்திடுவா
பேரக்குஞ்சுகளுக்கு பலாப்பழமும்
மாம்பழமும் கொண்டு வந்தூட்டிக்
குதாகலிக்கும் தாய் மனசு

பள்ளியில் என்னை பார்த்ததும்
தங்கை ஒருத்தி தந்தாள் தகவல்
தண்ணீரூற்று பெத்தாச்சியும்
மாமி ஒருத்தியும்
வந்துள்ளனர் என்று சொன்னாள்
பள்ளிவிடுமுன்னே பாய்ந்தோடி
வீடு சென்றேன்

பெத்தாச்சியும் மாமியும் கூட என் அம்மாவும்
கொம்பறையருகே கூடியிருந்து
ஊர்ப்புதினங்கள் கதைக்கையிலே
பாய்ந்தோடி பெத்தாச்சி பக்கம் போய்
வழிகின்ற மூக்கை உள்ளே உறிஞ்சிவிட்டு
பெத்தாச்சி எனக்கு பலாப்பழம்
கொண்டு வந்தாயா என்றேன்

"வாடா எந்தன் பேரக் குஞ்சு
வந்து உன் மூக்கை துடை"
என தன் முந்தானையை நீட்டினா
வருங்கால மாமியார் முன்
வடிவாக நிக்க வேணாமோ
உன் மச்சாள்மார் கண்டால்
கட்டுவாளவயோ உன்னை
என்று சொல்லி பொக்குவாயால்
பொக்கென்று சிரித்தா

நான் தலையசைத்து மறுத்துவிட்டு
மாமியைப் பார்த்து வெட்கி குனுகி
வேறெங்கோ பார்ததபடி
வழியும் மூக்கை வழித்து
காற்சட்டையில் பிரட்டிக் கொண்டேன்
மாமிக்கு இரண்டு மகள்மார்
ஒன்று எனக்கு மற்றதுன் தம்பிக்கு
என்று சொல்லிவைப்பா பெத்தாச்சி

தெய்வேந்திரா தியேட்டரிலே
தெய்வதரிசனம் கிடைக்கிறதாம்
காண்பிப்பது கந்தன் கருணை படமாம்
வாறியோ இன்று மாலை மூவருமாய்
போய்ப் பார்ப்போம் என்றுவிட்டு

கொம்மாவிடம் பாதிப்பலாப்பழம்
கொடுத்திருக்கேன்
போய் வேண்டிச் சாப்பிடு குஞ்சு என்றா

அன்று மாலை மூவருமாய் போயிருந்தோம்
கந்தன் கருணை படம் பார்க்க
பெத்தாச்சிக்கு பக்கத்திலே
பிரியமுடன் அமர்ந்து கொண்டேன்
திரையில் முருகப்பெருமான்
காட்சி தரும் போதெல்லாம்
கை கூப்பி வணங்கி கை விரித்து
வரம் கேட்டா பெத்தாச்சி
வந்த சிரிப்பை வாய்மூடி மறைத்தபடி
நாட்டமிட்டேன் சினிமாவில்

திரையிலே மழை திடீர்
எனப் பொழந்தபோது
அட சண்டாளா என குரல் எடுத்து
கூவினாள் பெத்தாச்சி
காதுக்குள் மெதுவாக
காரணத்தை நான் கேட்டேன்
ஆ...ஆவ் பாழாய் போன மழை
பாதியிலை வந்தது நிற்குது
முற்றத்து பறணிலை பனங்கொடியல்
காய வைத்தேன் பாழ்படுவாள் பவளம்
அதை எடுத்து வைக்க மறந்திருப்பாள்
எட குஞ்சு நீ குடை கூட கொண்டுவரவில்லை
எப்படியடா நாங்கள்
வீடு போய் சேருவது என ஒப்பாரி வைத்து
உளமுடைந்து போனவளை

"எணை பெத்தாச்சி" இஞ்சை
மழையேதும் பெய்யவில்லை
நீ பார்ப்பது சினிமாப்படம்தான்
என்று பெத்தாச்சியை நம்ப வைக்க
பெரும் பாடுபட்டேன்
ஏனொ என்னவோ என் நினைவில்
திடீர் மாற்றம்
உற்சாகம் வற்றி உணர்வுகள்
கொப்பளிக்க என் பெத்தாச்சி
இன்னும் இவ்வுலகில்
இருக்கிறாவோ இல்லையோ
இறந்துதான் போனாவோ
இயற்கை மரணமோ இல்லை
இராணுவத்தின் பயத்தினால்
வந்த ஏழி மரணமோ
எத்தனை பெத்தாச்சிகள் என்
கிராமத்தில் இருந்தார்கள்
ஆனாலும் அன்று கட்டி
அரவணைத்து உப கதைகள் சொல்லி
நிலாக்காட்டி சோறு ஊட்டிய
பெத்தாச்சிகள் யாரும் இப்போது இங்கில்லை
ஏமாற்றத்தை நெஞ்சில் சுமந்தபடி
குடி பெயர்ந்த நாட்டிற்கு திரும்புகிறேன்.

- பாலா சேயோன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாத்தை வாதம்

- கலாநிதி பார்வதி கந்தசாமி

பெண்ணியச் சிந்தனைகள் வளர்ந்து ஆலம் விருட்சமாக வளரும் இச் சந்தர்ப்பத்தில் வரலாற்றில் பெண்களின் புகழை ஓங்கவிடாது தடுத்த சக்திகள் பற்றிய ஆய்வு அவசியமானதாகும். இப்போராட்டத்தில் காலங்காலமாகப் பெண்களைப் பெட்டிப்பாம்புகளாக வைப்பதற்காக ஆணாதிக்க சிந்தனைவாதக் கருத்துக்களில் தோய்ந்து உருவாகிய "பெண்மைக் கருத்துக்கள்" பெண்கள் சிந்தனைக்கு விடப்படுகின்றன. பெண்கள் தாமே தங்களைப் பற்றிய ஐதீகங்களை உடைத்தெறிய இக்கதைகள் ஆராயப்பட வேண்டியது அவசியம். முதயானையை அடக்கிய வன்னியின் வீரப்புதல்வி அரியாத்தையின் கதையும் பெண்நிலைவாதக் கருத்து அடிப்படையில் பலகோணங்களில் நின்று ஆராய்கின்றது இக்கட்டுரை.

வன்னிப்பிரதேசத்தின் வாழ்க்கை முறையில் பெண்கள் எத்தகைய இடத்தைப் பெற்றிருக்கின்றனர் என்பதனை வன்னியில் வழங்கும் கதைகள், சமூக நிகழ்வுகள், சடங்குகள், சமய நம்பிக்கைகள், ஐதீகங்கள் போன்றனவற்றின் வழியாக அறிந்து கொள்ளலாம். வன்னியில் செவிவழியாக வழங்கும் கதைகள் பல. விவசாயத்தையே தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வந்த வன்னி மக்களிடையே யானை பிடித்தல், யானை பழக்குதல் போன்ற தொழில் பார்த்த பணிக்கர்களும் வாழ்ந்து உள்ளனர். ஆணாதிக்கம் தலையெடுத்து நிலைத்து, உறுதியாக வேரூன்றிய சமூகங்களில் பெண்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக மதிக்கப் பட்டு வந்தமைக்கு வன்னிச்சமூகமும் விதிவிலக்கானதல்ல. எனினும் யாழ்ப்பாணச் சமூகத்திலும் பார்க்க வன்னிப் பெண்கள் சற்றுச் சுயாதீன வாழ்வை வாழ்ந்தனர் என்பதற்கான சான்றுகளில் ஒன்று 'அரியாத்தை' என்ற வீரம் மிக்க பெண்ணின் கதை.

அரியாத்தை 'குமுளமுனை' என்ற கிராமத்தில் வாழ்ந்ததாகவும் தன் கணவனான வேலப்பணிக்கன் அடக்கிப் பிடிக்கமுடியாத மதம் கொண்டயானையை அடக்கி வென்றார் எனவும் குறுநில வன்னி அரசனின் ஆணையை மீறமுடியாத பயத்தினால் கணவன் படுக்கையில் "மனச்சோர்வு" என்னும் நோய்வாய்ப்பட்டதால் மனைவியான அரியாத்தை கணவனுக்காக மதம் கொண்ட யானையை அடக்கிக் கட்டினாள் எனவும் கட்டப்பட்ட புளியமரத்தில் யாரும் அணுகாமல் யானை இறந்தது எனவும் கதை ஒன்று வழக்கில் உள்ளது. குமுளமுனையில் கற்பகப்பிள்ளையார் கோவிற்புறப் பகுதியில் ஒரு புளியமரத்தை "ஆனை கட்டியபுளி" என இன்றும் கூறுவர்.

எனினும் மேற்கூறிய பொதுவான கதை வெவ்வேறு வடிவங்களுடனும் வழக்கில் உண்டு. பெண்ணியல் ஆய்வுக்கு உண்மைக்கதை எது என்பது பற்றிய ஆய்வு அவசியமாகிறது. வேழம்படுத்த வீராங்கனை என்ற தலைப்பில் அரியான் பொய்கையின் கதையைக் கருவாகக் கொண்ட நாட்டுக்கூத்து ஒன்று ஒலிப்பேளையில் வெளிவந்தது. அக் கூத்தில் மேற்கூறிய கதையுடன் வேறுசில கூறுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. அரியாத்தையின் சொந்த மாமன் மகனான நீலப்பணிக்கன், அவள் தனக்குக் கிடைக்க வில்லை என்ற ஆத்திரத்தினால் வேலப்பணிக்கனுக்கு அரசன் இட்ட கட்டளையைச் சந்தர்ப்பமாகக் கொண்டு அரியாத்தையைப் பழிவாங்க எண்ணினான். யானையை அடக்கக் கூடியவன் வேலப்பணிக்கன் அல்ல அவனது மனையாள் அரியாத்தையே என இகழ்வு சிறப்பாக ஏளனம் செய்தான். பயிர்களை அழித்து வந்த மதம் கொண்ட யானையை அடக்கும் வழியைச் சின்னவன்னியன் சபையோரிடம் கேட்டபோது சபையினர் வேலப்பணிக்கனே தகுந்த வீரனாகக் கணித்துக் கொண்டனர். இந்த ஒளிப்பேழையில் அரியாத்தை வடிவம் வீரம் மிக்கதாகச் சித்தரிக்கப்படாது, வழமையாகப் பெண்களைச் சித்திரிக்கும் நளினம், பதுமை, அடக்க ஒடுக்கம் நிரம்பிய நங்கையாக வர்ணிக்கப்பட்டு யானைமுகனை வீழ்ந்து வணங்கி அக்கடவுளின் சக்தியைப் பெற்றுக் கடவுள் கருணையினால் அந்த யானையை அடக்கியதாகக்கதை வர்ணிக்கப் பட்டிருந்தது எனக் கூறப்படுகிறது.(நிவேதினி: செல்வி திருச்சந்திரன்)

இன்னொரு கதை வடிவில் நீலப்பணிக்கன் தன் மாமன் மகளை அடையத் தடையாயிருந்த வேலப்பணிக்கனுக்கு சின்னவன்னியன் ஏவிய கட்டளையை நிறைவேற்றாது அவன் அந்தரப்பட்டால் அது அரியாத்தைக்கு ஒரு பாடமாகவும் அவள் தன்னை இரந்து உதவும்படி கேட்க ஒரு வழியாகவும் இருக்கும் என எண்ணினான் எனக் கூறப்படுகின்றது. அதனால் வேலப்பணிக்கனின் உணவில் நஞ்சைக்கலந்து அவனை நோயாளியாக்கினான் எனவும் கூறப்படுகிறது.

இரு வேறுபட்ட கதைகளிலும் 'பெண்' என்றவடிவம் இரண்டாம் இடம் வகிக்கும் உருவமாகவே காட்டப் பட்டுள்ளது. வன்னியில் சில பெண்கள் மாடுகளைத் துரத்திவந்து கட்டுதல், பால் கறத்தல், பிடிக்கமுடியாத நிலையில் கட்டாக் காலிகளாக ஓடித்திரியும் 'நாம்பன்' மாடுகளை கயிறு எறிந்து படுத்துக் கட்டும் வழக்கமும் இருந்து வந்துள்ளது. அரியாத்தை என்ற பெண் வீரம் நிறைந்தவளாக இருந்திருக்கக் கூடிய சந்தர்ப்பம் வன்னிச் சூழலில் இருந்திருக்கின்றது.

அரியாத்தை என்ற பெண் பெண்ணியம் பற்றிய ஆய்வுகளுக்கு உள்ளாக்கப்பட வேண்டியவள். மனித பரிணாம வளரச்சிப் படிநிலைகளில் உலக நாகரிகங்கள் எல்லாவற்றிலும் 'தாய்மை' முதல் நிலைப் படுத்தப்பட்ட ஒன்றாக இருந்து வந்துள்ளமையை ராகுலசங்கிருத்தியாய எடுத்து இயம்பியிருக்கின்றார். அரியாத்தை வீரமான பெண் என்பதால் அவள் (ஆட வரில் வீரம் மிக்கவனான) தன் மாமன் மகன் நீலப் பணிக்கனைவிட மேலாக மக்கள் கருதிய வீரப் பணிக்கனை மணக்க விரும்பி இருந்திருக்கலாம் அல்லது ஆடவர் போட்டிபோட்டு தங்களுக்கு வேலை, ஒத்தாசை தர வல்ல வல்லமை மிக்க "அரியாத்தை"யை விரும்பி அடைய முயன்று அம் முயற்சியில் வேலப்பணிக்கன் வெற்றி பெற்றிருக்கலாம். இதனால் தனது முறை மைத்துனியை அடைய முடியவில்லையே என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தால் பொறாமைச் சுவாலை நெஞ்சில் வளர்ந்து அவளை வாழவிடாது செய்ய நீலப்பணிக்கன் முயன்றிருக்கலாம்.

தமிழிலக்கியங்கள் பெண்களை 'வீரத்தாய்' என்று உருவகப்படுத்திப் பெயர் சூட்டிய போதும் அது ஆண் பெருமை சார்ந்த-ஆண்மைவாத நோக்கில் அமைந்ததாகவே காட்டப்பட்டுள்ளது. புறநாநூற்றில் பெண்கள் வீரத்தாயர் என தாய், மனைவியை உள்ளிட்டுச் சித்திரிக்கப்படுகின்றனர். போர்க்களத்தில் மார்பில் அம்பு பாய்ந்து இறந்த மகனை ஈன்ற பொழுதிலும் பார்க்க பெரிது உவந்த தாய்மாராகவும், புறமுதுகில் வேல் பாய்ந்தது கண்டால் அம்மைந்தன்மேல் வெஞ்சினம் கொண்டு அவன் பாலருந்திய தம் மார்பகங்களை இடுங்கி எறிந்து விடுவதாக வெஞ்சினம் உரைக்கும் தாய்மாராகவும் புறநாநூறு புகழ் கூறுகின்றது. கணவன் மார்பில் புண்கண்டு அவன் இறப்பை வெற்றிப் பெருமிதமான இறப்பாக முகம் மலர்ந்து போர்க்களத்தில் சென்று ஆரத்தழுவிய செய்தி உண்டு (புறம்: 288)

கற்புடைமை பெண்ணின் பண்பாகவும், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு பெண்களின் ஒழுக்கமாகவும் காலாகாலமாகக் கருதப்பட்டு வந்த தமிழ் மரபில் கணவனின் சிறப்பு அவனது மனைவியின் கற்பின் வரம்பால் தீர்மானிக்கப்பட்டு வந்திருக்கின்றது. பெண்மை கற்பு என்ற தாரக மந்திரத்தைப் பேணப் பிறந்தவளாகவும், அவ்வாறு பேணாதோர் பரத்தைமை என்ற ஒழுக்கத்தில் சார்ந்தவர்களாகவும் கருதப்பட்டு வந்துள்ளது.

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
நிச்சமும் பெண்பாற்குரிய"
(தொல். பொ.96)
"பெருமையும் அறிவும் ஆடூஉ மேன"
(தொல். பொ. 95)
"எண்ணரும் பாசறைப் பெண்ணொடும்
புணரார்,"
(தொல். பொ. 173)

மேலே தொல்காப்பியம் தந்த வாக்கியங்களில் பெண்ணின் இலட்சணங்கள் கூறப்பட்டுள்ளன. பெண் அச்சம், மடம், நாணம் உடையவளாக பொறுமை மிக்கவளாக இருக்க வேண்டியவளாகவும் புகழ், அறிவு ஆண்மகவைச் சார்ந்தவையாகவும் போர் நடக்கும் பாசறைகள் பெண்கள் அணுக முடியாதவையாகவும் இருந்தன. போரில் ஆடவரின் புகழ்பாட அன்னையரைக் களத்திற்கு அனுமதித்திருந்தனர். ஆண்மையை வலுப்படுத்தவும் ஆணாதிக்கத்தின் அடையாளமான வீரத்தை தாய்மார் கண்டு புகழ்வதற்குமே தாய்மார் வீரத்தாயர் எனப்பட்டனர். தாய்மார் வீரமானவர்கள் என்னும் அர்த்தத்துடன் அல்லல் வீரப் புதல்வரைப் பெற்றனர் என்றதாலும், போர்க்களம் செல்லும் மைந்தரை வாழ்த்தி புறமுதுகிடாது நேர்நின்று எதிரிகளை வீழ்த்து என அரசனுக்கு நல்ல சேவகனாக மகன் இருக்க வேண்டும் என்பதைப் போதிக்கும் அன்னையர் என்பதாலும்தான் அவர்கள் *வீரத்தாயர்* எனப்பட்டனர். இன்று "புறநாநூற்று வீரத்தாயர்" என்ற தொடரை அடிக்கடி கேட்கின்றோம். அரசு என்ற ஆணாதிக்க அடையாளத்தைப் பேணும் ஒரு சேவகியாகவே 'பெண்' வீரத்தாய் ஆக்கப்பட்டாள்.

பெண் தன் புகழ்பேசவோ தன்மனதில் தோன்றுபவற்றைக் கூறவோ இடமளிக்கப் படாதவளாக இருந்து வந்துள்ளாள்.
"தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல்
எண்ணுங் காலைக் கிழத்திக்கு இல்லை"
(தொல். பொ.37)

குடும்பம் நடத்துவதுதான் பெண்ணின் வேலையாக இருந்து வந்தது. இந்த அடிப்படையில் பார்க்கும் போது அரியாத்தையும் குடும்பப் பெண் என்ற வரையறைக்கு அப்பால் சென்றாலும் அவள் "பெண்மை" என்ற கோடுகளுள் வைத்தே கணிக்கப்பட்டிருக்கிறாள். இதனால் அவள் புகழ், வீரம் உலகு அறியப்படாமல், உலகுக்கு அறையப்படாமல் இருந்திருக்கின்றது வீரத்தாய் என்ற வரையறைக்கு உள்ளேயும் அவள் வந்திருக்க முடியாது. அவளின் கணவன் யானையை வென்று நெஞ்சில் தாக்கப்பட்டு நிமிர்ந்து மல்லாந்து படுத்தபடி இறந்திருந்தால் அந்நேரம் அரியாத்தை அவனை ஆரத்தழுவி இருந்திருந்தால் அவளுக்கு வீரத்தாய் என்ற அந்தப்பட்டம் கிடைத்திருக்கலாம். ஆடவரையே புகழ்ந்து ஏற்றும் மரபு காரணமாகவும் அரியாத்தை புகழைச் சின்னவன்னியன் கொண்டாடி இருக்க விரும்பாமல் இருந்திருக்கலாம்.. அவளின் வீரச்செயல் ஆண்மைக்குச் சவாலான சம்பவமாகக் கருதி அவளை வீட்டு வேலியுள் வன்னியன் அடங்கியவளாகவே காட்ட எண்ணி இருக்கலாம்..

சங்காலத்தின் பின்வந்த இலக்கியங்கள் தொடர்ச்சியாக ஆண் ஆதிக்கத்திற்கு வலு ஊட்டியவையாகவும் பெண்மையைக் கற்பு என்ற கூட்டினுள் இறுகவைப்பனவாகவும் உள்ளன. பத்தினித்தெய்வங்களாகப் பெண்கள் சித்தரிக்கப் படுவது கூட ஆண்மை என்ற அடையாளத்தை மேலும் வலுப்படுத்துவதற்கே. வள்ளுவர் பெண்கள் பற்றிய அறக்கோட்பாடுகளை பல அதிகாரங்களில் வகுப்பதற்கும் அடிப்படையாக இருந்ததும் ஆண்மை வாதத்தின் இறுகிய போக்கினாலேயே. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, கம்பராமாயணம் போன்ற காப்பியங்களும் பெண்களுக்கு கற்பின் சீர்மையின் முக்கியத்துவத்தைத்தான் போதிக்கினறன. பெண்மைக்கு வீரம், பலம், மாசுடையவையாகவும், அவை பெண்களுக்கு இருப்பின் ஆண்மைக்கு இழுக்குக் கொடுப்பவையாகவுமே காட்டப்பட்டுள்ளன. கற்பைப் பாதுகாத்துக் கற்புத்திறத்தினால் கணவனின் ஆண்மைத்துவம் பாதுகாக்கப்படுவதாகக் காட்டப்படுவதும் அத்தகைய பெண்டிர், அவர்களது கணவன்மார் சமாதியாகிய பின்னர் பத்தினிகளாக்கப்படுதும் பெண்களின் வீரத்தினைக் காட்ட எடுத்த முயற்சிகள் அல்ல.

பத்தினித்துவம்கூட ஆடவர் சார்ந்த ஒன்றாகவே காட்டப்பட்டு வந்துள்ளது. வேழம் படுத்த வீராங்கனை தெய்வம் ஆக்கப்படாமைக்கும், பத்தினி ஆக்கப்படாமைக்கும் புகழ் பேசப்படாமைக்கும் அவள் ஆடவரது வீரத்திற்குச் சவால் விட்டமையைக் காரணமாகக் கொள்ளலாம்.

தொல்காப்பியர் வகுத்த இன்னோர் விதியினுள்ளும் அரியாத்தை மதயானையை அடக்கவேண்டிய தேவை இருந்திருக்கலாம், அவள் கணவனின் மானம் காப்பதற்காக இதனைக் கணவனுக்கான பணியாகச் செய்ய வேண்டி இருந்திருக்கலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOM AR 135016

"அவன் சோர்வு காத்தல் கடன் எனப்படுதலின்
மகன் தா யுயர்புந் தன்னுயிர் பாகுஞ்
செல்வன் பணிமொழி இயல் பாகலான"
(தொல். பொ.கற்பியல் 33)

ஆண்மகன் சோர்வை இழுக்காகக் கருதுகிறார் தொல்காப்பியர். ஆதலின் சோர்வைப் பொறுமையுடன் ஏற்று அவனைச் சோர்விலிருந்து காப்பது மனைவியின் கடமையாக்கப்படுகின்றது. அவன் வேறுமனை நாடினாலும் மனைவி அவனைச்சோர்வு போக்கி அக மகிழவைக்க வேண்டும் என்கின்றார் தொல்காப்பியனார். ஆகவே வேலப்பணிக்கன் யானை பிடிக்கமுடியாது பயம் என்ற மனச்சோர்வு நோயினால் பீடிக்கப்பட்டு வருந்தும்போது அவன் மனச்சோர்வு நீக்குதல் மனைவியாகிய தனது பணி என எண்ணி, தன் உயிரையும் மதிக்காது 'தற்கொண்டான்' புகழுக்காக மதம் கொண்ட யானையை அடக்க அரியாத்தை சென்றிருக்கலாம் என்பது உண்மை எனக்கருதினால்க் கூட அவளின் வீரத்தைப் புறக்கணிக்கமுடியாது. ஆனால் அவளின் வீரம் புகழப்படவில்லை என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. வன்னி மன்னன் பண்டார வன்னியனுக்குக் கூட அவனது சகோதரிகள் பக்கபலமாக நின்று போராடினர் என்பது வரலாற்றின் மூலம் அறியமுடிந்தாலும் தமிழுலகமும் வன்னியும் பண்டாரவன்னியனின் புகழைத்தான் பேசிக்கொண்டு இருக்கின்றன. மாற்றான் படைகளை மறித்துப் போரிடும் அளவுக்கு அவர்கள் பலம் கொண்டிருந்தனர். இதனை நோக்கும்போதும் அரியாத்தையின் பலம், வீரம் வன்னியில் பல அரியாத்தைகள் இருந்திருக்க வேண்டும் என்பதையும் வன்னிப் பெண்களிடம் வீரம் நிறைந்து இருக்கின்றது என்பதையும் ஊகிக்கக் கூடியதாக உள்ளது. அரியாத்தையின் மகத்தான வெற்றியாகக் கருதுவது ஆணாதிக்க சிந்தனாவாதத்திற்கு முரணானதும் பெண்ணியத்தின் வெற்றிக்கு வழிவகுப் பதாகவும் இருக்கும் எனக் கருதி அவளின் வீரத்தை மதிக்காது விட்டிருக்கலாம். அரியாத்தை விநாயகனை வணங்கிச் சென்றபடியால் அந்த ஆண்தெய்வச் சக்திதான் மதயானையைவென்றதே தவிர அரியாத்தையின் வீரம் அல்ல என்ற கருதுகோளும் வழிப்படுத்தப் பட்டிருக்கலாம்.

அநுமான் சீதையைத் தானே தூக்கிச் சென்று இராமனிடம் சேர்ப்பதாகக் கூறியபோது அது இராமனுக்கு இழுக்குத் தரும் விடயம் என சீதை ஊடாக கம்பர் மறுக்கிறார்.

அல்லல் மாக்கள் இலங்கையது ஆகுமோ
எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன் *அது தூயவன்*
*வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்*
(சுந்தர காண்டம்: சூடாமணிப்படலம்)

ஆண்களாலேயே படைக்கப்பட்ட இத்தகைய காப்பியங்களில் "ஆண்மை" பாதுகாப்பதற்காக எடுக்கும் முயற்சிகள் பலவற்றைக்காணலாம். கணவனுக்கு "மாசு" என்ற காரணத்தினால் அரியாத்தையை ஒளிப்பேளையில் படைக்க முயன்றோர் அவளின் "வீரத்தைக்" காட்டாது "ஐங்கரனை" வணங்கியதால் ஐங்கர வடிவமாகக் கருதும் யானை, அரியாத்தை சென்றதும் அவள் காலடியில் வீழ்ந்ததாகக் காட்டி உள்ளனர். இது ஆண்மையை மாசுபடுத்தாமல் விட எடுத்த முயற்சி என்பதில் சந்தேகம் இல்லை.

வன்னிச் சடங்குகள், சமய நம்பிக்கைகளைப் பார்க்கும் போது அரியாத்தை என்ற பெண் எவ்வாறு கையாளப்பட்டாள் என்பதற்கான ஆதாரங்களுக்கான அடிப்படைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்ப்பனீயச்சடங்குகள் வன்னிமக்கள் வாழ்வில் இடம் பெற்றதற்கான ஆதாரங்கள் மிகக் குறைவாகவே உள்ளன. வேளாண்மையை வாழ்க்கையின் தொழிலாகக் கொண்ட வன்னி மக்கள் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்து வந்திருக்கின்றனர். மரவழிபாடுகள், கல்வழிபாடுகள் பெரு வழக்கில் உள்ளன. வன்னிப் பிரதேசத்தில் மாடுகளுக்கு விழா எடுக்கும் வழக்கமும் உண்டு. இறப்புச் சடங்குகளில் பார்ப்பனீயர் பங்கு கொள்ளாத மரபு பல கிராமங்களில் இன்றும் உண்டு. கொட்டுக்கிணற்று விநாயகர் என்னும் கழுத்து வெட்டிப் பிள்ளையாருக்கு மக்கள் கற்பூரம் கொழுத்தி வணங்கிச் செல்வதும், விளக்கேற்றுவதும், பொங்கல், நிறைமணி (ஊர் ஆடவர்கள் சேர்ந்து மோதகம் செய்து நீரில் அவித்துப்படைத்தல்) செய்து படைத்தலும் ஐயர் இல்லாது செய்யும் சாதாரண நிகழ்வுகளாக நிகழ்ந்துவந்துள. காட்டு மிருகங்கள் வேளாண்மையை அழிப்பதால் அவற்றை அணுகவொண்ணாது தடுப்பதற்காக காட்டில் உறையும் வன்னியிற் தெய்வம் என்ற ஐயனுக்கு ஒரு மரத்தின் கீழ் "அமுதுசமையல்" செய்து ஆண்களே படைத்து உண்டு வருவர். அவற்றை வீட்டிற்குக் கொண்டு வருவதுமில்லை, பெண்களை உண்ண விடுவதும் இல்லை. இந்தக் கருத்தின்படி பயிர்களை வனவிலங்குகளிலிருந்து பாதுகாக்கும் ஐயனை வணங்கும் உரிமை வன்னிப் பெண்களுக்கு மறுக்கப்படுகின்றது. ஆகவே அரியாத்தை மதயானையை அடக்கும் வல்லமையைக் கடவுளிடம் பெறக்கூடிய வாய்ப்பு இருந்திருக்க இடமில்லை. இதனால் அவள் யானையை தனது வலிமையினால் வென்றிருக்க வேண்டுமென்ற கருத்து மேல் எழுந்து நிற்பதற்கு ஏற்ற களம் அமைந்து விடுகிறது. இதனை நீக்குவதற்கே தொடர்ச்சியாக கற்புடைய பெண்கள் *கற்பு* என்ற மந்திர சக்தியினால் சாதித்ததாகக் கருதும் வகையில் அவள் கதை அமைக்கப்பட்டிருக்கின்றது.

கற்பு என்ற சொல் அரியாத்தையின் கதையில் இடம் பெறவில்லை என்பது வரவேற்கக் கூடிய ஒரு அம்சம். எனினும் அவளின் வீரத்தை மதித்து அவளை ஒரு பண்டார வன்னியன் போன்று வீரத்தின் மங்கையாக ஆக்கப்படாமல் விட்டதற்கு அவள்வீரம் பெரிதாக்கப்படாமல் மழுங்கடிப்பதற்கு ஐங்கரனை வணங்கி கற்புத்திறத்தினாலோ அன்றி ஒரு அபூர்வ சக்தியினாலோ(supernatural power) யானை பணிய வைக்கப்பட்டது என்ற கருத்து உருவாக்கப்பட்டு பெண்ணியவாதக் கருத்துக்கள் மழுங்கடிக்கப் பட்டுள்ளன.

பெண்தெய்வ வழிபாடுகளாக வன்னிப் பிரதேசத்தில் கண்ணகி வழிபாடு, ஏழுகன்னியர் வழிபாடு இருந்து வருகின்றது. இந்த அடிப்படையில் யாழ்ப்பாண மரபிலிருந்து வன்னிப் பெண்தெய்வ வழிபாட்டு மரபு வேறுபட்டு நிற்கின்றது. காட்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வத்தை அலட்சியம் செய்தவர்களைப் பீடித்த நோய்களை விடுவிப்பதற்கு உரிய சக்தி சில பெண்களிடம் இருந்துவருவதாகக் கருதப்படுகிறது. இதனால் வன்னி மரபில் பெண்கள் ஓரளவு சுயாதீனமாக வாழ்ந்ததற்கும் ஆதாரங்கள் உண்டு.

பெண்ணியத்தில் (1) முதலாளித்துவப் பெண்ணியம், (2) பொதுவுடமைப் பெண்ணியம், (3) அதிதீவிரவாதப் பெண்ணியம் என்ற மூன்று அம்சங்களும் முறையே,

- ஆண்களுக்கு இருக்கும் உரிமைகள் அனைத்தும் பெண்களுக்கும் சமமாக அளிக்கப்பட வேண்டும் என்றவாதம்
- குடும்பம், சொத்து, உற்பத்திச் சாதனங்களின் அடிப்படையில் பெண் ஒடுக்கு முறையை இனங்கண்டு போராடும் வாதம்
- தந்தைவழிச் சமுகத் தோற்றப் பாடுகளுக்கு எதிராகத் தீவிரவாதங்களை முன்வைத்த வாதம்

ஆகியவற்றைக் கருக்களாகக் கொண்டவை. அனைத்துப் பெண்ணியங்களும் "பெண்" என்பதைச் சமுக அடையாளமாக உயிரியல் அடிப்படையில் ஏற்றுக் கொண்டவை. ஆனால் இன்று கருப்புப் பெண்ணியம், தலித்துவப் பெண்ணியம் போன்றவை பெண்கள் அனைவரையும் ஒன்று எனக்காணும் அடிப்படை வாதத்திற்கு எதிரான குரலை முன்வைக்கின்றன. கருப்புப் பெண் ஒருத்தி தான் கருப்புப் பெண்ணாக இருப்பதால் வெள்ளைப் பெண்களது ஒடுக்கு முறைக்கும் உள்ளாக்கப் படுகிறாள். இதனால், 'பெண்' என்ற பொது அடையாளம் அவளை உள்ளடக்காது என்கின்றது.

இதுபோலவே தலித்துவ பெண்ணியமும் உயர்சாதிப் பெண்கள், வெள்ளைநிறப் பெண்கள் என்ற அடையாளங்கள் தவிர்ந்த பெண் அடையாளங்களுடன் ஒத்திசைக்கின்றது. ஏனெனில் உயர்சாதிப் பெண்களும் ஒடுக்குமுறையைப் பயன்படுத்துபவர்களே என்பதாலாகும். தெற்காசியப் பெண்கள் என்ற வாதமும் மேற்கு நாடுகளில் தெற்காசியப் பெண் நிலைவாதிகள் உருவாக்கிய தொடராகும். இவர்களும் வெள்ளை இன, இவர்களுக்கு முன்னர் மேலைநாடுகளுக்கு வந்து குடியேறி உயர்பதவிகளில் வேலைபார்க்கும் கறுப்பினப் பெண்களுக்கும் எதிராக ஆக்கப்பட்ட கருதுகோளே. இவர்கள் பண்பாட்டு அடிப்படையில் தம்மைத் தனித்த ஒரு இனமாகக் கொண்டு உருவாக்கியதாகக் கூறுவது சர்வதேச சந்தர்ப்பத்தில் பெண்நிலைவாதக் கருதுகோளில் எந்த அளவு பொருத்தமானது என்பது ஒரு கேள்விக் குறி. இனத்துவேசம் அற்ற இன, இனக்குழும பெண்ணியம் (Ethnoracial-Antiracist Feminism) என்ற அடிப்படையில் நிறம் குறைந்த, கறுப்புப் பெண்கள் (Black Women) உள்ளிட்ட பெண்கள் பற்றிய ஆய்வுகள் வளரும்போது தலித்துவப் பெண்ணியமும் அதன் ஒரு பகுதியாகவும் தெற்காசியப் பெண்ணியப் பண்புகளை உள்ளிட்டதாகவும் அமையும். அதில் "அரியாத்தை ஆய்வு" பூரண வடிவம் பெறும். அரியாத்தையும் பணிக்கர் குலத்தைச் சேர்ந்திருந்தமையும் அவள் புகழ் மறைக்கப்பட்டு இருந்தமைக்கான காரணிகளில் ஒன்றாக இருக்கலாம். கற்பின் திறத்தினால் மகிமை செய்யாமையும், பணிக்கர் குலத்தில் பிறந்தமையும், அரியாத்தையை ஒரு வன்னிச்சி நாச்சியாக ஆக்காமல் இருந்ததற்கான கருது கோள்களாகலாம்.

கோவலன் பரத்தமை ஒழுக்கம் பூண்டு பொருள் எல்லாம் இழந்து மீண்டு வந்து காற்சிலம் புக்கு இரங்கி மனைவியான கண்ணகியிடம் பெற்றுச் சென்று கொலையுண்டதும் அவனைக் "கள்வன் அல்லன்" என்பதை நிலைநாட்ட கண்ணகி எடுத்த முயற்சியால் மதுரை எரிந்தது. ஆனால், அதுகூட கண்ணகி தன் முலையைப் பிடுங்கி வீசி எறிந்து அழிப்பதாகக் காட்டப் படுகிறது. கண்ணகியின் வாழ்க்கை மிகத் துயரம் நிறைந்ததாக இருந்தும், பரத்தமை ஒழுக்கம் பூண்ட கணவன் "கள்வன் அல்லன்" என்பதை நிலை நாட்டுவது இளங்கோ அடிகளுக்கு அவசியமானதாகப் படுகின்றது. அவளது பெண்மை (முலை பிடுங்கி எறிந்து) அழிக்கப்பட்ட பின்னர் அவள் சமாதியாவதைத் தவிர வேறு என்ன செய்திருந்திருக்கலாம். அல்லது சூதாடி, கணிகையுடன் வாழ்ந்த கணவன் இறந்தது கேட்டு தீயில் பாய்ந்த ஆதிரையைப் போலப் பாய்ந்து "பத்தினிப் பெண்டிரும் விரும்பித் தொழும் வியப்பினள்" ஆகி இருந்திருக்கலாம்.

அரியாத்தை கண்ணகியின் வணிககுலத்தை விடத் தாழ்ந்த குலமான பணிக்கர் குலத்தைச் சேர்ந்தமையும் அவள் புகழ் உலகம் அறியவைக்கப் படாமைக்கான காரணமாகலாம்.. இளங்கோ அடிகள் கண்ணகியைப் பத்தினியாக்கியமை பெண்கள் ஆண் மகர்க்காக வாழவேண்டியவர்கள் என்பதை உறுதிப் படுத்துவதற்காகவே.

வன்னி மக்களின் வாழ்க்கை முறையில் மாடு படுத்தல், பெண்களும் செய்து வந்த மரபாக இருந்ததால் அரியாத்தை கடவுள் என்ற அபூர்வ சக்தியால் ஏற்பட்ட மர்மத்தால் அல்லாது தனது சொந்தத் திறமையினால் மதயானையை அடக்கினாள் என்பதுதான் உண்மையானதாக இருக்கலாம். கட்டுரை ஆசிரியர் இருந்த குமுளமுனையில் சில பெண்கள் மாடு கட்டுதல், மாடு படுத்தல் (படுவைக் கயிறு எறிந்து மாடு பிடித்தல்), பால் கறத்தல், காவல் குடில்களில் இருந்து சிறுதானியப் பயிர்களைப் பறவைகள், குரங்குகள், காட்டு மிருகங்கள் என்பவற்றில் இருந்து பாதுகாத்தல், தினை, சாமை, எள்ளு, கொள்ளு, குரக்கன், இறுங்கு, பயறு போன்ற பயிர்களை அறுவடை செய்தல், கதிர் பொறுக்குதல், உப்பட்டி கூட்டுதல் (அறுவடை செய்து காய்ந்த கதிர்களை ஒன்றாக்குதல்) போன்ற வேலைகளை இன்றும் செய்கின்றனர். இன்னும் சிலர் இன்று உழவு வேலை களையும், உழவு இயந்திரம் ஓட்டலையும் செய்கின்றனர். ஆதலால் அரியாத்தை மதயானையை அடக்கியதற்கான அடிப்படைகள் வன்னிமரபில் காணப்படுகின்றன.

அரியாத்தைவாதம் மேலும் விரிவான ஆய்வுக்கு உள்ளாக்கப்பட வேண்டிய ஒன்று. இது பெண்ணிய ஆய்வுக்கும் சமுகவியலாய்வுக்கும் உயிரூட்டுவதாய் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAI GURU DATTA

# SHREE ANAGHA DESIGNS
## Exclusive Textiles & Showroom



**பட்டு சேலை வகைகள்**
- மைசூர், காஸ்மீர் பட்டு
- கோலம், ரங்கூலி
- காஞ்சிபுரம், தர்மாவரம் பட்டு

**பொலியஸ்டர் சாறி வகைகள்**

**ஆண்களுக்கான**
- வேட்டி சால்வை, கிப்ஸ் சாறம், குர்தா
- விதம் விதமான ரி – சேட்ஸ்
- சேட்ஸ் வகைகள்
- **Pants**

**சிறுவர், சிறுமியருக்கான**
- நக்மா, ரம்பா, லக்னா சூட்ஸ்
- தோத்தி சூட் (மடிசார்), நேருஜி சூட், குருத்தா செற்,
- **Pants, Shirts, Casual Dresses, Boys Suits**

**நங்கையர்களுக்கான**
- நக்மா சூட், ரம்பா சூட், லக்னா சூட், **Half Sarees**
- இறக்குமதி செய்யப்பட்ட பாவாடை, சட்டைகள்
- சுருதார் (பஞ்சாபி சூட்ஸ்)
- **Saree Blouses & Inskirts**

**All Kind of Imported Fancy Items**



# ஸ்ரீ அனகா டிசைன்ஸ்
# (416) 267 — 0301

**2607 Eglinton Avenue East**
(இரா சுப்பர் மார்க்கட்டின் மேல் மாடி)
**Scarborough, Ontario**
**Tel: (416) 267-0301**

Saji Graphic Design (416) 266-0530



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகப்புச் சித்திரம்......

வன்னிப் பிரதேசத்தின் கடற்கரையை அண்மித்த ஓர் பிரதேசத்தின் இயற்கைச் சூழலே அட்டைப் படமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இயற்கைச் சூழல் என்பதனைவிட, வன்னியர் வாழ்வியலில் தொன்று தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற ஓர் வேளாண்மைப் பண்பாடுதான் இங்கே துல்லியமாக சித்தரிக்கப் படுகின்றது என்பது மிகவும் பொருத்தமானதாகும். பல்வேறு வேளாண்மைப் பண்பாடுகள் வன்னிப் பிரதேசக் கமக்காரர்களினால் வயல்வெளிகளில் பின்பற்றப்பட்டு வருனினும், முன்னட்டைப் படத்தில் விபரிக்கப்பட்டுள்ள வயற்பண்பாடு, அவர்களால் பின்பற்றப்படுகின்ற மற்றய பண்பாடுகளைப் போன்றே மிகுந்த மனநிறைவோடு கடைப்பிடிக்கப் படுவதாகும்.

இயற்கை, கொடையை அள்ளி வழங்குகின்றது. நிலம் குறைவின்றி விளைந்து கொட்டுகிறது. கேட்போருக்கு இல்லை என்றுரைக்காமல் கொடுக்கும் கரங்கள் நீண்டே முன்வருவதனால் வானம் பாரா உள்ளங்கைகள் வாரி வழங்குகின்ற அதேநேரத்தில் கொடுப்பதையிட்டு கொடுப்பவர்கள் உள்ளம் குளிர்ச்சி அடைந்துவிட, அக்குளிர்ச்சியிலே மலரும் முகம் உவகைப் பூக்களை நிறைவாய் அள்ளிச் சொரிகின்றன. இதுவே இங்கு சித்தரிக்கப்பட்டுள்ள வன்னிப்பிரதேச "களப்போர்" என்னும் வயற் பதத்தனுள் பொதிந்திருக்கும் பொருள் செறிந்த கருவாகும்.

இதனை இன்னோர் வகையில், வயல் வெளிகளில் சூடு மிதித்து, பொலிநிறுத்தி, தூத்தி முடித்த பின்னர் அங்கு களப்போர் வாங்குவதற்காக வந்திருப்பவர்கட்கு, பெருவாயனால் பொலி (நெல்லு) அள்ளி இன்முகத்தோடு கொடை வழங்கும் செயலினையே களப்போர் என்னும் வயற்பண்பாட்டுப் பதம் செயலால் பொருள் விளக்கி நிற்கின்றது.

இங்கே கமக்காரர் தனக்குப்பின்தான் மற்றவர்கள் என்ற தன் நயக்கொள்கைக்கு முற்று முழுதாக முரணபட்டு, அள்ளிக்கொடுத்த பின்னர்தான் தனக்கு என்ற முற்போக்குக் கொள்கையைக் கடைப்பிடிப்பவர்களாக காணப்படுகின்றனர். இவர்கட்குத் தொழில் ரீதியான நம்பிக்கைகள் கடவுள் மீதும், இயற்கைக் கொடைகள் மீதுமாகும். கடவுள் அருளினால் இயற்கைச் செல்வங்கள் தாழ் திறந்து அள்ளியிறைக்கும்போது, தாமும் கொடுக்கும் பண்பியலில் சிறக்கவேண்டுமென்று அடித்தளம் இடப்பட்டவர்களாவர். அந்தவகையிலேயே சூட்டின் மீதுள்ள பிள்ளையார் மாவக்கையை தெய்வத்திற்கும், தூத்திய பொலியில் களப்போர் காரருக்குமாக கொடைவழங்கி மீதியையே தம் மனைக்கு எடுத்துச் செல்கின்றார்கள்.

"கொடுப்பவர்க் கெல்லாம் அவன்
கொடுப்பான்
இயற்கையே என்றும் எங்கள் நல்
அன்பன்"

பொன். தமிழ்மாறன்,
கனடா. (வவுனியா)

## துயரத்தின் பின்னே விடிவு

பிறந்த பிள்ளை பாலுக் அழுகிறது
பொரித்த குஞ்சு கூட்டிற் அலைகிறது
வசித்த தமிழன் நாடுகள் அலைகிறான்
பாலூற உணவுமில்லை அங்கே
கூடுகட்ட மரமுமில்லை
தூங்கிவிட வீடுமில்லை
வாழ்ந்துவிட இடமுமில்லை தமிழனுக்கே
வீதி எங்கும் தமிழ ருடல்
தாய்கள் எங்கும் விதவைக் கோலம்
குடும்பம் பிரிந்து சேரத் துடிக்கும்
தமிழரெல்லாம் விடிவை நோக்கி
தொடரும் பயணம் முரசறையும்
தமிழரங்கு தனிநாடமைப்பர்
பட்ட குறைகள் தீர்ந்தே போகும்
உயிர்களெல்லாம் களிப்பில் குதிக்கும்
தமிழும் மண்ணும் தானே சிறக்கும்

திருமதி. செ .தவச்செல்வி
கனடா (கணுக்கேணி)

## யார் விழுதுகள்:-

உருவாக்கினோம் நாங்கள்
வடிவாக்கினோம் எண்ணமதை
உரமாக்கினோம் செயலிலதை
விதைகளாயினர் சிலர் அங்கே
விருட்சங்காளாயினர் அவர்களே
விழுதுகளாயினர் மக்களே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாராஜாஸ் (F)பான்ஸி பலஸ்

**கலை, கலாச்சார பாரம்பரியப் பொருட்களின் அழகுக் களஞ்சியம் என எம்மின மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தமிழர் ஸ்தாபனம்**

**DEALERS IN:**

- RELIGIOUS BOOKS
- MUSICAL INSTRUMENTS
- DEVOTIONAL CASSETTES
- BHARATHA NATIYA ITEM
- STICKERS
- WALL HANGINGS
- GREETINGS CARDS
- HANDDY CRAFTS and much more.......
- GAR LANDS
- COSMETICKS
- LADIES ARTICLES





**மகாராஜாஸ் FANCY PALACE**
**1235 Ellesmere Road**
**Scarborough, Ontario.**

**Tel: (416) 751-2832**
**Fax: (416) 284-6406**

# பயனியர் ரிப்டொப் பஷன்

- சிறுவர், சிறுமியர்களுக்கான சிங்கப்பூர் அமெரிக்க இந்திய உடைகள்!
- நங்கையர் விரும்பும் நவநாகரீக உடைகள்!
- ஆண்களுக்கான Shirts, Pants மற்றும் இதர உடைகள்!
- பெண்களுக்கான பஞ்சாபி உடைகள், ஒப்பனைப் பொருட்கள்!
- Gift Items, விளையாட்டுச் சாமான்கள், எவர்சில்வர் பாத்திர வகைகள்

**இவை மட்டுமன்றி உங்கள் தேவைகளுக்கான இதர பொருட்களையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம்.**

**PIONEER TIP TOP FASHIONS**
**1235 Ellesmere Road**
**Scarborough, Ontario**
**Tel: (416) 757 9431**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளம் நிறைந்த வன்னி....

அலைமோதும் கடல்நடுவே அழகுமணி முத்தாரம்
விலைமதியா இரத்தினங்கள் விளையும் எம் சொத்தாரம்
தலை நிமிர்ந்து நாம்வாழ்ந்த தரணியது ஈழமதன்
நிலை உயர வளம் செறிந்த வன்னி
முல்லையொடு மருதமும்சேர் முத்து நகைப் பொட்டகத்தில்
இல்லையென்னும் தொல்லையின்றி வாழுமவ் வுழவன்

கார்கால மானதுமே கனத்தமழை தான் பொழியும்
ஏரி குளம் ஆறெல்லாம் தேங்கியே தான் வளியும்
ஏர் பூட்டி உழவரெல்லாம் இங்கிதமாய் உழுவரங்கே
செம்பவளம் சீனட்டி சீர்மேவு முத்துச் சம்பா
வளம்கொளிக்கும் வட்டிப்பித்தன் வாய்ருசிக்கும் சீரகச்சம்பா
சிறு பயிரும் தானியமும் தேன்கதலி வாழையும்
தென்னை பலா தோடையுமே சீரோங்கித் தான்வளரும்

அறுவடைக் காலமங்கே ஆனந்தம் பொங்கிடுமே
அயலூார் மக்களெல்லாம் அலையெனவே திரண்டிடுவர்
வேண்டும்வரை வேலைசெய்து வேதனமும் பெற்றுமங்கே
அறுசுவை உணவுமுண்டு அகமுவகை அடைந்திடுவர்

ஆவினங்கள் கூட்டமது அலைமோதும் கடலலையாய்
ஏர் பூட்டி நாம் உழவே எருமைகளும் ஏராளம்
தேனொடு பால் தயிரும் தெவிட்டாத பசுநெய்யும்
தேமதுர முக்கனியும் சிற்றுண்டித் தானியமும்
வினை தீர்க்கும் விரால்மீனும் வேண்டும் வகைமாமிசமும்
மலையளவு தானுமுண்டு மகிழ்ந்திடுவோம் நாம் உண்டு

களனி சூழ் கானகத்தே கருங்குயில்கள் கவிபாட
கலைமானும் துள்ளி ஓடும் களிப்புடனே
குஞ்சரங்கள் அசைபோட தோகைமயில் ஆடிவரும்
பச்சைக்கிளி பாட பதுங்கியே முயல் ஓடும்
வீரமிகு வேங்கையுமே வீறுநடை போடுதங்கே

வேம்புடனே முதிரை பாலை விருச்சமாய்த் தான் வளரும்
பாங்குடனே விற்பனர்கள் படைப்பரன்றோ பளிங்குமனை
ஆயுள்வேதம் மருந்தாக்கும் அத்தனை மூலிகையும்
அருமருந்தாய் வளருமந்த அழகுமிளிர் கானகத்தே
தித்திக்கும் நாவற்கனி தேன்சொட்டும் பாலைப்பழமும்
செம்பழமாம் வீரையுமே செழிக்குமங்கே நாம் உண்ண
ஐந்தாண்டு போனபின் அருமையாய்த்தான் பழுக்கும்
முல்லைவளர் முரலிக்கும் உண்டோ பஞ்சமங்கே

சின்னஞ்சிறார்கள் சீராகக் கல்விபெற
கல்விக் கூடங்களும் கனக்கவே தானுண்டு
பல்கலையும் கற்று பட்டங்கள் பெற்றிடவே
சர்வகலாசாலையும் தரமாகத்தானுண்டு
நாட்டுக்கூத்தும் உண்டு நயமான பாட்டுமுண்டு
கோயில் குளமுமுண்டு குடியேற வாய்ப்பும் உண்டு
நெடியசாலையுண்டு நெல்குத்து மாலையுண்டு
குடியேதும் இல்லையன்றோ குளம் இல்லா ஊரிலங்கே

அரிசிவிலை ஆரறிவார் பாலுக்குமேதுவிலை
திருமறையாம் குறள்போற்றும் உழவன் வாழ்
வளம் நிறைந்த வன்னிமண்ணின் மகிமைசொல்ல
இதற்குமேலும் உண்டோ ஏதேனும் சான்றிங்கே?

அ . அரிராசசிங்கம்
மொன்றியல் - (கனகராயன்குளம், வவுனியா.)

# வன்னியர் பெயரில் காணிகள் கிணறுகள்

குமளமுனை என்பது முல்லைத்தீவில் இருந்து தென்மேற்கே பத்துமைல் தொலைவில் உள்ள ஒரு பழம் பெரும் கிராமமாகும். ஆண்டான் குளம், ஆறுமுகத்தான் குளம், தண்ணிமுறிப்பு தண்ணீருற்று, அளம்பில் செம்மலை ஆகிய கிராமங்களை எல்லைகளாகக் கொண்டதே குமளமுனைக் கிராமமாகும். இங்கு போர்த்துக்கீசரால் சிதைத்து அழிக்கப்பட்டு பின்னர் ஊரவர்களால் புனரமைத்துக் கட்டப்பட்ட கற்பக விநாயகர் ஆலயமும், தலை வெட்டப்பட்ட நிலையில் உள்ள கொட்டுக்கிணற்று ஆலயமும் கிராமத்தின் கிழக்குப்பக்கத்திலும், தெற்குப்பக்கத்திலும் அமைந்து அருள்பாலித்து வருகின்றன. இக்கிராமத்தின் சுடுகாட்டுக்குச் செல்லும் பாதை ஓரத்தில் 1970ஆம் ஆண்டு வரை “யானை கட்டிய புளி” என அழைக்கப்பட்டு வந்த புளியமரம் நின்றமை நினைவு கூரத்தக்கது. இக்காணி திருத்தப்படும் போது தீப்பட்டு அழிந்து போனமை வேதனைக் குரியதாகும். மதம் கொண்ட யானையை அரியாத்தை அடக்கிக்கட்டினார் என்பது வரலாறு. கற்பக விநாயகர் ஆலயத்திற்கு அண்மையாக வன்னியன் வளவும் வன்னியன் கிணறும் காணப்படுகின்றது. கிணறுகள் செங்கற்களால் கட்டப்பட்ட சிதைவுகள் இன்றும் காணப்படுகின்றன. இவ்வரிய சான்றுகள் வன்னியரது ஆள்புலப்பரப்பையும் அவர்கள் நிலை கொண்டிருந்த இடங்களையும் காட்டி நிற்கும் அரிய சான்றுகளாகக் காணப்படுகின்றன. இச் சான்றுகள் அழிந்து விடாது பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதன் முக்கியம் உணரப்படல் வேண்டும்.

செல்வி பிரதீபா சண்முகராசா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வற்றாப்பளை கண்ணகித் தெய்வம்

## கோவில் தோன்றிய வரலாறும் நடைமுறைகளும் அதிசயங்களும் ஒரு நோக்கு.

சபா. இராசேஸ்வரன் (B.A Hons)

இன்றய போராட்டச் சூழ்நிலையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் திட்டமிட்டுத் தமிழர் உயிர்கள், உடைமைகள் என்பவற்றை அழிப்பதோடு மட்டும் நில்லாது அவர்களது கலை பண்பாட்டுப் பொக்கிசங்களையும் அழிக்கப் பிரயத்தனங் கொண்டு அதனைத் தமிழீழப்பகுதிகளில் செயற்படுத்தியும் வருகின்றது. இந்தவகையில் வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயமும் ஸ்ரீலங்கா இராணுவத்தினதும், இந்திய இராணுவத்தினதும் செல் தாக்குதல்கட்கு உட்பட்டு, ஆலயக் கட்டிடங்களும், சுற்று மதில்களும் அழிவுக்குட்பட்டிருக்கின்றது. இன்று பராமரிப்பற்று அழிந்துகொண்டிருக்கும் எமது பண்பாட்டுக் கோலங்களைப் பேணிப்பாதுகாக்க வேண்டிய பொறுப்பு தமிழ் மக்களாகிய எங்களது கடமையாகும் என்பதோடு, அவைபற்றிய விபரங்களை எல்லா தமிழ் மக்களும் அறிந்திருக்க வேண்டும் என்ற வகையிலேயே இக் கட்டுரை இங்கு வெளியிடப்படுகின்றது.

எழுத்துவடிவில் கிடைக்கப்பெற்ற ஆதாரங்களையும், கர்ணபரம்பரையாக செவிவழி வந்த கதைகளையும், கள ஆய்வில் வற்றாப்பளைக் கண்ணகி ஆலயத்தோடு நெருங்கிய தொடர்புடையவர்களை நேர் கண்டு அதன்மூலம் பெற்ற தகவல்களையும் ஆதாரமாகக்கொண்டு இக்கட்டுரை தரப்படுகின்றது. இக் கட்டுரையை வெளியிடுவதற்கான தகவல்களைத் தம்மால் இயன்றவரை பெற்றுத்தந்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

### அறிமுகம்

பெண் தெய்வ வழிபாடு சிந்து வெளி நாகரீக காலந் தொடக்கம் இன்று வரையில் முக்கியத்துவம் பெற்று வருகின்றது. இலங்கையில் பிரசித்தி பெற்றிருக்கும் பெண்தெய்வ வழிபாடுகளில் முக்கியமானதாக இன்றும் விழங்குவது அம்மன் வழிபாடும், கண்ணகி வழிபாடுமாகும். இந்தியாவின் தமிழ் நாட்டில் மிகப்பிரமாண்டமான கோவில் அமைத்து வழிபட்டுவரும் மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்தினைப்போல, இலங்கையில் வற்றாப்பளை கண்ணகி ஆலயத்தினையும், காரைதீவு அம்மன் ஆலயத்தினையுமே சிறப்பானதாக குறிப்பிட வேண்டும். பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்கள் சேர, சோழ, பாண்டிய நாடுகளைத் தன்னகத்தே கொண்ட தமிழ் நாட்டிலே இன்று கண்ணகிக்கெனக் கேவில்கள் ஒன்றேனும் இல்லை, மாரியம்மன் என்ற பெயரிலேயே கண்ணகி கோயில்கள் காணப்படுகின்றன எனவும் கண்ணகி வழக்குரை என்ற நூலின் அணிந்துரையில் தெரிவிக்கின்றார்.

இலங்கையில் கண்ணகி ஆலயங்கள் கரையோர தமிழ் மாவட்டங்கள் அனைத்திலும் பரவலாகக் காணப்படுவதோடு, கண்டிப் பிரதேசத்தில் உள்ள தலதா மாளிகையில் ஓர் கண்ணகி கோவில் இன்றும் இருப்பதாக பணடிதர் வீ. சீ. கந்தையா அவர்கள் குறிப்பிட்டுள்ளார். மாத்தளை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள முத்துமாரி அம்மன் கோவில் இன்னோர் பிரசித்தி பெற்ற கோவிலாக இருக்கின்றமையையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

கண்ணகி கோவிலது அமைவிடங்களாக தமிழ் மாவட்டப் பிரதேசங்களில் கற்கிடங்கு, வற்றாப்பளை, சிலாவத்தை என்பன முல்லைத்தீவு மாவட்டத்திலும், புற்குளம் வவுனியா மாவட்டத்திலும் அச்செளு, மட்டுவில் (பன்றித்தலைச்சி அம்மன்), புங்குடுதீவு அம்மன், நயினாதீவு, திருநெல்வேலி, மந்திகை, மாதகல். வதிரி. நவின்டில், துன்னாலை என்பன யாழ்ப்பாண மாவட்டத்திலும் கரவட்டித்திடல், பொறிக்கடவை என்பன கிளிநொச்சி மாவட்டத்திலும், குறிஞ்சாத்தீவு, புதியகுடியிருப்பு, சம்பூர், வந்தாறுமூலை, களுவாஞ்சிக்குடி, காரைதீவு, பட்டிமேடு, தம்புவில் என்பன மட்டக்களப்பு மாவட்டத்திலும் காணப்படுகின்றன. இவற்றைவிடத் திருகோணமலை, சிலாபம், நீர்கொழும்பு பிரதேசங்களிலும் பரவலாக கண்ணகி கோவில்கள் உள்ளன. சில பிரதேசங்களில் கண்ணகிக்குரிய கோவில்கள் அம்மன் கோவில்கள் எனவும் மக்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. (உதாரணமாக வற்றாப்பளைக் கண்ணகி கோவில் அம்மன் கோவில், அம்மாள் கோவில் என்றும் அழைக்கப்படுவது வழக்கம்).

சிலம்புடைத்தேவி கண்ணகிக்குரிய வழிபாட்டிடங்களாகக் கண்ணகி கோவில்கள் விளங்குகின்றன. சிலப்பதிகாரம் கூறுகின்ற சிலம்புடைத்தேவி ஒற்றைக்கால் சிலம்புடன் பிறந்தவர் என்பது யாவரும் அறிந்ததே. இவர் சோழ நாட்டில் பிறந்து கோவலனை மணம்முடித்து பாண்டிய நாட்டில் நீதி கேட்டு மதுரையைத் தன்னருளால் தீயிட்டுக் கற்புடைத்தெய்வமாகக் காட்சியளித்தார். கண்ணகித் தெய்வத்தின் அருளில் அளவில்லா நம்பிக்கை கொண்ட சேரநாட்டின் அரசனான சேரன் செங்குட்டுவன் தன்னாட்சிக் காலத்தில் பத்தினித் தெய்வமாகிய கண்ணகித் தெய்வத்திற்குப் பல கோவில்களை உருவாக்கியதோடு மட்டும் நில்லாமல் கண்ணகிக்கு அவ்வப்போது விழாக்களும் எடுத்து கண்ணகி பக்தியைப் பாரெங்கும் பரப்பினான். சேர நாட்டரசன் கண்ணகிக்கு விழா எடுக்கும்போது அண்டை நாட்டரசர்களையும் அவ்விழாவில் கலந்து கொள்வதற்காக அழைத்திருந்தான். இவ்வாறாகக் கலந்துகொண்ட கஜபாகு மன்னன் (கி.பி.2ம் நூற்றாண்டில் அனுராதபுரியை மையமாக வைத்து ஆட்சி செய்து வந்தவன்.) ஈழம் திரும்பும்போது கண்ணகி சிலைகளையும், காற்சிலம்புகளையும், வெள்ளிப்பிரம்புகளையும் தன்னோடு எடுத்து வந்து அங்கணாமைக் கடவை தொடக்கம் இலங்கையின் பல பகுதிகளிலும் கண்ணகி வழிபாடு பரவ வழிவகுத்தான் என்று சான்றுகள் வெளிப்படுத்துகின்றன. (சிலப்பதிகாரம், காதை 160-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கடல் சூழ் இலங்கை கயவாகு -வேந்தனும்
எந்நாட்டாங்கண் இமய வரம்பன் இந்
நன்னாட் செய்த நாளணி வேள்வியில்
வந்தீகென்றே வணங்கினர் வேண்டத்
தந்தேன் வரமென் றெழுந்த தொருகுரல்"

கண்ணகி சிலையைக் இலங்கைக்குக் கொணர்ந்த கயவாகு மன்னன் யாழ்ப்பாணத்திலுள்ள மாதகல் என்னும் இடத்திற்குச் சமீபமாக உள்ள அங்கணாமைக்கடவை என்னும் இடத்தில் வைத்து அங்கோர் கோவிலமைத்தானென்று பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்கள் "மட்டக்களப்புத் தமிழகம்" என்னும் நூலில் கூற, இச்சிலை கண்டி மாநகரினூடாகவே கொண்டு வரப்பட்டதென "மட்டக்களப்புச் சைவக்கோவில்கள்" என்னும் நூலில் பண்டிதர் வீ. சீ. கந்தையா அவர்கள் குறிப்பிடுகின்றார்.

வன்னி மண்ணின் பெருந்தலங்களில் ஒன்றாக விளங்கும் வற்றாப்பளைக் கண்ணகி ஆலயம் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வற்றாப்பளை என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது. இவ் ஆலயம் அப்பகுதி மக்களால் மாத்திரமன்றி வட, தென் தமிழீழமெங்கும் வசிக்கின்ற எல்லாத் தமிழ் மக்களினதும், சிறப்பாக இலங்கையில் வாழ்கின்ற அனைத்து இந்து மக்களினதும் நம்பிக்கைக்குரிய வழிபாட்டுத்தலமாகவும் உள்ளது.

அன்றும் இன்றும் வற்றாப்பளை என அழைக்கப்படும் கிராமம் மிகவும் வளமுடைய செல்வச் செழிப்புமிக்க ஓர் கிராமமாகவே இருந்து வருகின்றது. இதற்கு அணி சேர்ப்பவையாக அக் கிராமத்திலமைந்துள்ள பெரிய தென்னந்தோப்புக்கள், பரந்த நெல் வயல் நிலங்கள், நீர் வளங்கள், கால் நடை வளங்கள், மேட்டு நிலப் பயிர்க்காணிகள் என்பவற்றோடு எல்லாவற்றிலும் மேலாக கல்வி கேள்விகளிற் சிறந்து விழங்கும் சாண்றோர்களும் அங்கே வாழ்ந்து வருகின்றனர்.

ஓர் இந்து ஆலயம் என்பது எத்தகைய சுற்றுப்புற காரணிகளைக் கொண்டு அமையவேண்டுமோ அதற்கேயுரித்தான சகல ஒருங்கமைவுக் காரணிகளையும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம் தன்னகத்தே கொண்டுள்ளது. இதனை இவ்வாறு கூறுவதைவிட, அனைத்துச் செல்வங்களும் ஒருங்கமையப் பெற்ற ஓர் இடத்தினைக் கண்ணகி தனக்கேயுரித்தாக்கி உள்ளார் என்று கூறுவதே பொருத்தமானதாகும். இன்று கோவில் அமையப்பெற்றுள்ள இடத்திற்குக் கிழக்காகவும் வடக்காகவும் தீர்த்தம்(நந்திக் கடல் நீரேரி) அமைந்துள்ளது. கோவிலுக்குத் தென்புறமாக நெல் வயல் நிலங்களும், மேற்காகவும் தென் மேற்காகவும் தென்னஞ் சோலைகளும், மேட்டு நிலப்பயிர்க்காணிகளும், அவற்றுடன் கூடவே மக்கள் செறிந்து வாழும் குடிமனைகளும் காணப்படுகின்றன.

*மனிதனும் தெய்வமாகலாம் என்னும் நம்பிக்கை வாக்கிற்கொப்ப சாதாரண மனிதராகப் பிறந்த கண்ணகி தனது ஒப்பற்ற வாழ்க்கை மூலம் தெய்வநிலையை அடைந்தார் என்பது மனங்கொள்ளத்தக்கது.*

## கோவிலின் தோற்றம்

கண்ணகை அம்மன் ஆலயம் எவ்வாறு இங்கு தோற்றம் பெற்றது என்பதனை நோக்கும்போது, எழுத்துமூலமான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கப் பெறாவிடினும் கிடைக்கக் கூடிய ஏட்டுச்சுவடிகளும், கர்ணபரம்பரைக் கதைகளுமே ஆதாரங்களாக உண்மை பகர்கின்றன. வற்றாப்பளைக் கிராமத்திலே அக்காலப்பகுதியில் கால் நடைகளை வைத்திருந்தோர் அவற்றைப் புல் மேய விடுவதும், பட்டியடைப்பதும் நந்திக்கடல் நீரேரியைச் சூழவுள்ள பகுதிகளிலாகும். வழக்கமாக மாலையில் பட்டியடைப்பதும், அதிகாலையில் பால் கறந்துவிட்டு மேச்சலுக்காக பட்டியைத் திறந்து விடுவதும் இளைஞர்களது வேலையாகும். இவ் வழக்கத்திற்கமைய ஓர் நாள் இவ் இளைஞர்கள் பட்டியைத் திறந்து ஆநிரைகளை மேய விட்டுக்கொண்டிருந்த சமயம் ஓர் வயது முதிர்ந்த மூதாட்டியார் வெள்ளைச் சேலை உடுத்திக் கொண்டு ஊன்றுகோல் ஊன்றிய வண்ணம் நடந்து வருவதைக் கண்டார்கள். உடனே அவர்கள் அம்மூதாட்டியருகே சென்று "இந்த வழியால எங்கே ஆச்சி போறியள்" என்று வினாவினார்கள். அதற்கு அந்த மூதாட்டியார் "நானிடா மோனை இந்த வழியால் நடந்து வாறன், இப்ப எனக்குச் சரியாகப் பசிக்குது ஏதாவது இருந்தால் தாங்கோ" என்று கேட்டுக் கொண்டே வந்தவர் இருப்பதற்கு ஓர் இடத்தையும் தேடிக் கொண்டிருந்தார். அப்போது அச் சிறுவர்கள் எங்களிடம் இப்போ ஒன்றுமில்லை ஆச்சி என்ன செய்யிறது எனறு சொல்லியபோது, "வீட்டிற்குப் போய் அரிசி எடுத்துவந்து ஒரு பொங்கல் வைத்துத்தாருங்கோவன்" என்று கேட்டார் அந்த மூதாட்டியார். அதற்கு அந்தச் சிறுவர்களும் சம்மதித்து வீடு சென்று அரிசி எடுத்துவந்து பால் கறந்து அக் கலையத்திலேயே பொங்கலைப் பொங்கி முடித்தார்கள்.

இத்தனை விடயங்களையும் மரக்கலப்பை செய்வதற்காக வெட்டிக் காயப்போட்டிருந்த படவாள் குற்றியில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த மூதாட்டியார் பொங்கி முடிந்ததும் "பொங்கலை படையுங்கோ மக்கள்" என்று கூறினார். அதற்கு அச்சிறுவர்கள் "படைக்கிறதுக்கு இலை இல்லை ஆச்சி" என்று கூறவே, அயலிலிருந்த விடத்தல் மரத்தினைக் காட்டி அதோ அந்த மரத்தில் உள்ள இலைகளைப் பிடுங்கி வாருங்கள் என்று கூறினார்.

அதன் படியே சிறுவர்களும் விடத்தல் மரத்திலிருந்து எள்ளிலும் சிறிய இலைகளை ஆச்சரியத்துடனே பிடுங்கி வந்து கொடுக்க, அவர் அவ் இலைகளைக கல்லதைத்து "இப்போ இதில் பொங்கலைப் படையுங்கோ" என்று சொல்லிக் கொடுத்தார். சிறுவர்களும் அப்படியே பொங்கலைப் படைத்துவிட்டு, "சாப்பிடுங்கோ" ஆச்சி என்று கூறவே, அவர் மீண்டும் "பிள்ளைகளே விளக்குக் கொளுத்துங்கோ" என்று கேட்டார். விளக்குக் கொளுத்துவதற்கு என்ன செய்வது என்று யோசித்த சிறுவர்கள் ஆச்சியிடமே எண்ணெய் இல்லை விளக்குக் கொளுத்த என்ன செய்வது என்று கேட்டுக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அவர் அருகிலிருந்த நந்திக் கடலைக் காட்டி அதில் போய் தீர்த்தம் எடுத்து வாருங்கள் என்றார். சிறுவர்களும் அப்படியே தீர்த்தத்தினை எடுத்து வர தான் உடுத்திருந்த் வெள்ளைச் சேலையின் ஒரு கரையால் சிறிய துண்டைக் கிழித்துத் திரி ஒன்றைத் திரித்துக் கொடுத்து "இதை இந்த தீர்த்தத்தில் வைத்து கொழுத்துங்கோ என்றார்".

அப்டியே சிறுவர்கள் விளக்கேற்றியதும், பொங்கலை உண்டு களித்த மூதாட்டியார் மீண்டும் சிறுவர்களை நோக்கி "எனக்கு இந்தத் தலையில் பேன் கடிக்குதடா பொடியள் ஒருக்கால் பேன் பார்த்துவிடுறியளோ" என்று கேட்டார். அதற்கும் சிறுவர்கள் சம்மதித்து பேன் பார்ப்பதற்காகத் தலையை விரித்தார்கள். அப்போது அங்கே அவர்கள் கண்டது பேன் அல்ல, ஆச்சியின் தலைமுழுக்க ஓட்டையாகக் கண்கள் இருப்பதைக்கண்டு வியந்தார்கள். "என்ன ஆச்சி தலையில் முழுக்க ஓட்டையாக இருக்கிறதே" என்று கூறியபோதுதான் தான் யார் என்பதை அவர் வெளிப்படுத்தினார். "நான்தான் பிள்ளைகளே கண்ணகி, மதுரையிலிருந்து வருகின்றேன், இங்கு நான் பத்தாவது இடமாக வந்துள்ளேன், ஒவ்வோர் வருடமும் இதே தினத்தில் இங்கு வருவேன்" என்று கூறி மறைந்தார்.

அவர் அங்கு காட்சிகொடுத்த தினம் வைகாசி மாதத்தில் வரும் விசாகமும், பறுவமும் ஒருங்கிணைந்த பூர்வபக்க சப்தமி திதியில் வரும் திங்கட்கிளமையாகும்.

இச் செயல்கள் அனைத்தையும் கண்டு வியந்த சிறுவர்கள் தங்களது வீடுகட்குச் சென்று தமது பெற்றோர்கட்கு என்ன நடந்தது என்பதனை விபரித்தார்கள். ஆனால் அப் பெற்றோர்களோ அதனை நம்ப மறுத்துவிட்டார்கள். அன்றிரவே கண்ணகி அப் பெற்றோர்களது கனவில் தோன்றி, தான் யார் என்பதையும் எங்கிருந்து வந்தவர் என்பதையும் வெளிப்படுத்தினார். இப்போது உண்மையை உணர்ந்த அப்பெற்றோர்கள் தம் மக்களையும் கூட்டிக் கொண்டு பொங்கிச் சாப்பிட்ட இடத்தைப் பார்க்கச் சென்றார்கள். அங்கே அம் மூதாட்டியார் அமர்ந்திருந்த பட்ட வேப்பம் படவாள் குற்றியானது தளிர் விட்டுத் தளைத்திருந்ததைக் கண்டு வியப்பிலாழ்ந்தார்கள். அன்றிலிருந்து அவர்கள் அவ் வேப்பமரத்தடியில் ஓர் சிறிய கோவிலமைத்து அதில் கண்ணகிக்குச் சிலை வைத்து வணங்கி வந்தார்கள்.

*தன் கணவர் கோவலனைத் தவறாகக் குற்றங்கண்டு தண்டித்ததனால் கோபமடைந்த கண்ணகி மதுரையைத் தன்னருளால் சுட்டெரித்துவிட்டு, காற்றுடன் கலந்து கதிர்காமம் செல்லும் வழியிலேயே இலங்கையின் பல்வேறு இடங்களிலும் காட்சி கொடுத்தார் என்பது கர்ணபரம்பரைக் கதையாகும்.*

இங்கு வற்றாப்பளைக் கண்ணகி ஆலயத்தோடு தொடர்பான ஆறு விடயங்கள் அவதானிக்கப்பட வேண்டியுள்ளது. அவையாவன

1) பத்தாம்பளை
2) வேப்பம் படவாள்
3) ஆயிரம் கண்
4) தீர்த்தம்
5) வைகாசி விசாகத் திங்கள்
6) சிலம்பு கூறுதல் என்பனவாகும்.

## பத்தாம் பளை

இன்று "வற்றாப்பளை" என அழைக்கப்பட்டு வரும் கிராமத்திற்கு ஓர் காரணப் பெயர் உண்டு என்று கண்ணகி ஆலயம் தோன்றிய காலந் தொடக்கம் கர்ணபரம்பரையாக நிலவிவந்த கதைகளில் இருந்து தெரிய வருகின்றது. கண்ணகி சிறுவர்கட்கு தான் இவ்விடத்திற்குப் பத்தாவது இடமாக வந்தேன் என்று கூறியதிலிருந்து. அக்கிராமத்திற்கு "பத்தாம் பளை" என்ற காரணப் பெயர் உருவாயிற்று. "பத்தாம்" என்பது பத்தாவது என்பதனையும், "பளை" என்பது இடத்தினையும் குறித்து நிற்கின்றது. இப் பெயரே காலப்போக்கில் மருவி "வற்றாப்பளை" என இன்று அழைக்கப்படும் பெயராக மாற்றம் அடைந்துள்ளது என்பது பெரியோர்கள் கூற்றாகும்.

## வேப்பம் படவாள்

வேப்ப மரம் கண்ணகிக்கேயுரிய ஓர் புனித விருட்சமாகும். குளிர்ச்சியும், மருத்துவத்தன்மையும் கொண்ட இம் மரம் இந்துக்களால் பெரிதும் போற்றி மதிக்கப்படுவதுடன். பல்வேறு தேவைகட்காகவும் இப்பகுதி மக்களால் பயன் படுத்தப்பட்டும் வருகின்றது. சிறுவர்கள் பொங்கல் பொங்கும்போது கண்ணகி இருந்த பட்ட வேப்பம் படவாள் குற்றியானது திரும்பவும் தளிர் விட்டு தழைத்தன. பின்னர் இம் மரத்தினது பெருமை மேலும் உயர்ந்தது. வன்னிப் பிரதேசம் எங்கும் வாழும் மக்கள் சின்னமுத்து, பெரியம்மை, கொப்பளிப்பான் போன்ற நோய்களை அம்மனது குறையினால் ஏற்படும் நோய்களாகவே கருதுகின்றார்கள். எனவே ஒருவர் இந் நோயால் பீடிக்கப்படும்போது அவர் தனியான ஓர் இடத்திற்கு மாற்றப்பட்டு. அவர் தங்கும் இடம் முழுவதும் வேப்பிலைப் பத்திரி பரவி, மாமிசம் ஏதும் உண்ணாமல் அம்மன் நேர்த்தியுடன் குறிப்பிட்ட காலம்வரை அவ் விடத்திலேயே தங்க வைப்பர். இவ்வாறான நடைமுறையைக் கடைப் பிடிக்கும் ஒருவருக்கு அக் குறிப்பிட்ட காலத்தின் பின் அந்நோய் முற்றாகக் குணமடைந்துவிடும். நோய் குணமடைந்த ஒருவர் முதலில் அம்மன் கோவிலைத் தரிசித்த பின்தான் வெளியிடங்களில் உலாவத் தொடங்குவார். இதேபோல் மலேரியா போன்ற வேறும் சில நோய்கட்கும், விஷகடி வைத்தியத்திற்கும் வேப்பமரத்தின் பாகங்கள் பயன் படுத்தப்படுகின்றது. "ஆலும் வேலும் பல்லுக்குறுதி" என்ற ஒளவையாரின் கூற்றிலிருந்தே வேப்பமரத்தின் மகிமையை நாம் அறியலாம். பத்தாம்பளைக்கு கண்ணகி வந்து இருக்கையாகப் பாவித்த வேப்பம் படவாளில் இருந்து தளைத்தோங்கிய அம் மரம் இன்று அழிந்து விட்டது. இதற்கு முக்கிய காரணம் அப்பகுதி மக்கள் பலரும் அதன் பட்டைகளையும், கிளைகளையும், இலைகளையும் பிரித்தெடுத்து பல்வேறு தேவைகட்காக பயன் படுத்தியமையும் அதனது முதிர்ச்சியுமெனக் கூறப்படுகின்றது.

## ஆயிரம் கண்

கண்ணகி பொங்கல் பொங்கிக் கொடுத்த சிறுவர்கட்கு தான் யார் என்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிப்படுத்துவதற்காகப் பேன் பார்க்கும் அதிசயத்தினை நிகழ்த்தினார். இதன் காரணமாகவே கண்ணகி அடியார்கள் தங்கட்கு ஏதாவது கஸ்ரங்கள், துன்பங்கள் வருத்தங்கள் ஏற்படும்போது ஆயிரம் கண் பானையில் கற்பூரம் ஏற்றுவதாக நேர்த்தி வைத்து அதனைச் செய்து வருகின்றார்கள்.

## தீர்த்தம், வைகாசி விசாகத் திங்கள்

தீர்த்தம், வைகாசித் திங்கள் ஆகிய இரண்டும் அம்மனுக்குரித்தான வைகாசிப் பொங்கல் என்ற விடயத்தின் கீழ் சிறப்பாக நோக்கப்படுகின்றது.

வைகாசிப் பொங்கல் என்றாலே கண்ணகி அடியார்களிடத்திலும், சிறுவர்கள் மனதிலும் பக்திக் களிப்பும், ஆனந்தக் களிப்பும் ஏற்படுவதை அக்காலப்பகுதியில் காணலாம். வைகாசி மாதத்தில் வரும் திங்கட்கிளமைகள் அனைத்தும் அம்மனுக்குரிய திங்கள்களாகிவிட்டன. இதிலும் மூன்று திங்கள்கள் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் கண்ணகி பத்தாம்பளையில் காட்சி கொடுத்த தினமான வைகாசி மாதத்தில் வரும் விசாகமும் பூரணச் சந்திரனும் (பறுவம்) ஒருங்கே அமையப் பெற்ற திங்கட்கிளமை விசேடமானதாகும். இத் திங்கட்கிளமையே வற்றாப்பளைக் கண்ணகைக்கு உரிய பொங்கல் தினமாகக் கொண்டாடப்படுகின்றது. இதற்கு முன்னுள்ள இரண்டு திங்கக்கிளமைகளும் பொங்கல் விழாவோடு தொடர்புடைய இரு வேறுபட்ட கோவிற்கடமைகளை நிறைவேற்றுகின்ற முக்கியமான நாட்களாகக் கொள்ளப்படுகின்றது.

முதலாவது திங்கட்கிளமையில் "பாக்குத் தெண்டல்" என்னும் கருமம் நிறைவேற்றப்படுகின்றது. இப் பாக்குத் தெண்டல் செயல் முறையானது எப்போது பொங்கல் நடைபெறப்போகின்றது என்பதை மக்கட்கு வெளிப்படுத்துவதோடு, பொங்கலுக்கே உரித்தான ஓர் நடை முறைக் காரியமாகவும் செய்யப்படுகின்றது. பாக்குத் தெண்டுதல் செயற்பாட்டிற்காகக் கோவில் கடமைகளைச் செய்துவரும் பூசாரியாருடன் இரு சமூகப்பிரிவிலிருந்து ஒவ்வருவராக மொத்தம் மூன்று பேர் ஏழு வீடுகட்குச் சென்று (வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, சிலாவத்தை, புதுக்குடியிருப்பு, குமுழமுனை, வட்டுவாகல் கிராமங்களில்) வெற்றிலை, பாக்கு, மஞ்சல்காம்பு போன்ற தெட்சனைப் பொருட்களை வாங்கி காட்டாவினாயகர் கோவிலுக்கு எடுத்துச் சென்று கட்டுவதன் மூலம் இக் கடமையை முடிக்கின்றார்கள்.

இரண்டாவது திங்கட்கிளமை தீர்த்தம் எடுத்தல் என்னும் கருமம் இடம் பெறுகின்றது. இவ் விடயம் கண்ணகை அம்மன் சிறுவர்கட்குக் காட்சி கொடுக்கும்போது நந்திக் கடல் நீரேரியில் தீர்த்தம் எடுத்து விளக்கேற்றியமையை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படுகின்றது. தீர்த்தம் எடுத்தல் செயற்பாட்டினை முள்ளியவளையில் அமைந்துள்ள காட்டாவினாயகர் ஆலயத்தினரே செய்து வருகின்றனர். கோவில் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நந்திக் கடனீரேரியிலேயே தீர்த்தம் எடுக்கப்பட்டது. சிலம்பு கூறல் பாட்டில் கூறப்பட்டுள்ளவாறு

"வைகாசித் திங்களிலே வருவேன் ஒரு கிளமை காட்டா வினாயகர் கோவிலுக்கே"

என்பதற்கமைய முள்ளியவளைக் காட்டா வினாயகர் ஆலயத்திற்கு தீர்த்தம் எடுத்தல் பொறுப்பு விடப்பட்டது. அத்தோடு காலப் போக்கில் நந்திக் கடலினது நீர் வற்றுக் காரணமாகவும், தோளில் தீர்த்தக் குடம் வைத்து தலை மூழ்கித் தீர்த்தக் குடம் நிறையும்வரை கடல்நீரில் அமிழ்ந்திருந்து தீர்த்தம் எடுப்பதற்காகவும் சிலாவத்தைப் பெருங்கடலில் தீர்த்தம் எடுக்கும் ஒழுங்கு நடைமுறைக்கு வந்திருக்கலாம் என எண்ணக் கிடக்கின்றது.

தீர்த்தம் எடுத்தல் கருமத்தை யார் பாக்குத் தெண்டுவதற்குச் சென்றார்களோ அவர்களே செய்து முடிப்பார்கள். இவர்கள் பாக்குத் தெண்டியதிலிருந்து கண்ணகிக்கு விரதமிருந்து தீர்த்தம் எடுக்கும் தினத்தன்று உணவருந்தாது கருமத்தை நிறை வேற்றுவார்கள். காட்டாவினாயகர் ஆலயத்திலிருந்து தீர்த்தம் எடுப்பதற்காகப் புறப்படுவதற்கு முன் அதற்கேயுரித்தான கிரிகை முறைகள் யாவும் செய்யப்பட்டு அதில் குறித்த கருமத்தினைத் தொன்று தொட்டு வழி வழியாகச் செய்துவரும் ஒருவரது வாய் வெள்ளைத் துணியினால் கட்டப்பட்டு ஒருவருடனும் வாய் பேசாது தீர்த்தக் குடத்தினைத் தோளில் எடுத்து வைத்ததுடன் தீர்த்தப் பவனி சிலாவத்தைப் பெருங் கடலைநேக்கிக் கால் நடையாகச் செல்லும். முள்ளியவளை வற்றாப்பளை வீதி வழியாக பள்ளவெளி, பொதறிகுடா ஊடாக ஊற்றங்கரைக்கோவிலை வந்தடைந்து, அதிலிருந்து நீராவிப்பிட்டிப் பாதையுடாக ஆலடிச் சந்திக்குச் சென்று, முல்லைத்தீவுப் பிரதானவீதி வழியாக சிலாவத்தைக் கிராமத்தையடைந்து, அங்கிருந்து பெருங்கடலை நோக்கிப் புறப்படும். ஏறக் குறையப் பத்து மைல்கள் துூரம் நடந்து சிலாவத்தைப் பெருங்கடலைத் தீர்த்தப் பவனி வந்தடைந்ததும், அங்கு பூசைக்கென அமைக்கப்பட்டிருக்கும் கோவிலில் பூசைகள் ஆரம்பமாகும். அதில் தீர்த்தக் குடத்திற்கான பூசை முடிவடைந்ததும், தீர்த்தம் எடுக்கும் கைங்கரியம் இடம்பெறும். இதற்காக தீர்த்தக் குடத்தினைத் தோளில் வைத்திருப்பவரை கடற்கரைக்கு மேள தாழங்களுடன் அழைத்துச் சென்று அங்கு வைத்து இன்னோர் தீபாராத்திப் பூசை கடல் தீர்த்தத்திற்கும் தீர்தக் குடத்திற்கும் செய்யப்பட்டதன் பின்னர், அவரை இருவர் இரு பக்கக் கைகளிலும் பிடித்துக் கொண்டு கடலினுள் ஏறக் குறை இடுப்புக்குமேல் தண்ணீர் வரும்வரை அழைத்துச் செல்வார்கள். அச்சந்தர்ப்பத்தில் கடல் கொந்தளித்து பெரிய, பெரிய அலைகளாக அதிகளவு உயரத்திற்கு எழுந்து வரும். பெரிய அலையை எதிர்பார்த்து நின்று அது வரும் போது தீர்த்தக் குடம் வைத்திருப்பவரை இருவருமாக நீரினுள் அமிழ்த்திப்பிடிப்பர். தீர்த்தக் குடம் நிரம்பியதும் அவரை மேல் எழும்பச் செய்து கரையிலுள்ள கோவிலுக்கு அழைத்துவந்து தீர்தக் குடத்தினைப் பூசையில் இறக்கிவைத்து மீண்டும் அதற்குப் பூசைகள் செய்வார்கள். அச்சமயத்தில் தீர்த்தம் எடுத்தவரும் மற்றவர்களும் ஈர உடுப்புக்களை மாற்றிப் பூசையில் கலந்து அது முடிவுற்றதும், மீண்டும் தீர்த்தக் குடத்தினைத் தோளில் வைத்து தீர்த்தப்பவனியை ஆரம்பிப்பர். தீர்த்தப் பவனி சிலாவத்தைக் கிராமத்திற்குள் வரும் வழியின் இருமருங்கும் தோரணங்களால் அலங்கரித்து பந்தல்கள் அமைத்து அதில் நிறைகுடம் வைத்து தேங்காய் அடித்து வரவேற்பர். சிலாவத்தையை வந்தடைந்த தீர்த்தப் பவனி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலாவத்தைக் கண்ணகி கோவிலுக்குச் சென்று அங்கு நடைபெறும் விசேட பூசையில் தரிசனம் பெற்று, பூசை முடிவுற்றதும் மீண்டும் பவனி அங்கிருந்து ஆரம்பிக்கும். காட்டாவினாயகர் ஆலயத்தினைச் சென்றடையும் வரையில் தீர்த்தப் பவனிக்கான வரவேற்பு மேற் குறிப்பிட்ட வழி முழுவதிலும் பக்தர்களால் செய்யப்படும். மிகப் பெரியளவிலான தீர்த்த வரவேற்பு ஊற்றங்கரை ஆலயத்தில் வழங்கப்படும். இவ்வாறாக எடுத்து வரப்படும் தீர்த்தம் அன்றிரவே காட்டுவினாயகர் கோவிலுக்குக் கொண்டுவரப்பட்டு தீர்த்தத்தில் விளக்கேற்றுதல் வைபவம் நடை பெறும். தீர்த்தக் குடத்திலிருக்கும் தீர்த்தம் சிறியதோர் புதிய மண் பானையில் மீட்கப்பட்டு அதன் வாய்ப் பகுதி வெள்ளைத் துணியினால் கட்டப்பட்டு மத்தியில் இடப்பட்ட துவாரத்தில் திரி வைத்து தீபம் ஏற்றப்படும். தீர்த்தத்தில் விளக்கெரியும் வைபவம் அடுத்து வரும் ஞாயிற்றுக்கிளமை வரை காட்டாவினாயகர் ஆலயத்தில் தொடர்ந்து இடம்பெறும்.

ஞாயிற்றுக்கிளமை அதிகாலையில் காட்டா வினாயகர் ஆலயத்திலிருந்து மீதித் தீர்த்தம் நடை பவனியாக வற்றாப்பளைக் கண்ணகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும். அங்கு கொண்டுவரப்பட்ட தீர்த்தத்தினைப் பாவித்து அங்கும் தீபம் ஏற்றுவார்கள்.

கடல் நீரில் தீபம் எரிகின்றது என்பதனை நம்ப மறுத்த சிலர் அதனை விஞ்ஞானரீதியான ஆய்வுக்கும் உட்படுத்தினார்கள். இத்தகைய ஆய்வுகள் 1964ம் ஆண்டிலும், 1970ம் ஆண்டிலும் இடம்பெற்றது. 1964ம் ஆண்டில் கொழும்பிலிருந்து ஆய்வாளர்கள் வருகை தந்து தீர்த்ததத்தில் தீபம் எரிவது ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் ஆய்வின் இறுதியில் எவ்வாறு தீபம் எரிகின்றது என்ற முடிவு கண்டறியப்படவில்லை. 1970ம் ஆண்டில் நடாத்தப்பட்ட ஆய்வின்படி ஆய்வாளர்களினால் ஓர் முடிவு கூறப்பட்டது. அவர்களது கூற்றுப்படி கடல் நீரில் காணப்படும் உப்புக்கரைசல் தீபத்தை ஏற்றும்போது நெருப்பு எரியக்கூடிய ஓர் பொருளாக மாற்றப்படுகின்றது என்பதாகும். இம் முடிவு அன்றும் இன்றும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக அமையவில்லை.

## வளந்து நேருதல்

வற்றாப்பளை அம்மன் ஆலய பொங்கல் தினத்தன்று இரவு அதாவது மூன்றாவது திங்கட்கிளமை இரவு பொங்கல் பொங்குவதற்காக வளந்து நேருதல் என்னும் விடயம் இடம்பெறுகின்றது. வளந்து நேரும்போது பூசாரியார்(கட்டுடையார்) வளந்தேந்தி ஆடுவார். ஆட்டத்தின் உச்சக்கட்டத்தில் வளந்தினை எறிந்து ஏந்துவார். இவ்வாறாக ஆடிய இறுதியில் பொங்கல் வளந்தினை நிலத்தில் பள்ளமாக வெட்டி அமைக்கப்பட்ட அடுப்பில் வைத்து பின் பொங்கலிடும் அரிசியினை ஏந்தி ஆடுவார். அச்சமயம் ஏந்தியாடும் அரிசியை அள்ளி மேல் எறிவார். எறிந்த அவ் அரிசிகள் நிலத்தில் விழுவதில்லை.

இதனை விட இன்னோர் அதிசயமும் இங்கு நிகழ்கின்றது. வளர்ந்துப் பானை சூத்திரதாரணம் செய்யப்பட்டிருக்கும். (சூத்திரம்-நூல், தாரணம்-அணிதல்). அத்தோடு அதன் கழுத்தில் வெற்றிலையும் கட்டப்பட்டிருக்கும். இவை இரண்டும் பொங்கலிடும்போது அந்நெருப்பில் வேகிச் சாம்பராகிவிடாது.

பொங்கல் காலத்தில் பூசாரியாருக்கு கோவில்கடைமைகளைச் செய்து உதவி புரிவதற்காக "நோற்புக்காரர்கள்" பக்கத்துணையாக இருப்பார்கள். இந் நோற்புக்காரர்கள் கோவிற்பிள்ளைகள் எனவும் அழைக்கப்படுவர். இவர்கள் பரம்பரையில் பிராமணர்கள் அல்லது பூசாரியார் பரம்பரையின் வழித்தோன்றலில் வந்தவர்கள் அல்லர். கண்ணகி பக்தர்களாகவும் கோவிலோடு நெருங்கிய தொடர்புடைய ஆசாரமுறைகளைக் கடைப் பிடிப்பவர்களாகவும் மாத்திரமே காணப்படுவர். ஆனாலும் இவர்கள் மூலஸ்த்தானத்திற்குள் சென்று உதவி செய்வதில்லை. அதற்கு வெளியால் உள்ள மற்றய மண்டபங்களிலிருந்து மாத்திரம் தமது கருமங்களைச் செய்வார்கள்.

## சிலம்பு கூறல்

பொங்கல் காலத்தில் சிலம்பு கூறல் படலம் ஏட்டிலிருந்து வாசிக்கப்படுகின்றது. இச் சிலம்பு கூறல் காவியத்தில் கண்ணகி கோவலன் கதை. மன்னவர் சபையில் வழக்குரைத்தல். கண்ணகி கோபாவேசங் கொண்டு மதுரையை எரித்தல், மதுரையை விட்டு வெளியேறி இலங்கைக்கு வருதல். இலங்கையின் பல இடங்களிலும் தங்கியிருந்து பத்தாம்பளையை அடைதல், அங்கு சிறுவர்கட்குக் காட்சி கொடுத்தமை போன்ற விடயங்கள் உள் அடக்கப்பட்டுள்ளது. கண்ணகியினது சிலம்பு கூறல் ஏடானது தீர்த்தம் காட்டா வினாயகர் ஆலத்திற்குக் கொண்டு வரப்பட்டு விளக்கு ஏற்றப்பட்டதுடன் வாசிப்பதற்கு ஆரம்பிக்கப்பட்டு அடுத்துவரும் திங்கட்கிளமை அதிகாலைவரை அங்கேயே வைத்து வாசிக்கப்படும். இக்காலத்தில் ஏறக்குறைய அதன் நான்கில் மூன்று பகுதி வாசித்து முடிக்கப்படும். மீதி வற்றாப்பளைப் பொங்கல் தினத்தன்று அம்மன் கோவிலில் வைத்து வாசித்து முடிக்கப்படும். சிலம்பு கூறல் ஏடு படிக்கப்படும்போது பக்தர்கள் கூடியிருந்து அமைதியாக கண்ணகி கதையைக் கேட்பார்கள்.

வைகாசிப் பொங்கல் என்பதோடு வற்றாப்பளைக் கண்ணகைக்கேயுரித்தான விழா பங்குனித்திங்கள் விழாவாகும். பங்குனி மாதத்தில் வருகின்ற எல்லாத் திங்கட்கிளமைகளிலும் விசேட பூசைகள் கண்ணகிக்கு எடுக்கப்படும். ஆனால் அம் மாதத்தின் இறுதித் திங்கட்கிளமை பங்குனிக் கடைசித் திங்களாகப் பெரியளவில் கொண்டாடப்படும்.

## அதிசயங்கள்

இத்தகைய சிறப்பு மிக்க கண்ணகியின் அதிசயங்கள் பற்பல. அதில் சிலவற்றை இங்கு குறிப்பிடுதல் முக்கியமாகின்றது. 1796ம் ஆண்டில் ஆங்கிலேயர் இலங்கையில் காலடி பதித்ததின்பின் அவர்களது அதிகார ஆதிக்கம் படிப்படியாகக் கொழும்பிலிருந்து மற்றய பகுதிகட்கும் பரவத் தொடங்கியது. அந்த வகையில் இவர்களது ஆதிக்கம் ஏறக்குறைய 1803ம் ஆண்டின் பின் முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்படுத்தப்பட்டது. முல்லைத்தீவுப்பகுதி பூரணமாக ஆங்கிலேயர் வசமாகிய அக் கால கட்டத்தில் அப்பகுதிக்குப் பொறுப்பாகவிருந்த ஆங்கிலேயத் தளபதிகளில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவரான நெவில் என்பவரும் அவருடன் சேர்ந்த பணியாட்கள் சிலரும் குதிரைகளில் அம்மன் கோவிலுக்கு வந்து பூசகருடன் ஆணவச் செருக்குடன் கண்ணகியின் அருளினைப் பரீட்சிக்கத் தற்கமிட்டனர். இத் தர்க்கத்தின் இறுதியில் தாங்கள் இன்னோர் நாளில் திரும்பி வருவதாகவும் அத்தினத்தில் கண்ணகியினது புதுமைகளைக் காட்டவேண்டும் என்றும் கூறிச் சென்றனர். அன்றிலிருந்து பூசகர் மிகுந்த வேதனையோடு கண்ணகியினை நினைந்து காலத்தைக் கழித்து வரும் சமயம், ஓர் நாள் கண்ணகி அவரது கனவில் தோன்றி, கவலையை இன்றிலிருந்து விட்டுவிடு. வெள்ளையர்கள் என்னைப் பரீட்சிக்க வரும்போது நான் கூறுவதைச் செய்துவிடு. அவர்கட்கு அப்போது எல்லா அற்புதங்களும் புரிந்துவிடும். கோவிலினுள் இருக்கின்ற வெள்ளிச் செம்பில் தீர்த்தம் உண்டு. அதனை எடுத்துப் பனிச்சை மரத்தின் மீது தெளித்து விட்டு மரத்தைச் சுற்றி மூன்று முறை வெள்ளிப் பிரம்பினால் தட்டிவிடு எனக் காட்டியது. அதன்படியே ஓர் நாள் வெள்ளையர்கள் கண்ணகி கோவிலை வந்தடைந்த போது பூசகரும் கனவின்படியே செய்துவிட்டார். நன்கு காய்த்திருந்த பனிச்சை மரம் பெரியழவில் ஆடித் தான் காய்த்திருந்த காய்கள் எல்லாவற்றையும் வெள்ளையர்கள் மீது எறியத் தொடங்கியது. இவ் எறிகட்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் வெள்ளையர்கள் தாம் வந்த குதிரைகளைத் திருப்பிக் கொண்டு நந்திக் கடல் வழியாக முல்லைத்தீவை நோக்கி ஓடத் தொடங்கினார்கள். அப்போதும் பனிச்சை மரம் தன் காய்கள் அனைத்தும் முடியும் வரை தொடர்ந்து எறிந்து கொண்டிருந்தது. காய்களின் எறி வேதனை தாங்க முடியாமல் வந்தவர்களில் ஒருவர்மாத்திரம் கண்ணகிக்கு கடன் செய்வதாக நினைந்து கொண்டதனால் உயிர்தப்ப, ஏனையோர் உயிர்மாண்டனர். இதற்குரிய ஆதாரம் இன்றும் எழுத்து வடிவில் உள்ளது. அத்தோடு பனிச்சங் காய் எறிந்த கதையைக் கருப்பொருளாகக் கொண்டு "பனிச்சையாடிய சிந்து" என்ற காவியமும் பிற்பட்ட காலத்தில் இயற்றப்பட்டுள்ளது. எப்போது பனிச்சை மரம் காய்களை எறிந்து முடித்ததோ அன்றிலிருந்து அது முதிர்வினால் இறக்கும் வரையில் (ஏறக்குறைய 1975ம் ஆண்டுவரையில்) பூக்களைப் பூக்குமே தவிர காய்களைக் காய்ப்பதில்லை. இதைவிட நந்திக் கடல் நீரேரியில் அம்மன் ஆலயத்திலிருந்து முல்லைத்தீவு நகரப் பக்கமாக நோக்கிப் பார்த்தால் வற்றுக்காலத்தில் ஓர் இறக்கம் இன்றும் காணப்படுகின்றது. இது "குதிரை பாய்ந்த இறக்கமென" இப்பகுதி மக்களினால் இன்றும் அழைக்கப்படுகின்றது.

இதேபோன்று கண்ணகியினது தங்க அணிகலன்களை திருடச்சென்ற ஒருவர் அவற்றை மூலஸ்தானத்திலிருந்து வெளியே எடுத்துவந்த சமயம் அவரது இருகண்களும் பார்வை இழந்த சம்பவம் ஒன்றும் (1960களின் பிற்பகுதியில்) நிகழ்துள்ளது. குறித்த இருபத்தியொரு வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் ஓர் நாள் இரவு வேளையில் அம்மன் கோவிலினுள் புகுந்து ஆபரணங்களை எடுத்துக்கொண்டு வெளியேவந்து அவற்றை ஓரிடத்தில் வைத்துவிட்டு தான் கோவிலினுள் இறங்கிய கூரை ஓட்டைப் போடுவதற்காகச் சென்ற சமயம் அவரது இருகண்களும் பார்வையை இழந்துவிட்டன. அதன் காரணமாக ஓரிடமும் நகரமுடியாத அந்நபர் அவ்விடத்திலேயே படுத்துவிட்டார். மறுநாள் காலையில் கோவிலைத் தரிசிக்கச் சென்ற இவரைத் தெரிந்த பக்கதர்களில் சிலர் இவரைக் கண்டு எழுப்பினார்கள். அவர் வாய்முனகினாரே தவிர அவரால் எழும்ப முடியவில்லை. உடனே அவர்கள் அருகிலிருந்த கோவில் பூசகர் வீட்டிற்குச் சென்று விடயத்தைப் தெரியப்படுத்தினார்கள். உடனே பூசகர் கோவிலுக்குச் சென்று அந்த நபரைப்பார்த்துவிட்டு கோவில் கதவினைத் திறந்து உள்ளே சென்றபோது கூரையோடு கழற்றப்பட்டிருந்ததைக் கண்டார். அத்தோடு மூலஸ்தானத்தில் கண்ணகிக்குச் சார்த்தப்பட்டிருந்த நகைகளைக் காணவில்லை என்பதனைக் கண்டார். உடனே கோவிலுக்கு வெளியே வந்து விடயத்தை மக்களுக்கு எடுத்துச் சொன்னார். அத்தோடு கோவில் நிர்வாகத்தினருக்குத் தெரியப்படுத்தி முல்லைத்தீவு நகர் பாதுகாவலருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டது. நகர் பாதுகாவலர்கள் கோவிலுக்கு விரைந்து குறித்த நபரைக் கைது செய்தவுடன் அவரது கண்கள் பார்வையைப் பெற்றன. அப்போதே அவர்கள் திருடப்பட்ட பொருட்கள் எங்கே மறைத்து வைக்கப்பட்டுள்ளன என்பதனை அறிந்து அவற்றை மீட்டும் கொடுத்தனர்.

இன்றைய ஒழுங்கற்ற நிர்வாக காலத்தில் கோவில் பொங்கலை நடாத்துவதா? இல்லையா? என்ற சூழ்நிலையில் இருக்கும்போது கண்ணகி சிலரிடம் தோன்றி தான் வருவதை ஞாபகமூட்டிய சந்தர்ப்பங்கள் அதிகமாக நிகழ்ந்துள்ளன. கோவில் தலைவர், பூசாரியார், பூசகர், பக்த்தர்கள் என்போருக்கே தன் வரவைப் பல சந்தர்ப்பங்களிலும் வெளிப்படுத்தினார். பத்தாம்பளை ஆலயத்தில் பொங்கலையோ, பங்குனித் திங்கள் பூசைகளையோ வைக்கமுடியாத காலகட்டங்களில் முள்ளியவளை வற்றாப்பளைச் சந்தியில் உள்ள அம்மன் கோவிலில் மக்கள் தமது நேர்த்திக்கடன்களைச் செய்வார்கள். இக்கோவில் அங்கு பழமையான காலத்திலிருந்து வந்ததொன்றல்ல. தற்போது கோவில் அமைந்துள்ள இடத்தில் வைக்கப்பட்டிருந்த கல்லொன்றில் வற்றாப்பளைக் கண்ணகியினை நினைந்து சிலபக்தர்கள் கற்பூரம் ஏற்றுவது மாத்திரம் வழக்கமாக இருந்தது. ஆனால் 1983ம் ஆண்டின் பின் உக்கிரமடைந்த போராட்டச் சூழ்நிலைகளால் முல்லைத்தீவு இராணுவ முகாமினது கண் மூடித்தனமான செயல்கள் பல சந்தர்ப்பங்களில் பக்தர்களை அம்மன் கோவிலுக்குச் சென்று வழிபடுவதனைத் தடுத்தது. அவ்வாறான காலகட்டத்திலேயே பக்தர்கள் செய்வதறியாது இவ்விடத்தில் ஓர் அம்மன் சிலையினை வைத்து வழிபட 1985ம் ஆண்டளவில் ஆரம்பித்தார்கள். இதன் பின்னர் 1987ம் ஆண்டின் பின்னரைப் பகுதியில் முல்லைத்தீவுக்கு வந்த இந்திய இராணுவத்தினரும் (I.P.K.F) பல சந்தர்ப்பங்களில் பக்தர்கள் பத்தாம்பளைக் கண்ணகி ஆலயத்திற்குச் செல்வதனைத் தடுத்தார்கள். இவற்றினது ஒட்டுமொத்த விளைவுதான் இன்று முள்ளியவளையில் அம்மன் சிலை வைக்கப்பட்டிருந்த இடத்தில் உருவாக்கப்பட்டுள்ள சிறிய கட்டிட அமைப்போடு கூடிய கண்ணகி கோவிலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவலன் கூத்து

கூத்து முறைகளில் சிறப்பான ஈடுபாட்டினைக் கொண்டிருக்கும் மட்டக்களப்பினைப் போன்றே வன்னிப் பிரதேசமும் கோவலன் கூத்து, காத்தவராயன் கூத்து என்பவற்றில் முன்னணியில் திகழ்கின்றது. வற்றாப்பளைக் கண்ணகி அம்மனது அருட் கதையினைக் கருவாகக் கொண்டு வடமோடிப்பாங்கிலான கோவலன் கூத்து ஆடப்படுகின்றது. வற்றாப்பளைக் கண்ணகி பொங்கலுக்கான தீர்த்தம் எடுக்கப்படுவதற்கு முன் கோவிலை அண்டியுள்ள கிராமங்களில் கோவலன் கூத்தை மேடையேற்றுவார்கள். முள்ளியவளை, வற்றாப்பளை, கேப்பாபுலவு, தண்ணீரூற்று, குமுழமுனை, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், நெடுங்கேணி, புதுக்குடியிருப்பு, மாமூலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அண்ணாவிமார்கள் கூத்தினைப் பழக்கி, களரி கட்டி அதில் இரவிரவாகக் கூத்தினை நடாத்துவார்கள். சிலம்பு கூறுதல் இலக்கியத்தினை விட வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் தொடர்பாக வசந்தன் பாடல், மழைக்காவியம், அம்மானை, என்பவற்றுடன் கும்மிப்பாடல்களும் காணப்படுகின்றன.

*கோபாவேசத்துடன் மதுரையை விட்டு வெளியேறிய கண்ணகியினது கோபத்தினைத் தணிப்பதற்காகவே குளிர்த்திப் பாடல்கள் பாடப்பெற்றது. ஒவ்வோர் பொங்கல் காலத்திலும் இக் குளிர்த்திப் பாடல் பாடப்படுவது வழக்கம்.*

## பரியலம் கட்டுதலும் வழிவிடுதலும்

திங்கட்கிளமை இரவுப் பொங்கல் முடிவடைந்ததைத் தொடர்ந்து அதாவது செவ்வாய்க் கிளமை அதிகாலையில் பரியலம் வழிவிடுதல் என்னும் நிகழ்வு இடம்பெறும். தீர்த்தம் எடுபதற்கு முன் கட்டப்படும் பரியலம் இன்றே வழி விடப்படுகின்றது அல்லது வழி வெட்டப் படுகின்றது. பொங்கல் காலத்தில் சத்துரு துன்பங்கள், நோய்ப்பீடைகள் என்பன அடியார்களைப் பற்றிக் கொள்ளாவண்ணம் இக் கருமம் செய்வது வழக்கம். பரியலம் கட்டப்பட்ட பின்னர் கோவிலைச் சுற்றவுள்ள கிராமங்களில் உரல் நிறுத்தி நெல் குற்றுவதில்லை, மரணச்சடங்குகள் நிகழ்ந்தால் அதில் மேளம் அடிப்பதில்லை, சந்தோசமான களியாட்ட நிகழ்வுகளான கூத்து, நாடகம் எதுவும் மேடை ஏற்றப்படமாட்டாது. அத்தோடு சூடு மிதித்தல், காட்டுக்குச் செல்லுதல் போன்ற கருமங்களையும் செய்யாமல் ஐதீகவழி ஒழுகி வருகின்றனர். பொங்கல் முடிவடைந்ததைத் தொடர்ந்து பரியலம் வழிவெட்டப்பட்டபின்பே இக் காரியங்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும். பரியலம் வழி விடுவதற்கு பூசாரியார் வேப்பங் குழையால் தீர்த்தத்தினை எல்லா இடங்களிலும் தெளித்து மந்திரம் ஓதிப் பின் மீதித் தீர்த்தத்தினையும், வேப்பங் குழையையும் நந்திக் கடலில் சேர்த்து விடுவார். இவ்வாறான நிகழ்வு இடம்பெறும்போது குளிர்த்தி பாடுதல் என்னும் பாடல்களும் பாடப்படுகின்றது. அத்தோடு பரியலம் வழிவெட்டிய பின்பே கால் நடையாகக் கதிர்காமம் செல்வதற்காகத் தங்கியிருக்கும் அடியார் கூட்டத்தினர் தமது கால் நடைப் பயணத்தினைத் தொடர்ந்து மேற்கொள்வார்கள்.

மேலும் இவற்றோடு தொடர்புடையதாக பரியலங்கட்கான பொங்கல் ஒன்று அடுத்து வரும் திங்கட்கிளமையன்று (எட்டாஞ் சடங்கு) நாவற்காட்டு வைரவர் கோவிலில் இடம் பெறுகின்றது. இப் பொங்கல் பரியலங்கட்கு உணவளிக்கும் பொருட்டு மேற்கொள்ளப் படுவதாக விபரிக்கப்படுகின்றது. பொங்கல் பொங்கிப்படைத்தன் பின்னர் கொள்ளியெறும்புகள் மொய்த்து அப்பொங்கலை உட்கொள்ளும். இதையே பரியலங்கள் என கருதுகின்றார்கள்.

கட்டுரையினை வெளி இடுவதற்காக நேர் கண்டவர்கள்:-

1) திருமதி. மு. செல்லம்மா அவர்கள். (வற்றாப்பளை).

2) திரு. செ. கந்தையா அவர்கள். (முள்ளியவளைக் காட்டாவினாயகர் ஆலய முன்னை நாள் பரிபாலன சபைத் தலைவர்)

3) திரு. மு. சிவசுப்பிரமணியம் அவர்கள். (வற்றாப்பளை கண்ணகை கோவில் நிரந்தர நிர்வாகசபை உறுப்பினர்).

4) திரு. இ. நவரட்ணம் அவர்கள். (வற்றாப்பளை).

## உசாவியவை:-


1) சிலம்பு கூறுதல், குடாரப்பு வெற்றிவேல் புலவரால் அருளப்பெற்றது.

2) கண்ணகி மலர். வெளியீடு வற்றாப்பளைக் கண்ணகி கோவில் நிர்வாகத்தினர். பனீச்சையாடிய சிந்து.

3) கொம்பறை மலர் 1997. வன்னிப் பிரதேச நாட்டார் இலக்கியச் சான்றுகளும் ஈழத்தில் கண்ணகி. வழிபாட்டுப் பரவலும் - பேராசிரியர் இ. பாலசுந்தரம்.

5) வீரகேசரி வாரமலர், வைகாசி 31 1998.

6) வீரகேசரி நாளேடு, ஆனி 08 1998.


## ஏக்க வாழ்வு.. .. .. ..

இரவென்றவுடன்
இராணுவம் வருமோ?
சுற்றி வளைக்குமோ?
கைது செய்யுமொ?
விடியவும் எங்கள்
உயிர் இருக்குமோ?
நாளைய சமையலுக்
என்ன இருக்குது?
கூலி வேலைக்கு
பிடிப்பாரு மிலர்
அரிசி வாங்க
பணமுமில்லை
பிடித்த நோய்க்கு
மருந்துமில்லை

இறந்த வீட்டிலும்
நின்மதியில்லை
என்று தீரும
எங்கள் அவலம்
எப்போ வாழ்வோம்
நின்மதியுடனே?
என்றும் வாழ்வோம
இன்பமுடனே
பிறந்துவிட்டால்
எங்கள் ஈழம்.

நா. தியாகராசா
சுவிஸ்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் பிலாவுஸ் கேட்டறிங்




**தாயகத்து விருந்து படைப்பதில் கரிசினையாளர்.**

**உணவுப் பிரியர்களின் உல்லாசக் களிப்பிடம்!**

**கனடா வாழ் உணவுப் பிரியர்கள் மற்றும் வழமையான எமது விருந்தினப் பெருமக்களுக்கு ஒரு சுப செய்தி......**

**இது வரையில் மரபுவழி உணவு வழங்கல் சேவையை மாத்திரம் நடாத்தி வந்த நாம் 27.9.98 ஞாயிறு முதல்**

**சுய பரிமாறலில் உணவு பகிர்ந்து கொள்ளும்** (Buffet Style) **மேலதிக சேவையையும் அறிமுகம் செய்கிறோம்.**

**'உணவு பரிமாறல் விரும்பிய அளவில் சொந்தத் தேர்வுடன்' கிழமையில் ஏழு**(7) **நாட்களும்.**

## ALL YOU CAN EAT LUNCH-DINNER BUFFET

**ஞாயிறு: 'நளபாகம்' திங்கள்: 'சஞ்சீவி' செவ்வாய்: 'ஞானாமிர்தம்'**
**புதன்: 'ஜீவனி' வியாழன்: 'அமுதசுரபி' வெள்ளி: 'அன்னபூரணா' சனி: 'வீமபாகம்'**

**இவற்றுடன் எமது வழமையான சுவையான அப்பம், தோசை, இட்லி, பிட்டு, கொத்து ரொட்டி, றோல்ஸ், வடை இன்னும் பல ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள்.**

### கேட்டறிங் தேவைகளுக்கு:

Jaffna Pilaws. Chariot Inc.,
2398A Eglinton Avenue East (Kennedy/Eglinton)
Scarborough, Ontario, M1K 2P6.

Tel: 416-755-1337
Pager: 416-328-9799



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிநாட்டின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியன்

எம். எஸ். கந்தசாமி
அவுஸ்திரேலியா(முல்லைத்தீவு)

ஈழமணித் திருநாட்டின் வடபகுதியிலே சுமார் 2000 சதுரமைல் விஸ்தீரணமுடைய பிரதேசமாக மிளிர்வது வன்னிநாடு. வடக்கே யாழ்ப்பாணப் பரவைக்கடலையும், கிழக்கே திருகோணமலை மாவட்டத்தையும், தெற்கே அருவியாற்றையும், மேற்கே மன்னார் மாவட்டத்தையும் எல்லையாகவுடைய இப்பிரதேசம் வன்னியர்களாள் ஆளப்பட்டமையால் வன்னி நாடு எனப் பெயர்பெற்றது. வன்னிநாடு என்னும் பெயர் ஏற்படுவதற்கு முன்னர், இப்பகுதி அடங்காப்பற்று என்னும் பெயரைப் பெற்றிருந்தது. இப்பகுதி மன்னரும் மக்களும் வடக்கே யாழ்ப்பாண மன்னர்க்கோ, தெற்கே அனுராதபுர அரசர்க்கோ அடி பணியாது சுதந்திரமாக வாழந்ததாலே இப் பெயரைப் பெற்றதென்பர்.

வன்னியர் தென்னிந்தியாவில் வாழ்ந்த அக்கினி குலத்தைச் சேர்ந்த மிகப் பிரசித்தி பெற்ற போர்வீரர் இனம். நாளடைவில் அரச இனமாக மாறியதாக ஆராய்ச்சி அறிஞர் எம். டி. ராகவன் கூறுகிறார். வன்னியர் இலங்கைக்கு வந்த காலம் சாலிவாகன சகாப்தம். 358ம் வருடத்தில் (கி.பி 436) மனுநீதிகண்டசோழன் மகன் குளக்கோட்டு மகாராசன் காலமாகும்.

இலங்கை மன்னர்களில் ஒருவனான வலசிங்கன் என்பான், இந்தியாவிலுள்ள மதுரை மன்னன் சிங்கக் கெட்டுவின் மகள் சமயதூதியை மணம் முடிக்க விரும்பினான். மணம்பேசி வருமாறு தூதுவரை இந்தியாவுக்கனுப்பினான். மதுரை மன்னன் சிங்கக்கெட்டுவும் இதற்கிணங்கி, 60 வன்னியரையழைத்து அவர்களுடன் தனது மகளை இலங்கைக்கு அனுப்பினான் என்றும், அவர்கள் சமயதூதியை வலசிங்கமன்னனுக்குத் திருமணம் செய்து வைத்தனர். இதற்குப் பரிசாக வலசிங்கமன்னன் அந்த வன்னியர்க்கு அடங்காப்பற்று என்னும் பிரதேசத்தினை அன்பளிப்புச் செய்தான்.

ஒல்லாந்தர் இலங்கையின் பிற பகுதிகளை ஆட்சிசெலுத்தும்போது வன்னியை ஆண்ட மன்னர்களின் விரங்கள் பின்வருமாறு

1) டொன்பிலிப்பு நல்லமாப்பாணன் - பனங்காமம்.
2) டொன்கஸ்பார் கௌசையினார் - பறையனாலங் குளம்.
3) இலங்கைநாராயணன் - புதுக்குடியிருப்பு.
4) பெரியமெயினார் - முள்ளியவளை.
5) அம்பலவன்னியன் - கருநாவல்பற்று.
6) சேதுகாவலவன்னியன் - தென்னமரபடி.
7) டொன்கஸ்பார் நிச்செனதிராயன் - பூனகரி.
8) நல்லநாச்சியார் - பனங்காமம்.
9) கைலாயவன்னியன் - பனங்காமம்

வன்னிநாட்டின் தலைசிறந்த பட்டினமாக தன்னிகரற்றுவிளங்கிய முல்லைத்தீவுப் பகுதியை ஆட்சிபுரிந்தவர்கள்,

1) பெரியவன்னியன்
2) சின்னவன்னியன்
3) இளம்சிங்கமாப்பாணன்
4) திடவீரசிங்கமாப்பாணன்
5) திசைவீரமாப்பாணன்

அறுபது வன்னியர்களில் ஒருவர் வலசிங்க அரசனுக்குத் திசாவாக நியமிக்கப்பட்டார் என்றும், மிகுதி ஐம்பத்தொன்பது வன்னியரும் அடங்காப்பற்றுக்குச் சென்று தங்கட்குள் சமாதானமாக ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தகுந்த தலைவரைத் தெரிந்தும் சந்ததி சந்ததியாக அப்பகுதியை ஆண்டனர் என்றும், பின்பு மதுரையில் தங்கியிருந்த இவர்களின் மனைவிமார் பயத்தின் நிமித்தம் இலங்கைக்கு தங்கள் கணவர்மாரிடம் வந்து சேர்ந்தனர் என்பது வரலாறாகும். (Manuel of Vanni P- 14)

வீரஞ்செறிந்த மன்னர் பரம்பரையிலே, வன்னிநாட்டின் கடைசி மன்னனாகவும் ஈழத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பின் சின்னமாகவும், திகழ்ந்தவன் குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியன். இவன், 1777ம் ஆண்டு பிறந்ததாகவும், ஒல்லாந்தர் ஆட்சக்காலத்தின் பிற்பகுதியிலும், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் முற்பகுதியிலும் வாழ்ந்தமைக்குச் சான்றுகள் உண்டு.

இவனது தாயாரின் பெயர் பெருவல், மூத்த சகோதரியின் பெயர் நல்லநாச்சியார், இளைய சகோதரியின் பெயர் ஊமைச்சிநாச்சியார், இளைய சகோதரன் பெயர் பெருமையினார் (முள்ளியவளையை அரசாண்டவன்) என்பதாகும். இவனுடைய இராசதானி பண்டாரிக்குளத்தில் அமைந்திருந்ததென்பதும் சரித்திர வரலாறாகும்.

பண்டாரவன்னியன் நுவரகலவியாவைச் சேர்ந்தவன் எனச் சிலரும், முல்லைத்தீவைச் சேர்ந்தவன் என வேறுசிலரும் கருதுகின்றனர். இவ்வீரனது யுத்த நடவடிக்கைகள் அனைத்தும், முல்லைத்தீவு. வவுனியா மாவட்டங்களிலேயே இடம் பெற்றிருக்கின்றன. தற்போது சிங்களப் பிரதேசமாக இருக்கும் நுவரகலவியா முன்பு தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதியாகத் திகழ்ந்திருக்க வேண்டும். 18 ஆண்டுகள் கண்டியில் கைதியாக வாழ்ந்த றொபேட் நொக்ஸ் தப்பி ஓடியபோது அனுராதபுரத்தில் வாழ்ந்த மக்களுடன், சிங்கள மொழியில் உரையாடியபோது அவர்களுக்கு விளங்கவில்லை என்றும், அவர்களின் தாய் மொழி தமிழாக இருந்ததென்றும் குறிப்பிடுகின்றனர்.

இலங்கையில் வீரஞ்செறிந்த சிற்றரசர்களாக விளங்கியவர்கள் வன்னியர்களே. இவர்களுடைய வீரத்தைக் கண்டு போத்துக்கீசரும், ஒல்லாந்தரும் அஞ்சினர். பிரித்தானியருக்கு அதிகதொல்லை கொடுத்தவர்கள் வன்னியர்களே. அதிலும் ஒல்லாந்தருக்கு அதிக தொல்லை கொடுத்தவள் வன்னிச்சிமரியசெம்பத்தி என்ற அரசியே. இவளின் தொல்லையைப் பொறுக்கமுடியாமல் இவளைக் கொழும்புக் கோட்டையின், மறியல் சாலையில் அடைத்து வைத்திருந்தனர். (Manual of Vnni P- 17, 18 )


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வீரமும், செல்வமும் ஒருங்கேயமைந்த வன்னி இராச்சியம் பற்றிய குறிப்புக்களை, ஈழத்து வரலாற்று ஏடுகள் கண்டறியமாட்டா. அதுவுமின்றி இன்றய மாணவசமுதாயம், அவர்கள் படிக்கும் வரலாற்று நூல்களில் வன்னிராச்சியம் என்று ஒன்று இருந்ததைப் பற்றிக்கூட அறிய வாய்ப்பில்லை. இலங்கைக்குப் போத்துக்கேயர் வரமுன் அங்கு பல அரசுகள் இருந்தன. இவற்றுள் முக்கியமாக, யாழ்ப்பாண அரசு, அநுராதபுர அரசு, பொலநறுவ அரசு போன்ற பல அரசுகள் மன்னர்களால் ஆழப்பட்டன.

ஒல்லாந்தரும், ஆங்கிலேயரும், முறையே 1658, 1796 ஆண்டுகளில் யாழ்ப்பாண இராச்சியத்தைப் பிடித்த உடனேயே, தாங்களே வன்னிநாட்டிற்கும் ஆட்சியாளர் என எண்ணினர். அதனால் வன்னி மன்னரை திறை செலுத்துமாறும், ஆண்டுதோறும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தேசாதிபதியின் தர்பாருக்குச் சமூகமளிக்குமாறும் கேட்டுக் கொண்டனர். எனினும், வன்னி மன்னர் அன்னியரின் மேலாணையை முற்றாக ஏற்றுக் கொள்ளவில்லை. திறை கொடுப்பதாக ஒத்துக்கொண்ட வன்னியர்கள், திறை கொடுக்காமலும், தர்பாருக்குப் போகாமலும் விட்டபோதும், ஒல்லாந்தர் அவர்களைப் பகைக்க விரும்பவில்லை. பனங்காமத்தை ஆண்ட கைலாயவன்னியன், ஒல்லாந்த தேசாதிபதியின் தர்பாருக்குத், தொடர்ச்சியாப் பன்னிரண்டு ஆண்டுகள் போகாதுவிட்டான். வன்னி மன்னரைப் பகைக்கின், அவர்கள் கண்டி மன்னனுடன் சேர்ந்துகொண்டு, தம்மை எதிர்ப்பரென ஒல்லாந்தர் அஞ்சினர். அரிப்புக்கோட்டையை குலசேகரம் வைரமுத்து பண்டாரவன்னியனின் உதவியுடன் பிடித்துவிடுவரென ஆங்கிலேயரும் அஞ்சினர். வன்னியர், யாழ்ப்பாணம் மீது படையெடுப்பதைத் தடுப்பதற்கு, ஆனையிறவில் கோட்டை கட்டிப்பாதுகாத்தனர். (Manual of Vanni P- 17, 18)

நுவரவன்னியனின் மூத்தமகன், குமாரசிங்கவன்னியன், பண்டாரவன்னியனின் மூத்த சகோதரியைத் திருமணம் செய்யவிரும்பி, பூதன் ஆராச்சியின் சூழ்ச்சியால், நல்லநாச்சியாரை ஓர் பல்லக்கில் கடத்திச் சென்று திருமணம் செய்தான் என்பது சரித்திர வரலாறு. (முதலியார் குலசபாநாதன் - வன்னிநாடு)

மன்னன் பண்டாரவன்னியன் வரலாற்றை அறிவதற்கு எமக்குக் கிடைக்கும் சான்றுகள் மிகக்குறைவு. கிடைக்கும் சான்றுகளும் ஆங்கிலேயாராலேயே எழுதப்பட்டவையாகும். இன்னுமோர் சரித்திர வரலாற்றுப்படி, ஈழத்தையாண்ட கடைசித் தமிழ் மன்னன் பண்டாரவன்னியனை, 1803ம் ஆண்டு அக்டோபர் 31ம் நாள் ஆங்கிலேயர்கள் அவனுடைய வன்னி இராச்சியத்துக்குள்ளிருந்த கற்சிலைமடு என்ற காட்டுக்குள் வைத்து கைது செய்ய எத்தனித்ததற்கு காக்கைவன்னியன் என்ற தமிழனே காரண கர்த்தாவாக இருந்தான். மாவீரன் பண்டாரவன்னியனைக் காதலித்த குருவிச்சிநாச்சியார், தன்னைக் காதலிக்கவில்லை என்ற கோபமே இதற்குக் காரணமாகக் கூறப்படுகின்றது.

வன்னி இராச்சியத்தின் நிர்வாகப்பிரிவான திருகோணமலைப் பகுதியின் பொறுப்பை தன் மூத்த சகோதரியான நல்லநாச்சியடமும், பனங்காமப் பகுதியை தனது இளைய சகோதரியான ஊமைச்சிநாச்சியடமும் ஒப்படைத்து, வனனிராச்சியம் முழுவதையும் திறம்பட ஆட்சிசெய்தான் பண்டாரவன்னியன். அவனது கால்பட்ட பூமியில், தங்கள் நிழல் கூடப் படமுடியாமல் நின்று திகைத்தனர் அன்றைய ஆங்கிலேயர்கள்.

பண்டாரவன்னியன் காக்கைவன்னியனாலும், ஆங்கிலேயராலும் பல்வேறு பிரச்சனைகளை தன் ஆட்சிக்காலத்தில் எதிர்நோக்கிய போதும், கண்டிய மன்னனது அழைப்பின்பேரில் கண்டி இராச்சியத்தைக் காப்பாற்ற உதவும் பொருட்டு கண்டிக்குச் சென்ற சமயம் பார்த்து ஆங்கிலேயர் வன்னிராச்சியத்தின் கேந்திரப் பிரதேசமான முல்லைத்தீவைக் கைப்பற்றினார்கள். இச்செய்தியை அறிந்த பண்டாரவன்னியன், கோபம் பீறிட்டவனாக வன்னிப் பிரதேசத்திற்கு விரைந்தான். தனது படைகளைத் திரட்டி முல்லைத்தீவிலுள்ள ஆங்கிலக்கோட்டைமீது உக்கிரமான தாக்கதல்களைக் தொடுத்தான். பண்டாரவன்னியன் படைகளது தாக்குதலுக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் வள்ளங்கள் மூலமாக யாழ்ப்பாணத்தை நோக்கி ஆங்கிலப்படைகள் தப்பி ஓடின. 1803ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 25ம் திகதி மீண்டும் முல்லைத்தீவு பண்டாரவன்னியனால் கைப்பற்றப்பட்டது. யுத்தத்தில் ஆங்கிலேயர் விட்டுச்சென்ற மூன்று பீரங்கிகளையும் பண்டாரவன்னியன் கைப்பற்றிக் கொண்டான். (Manual of Vanni P- 19)

இந்தப் போரிலே பண்டாரவன்னியனுக்கு உதவிபுரிந்தார்கள் என்பதற்காக, இராசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு குமாரசேகர முதலியாரும், அவருடைய நன்பர்கள் சிலரும் தூக்கில் இடப்பட்டனர். இவ்விடமே இன்றும் தூக்குமரத்தடி என அழைக்கப்படுகின்றது. இது வட்டுவாகலுக்குச் செல்லும் வீதியில் அமைந்துள்ளது. குமாரசேகர முதலியார் யாழ்ப்பாணத்தை அரசாண்ட செகராசசேகரன் (சங்கிலி மன்னன்.) சந்திரசேகரன், பரராசசேகரன், குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றும், முள்ளியவளையில் அரசனாகவிருந்த இளஞ்சிங்கமாப்பாணரது மகளைத் திருமணம் செய்து முல்லைத்தீவில் குடியிருந்தவர் என்பதும் முதியவர்களது கூற்றாகும்.

ஆங்கிலப் படைகள் மீண்டும் முல்லைத்தீவைக் கைப்பற்ற திட்டங்களை வகுத்தன. இத்திட்டத்தின்படி திருகோணமலையில் இருந்தும், யாழ்ப்பாணத்தில் இருந்தும், மன்னாரில் இருந்தும் வன்னி இராச்சியத்தின் மீது படைகளை நகர்த்த ஆயத்தமானார்கள். திருகோணமலையில் இருந்து நகர்த்தப்பட்ட படைக்கு எட்வேட் மெச்சினும், யாழ்ப்பாணத்திலிருந்து நகர்த்தப்பட்ட படைக்கு 19ம் றெஜிமென்ட் படைப்பிரிவைச் சேர்ந்த தளபதி லெப்டினன் ஜோன் யுவலும், மன்னாரிலிருந்து நகர்த்தப்பட்ட படையணிக்கு கப்டன் வொன் றிபேர்க்கும் தலைமை தாங்கினார்கள். ஆங்கிலேயரினால் வன்னிநோக்கிய படையெடுப்புக்கு திட்டங்கள் தீட்டப்படுவதனை பண்டாரவன்னியன் ஏற்கனவே அறிந்திருந்தான். ஆனால் மன்னாரிலிருந்து ஆங்கிலப்படைகள் நகர்த்தப்படும் என்பதனை அவன் அறிந்திருக்கவில்லை. அதனால் யாழ்ப்பாணத்தில் இருந்தும், திருகோணமலையிலிருந்தும் நகர்த்தப்படும் படைகளைத் தாக்குவதற்கே பண்டராவன்னியன் தனது படையணிகளை நிறுத்தியிருந்தான். யாழ்ப்பாணத்தில் இருந்து வரும் ஆங்கிலப்படையத் தாக்கி அழிப்பதற்காக கற்சிலைமடு என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் நிறுத்தப்பட்டிருந்த படையணியுடன் பண்டாரவன்னியன் இருந்தான். அச்சமயம் மன்னாரிலிருந்து வந்த வொன் றிபேக்கின் படையணி எதிர்பாராத விதமாகத் தாக்குதலை நடாத்தின. இத்தாக்குதலில் 1803ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ம் நாள் அதிகாலை பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்டான். அச்சமயத்திலே பண்டாரவன்னியனது படைகளிடமிருந்து கண்டிய மன்னனின் முத்திரை பொறிக்கப்பட்ட பீரங்கி ஒன்றும் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. பண்டாரவன்னியன் தோற்கடிக்கப்பட்ட இத்தினத்தை கப்டன் வொன் றிபேக் நடுகல் ஒன்றில் பதித்து அதனைக் அவ்விடத்திலேயே நாட்டியும் விட்டான்.

கற்சிலைமடுவில் தோற்கடிக்கப்பட்டதோடு பண்டாரவன்னியன் ஓய்ந்து விடவில்லை. வன்னியிலேயே மறைந்திருந்து, ஆங்கிலேயரை மீண்டும் தாக்கத் திட்டமிட்டுக் கொண்டிருந்தான். இதனொரு வெளிப்பாடாக 1810ம் ஆண்டு மே மாதத்தில் கண்டிப் பிரதேசத்தவர்ளுடன் இணைந்து கிழக்கு மூலை, தெற்கு மூலை பகுதிகளில் தனது எதிர்ப்பினை வெளிப்படுத்தினான். இதனை ஆங்கிலேயர் தமதறிக்கைகளில் பண்டாரவன்னியன் கிராமத்தினைக் கொள்ளையடித்துச் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

பண்டாரவன்னியன் தாம் கைப்பற்றிய பிரதேசங்கள் மீது படையெடுக்கலாம் என்று அஞ்சி ஆங்கிலேயர்கள் தமது எல்லைப் பகுதிகளான வெடிவைத்தகல், வவுனியா ஆகிய இடங்களில் தமது பாதுகாப்புப் படைகளை உசார்நிலையில் வைத்தனர். 1810ம் ஆண்டு செப்ரம்பர் மாதத்தில் பண்டாரவன்னியன் கண்டித்திசாவையின் உதவியோடு வன்னியைத் தாக்கவிருப்பதாக மேற்பற்றுக் கிழக்கு முதலியார் கதிர்காமநாயகம் கலக்டர் ரேணருக்குச் செய்தியனுப்பினார். உடனே ஆங்கிலேயர்கள் வன்னியின் படைபலத்தினை அதிகரித்தார்கள். அது மாத்திரமன்றி மூன்று பிரதேசங்களிலிருந்தும் படைநகர்வுகளைச் செய்யவும் ஆயத்தமானார்கள். போர் மீண்டும் ஆரம்பமாகியது. திருகோணமலையில் இருந்து வந்த ஆங்கிலப் படையினை நல்லநாச்சான் வன்னிச்சியினது படைகளும், மன்னாரிலிருந்து வந்த படையினரை ஊமச்சிநாச்சியினது படைகளும் எதிர்த்துப் போராடின. யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஆங்கிலப் படையினரைப் பண்டாரவன்னியன் முறிகண்டிக்கு அண்மையிலுள்ள 18ம் போர் என்னும் இடத்தில் வழிமறித்துத் தாக்கினான். இத் தாக்குதலில் பண்டாரவன்னியன் படைகளால் ஆங்கிலப் படைகளை எதிர்கொள்ளமுடியவில்லை.

மீண்டும் பண்டாரவன்னியன் 1811ம் ஆண்டு உடையாவூர் என்னும் இடத்தில் ஆங்கிலேயருக்கு எதிராகப் போர் தொடுத்து, அப்போரிலே படுகாயமடைந்தான். அவனை அவனது படைவீரர்கள் பனங்காமத்துக்கு எடுத்துச்சென்று பராமரித்து வருங்கால் தனது 34வது வயதில் வீர மரணத்தைத் தழுவிக் கொண்டான் எனக் குறிப்பிடப்படுகின்றது. இச் செய்தியினையறிந்த அவனது காதலி குருவிச்சிநாச்சியாரும், அவனது சகோதரி நல்லநாச்சனும் கார்த்திகைக் கிழங்கினை உண்டு உயிர் மாய்த்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வன்னி இராச்சியத்தினை அன்னிய ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்த காப்பாற்ற இறுதிவரை போராடிய இறுதித் தமிழ் மன்னன் பண்டாரவன்னியன் என்பது சரித்திரச் சான்றாகவுள்ளது. தன்னலங்கருதாது வன்னியைக் காப்பாற்ற இறுதிவரை போராடித் தன்னுயிரை அம்மண்ணிலேயே நீத்த இந்த மாபெரும் வீரனுக்கு கனடாவில் விழா எடுக்கப்படுகிறது என்றால், கனடா - வன்னி நலன்புரிச் சங்கத்தார்க்கு யாவரும் கடப்பாடுடையோம்.

## வளமான வன்னி வாழ்க!!!

வன்னி அன்னை நன்குணர்வாய்
வல்லமையில் முன்னவள் நீ
வாழ்வளிக்க வகையுண்டென்று
வரும்படியும் சொன்னவள் நீ

வல்லமையில் வகையிருந்தும்
இடமறிந்து வாழ்ந்தவள் நீ
வாழ்வளித்தே வசதி செய்தே
வளமெல்லாம் அளித்தவள் நீ

வளமான வன்னி என்றே
வாழ்வளித்து காப்பவள் நீ
தரமான வன்னி என்றே
தலை நிமிர்ந்து வாழ்பவள் நீ

நலமாக மக்களுக்கு
நன்மைகளே செய்பவள் நீ
களமாகப் போர்ப் பணிக்கும்
தளமாக இருப்பவள் நீ

காடுண்டு கடலுமுண்டு - அங்கே
வீடுண்டு விளைநிலமும் உண்டு
விருந்தோம்பி வந்தவர்க்கு
தேனுண்டு பாலுண்டு

விருப்புடனே மலர் முகமுண்டு
அன்புண்டு அறிவுண்டு அழகோடு
குணமுண்டு நட்புண்டு
நலமான வாழ்வுமுண்டேயங்கு.

முகம்மது ஹன்ஸீர்
கனடா.(கொழும்பு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையான டிசைன்களில் மிசிசாகா நகரில் பான்சி சேலைகளின் சங்கமம்!



- ஜவுளிகள்
- சேட்டிங்
- பஞ்சாபி
- சிற்றிசன் மணிக்கூடு
- அன்பளிப்புப் பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- எவர் சில்வர் பொருட்கள்

அனைத்தையும் ஒரே இடத்தில் மலிவாகவும், தரமாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

**Vijaya's Silk**

27 Dundas Street East,
Mississauga, Ontario, L5A 1V9.

☞ Tel: (905) 273-7997
Fax: (905) 273-7323

# Kalaimahal Book Depot

## கலைமகள் புத்தக நிலையம்



**TORONTO**
**595 Parliament Street**
**Toronto, Ontario, M4X 1P9.**
**Tel: (416) 944-1818**
**Fax: (416) 944-3424**

**SCARBOROUGH**
**3852 Finch Avenue East, Unit 10**
**Scarborough, Ontario, M1T 3T9.**
**Tel: (416) 321-3743**
**Fax: (416) 944-3424**

**வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத நிலத்தேர்

அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட வட-கிழக்கு மாகாண இலக்கியப் போட்டியில் பரிசு பெற்றது.

பால. பேராதரன்.

கார்த்திகை மாதப் பிற்பகுதி. செக்கலுக்குள் நல்ல மழை பெய்து நிலம் குளிர்ந்து போய்கிடந்தது. இருட்டும் மண்டிக்கிடந்தது. சரிசாமத்துக்குப் பிறகு கிளி நித்திரையே கொள்ளவில்லை. மழையில் நனைந்த தாட்டான்கள் மாவிலும், பிலாவிலும் குதிபாஞ்சு அவள் நித்திரையைக் குழப்பியிருந்தன. "கிளி விடியமுதல் வண்டில் பூட்டோணும் வெள்ளண எழுப்பு புள்ள" என்று திண்ணையில் படுக்கும்போதே கனகன் சொல்லியிருந்தான். கணவன் சொல் நினைவில்வர அடுப்புக்கரியில் இரண்டு துண்டை எடுத்துக் கடித்துப் பல் தீட்டிக் குடத்துத் தண்ணியில் பல் கிடுகிடுக்கக் கொப்புளித்துக் கால், முகம் கழுவினாள். மால்க்கப்பில் தொங்கிய திருநீற்றுக் குடுவையில் கைவிட்டு நெற்றியில் ஒரு இழுவையிழுத்து மனதுக்குள் "வேகாவனக்கிழவா" என்று சொல்லிக் கொண்டாள்.

பன்னாடையை அடுப்புக்குள் தள்ளி நாலு வெள்வரட்டை விறகை வைத்து நெருப்பை மூட்ட எழுந்தது சுவாலை. கிளி பாவாடையால் போர்த்திவிட்டபடி, கனகனின் மூன்று வயதுச் செல்வ மகன் காலைக் குறட்டி தூங்கிக் கொண்டிருந்தான். மஞ்சள் உணாத்தடியில் அப்பா செதுக்கிக் கொடுத்த பாவைப்பிள்ளை அவன் அணைப்பில் கிடந்தது. மகனைப் பார்த்துப் புன்னகைத்தபடி பசளைப்பைத் தட்டியை விலக்கி எழுந்து எருதுகளை எட்டிப் பார்த்தான். மாட்டுத் தொட்டியில் வைக்கோலைப் போட்டுவிட்டு, வேப்பங்குச்சை முறித்து சப்பத்தொடங்கினான். சறத்தால் முகம் துடைத்து, திருநீறு பூசிவிட்டுத்திரும்ப "இந்தாங்கோ தேத்தண்ணி" என்று சொல்லிக் கையில் சீனியைக் கொட்டினாள் கிளி. சீனி நக்கித் தேத்தண்ணி குடிக்கும் சுகம் அற்புதம்.

அப்போதுதான் நித்திரையால் அருண்ட கனகனின் தாய் அடைத்த குரலில் "மோனை திரும்பிவரேக்க மான் கொடி கொஞ்சம் வலிச்சுக்கொண்டுவா" என்றார். ம்....... என்று சம்மதம் சொன்னான். ஏன் மான் கொடி? என்பது போல கனகன் கிளியைப் பார்க்க கோடிக்குக் கிடுகு கட்டவாம் என்றாள் அவள்.

பச்சையரிசிச் சோறும், கத்தரிக்காய்ப் பொரியலும், மோர் முளகாயும் மூக்கை இழுத்தது. வெத்திலையும் வச்சுக்கிடக்கு, சிங்கனுக்கு பழஞ்சோறும் குழைச்சு வச்சிருக்கிறன் என்றபடி வண்டில் கிறாதியில் பன் பையைக் கொழுவிவிட்டு நரையனை அவிழ்க்கப் போனாள் கிளி.

வயலுக்குப் போகப் போறோம் என்பதை உணர்ந்த எருதுகள் சலங்கழித்து, சாணிபோட்டு, மூரி முறித்துத் தயாராகின. சுருட்டை இழுத்தூதி வந்த அப்பம்மாவின் இடுப்பை இறுக அணைத்தபடி பாக்கியநாதன் குறை நித்திரையில் அப்பாவின் பயணம் பார்க்க வந்திருந்தான். தாயின் கையிலிருந்த மகனை இழுத்துக் கொஞ்சி அவன் முகவாசத்தை முகர்ந்து பாசத்தோடு உள்ளிழுத்தான் கனகன். "அம்மா போட்டுவாறன்" என்றபடி கனகன் ஆசனத்தில் ஏற நுகத்தில் நுழைந்த எருதுகள் நடக்கத்தொடங்கின. கண்டாயத்தைத் திறந்துவிட்டுக் கைவிளக்கோடு நின்றாள் கிளி. அவளின் கருநாகச் சடைக்கொண்டையின் நேர்த்தியின்மையில் தன்னை இழந்து உழவன் கேட்டியால் செல்லமாக அவளுக்கு ஒரு அடி போட்டுவிட்டு வாறன் புள்ள என்றதும் வண்டில் கறாரிட்டுப் பாதையிலேறி விரைந்தது. கண்ணில் மறையும்வரை கணவனைப் பார்த்துநின்று பின்போனாள் கிளி.

எருதுகளுக்குப் போகுமிடம் தெரிந்ததால் சாரதிக்கு வேலை இருக்கவில்லை. கிறாதியில் நாணயக் கயிற்றை ஒரு இளாவல் இளாவிவிட்டு வெற்றிலைச் சரையை எடுத்தான் கனகன். அவன் படித்தது ஐந்தாம் வகுப்புத்தான். ஏழ்மை அவன் படிப்பை மறித்து விட்டது. ஆனால் காத்தான் கூத்தும், கோலாட்டப்பாட்டுகளும் கைவந்த கலை. ஒரு தரம் கோலாட்டத்தில் கைதவறிப்பட்ட அடியில் பெருவிரல் கண்டி நகச் சுத்தாக்கிவிட்டது. அதற்கு வட்டுக்காய் வைத்துக் கட்டுவாள் மாமன் மகள் கிளி. அப்போதுதான் அவர்கள் மனங்களும் சங்கமித்தன. அதை நினைத்தான்..... பாட்டுவந்தது.

குப்பையிலே நிண்டு மேயும்  
கோல வண்ணச் சாவல் - அந்த  
கோல வண்ணச் சாவலினைக்  
கொண்டு சென்றவன் யாரோ - அப்படித்  
தன்னானே னானனன்னே  
தானனன்னே னானே - தன  
தன்னானே னானனன்னே  
தான னன்னே னானே.......

என்று அண்ணாவி கிட்டுணர் பழக்கி, கல்யான வேலவர் கோவில் திருவிழாவில் நிலா வெளிச்சத்தில் விளையாடிய கோலாட்டப் பாட்டை சுதியோடு பாடினான். எருதுகள் தலையசைத்து வெண்டயங்களால் இசை கொடுத்தன. காட்டு வழிப் பயணம், காலைக் குளிர் கதிரவன் இன்னும் விழிக்கவில்லை. வெள்ளைமலை இறக்கத்தில் எருதுகள் நடக்கமுடியாமல் மெல்ல ஓட ஆரம்பித்தன. அதி காலையில் மாங்குளம் போகும் பஸ் வண்டி வரும் சத்தம் கேட்டு எருதுகள் தாமாகவே விலகி இடங்கொடுத்தன. மழைக்கால காலைத்தென்றல் தேகத்தை மயிர்க்கூச்செறிய வைத்தது. அதைவிடக் காட்டுப் பூக்களின் வாசம் கதம்பமாய் வந்து மூக்கை மகிழ்வித்தது. எருதுகள் மாட்டிலையான்களோடு வால்கொண்டு போராடியபடி வயல்க் குடிலை அண்மித்தன. ஏற்கெனவே வெண்டயச் சத்தங்கேட்டு வேலி பாய்ந்து ஓடி வந்த சிங்கன் வாலையாட்டி வளைத்து முனகினான். அவனுக்குத் தெரியும் எசமானியின் அன்பு வாளை மீன் சட்டியில் விழுந்து பழஞ்சோற்றுக் குழையலாகிப் பார்சலாய் வருமென்று.

ஐந்து ஏக்கர் குளத்தறை நன்றாகச் செழித்துக் கிடந்தது. தன் பாய்க்கியநாதனை அணைப்பதுபோன்று கதிர்களை அணைத்தான் கனகன். அப்போது அவன் உள்ளத்துள் அவனே பேசினான், கிளிக்குச் சங்கிலி, பாக்கிக்கு வெள்ளியில் அருணாக்கொடி, அம்மாக்குச் சீலை, வண்டிலுக்குப் புதுச் சில்லு, அம்மாளாச்சிக்குப் பொங்கல்...... கடன் காசு.....

பகல் முழுதும் வக்கடவைகளை வெட்டித் தண்ணிபாச்சி, உமை அடைச்சு, வரம்பு செருக்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்வை சிந்தி பயிருக்கு யூரியா போட்டான். சூரியன் தாவரங்களுக்கு ஒளி உயிர் ஊட்டி, கனகனின் முதுகிலும் ஊசியாய்க் குத்த கிளியின் சாப்பாடு நினைவுக்கு வந்தது. பீலித் தண்ணியில் கைகழுவி ருசித்துத் தின்றான். உணவு அவளின் உணர்வோடு உயிரில் இறங்கியது. இராக்கால அணைப்பையும், கிளியின் மொழியையும் மீட்டுக் கொண்டு தடிகள் பரவிய சாக்குப் பரணில் கால் பரப்பிப் படுத்தான். உண்ட களையால் உடம்பாற உறங்கினான். அயல் குடில் பெட்டைநாய் தன் எசமான் இல்லாத நேரம் பார்த்து சிங்கனிடம் வந்தது. அவர்களின் மொழியில்லா முனகல் பேச்சில் அருண்டு விளித்தபோது மாலை மங்கி மந்தாரமாய் இருந்தது. தேத்தண்ணிப்பானை மூன்று வீரங் கொட்டன்களுக்கு நடுவில் கிடந்து கொதித்துக் கொண்டிருந்தது. தும்பு செருக்கிய சிரட்டையில் தேத்தண்ணியை விட்டுக் குடித்தவன் தெம்பாகினான். கைக்கத்தியை எடுத்து வண்டிலில் போட்டுவிட்டு, என்னடா பச்சப் புல்லு நல்லாய்த் தியக்குதுபோலகிடக்கு. வேலிக்கு இடி கட்டை வெட்டோணும் ஒழும்புங்கோ, ஒழும்புங்கோ.... என்றதும் அதை விளங்கிக் கொண்ட செங்காரி சடக்கென எழுந்து கொண்டது. வண்டில் வாய்க்கால் கரையாகப்போய் அயல்காட்டில் புகுந்தது. ஒரு நூறு, நூற்றைம்பது இடி கட்டை வெட்டியவன் அம்மாவின் நினைவுவர மான்கொடி வலிக்கத் தொடங்கினான். கடவுள்கள் வரிசையில் அவனுக்கு அவனது அம்மாவும் ஒருத்தி. மான் கொடியை வளையமாடிக் கட்டிவிட்டுத் திரும்பியவன் காலைப் பொத்தியபடி அம்மா...... ஆ...... என்று இரைந்தான். முத்திரைப்புடையன் அவன் காலடியின் கீழ் நிதானமாக நகர்ந்து சென்றது.

வேகமாக ஒடி மான்கொடியோடு வண்டிலில் தாவினான். எசமானின் அவசரம் புரிந்த எருதுகள் கட்டைவேர் பார்க்காமல் இழுத்துக்கொண்டு ஓடின. மரமேற்றும் காட்டுப்பாதையால் விரைந்து உலுவிந்தங் கெட்டொன்றை முறித்து ஈரப்புத்தொன்றில் சில்லு ஏறி வண்டில் தடத்தி ஓட ஆரம்பித்தது. தான் தளர்ந்து கொண்டதை உணர்ந்த கனகன் செங்காரியின் கயிற்றை இழுத்தபடி பாதையை மாற்றிக்காட்டி வீட்.... .... ட போங்கோடா வீட்ட...... வீட்ட...... அம்மா...... ஐயோ கிளி...... கிறாதியில் சாய்ந்தபடி முனகினான். நன்றியுள்ள சிங்கன் கலவரப்பட்டு முன்னே பாய நரையனும், செங்காரியும் எசமானுக்கு விசுவாசம் காட்டத்தொடங்கின.

வயலோர நிலத்தில் மலர்ந்துகிடந்த செங்கழுநீர்களும் கருங்குவளைகளும் வண்டில் சக்கரத்தில் நெரிந்து சாய விரைந்தது வண்டில். பாதையைக் குறுக்கிட்ட முயலின் முகத்திலும் மருட்சி. ஓடுங்கோடா ராசா...... ஓடோங்கோடா...... நான் கிளியைப் பாக்கோணுமடா.... ஐயோ பாக்கியநாதா .... யானை முறித்துவிட்டுப்போன விண்ணாங்குத்தடியை நரையன் தலையால் எத்திவிட்டு வேகத்தை மேலும் கூட்டியது. இருள் கவிந்து கொண்டிருந்தது. கனகன் வண்டிலின் குலுக்கலில் முனகினான். ஓங்கி வளர்ந்த முதிரையும், பாலையும், யாவரணையும். காத்துக்குப் பேயாட்டம் ஆடின. மேகம் மின்னினான், இடியிடித்துச் சிரித்தான் கோரமாக! கனகனுக்கு விஷம் தலைக்கேறிக் கொண்டிருந்தது.

மழை கொட்ட ஆரம்பித்தது. ஆ...... காட்டா வினாயகா... செங்காரி ஓடுடா.. ஓடுடா... ஓடிப்போங்கடா... கிளியிட்ட கொண்டு போங்கடா.

எருதுகளின் கொம்புகளில் படிந்திருந்த செம்புற்று மண் மழையில் கரைந்து கண்ணருகிலே வழிந்த இரத்தக் கண்ணீர்போல் சிந்தியது. இடிகட்டைகள் கனகனின் இறுதி நிமிடங்களாய் வீதியில் விழுந்து கொண்டு வந்தன. வீடு வந்தது. கனகனின் வீடு வந்தது. சிங்கன் குரைத்தபடி கண்டாயத்தால் சேறு சிதறி நுழைந்தான். கடார்....... கடார்...... கண்டாயத் தடிகள் உடைந்து நொருங்கி அங்கிங்காக, மாலடியில் வந்து நின்றது கனகனின் மருதநிலத்தேர். செங்காரியினதும், நரையனதும் வாயிலிருந்து வெண்நுரைகள் வெள்ளத்தில் சிந்தியது. மான் கொடியைக் கையில் பிடித்தபடி காட்டுக்குழைகள் மார்பை அலங்கரிக்க மழையில் மல்லாந்து கிடந்தான் அவன்.

மாமி..... மாமி.... அவர் வந்திட்டார் போலகிடக்கு..... நெருப்பெட்டியை தாங்கோ என்றபடி விளக்கேற்ற முனைந்தாள் கிளி. சிங்கன் திண்ணையடித் தாள்வாரத்தில் நாக்கைத் தொங்கப்போட்டு நனைந்தபடியிருந்தான்.

சொற்பொருள் விளக்கம் :-

*மால்- வீட்டின் முன்னே முழுவதாக அடைக்கப்படாமல் அமைக்கப்பட்டிருக்கும் வதிவிடம்.*

*வேகாவனக்கிழவா- தான்தோன்றி ஈஸ்வரரை அப்பிரதேச மக்கள் பக்தியோடு அழைக்கும் பெயர்.*

*கோடி- கழிவகற்ற வீட்டில் பாவிக்கும் இடம்.*

*இளாவல்- கயிறு முதலியவற்றால் அலட்சியமாகக் கட்டுதல்.*

*வெண்டயம்- எருதுகட்குக் கழுத்தில் அணியும் ஒரு வகை மணி.*

*வக்கடவை- நீர் பாய்வதற்காக வயல் வரம்பில் வெட்டப்படும் பாதை.*

*உமை- வயல் நண்டுக்ளால் வரம்பில் ஏற்படுத்தப்படும் துவாரம்.*

*இடிகட்டை- வேலியடைக்கப் பயன்படுத்தப்படும் காட்டுத்தடி.*

*வளையமாடுதல்- காட்டுக் கொடிகளை வட்டமாகச் சுற்றிக் கட்டுதல்.*

## 2500ம் ஆண்டில்

அழகிய இலங்கையில்
ஆண்டுகள் பல கடந்து
அகழ்வுகள் நடந்துவிட
கண்ட என்புக் கூடுகளே
அன்றய விங்ஞானத்தில்
தமிழர் எலும்பேயென்று
ஆய்வுகழும் கண்டுவிட
தமிழர் வாழ்ந்த நாடேயென
சரித்திரம் படைத்திடும்
கணணிகள் கூட
தமிழ் ஈழமல்ல
இலங்கை முழுவதுமே
தமிழரின் சொத்தென
அலை பரப்பும் வானில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YARL'S SUPER STORE

**Canadian, East-West Indian grocery**
**Fresh Fish, Meat & Vegetables**



இலங்கை, இந்திய பல சரக்குச் சாமான்கள்

- உடன் மரக்கறி வகைகள்
- பழவகைகள்
- பூசைச் சாமான்கள்
- உடன் மீன் வகைகள்
- ஏழு நாட்களும் பங்கு ஆட்டு இறைச்சி

- இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விளைமீன், ஒட்டி, ஓரா, உயிர் நண்டு மற்றும்

- மீன் வகைகள் உட்பட அனைத்துப் பொருட்களும் மிக மலிவாக கிடைக்கும் ஒரே இடம்.

☞ பலசரக்கு வகைகளுக்கு: (416) 923 9806



☞ மீன் வகைகளுக்கு: (416) 923 8093

**ஓடர்களுக்கு பலகார வகைகள் எந்நேரமும் கிடைக்கும்**

**யாழ்ஸ் சுப்பர் ஸ்ரோர்**
**607A Parliament Street**
**Toronto, Ontario**
**M4X 1P6**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேழிச் செல்வி

வன்னி நிலத்தின்
கடுதரை பிளந்து
வயல் விதைக்கும்
ஓர் உழவனின் கிழத்தி
பெயர் மேழிச் செல்வி

வயலும் வாழ்வுமாய்
வாழ்ந்தவளின் வடிவழகை
சொல்லச் சொல்ல......
கவிதைக்குள் கவிதையைத் தேடி அலுப்புற்றேன்

பூவொன்றைக் கிள்ளி
வெண்முகிலால் துடைத்தெடுத்து முகமமைத்து
செந்தாமரையால் விழியமைத்து
கடலை அவ்விழிக்குளிட்டு
பூக்குடியான் குருவியின்சின்னிறகால் இமையிழுத்து
மாம்பழத்தை மூக்காக்கி
வேலிக்குள் நின்ற முள்முருக்கைப் பூவெடுத்துசெவ்விதழாய்த்
தாமமைத்து
பறந்துகொண்டிருந்த கறுப்புக்காற்றை சிறைசெய்து
கூந்தலென கூட்டிவைத்து
மேகத்தை வரித்து சேலையெனக் கட்டிவைக்க
கானோரப் பூக்களெல்லாம்
அச் சோலையெங்கும் குடியிருக்க
ஆகா நானே மேழிச் செல்வியென
அழகொன்று அசைந்து - அதோ
வன்னி நிலம் புழதியிடை
வயல் நோக்கி வந்தாளப்போ

புறாக்கள் நடந்த போதெல்லாம்
நோகுதென்று முனகிய புழுதி மணல்கள்
இவள் மட்டும் நடந்தபோது
இனிதென்று கிடப்பதென்ன!

அதோ பாருங்கள்!
மாம்பழத்துக்கும் கிளிக்கும் சண்டை
யாரைப்போல் அவளென்று
கொத்திய மாம்பழம் விழுகிறது
கிளி பறக்கிறது

அந்தப் பச்சை ஊரில்
வெண்மணல் பாதை ஒன்றில்
பூவொன்று நடந்ததைப் பார்த்து
மந்திகள் கொப்பிழக்க
வடிவென்று சொல்லிச் சொல்லி
வண்ணத்துப் பூச்சிகள் வசமிழக்க
இள மஞ்சள் வெயில் மீது
எங்கள் மேழிச் செல்வி
நிம்மதியாய் நடந்தாளப்போ

வயலுக்கென்ன
ஒரே மகிழ்ச்சி
காற்றைக் கலைத்து
ஆடியபடியே
நீள் பச்சைத் தெருவில்
ஓடிக்கொண்டிருக்கிறது வயல்
பால்குடிக்கும் குருவிகளைக் கலைத்தபடியே
மழையைக் கூட்டிவாருங்கள்
என்கிறான் மேழிச் செல்வன்

ஆமாம்
அதோ வருகிறாள்
மேழிச் செல்வனின் மழை
மழைதான் அவள்
இரகசியமாய்த் தூறிக்கொண்டிருக்கும் மழை
காலைக் கஞ்சிப் பானையொடு
மனமெல்லாம் புருஷன் பசி கிடக்க
மழை வேண்டுமென்று கருமேகங்கட்கு
கண்களால் கல்லெறிந்துவிட்டு
நிழலோரம் காலாறும் அவள்
மேழிச் செல்வி அவன் அருகமர்வாள்

வீசிக் கொண்டிருந்த காற்றிற்கு
சேட்டையிட ஆசை
அவள் முந்தானையை அள்ளி
அவன் முகத்திலா எறியவேண்டும்
முந்தானை வாசத்தில் பசிமறந்து
மனம் பசித்துச் சிரிக்க
"எடியே " யென்று அதட்டியபோது
வீழ்ந்ததோர் மலரென்ன
அவள் முந்தானையை வாவென்றிழுக்க
காற்றோ 'விடு' வென்றிழுக்க
இப்படியாய் இப்படியாய்
காற்றென வாழ்ந்தாள் - இவள்
உங்கள் மேழிச் செல்வி

குருவிகள் எல்லாம் ஒழித்தனவோடி
மறுக்கப்பட்ட வயல்களின் எல்லையில்
சிந்தினர் விழிகள் மக்கள்
விரவிய நெல் மணிகளை
துப்பாக்கி ரவைகள் மூடின
ஊரெல்லாம் போர் சிவந்தது
எதிரியின் துப்பாக்கிப் பசிக்கு
மேழிச் செல்வியின் புருஷன்
சாப்பிடப்பட்டு சமித்துப்போனான்
வயல்களெல்லாம் பிணங்களென்று
நெல்லோ முளைக்க மறுத்தது
குருவிகள் இப்போதெல்லாம் பாடுவதில்லை
நாகங்கள் மட்டும்
துப்பாக்கி மத்தளத்திசைக்கு
நாகதாளிகளுள் நர்த்தனமிடுகின்றன
வடலிக் கருக்குகள் இரத்தம் சுமந்து
ஊரெலாம் மணந்தது
ஓடுவதே வாழ்வான ஊரெல்லாம்
மல்லிகைகள் இப்போதெல்லாம்
செம்பருத்தி மலர்களை விரித்தன

இதோ!
எனது எரிந்த கவிதைக்குள்
கறுத்துக் கிடக்கும் - இன்றைய
மேழிச் செல்வியை
நீங்களும் பாருங்கள்

பாவம் பரிதவித்துப் போனாளய்யா
சன்னமிட்ட துளை இறக்கைகளோடு
இந்த வண்ணத்துப் பறவை
எங்கனம் பறக்குமாம்?
மலரெலாம் முள்ளென விதிக்கப் பெற்ற
எந்நிலத்திலது காலாறும்?
பாருங்களேன்?

உங்கள் மெல்லழகி மேழிச் செல்வி
எரிந்து கொண்டிருக்கிறாள்
கவிதைகளே செத்துப் போங்கள் - அதில்
மேழிச் செல்வியெனும் - வன்னியின்
புதுக்கவிதையும் எரியட்டும்

எனது மேழிச் செல்வியே - அம்மா
எனது பழைய கவிதையே
எப்படித்தாயே இப்படி ஆனாய்

யாரை எரிக்கவென்று - உனது
கருங்கரங்களால் விறகுகள் எடுத்துப் போடுகிறாய்?
மீதமாய் இருக்கும்
உனது கவிதைகளையா?

வெளியிடப்படாது கிடக்கும் - இந்த
முத்திரையை
எப்போது வெளியிடலாம் தமிழர்களே!

" இவளை நினைத்து எதனை மறக்கலாம்
எதனை மறந்து இவளை நினைக்கலாம் "

- முல்லையூரான். டென்மார்க் (வற்றாப்பளை)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி விழா
**சிறப்புற அமைய வாழ்த்துக்கள்.**

கரு. கந்தையா
கண்டி வீதி
வவுனியா

ஒன்றல்ல..
இரண்டல்ல...
பத்து வருடங்கள்....
இத்துறையில் அனுபவம், திறமை.....
வீடு வாங்க, விற்க நாடுங்கள்.

ROYAL LEPAGE



***Karu Kandiah***
*(Associate Broker)*
*Residential Specialist*
**BUS: (416) 284 - 4751**
**CAR :(416) 616 - 7278**

WE-DO inc.
வீடு
WE DO
A TOTAL HOME CARE SERVICE

* Plumbing * Renovation *Carpentry

- வீடு திருத்த, நிர்மாண வேலைகளுக்கும்
- வீடு பராமரிப்புக்கும்
- வீடு வாடகைக்கு கொடுக்கவும், பெற்றுக்கொள்ளவும்
- வருமான வரிப்பத்திரங்களை நிரப்பிடவும்
- வேலைவாய்ப்புப் பெற்றிடவும்

அழையுங்கள்



"நாங்கள் ஒரு கூப்பிடு தொலைவில் தான்"

வீடு
**(416)410-WEDO(9336)**
1247 Ellesmere Road, Scarborough, Ontario






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JEYA and BROTHERS

## நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- மாவீரர்களுக்கு மௌன அஞ்சலி
- வன்னிக் கொடிக்கீதம்
- தலைமை உரை
  - திரு.க.கணபதிப்பிள்ளை
- வரவேற்பு நடனம்
- பேச்சு கலாநிதி. பார்வதி கந்தசாமி
- கணேஷ கௌதம்
- வாள் நடனம்

**மாபெரும் மலிவு விற்பனை**

தமிழ்த் திரைப்படங்கள்
சின்னத் திரை நாடகங்கள்
பட்டி மன்றம் பாட்டுக்கு பாட்டு அனைத்தும் .50 சதங்கள் மட்டுமே!

### புதிய கிளை

நாகபூசணி அம்மன் கோயிலுக்கு அருகாமையில்
Markham/Finch
5633 Finch Avenue East, Unit #5, Scarborough, Ont
Tel: (416) 332-0961
Fax: (416) 332-8959


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயா அன் பிரதர்ஸ்


## நிகழ்ச்சி நிரல்

- சிதம்பர சக்கரம் - நகைச்சுவை நாடகம்
- பாவை நடனம்
- கோலாட்டம்
- நாட்டுக் கூத்து
- பரத நாட்டியம்
- நாட்டிய நாடகம் - பண்டாரவன்னியன்
- நன்றியுரை
- நாடகம் - மனமாற்றம்


**மாபெரும் மலிவு விற்பனை**

Audio CD'S
4.99 முதல்

Audio Tape
0.99 மட்டுமே

Video CD'S
9.99 மட்டுமே

Video Songs
2.99 மட்டுமே

**மற்றய கிளைகள்**

Toronto
570 Parliament St.
Tel: (416) 972-0840

Scarborough
2396C Eglinton Ave.E
Tel: (416) 759-9540

Mississauga
40D Dundas St. E.
Tel: (905) 272-8828



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடமை

◊ க. சிதம்பரம்

பனி மூட்டங்கள் கலைந்த பாடில்லை, இது மாசி மாதம், மாசிப் பனிமூசிப் பெய்யும் என்பார்கள், அதுதான் ஆறு மணியாகியும் பனி விலகிய பாடில்லை. நகுலன் தலையையும் போர்வைக்குள் இழுத்துக் கொண்டான். "தையும், மாசியும் வையகத்துறங்கு" என ஔவைப்பாட்டி அனுபவித்துத்தான் பாடினாளோ என்னவோ பனிக்கு வைக்கோல் வேய்ந்த வீடு நன்றாகத்தான் இருந்தது. அது பனிக்காக அவர்கள் வைக்கோல் வேயவில்லை, கோடையிலேயே வேயப்பட வேண்டிய வீடு இப்போதுள்ள பொருளாதாரப் பிரச்சினையாலும் வேண்டிய கிடுகுகள் கிடைக்காததாலும், மாரி மழைக்குத் தாக்குப் பிடிக்கவென, வைக்கோலால் வேயப்பட்டது. வைக்கோல் போட முன்னால் நகுலனை யாரும் காலையில் எழுப்பத் தேவையில்லை. ஆறு மணியானதும் ஒன்றுக்கு மேற்பட்ட சூரியக்குஞ்சுகள் நகுலனைப் பார்த்துச் சிரிக்கும், அத்தனை ஓட்டைகள்.

வெளியே அம்பலத்தாரும், செல்லநாச்சியும் இரவு முற்றத்தில் மூட்டிவிட்ப் பட்ட தீவறையில் குளிர் காய்ந்து கொண்டிருந்தார்கள். "பிள்ளை மாலதி அந்தக் கேற்றிலுக்கை கொஞ்சத் தண்ணி எடுத்துக் கொண்டு வா பிள்ளை" என்று அம்மா குரல் கொடுக்க, "இந்தப் பனியுக்குள்ளை நான் மாட்டன்" என மெல்லச் சிணுங்கினாள் நகுலனின் பன்னிரண்டு வயதே நிரம்பிய தங்கை மாலதி. "என்னப்பா நகுலன் இன்னமும் எழும்பேல்லையே இரத்தினம், மாணிக்கவாசகமாக்கள் எல்லாம் ஏழு மணிக்கே வயலுக்கை நிப்பம் அண்ணை எண்டு சொன்னவங்கள், வயலுக்குப் போறதில்லையே?" தீவறையில் நெருப்பெடுத்து குறைச்சுருட்டைப் பற்ற வைத்தபடியே அம்பலம் செல்ல நாச்சியைக் கேட்டார். "நேற்றையான் வேலை அலுப்பிலை பிள்ளை கிடக்கிறான் எழும்பட்டன்" என கணவனைக் கடிந்து கொண்டாள். "நாகராசாவும், தம்பியாரும் வாறனெண்டவங்கள் தாள் கத்தி இரண்டு வேணுமாம், தங்கடை கத்தியள் கருக்குக் குத்தக்குடுத்த இடத்திலை இன்னும் எடுக்கேல்லையாம் அதுதான் உவனை எழுப்பிவிடு கொண்ணர் வீட்டை போய் இரண்டு கத்தி வாங்கிக்கொண்டு வரட்டும்" என மனைவியின் அதட்டலுக்கு அடங்கி காரணம் சொன்னார். "போகேக்கை சவள் போடுற தடியும் கொண்டு போகச் சொல்லு". இன்று அவர்கள் வயலில் அருவிவெட்டு, அதுதான் அம்பலம் வழி முறைகள் சொல்லிக் கொண்டிருந்தார். நேரிடையாக அவனிடம் எதுவும் சொல்லிக் கொள்வதில்லை. அம்பலத்தாருக்கு அவனிடத்தில் ஒரு பாசம் கலந்த தனி மரியாதை, அதற்குக் காரணம் இருந்தது.

அம்பலத்தார் எட்டாம் வகுப்புவரைதான் படித்தவர், அந்தக் காலத்தில் எட்டாம் வகுப்பென்பதே பெரிய படிப்புத்தான். அதற்கு மேல் படிக்கக அவருக்கு விருப்பம்தான் நாகமுத்தருக்கு வயதாகிப் போனதால் கம, புலங்களை பாக்க வேண்டிய பொறுப்பு அம்பலத்தாருக்கிருந்தது. அதுவும் போக படித்துத்தான் அம்பலத்தார் சீவிக்க வேண்டிய நிலையிலுமில்லை. நாகமுத்தருக்கிருந்த ஏகப்பட்ட சொத்துக்களுக்கு அம்பலத்தார்தான் ஏக வாரிசு. நாகமுத்தருக்கு அம்பலத்தார் ஒரே பிள்ளைதான், அதுவும் நாகமுத்தர் திருமணமாகி பதினைந்து வருடங்களின் பின்னால் அந்த வேகாவனப் பெருமானை வரம் வேண்டிப் பெற்ற பிள்ளை. அதனால்தான் அந்தப் பெருமான் பெயரால் தில்லையம்பலம் எனப் பெயர் வைத்தார் நாகமுத்தர்.

அம்பலத்தார் தான் ஒரே பிள்ளையாக இருந்ததையிட்டு சிறு வயதில் நிறையவே கவலைப்பட்டவர். அயல் வீடுகளிலும், சுற்றத்தார் வீடுகளிலும் சகோதரங்களுடன் திருவிழாப் பொங்கல் காலங்களில் அவர்கள் கூடித்திரியும் போது இவர் தனிமையின் கொடுமையை அனுபவித்தவர். அதனால்தான் தனக்குப் பிறக்கும் பிள்ளைகள் அந்தத் தனிமையை அனுபவிக்கக்கூடாது என்பதற்காக, மூன்று ஆணும், மூன்று பெண்ணுமாய் பெற்றிருந்தார்.

அம்பலத்தார் தன்னால் படிக்க முடியாமல் போனதை தன் பிள்ளைகள் மூலம் நிறைவேற்ற ஆசைப்பட்டார். மூத்தவர்கள் இருவரும் உள்ளூரப் பள்ளிக்கூடமொன்றில் எட்டாம் தரம் படித்ததும் தொடர்ந்து படிப்பதற்காக நகரத்தில் உள்ள பாடசாலையொன்றின் விடுதியில் தங்கிப்படிக்க வைத்திருந்தார். விடுதியில் சாப்பாடு அநேகமாக எல்லாநாளும் ஒரே மாதிரித்தான் இருக்கும். முருங்கைக்காய் சீசனில் குழம்பிலிருந்து சொதிவரை அதுவாகத்தானிருக்கும், தக்காளிக் காலங்களில் தக்காளி, இப்படி எது மலிவாக இருக்கிறதோ அதுதான் பிரதான பாகம் வகுக்கும். விடுதிச் சாப்பாட்டில் வெறுப்புற்ற மாணவர்கள் இரவுச் சாப்பாட்டிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக வெளியே போய் கடைகளில் சாப்பிடுவது வழக்கம். விடுதி மாணவர்கள் வெளியே சென்று சாப்பிடுவதற்கு அனுமதி இல்லை. இருந்தபோதும் இந்த மாணவர்களுக்கு விடுதிப் பொறுப்பாசிரியர் அனுமதி கொடுப்பார். அதனால் அவருக்கு இரண்டு லாபங்கள், ஒன்று அவருக்கும் கடைச் சாப்பாடு வரும், இரண்டு எவ்வளவுபேர் வெளியே போய் சாப்பிடுகிறார்களோ அவ்வளவு பேருக்கான சமையல் சாமான்களில் வெட்டு விழுந்து அதற்கான பணம் அவர் சட்டைப்பைக்குள் போகும். இப்படி வெளியே போய் சாப்பிடகிறவர்களில் ராகுலனும் இருந்தான். இப்படிப் போய் வந்ததில் இந்த இரண்டு, மூன்று வருடங்களில் ராகுலனுக்கு பள்ளிக்கூடத்திற்கு வெளியிலும் நண்பர்கள் இருந்தார்கள். இந்த நண்பர்களின் கூட்டால் வார இறுதி நாட்களில் இந்தியாவைப் பார்க்கும் ஆசையில் களவாக வள்ளங்களில் நண்பர்களுடன் ராகுலன் போய் வந்து கொண்டிருந்தான். இவனது நடவடிக்கைகள் அகிலனுக்குத் தெரிந்திருந்தும் அம்பலத்தாருக்குத் தெரியப்படித்தினால் ராகுலனுக்குப் படிப்பு அவ்வளவுதான் என்பதை உணர்ந்து தெரிவிக்காமலே இருந்தான். கடைசியில் ராகுலன் இந்தியாவிலேயே ஒரு இந்தியப் பெண்ணை திருமணம் செய்து கொண்டு அங்கேயே தங்கிவிட்டான். இதை அகிலன் தன் நண்பர்கள் மூலம் அறிந்ததும் வேறு வழியின்றி வீட்டிற்கு தபால் எழுதினான். தபால் கிடைத்ததும் வீட்டில் செல்லநாச்சி செத்தவீடே கொண்டாடினாள். அம்பலத்தார் மறுவாரமே கல்லூரிக்கு வந்திருந்தார். அதிபரிடம் போய் விசாரித்தபோது, ராகுலன் விடுதி மாணவன் என்பதால் விடுதிப் பொறுப்பாசிரியரிடம் அதிபர் விசாரணை நடாத்தினார். விசாரணையில் ராகுலன் ஊருக்குப் போவதாகச் சொல்லிப் போனதாகவும், அவன் உயர்தரத்து மாணவன் என்பதால் பெற்றோர் அனுமதி தேவைப்படாததையும் சொல்லி விடுதி ஆசிரியர் தப்பித்துக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியென்ன செய்வது தன்ரை பிள்ளை சீராக இல்லையே என்று தன்னை நொந்து கொண்டு அகிலனுக்குப் புத்திமதிகள் சொல்லிவிட்டு ஊருக்குப் போய்விட்டார்.

மூத்த பெண்கள் இருவரையும் எட்டாம் வகுப்போடு நிறுத்திவிட்டார் அம்பலம். பெரியவர்கள் ஆனபின் வெளியூர்களிற் பெண்கள் தங்கிப் படிப்பதை அவர் விரும்பவில்லை. ஆண்பிள்ளைகளையே நம்ப முடியாத இந்தக் காலத்தில் பெண்களை எப்படி நம்பி விடுவது, அதுவும் ஒரு ஆண் கெட்டுப்போனால் அது அவனோடு போய்விடும், ஆனால் ஒரு பெண் கெட்டுப் போனால் அது அவள் சார்ந்த முழுக் குடும்பத்தையும் அல்லவா பாதிக்கும். அதனால்தான் பெண்களை நிறுத்திவிட்டார். அகிலனும் உயர் வகுப்பில் நல்ல பெறு பேறுகளை பெற்று பேராதனை வளாகத்தில் பொறியியல் துறையில் கற்பதற்காக தேர்வு செய்யப்பட்டிருந்தான்.

அம்பலத்தாருக்கு இம்முறை கால போக வேளாண்மை, கை கொடுத்திருந்தது. கொம்பறைகள் எல்லாமே நிறைந்திருந்தது. சாப்பாட்டிற்குத் தேவையான நெல்லையும் வெளி மாலுக்குள் வைக்கோல் பட்டறை கட்டிப் போட்டிருந்தார். விதை நெல்லுக் கொம்பறையில் அடுத்த போகத்திற்கான விதை நெல்லும் எஞ்சியதை பெரிய கொம்பறையிலுமாகப் போட்டிருந்தார். இந்தக் கொம்பறைகளெல்லாம் அமபலத்தாரின் பேரன் காலத்தையது. அதாவது நாகமுத்தரின் தகப்பன் காலத்தையது. இப்போது சாக்குப் போன்றவை இருப்பதால் இவைகள் மருவி விட்டன. ஆனாலும் அம்பலத்தார் இப்போதும் கொம்பறையில்தான் நெற்களைக் களஞ்சியப் படுத்துகின்றார். விதை நெல்லுகள் பழுதடையாமலும், அந்துப்பூச்சிகள் போன்ற வற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும் கொம்பறைகள் மிகவும் சிறந்தவை. கொம்பறையின் அமைப்பானது அநேகமானவை, வைரமான மரங்களைக் கொண்டு நிலத்தில் இருந்து நான்கு,ஐந்து அடி உயரத்திற்கு பரண்போல அமைத்து அதன் மேல் பத்துப், பன்னிரண்டு அடி உயரத்திற்கு மரக் கொம்புகளை வட்டவடிவில் நிறுத்தி காட்டில் இருக்கும் மரக் கொடிகளை கொண்டு பின்னி, அதன் உள்ளும், புறமும், அடித்தளம், ஆகியன மண்ணும் சாணமும் கொண்டு மெழுகி மேற் கூரையை வட்டக்குடில் போல் பனையோலை,அல்லது வைக்கோல் கொண்டு வேய்ந்திருப்பார்கள். இதனால் நெற்கள் பழுதடையாமல் பாதுகாக்கப்படும். இதனால்தான் அம்பலத்தார் கொம்பறையை இன்னமும் பாதுகாத்தார். அம்பலம் வீட்டுப் பெரிய கொம்பறை ஏறக் குறைய நூற்றிப் பத்து மூடையாவது போடக்கூடியது. "பெரிய கொம்பறை நெல்லை வித்தால், மூத்தவளின்ரை கலியாணத்துக்கும், அகிலனின்ரை படிப்புகளும் காணும்" என தனக்குத் தானே சொல்லிக் கொண்டார் அம்பலம். கடைக்காரச் செல்லப்பரிடம் நல்ல வியாபாரிமார் வந்தால் கூட்டி வரச் சொல்லியிருந்தார். அதுதான் இப்போது செல்லப்பர் வியாபாரிமார் இருவருடன் வந்திருந்தார். "இருங்கோ செல்லப்பா அண்ணை இவர் மாடுகளுக்குச் சிறப்பை கட்டிக்கொண்டிருக்கிறார் நான் இவன் தம்பியை விட்டுக் கூப்பிடறன்". என்று சொல்லிவிட்டு நகுலனை அம்பலத்தாரைக் கூட்டிவருமாறு பட்டிக்கு அனுப்பினாள் செல்லநாச்சி. பட்டியில் அம்பலம் மாடுகளுக்குச் சிறப்பை கட்டி முடித்திருந்தார். இந்தச் சிறப்பை என்பது அந்தக்காலங்களில் வயல் வேலைகளுக்காகவும் பால், தயிருக்காகவும் எல்லா வீடுகளிலும் எருமை மாடுகள் வைத்திருப்பார்கள். அந்த மாடுகள் பகலில் தண்ணீரில் படுத்திருக்கும், இரவில் மேச்சலுக்குப் போய் விடும். காலையில் வயல் வேலைகளுக்காக இவை எங்கிருக்கின்றன என்பதை அறிந்து கொள்வதற்காக ஒவ்வொருவரும் தங்கள் மாடுகளில் ஒன்று, இரண்டுக்கு இந்தச் சிறப்பையைக் கட்டிவிடுவார்கள். இதன் சிறப்பு என்னவென்றால் ஒவ்வொருவர் வீட்டுச் சிறப்பையும் சத்தத்தால் வேறுபடக் கூடியவாறு அமைத்திருப்பார்கள். சிறப்பை, பாலை நாவல், போன்ற மரங்களினால் ஒரு பக்கம் திறக்கப்பட்ட செவ்வக வடிவில் அமைந்த பெட்டியாகவிருக்கும். உள்ளே இரண்டு ஆடு தண்டுகள் ஒலி எழுப்புவதற்காக பொருத்தப்பட்டிருக்கும். இவை எழுப்பும் ஒலிகள் வேறு படுவதற்காக இந்த ஆடுதண்டுகளை மான்கொம்பு, வைரமரத்தில், இரும்பில் என வேறுபடுத்தியிருப்பார்கள். இந்தச் சிறப்பையின் ஒலி நீண்ட தூரங்களுக்குக் கேட்கக் கூடியவையாக இருக்கும். இந்த வேறுபட்ட ஒலிகளை வைத்தே தங்கள், தங்கள் மாடுகள் எந்தத் திசையில் நிற்கின்றன என்பதை அறிந்து காலையில் வயலுக்கு ஓட்டிச் செல்வார்கள். நாகமுத்தர் காலத்தில் ஏராளம் மாடுகள் அவர்கள் வீட்டில் இருந்தன, இப்போது.உழவு இயந்திரங்களின் வருகையால் அவை வெகுவாகக் குறைக்கப்பட்டு பால்,தயிருக்காக மட்டும் சில மாடுகள் வைத்திருந்தார். அம்பலம் தன்னிடம் எஞ்சியுள்ள சில மாடுகளில் ஒன்றுக்குத்தான் இந்தச் சிறப்பையைக் கட்டி முடித்திருந்தார். நகுலன் "அப்பு செல்லப்பு அண்ணை வந்திருக்கிறார் உங்களை வரட்டாம்" என்று சொன்னதும் அம்பலம் வீட்டுக்கு விரைந்தார். செல்லப்பரும் வியாபாரிகளும் மோர் குடித்துக் கொண்டிருந்தார்கள். வன்னியில் எந்த வீட்டிற்குப் போனாலும் பால், தயிர், மோர் போன்றவற்றிற்குக் குறைவிருக்காது. அம்பலத்தாரைக் கண்டதும் செல்லப்பர் எழும்பி ஒரு கூழைக் கும்பிடு போட்டுவிட்டு விஷயத்தைச் சொன்னார். வியாபாரிகளுடன் பேரம் பேசி விலை நிர்ணயிக்கப்பட்டு நெல் விற்கப்பட்டது.

மூத்த பெண்ணின் திருமணமும் முடிந்து, அகிலனும் பல்கலைக் கழகம் போயிருந்தான். வழக்கம்போல் காலபோக விதைப்பு ஆரம்பமாகி இருந்தது. நாகமுத்தரின் இருபத்தைந்து ஏக்கர் வயல்க்காணி ஏகமும் அம்பலத்தாருக் கேயிருந்தது அதில், மூத்த பெண்ணிற்கு சீதனமாகக் கொடுத்த காணியைவிட, ஐந்து ஏக்கர் வயற்காணியையும், அகிலனின் படிப்புக்காக விற்றிருந்தார். இப்போது எஞ்சியது பதினைந்து ஏக்கர் தான் இம்முறை விதைப்புக்கு இருந்தது. அதனால் வேலைகள் இமமுறை குறைவாகவே இருந்தது.

அகிலன் இறுதியாண்டுப் பட்டப் படிப்பில் இருந்தான். இந்த நான்கு வருடங்கள் போனதே எப்படியென்று அகிலனுக்குத் தெரியவில்லை. அதற்குக் காரணம் நிம்மி என்ற நிர்மலாதான். நிர்மலா வீட்டில் செல்லப் பெண் இரண்டு அண்ணன்மார்கள் இருவரும் லண்டனில் இருந்தார்கள். நிர்மலா வீட்டில் ஒரே பெண்தான். அகிலனுக்கு ஒரு வருடம் யூனியராக பொறியியற் துறைக்கு வந்தவள். முதல் வருடம் வந்தபோது மூத்த மாணவிகளிடம் பகிடி வதையில் நிர்மலா சிக்கியபோது அவர்களிடமிருந்து விமோசனம் பெற்றுக் கொடுத்தான் அகிலன். அது முதல் ஏற்பட்ட நட்பு இருவருக்கிடையேயும் காதலாய் மலர்ந்து இருந்தது. நிர்மலா படிப்பை முடித்ததும் லண்டனுக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்படி அண்ணன்மார் இருவரும் வற்புறுத்திக் கொண்டிருந்தார்கள். நிர்மலா அகிலனைப் பற்றியும் தங்களுக்கிடையே இருக்கும் காதலைப் பற்றியும் அண்ணன்மார்களுக்கு தெரிவித்திருந்தாள். இருவரையும் லண்டனுக்கு வருமாறும் வேண்டிய ஒழுங்ககளை தாங்கள் செய்வதாய் மீண்டும் எழுதியிருந்தார்கள். நிர்மலா அகிலனிடம் அண்ணன் மாரின் விருப்பத்தைத் தெரிவித்தாள். அகிலன் தான் ஒரு போதும் இதற்குச் சம்மதிக்கமுடியாது என்பதை நிர்மலாவிடம் சொன்னான். அவள் அழுது ஆர்ப்பாட்டம் பண்ணினாள் அகிலனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை அவளைச் சமாதானப் படுத்துவதற்காக இதைப் பற்றி யோசித்து ஒரு நல்ல முடிவுக்கு வரலாம் என அப்போதைக்குச் சொல்லி வைத்தான்.

அகிலன் இறுதியாண்டுப் பரீட்சை முடிந்து ஊருக்குப் போகத் தயாரானான் நிர்மலாவிடம் சொல்வதற்காக இராமநாதன் விடுதிக்குப் போயிருந்தான். அகிலனைக் கண்டதும் நிர்மலா அவன் தன்னை விட்டுப் பிரியப் போவதை எண்ணி விக்கலெடுத்து அழுதாள். அகிலனால் எதுவுமே பேச முடியவில்லை அவள் அழுவதைப் பார்த்து இவனுக்கும் அழுகை வந்துவிட்டது. இருவரும் சிறிது நேரம் எதுவுமே பேசாது மௌனமாக இருந்தார்கள். அகிலன் மௌனத்தைக் கலைத்தான் "நான் ஊருக்குப் போய் வீட்டாருடன் கதைச்சு லண்டன் போவதற்கான சம்மதத்துடன் திரும்பி வருவன்" என அவளுக்குச் சமாதானம் சொன்னான் நீண்ட நாட்கள் அவனைப்பிரிந்து தன்னால் இருக்கமுடியாது என நிர்மலா மீண்டும் அழுதுகொண்டே சொன்னாள். எது எப்படியிருந்தாலும் தான் இரண்டு மூன்று வாரங்களில் அவளைப்பார்க்க வருவதாகக்கூறி அவளிடமிருந்து பிரிய மனமில்லாது பிரிந்து சென்றான். நிர்மலாவுக்கு லண்டன் பயணம் பற்றி வீட்டாருடன் கதைத்துச் சம்மதம் பெற்று வருவதாகச் சொல்லி வந்தானே தவிர வீட்டில் அதைப்பற்றி பேச்செடுப்பதற்கே தயங்கினான். இதைப் பற்றிக் கேட்டால் என்ன நடக்குமென அவனுக்கு நல்லாகவே தெரியும். அதனால் இபபோதைக்கு எதுவுமே சொல்லக் கூடாது என முடிவெடுத்தான். இந்த ஆறேழு மாதங்களாக கொழும்புக்கும் கண்டிக்குமாக தனது வேலை விடயமாகப் போவதாகச் சொல்லி அலைந்தான். உண்மையில் அவன் திரிந்தது வேலைக்காக அல்ல, தனக்கும் நிர்மலாவுக்கும் என்ன ஆயத்தங்கள் செய்ய வேண்டுமோ அத்தனையையும் செய்வதற்காக, அதைச் செய்தும் முடித்தான்.

அகிலன் வேலைக்காக அலைவதைப் பார்க்க அம்பலத்தாருக்குப் பாவமாகவிருந்தது. உண்மை என்னவென அவர் அறிந்தால்தானே. நிர்மலாவின் இறுதியாண்டுப் பரீட்சையும் முடிவுறும் தறுவாயில் இருந்தது. இனியும் ஒரு முடிவெடுக்காமலிருக்க முடியாது என ஒரு தீர்மானத்திற்கு வந்தவனாய், தனக்கு லண்டனில் இரண்டு வருடங்கள் பயிற்சி இருப்பதாயும் அரசாங்கச் செலவில் அங்கு போவதாகவும் திரும்ப வந்ததும் இங்கே வேலை செய்யலாம் எனவும் பொய் சொன்னான். ஆரம்பத்தில் மறுத்த அம்பலம் பின் அகிலன் வேலைக்காக அலைந்ததை எண்ணி இரண்டு வருடங்கள்தானே என தன்னைத்தானே சமாதானம் செய்து சம்மதம் தெரிவித்தார்.

வன்னியில் இப்போது நிறைய மாற்றங்கள், இங்கேயே சில பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டு உயர்தர வகுப்புக்களும் நடைபெற்றன. நகுலனுக்கு அண்ணன் மார்கள் போல் வெளியூர்களுக்குப் போய் படிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஊர்ப்பாடசாலையிலேயே உயர்தரம் முடித்து பட்டப் படிப்பிற்கான அனுமதிக்குக் காத்திருந்தான். நகுலனின் மற்றய தமக்கையும் அயலூரில் சம்மந்தம் முடிச்சசுப் போய்விட்டாள். தங்கை மாலதியை நினைக்கத்தான் பாவமாக இருந்தது. தானும் பல்கலைக் கழகம் போய்விட்டால் அவள் தனியே வீட்டில் இருக்கப்போவதை எண்ணிப் பரிதாபப் பட்டான்..

நகுலனின் பல்கலைக்கழக அனுமதிக்கான கடிதம் அன்று வந்திருந்தது. கூடவே அகிலனின் லண்டன் கடிதமும் வந்திருந்தது. நகுலனுக்கு வந்த கடிதம் நல்ல சேதி என்றால், அகிலன் அனுப்பியது பூகம்பத்தை கொண்டு வந்தது. அகிலன் போய் ஓராண்டுக்குப் பின்னால்தான் நடந்தவற்றை எழுதியிருந்தான். தனக்கும், நிர்மலரவுக்கும் திருமணம் முடிந்துவிட்டதையும் தன்னை மன்னிக்கும்படியும் எழுதியிருந்தான். இது மன்னிக்கக்கூடியதா? வீடே மரண வீடாயிற்று. "எனக்கிருந்த மூத்தபிளளைகள் ரெண்டும் செத்துப் போச்சுதுகள் இண்டைக்கு அந்திரட்டி செய்யப்போறன்" துக்கம் விசாரிக்க வந்தவர்களிடம் அம்பலம் தன் மனக்குமுறலைக் கொட்டிக் கொண்டிருந்தார். செல்லநாச்சி குசினிக்குள்ளிருந்தே அழுது தீர்த்தாள். என்ன இருந்தாலும் பெற்ற வயிறல்லவா? "இன்னம் என்ன செலவானாலும் உன்னையும் படிப்பிக்க வேண்டியது பெத்த எனக்குக் கடைமைதான் நீயும் கொண்ணனாக்கள் மாதிரிச் செய்யமாட்டாய் எண்டு எப்பிடி நான் நம்புறது இருந்தாலும் என்ரை கடைமையை நான் செய்வன்" நகுலனைப்பார்த்து தன் ஆற்றாமையைக் கொட்டினார் அம்பலம். அன்றைக்கே முடிவெடுத்தவன்தான் நகுலன் இனித்தான் படிக்கப் போவதில்லை. தந்தையின் கமத்தொழில்தான் தனக்கென்றும், கடைசிவரை தாயையும், தகப்பனையும் பார்க்க வேண்டிய கடமை தனக்குத்தான் என்றும். அம்பலம் வற்புறுத்தியும் அடியோடு மறுத்துவிட்டான். அன்று முதல் இன்றுவரை வயல் விதைப்பாக இருந்தாலென்ன, அருவிவெட்டாய் இருந்தாலென்ன சகலதும் அவனே. அம்பலம் அவனுக்கு பக்க பலமாக இருந்தார். தன்னுடைய பிள்ளையென பெருமையாக நகுலனைச் சொல்லிக்கொள்வார். அவனிடத்தில் அவருக்கு மரியாதை கலந்த பாசம். நகுலன் தேத்தண்ணி குடித்துவிட்டு சவள்தடியையும் தூக்கி தோளில் சுமந்தபடி வயலை நோக்கிப் புறப்பட்டான்.

"ஒருவனைப் பற்றி யார் உனக்கு குறை சொல்கிறாரோ அவரே உன்னைப் பற்றியும் மற்றவர்கட்கு குறை சொல்பவர் ஆவர்"



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரா சுப்பர் மார்க்கட்

கனடிய, மேற்கு-கிழக்கு இந்திய மற்றும் இலங்கைப் பல சரக்குச் சாமான்கள்



- சிறந்த உணவு வகைகள்
- மரக்கறி வகைகள்
- பால் மற்றும் பழவகைகள்
- மீன் இறைச்சி வகைகள்
- வீடியோ, சீடி (CD) அனைத்துப் பொருட்களுக்கும் நாடுங்கள்.

**ERAA SUPER MARKET**
**2607 Eglinton Avenue East**
**Scarborough, Ontario**
**M1K 2S2.**

**Tel: (416) 269 2622**
**Fax: (416) 269 2622**

# France Patisserie

**WHOLE SALE BAKERY**



SPECIALTY BAKERS

**SUPPLYING THE HOTELS AND RESTAURANTS**

435 Midwest Road Unit #3
Scarborough, Ontario
M1P 3A6

Tel: (416) 752-0027
(416) 752-0028
Fax: (416) 752-0032




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப் பிரதேச பொருளாதாரமும் கலை கலாச்சார விழுமியங்களும்

- பாலா கணபதிப்பிள்ளை

இன்று உலகில் வாழுகின்ற இனங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு தனித்துவமான பாரம்பரியங்கள், பண்பாடுகள் கலை, கலாச்சாரங்கள் என்பவை பின்னணியில் உள்ளமையை அறிய முடிகிறது. அந்த வகையில் தமிழீழத்தில் குறுநில மன்னர்களால் ஆட்சி செய்யப்பட்ட வன்னி என்ற பாரம் பரியத் தமிழ் பிரதேசத்தை அறிதல் அவசியமாகும். இக்கட்டுரையில் பொருளாதாரம் சமூகம் பண்பாடு, கலை, கலாச்சாரம் என்பவற்றை வெளிப்படுத்த முனைகின்றேன்.

முதலில் வன்னிப் பிரதேசத்தில் தனித்துவத்தையும், சிறப்பியல்புகளையும் கொண்டு விளங்கும் பொருளாதார வளங்களை எடுத்துக் காட்ட விரும்புகின்றேன். பல ஆய்வாளர்களது நோக்கில் தமிழீழத்தில் வன்னிப் பிரதேசம் சிறந்த ஆய்வுக்களமாக விளங்குகின்றது. பல ஆய்வாளர்கள் பல் வேறு கோணத்தில் ஆய்வு செய்துள்ளார்கள். சில ஆய்வாளர்கள் வன்னியை அகலமாகவும், சில ஆய்வாளர்கள் ஆழமாகவும் ஆய்வு செய்துள்ளார்கள். எவ்வாறாயினும் வன்னிப் பிரதேசத்தின் பொருளாதார ஆய்வு குறிப்பிடத்தக்க வகையில் இடம் பெறவில்லை. இலங்கையின் நிர்வாக அதிகாரியாக இருந்த ஜே.பி. லூயிஸ் அவர்களின் ஆய்வு ஓரளவிற்கு வன்னியின் பொருளாதார ஆய்வைத் தொட்டு நிற்கின்றது. கலாநிதி சி. பத்மநாதன் அவர்களது ஆய்வும் ஒரு சிறந்த பொருளாதார ஆய்வாக அமைகிறது. இருந்தும் இவ் ஆய்வுகளில் வன்னி பற்றிய கால முரன்பாடுகள் இப் பிரதேச எல்லை அளவு பற்றி சில முரண்பாடான தகவல்களைத் தருகின்றன.

வன்னிப் பிரதேசம் தன்னகத்தே கொண்டிருந்த பல்வேறுபட்ட சமூக பொருளாதார, பாரம்பரிய பண்புகளின் சிறப்பியல்பினால் ஈழத்தின் ஏனைய பிரதேசங்களிலிலிருந்து தனித்தன்மை கொண்டதாக விளங்குகின்றது. பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் ஆய்வின்படி வன்னிப் பிரதேசம் தனித்துவமான பொருளியல் பண்புகளையும் வாழ்க்கை முறைகளையும் கொண்டிருந்ததை எடுத்துக் காட்டியுள்ளார். வன்னிப் பிரதேசத்தில் குறிப்பிடத்தக்க ஒரு பகுதி கடற்றொழிலுக்குரிய கடற்கரையை அண்டிய பிரதேசமாக இருந்ததாலும் வன்னியின் சிறப்புத் தன்மையும் உணர்வும் விளை நிலத்தை அடிப்படையாக கொண்டே விளங்குகின்றது. விவசாயத்தின் ஒவ்வொரு நிலங்களும் குளங்களை அடிப்படையாகக் கொண்டு விளங்குகின்றது. வன்னிப்பிரதேசத்தின் சமூக, பொருளாதார அமைப்பினை உற்று நோக்கும் போது குளங்கட்டும், கோவில்கட்டும் குடும்பங்கட்டும் இடையே தொடர்புகள் காணப்படுகின்றன. இவற்றோடு தொடர்புபடுத்தி பசுக்கள், எருமைகள் என்பன பொருளாதாரத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாக விளங்குகின்றன. வன்னிப் பிரதேச பொருளாதார அம்சங்களில் முதன்மைப்படுத்தக் கூடியதாக உள்ளவை விவசாய விளை நிலங்களும் அவற்றின் உற்பத்தி முறைகளும், அதனோடு சேர்ந்த பொருளாதாரத் தொடர்புகளுமே ஆகும். வன்னியின் பொருளாதார மையமாகக் கொள்ளக் கூடிய குளம், குடும்பம், கோவில்கள், கால் நடைகள் என்பனவற்றில் குடும்பமே முக்கிய காரணியாகக் கொள்ளலாம். ஒவ்வொரு குடும்பமும் தன்னளவில் அன்றய நிலையில் முழுத்தேவையையும் பூர்த்தி செய்ததோடு ஒரு கட்டுக்கோப்பான பொருளாதார நிலையைத் தோற்றுவித்தார்கள். முன்னய பொருளாதார வளங்கள் குளத்தைச் சுற்றியே மையப்படுத்தியிருந்தன. ஒவ்வொரு குளக்கட்டையும் சார்ந்து எண்ணிக்கையில் குறைவான சில குடும்பங்களே வாழ்ந்து வந்தன. அந்தச் சூழலில் கிடைக்கக் கூடிய வளங்களைப் பயன் படுத்தி உற்பத்தியைப் பெருக்கிவந்தனர். பின்பு குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிக்க விளைநிலத்தையும், குளக் கட்டையும் சார்ந்தில்லாமல் தூர இடங்களில் போய் வாழும் நிலை ஏற்பட்டது. இப்படிச் சார்ந்து வாழாத தன்மை ஏற்பட்டு மேட்டு நிலங்களில் வாழும்போது அவ் நிலப் பயன்பாட்டிற்கு ஏற்றவாறு குறுங்கால, நீண்ட காலப் பயிர்களைச் செய்து வாழ்ந்தனர். இவ் மேட்டு நிலப் பயிர் செய்கையோடு வன்னியில் புலவு என்னும் சேனைப் பயிர்ச் செய்கையும் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தன்னிறைவைக் கொடுத்தன.

பண்டைய வன்னி மக்களால் மேற்கொள்ளப்பட்ட உற்பத்திகள் யாவும் வருமானம் ஈட்டுவதற்கோ, அல்லது சந்தைப் படுத்துவதற்கோ இல்லை. வன்னி மக்களின் சுய நுகர்வுக்கே உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. வன்னியின் பொருளாதாரம் நில உடமை ஊடாகவோ அல்லது விவசாயத்தின் ஊடாகவோ கட்டி எளுப்பும்போது குடும்பம் அல்லது குடி என்பதே பொருளாதாரத்தின் முக்கிய நிறுவனமாக விளங்கியது. நில உடமையை எடுத்துக் கொண்டால் குளத்துக்குக் கீழ் அதாவது குளத்திலிருந்து நீர்ப்பாசனம் பெறும் நிலமே பெறுமதி மிக்கதும் விவசாயத்தின் முக்கிய நிலமாகவும் விளங்கியது.

வன்னியின் நில உடைமை முறை மற்றய பிரதேசங்களைவிட முற்றிலும் வேறுபட்டதாகவே காணப்பட்டது. இங்கு ஒவ்வொரு பாரம்பரியக் குடும்பத்திற்கும் குடியிருப்பு நிலமும், நீர்ப்பாசன வசதியுமுள்ள விளை நிலமும் சொத்துடைமையாகக் கொள்ளப்பட்டது. வன்னியில் உள்ள வீடு ஒன்று மண்ணினால் ஆனதாயும், வீடுகட்கு மத்தியில் "மால்" எனப்படும் வரவேற்பு மண்டபமும், கொம்பறை எனப்படும் நெற்களஞ்சியமும் வீட்டினுள்ளே பெட்டகமும் வளவின் பின்புறத்தே மாட்டுப்பட்டியும் அமைந்திருக்கும். வீட்டில் செல்லப்பிராணியாகவும், வீட்டின் காவலனாகவும் நாய் வளர்ப்பார்கள். எருமைகள் சிறப்பை என்னும் மரத்தினாலான மணிகள் கழுத்தில் தொங்க காணப்படும். அடுப்படியில் நீண்ட காலத்தேவைக்காக பதனிடப்பட்ட விரால் கருவாடு, மான், மரை இறைச்சிகள் குட்டிச் சாக்கில் தொங்கும். அடுப்படிக்குப் பின்பக்கம் அன்றாடத் தேவைகட்கான மரக்கறிகள் பயிரிடப் பட்டிருக்கும். வீட்டில் மாட்டு வண்டில், கலப்பை, நுகத்தடி, வைக்கற்போர் என்பன காணப்படும். இவை அனைத்தும் ஒரு வன்னியின் பாரம்பரிய குடிகளின் அடையாளங்களாகும்.

## குளங்கள்

வன்னியில் காணப்படுகின்ற குளங்கள் தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழ் நாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்படுகின்ற குள அமைப்பைப் போலவே காணப் படுகின்றன. இங்குள்ள குளங்கள் சங்கிலித் தொடர் குளங்களாகவும், வானம் பார்த்த குளங்களாகவும் அமையப் பெற்றிருக்கின்றன. இவற்றில் சங்கிலித் தொடர் குளங்களே அதிகம். அதாவது ஒரு குளம் நீர் நிரம்பி கலிங்கு மூலம் வழிந்தோடி மற்றுமோர் குளத்தைச் சென்றடைகின்றது. நீர்ப்பாசன முறையும் தமிழ்நாட்டைப்போலவே மதகு மூலமும், துரிசு மூலமும், குமிழி மூலமும் அதாவது மரத்தினால் ஆக்கப் பெற்ற கொட்டினால் நீர்ப்பாய்ச்சும் முறைகளே காணப்படுகின்றன. தமிழ் நாட்டிலே மொத்தம் 39202 குளங்கள் காணப்படுகின்றன. ஜே. பி. லூாயிஸ் என்பவரது கணிப்பின்படி வன்னியல் 1890ம் ஆண்டில் 711 குளங்கள் நடைமுறையிலும், 140 குளங்கள் அழிந்தும் போயிருந்தன எனக் குறிப்பிடுகின்றார். இன்று வன்னியில் புனரமைக்கப்பட்டவை, புதிதாய் அமைக்கப்பட்டவை என மொத்தமாக 1225 குளங்கள் உள்ளன எனக் கணிக்கப்பட்டுள்ளது. பண்டைய மன்னர்களால் காலத்திற்குக் காலம் குளங்கள் தூர்வாரப்பட்டு புனரமைக்கப்பட்டன. ஆனால் இன்று வன்னியில் பல ஆண்டுகள் ஆற்று நீர் வருகையால் ஏற்படும் மணல் தூர்கள் வாரப்படாததால் குளங்களின் நீர்க் கொள்ளளவு குறைந்துவிட்டது. இவை எதிர்காலத்தில் புனரமைப்புச் செய்தல் அவசியம். ஏனெனில் வன்னியில் பொருளாதாரத்தில் குளங்களே முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்த வகையில் வன்னியில் நீர்பாசன நிலங்களே அதிகமான மக்கள் சொத்துடைமையாகக் கொண்டிருந்தனர். இதற்கு அடுத்தபடியாக குடியிருப்பு நிலங்கள் சொத்துடைமையாகக் கொள்ளப்பட்டன. இவ்வாறான நிலப் பங்கீடும், நில உடைமையும் வன்னிப் பிரதேசத்தை , ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலிருந்து வேறுபடுத்துகின்றன. யாழ்ப்பாண நில உடைமை முறையான குடிமை மானிய முறைச் சமூக அமைப்பு போன்றோ, அல்லது மட்டக்களப்புப் பிரதேசத்தில் காணப்படும் போடியார் முறையிலமைந்த சிறைகுடிகள் என்ற மானிய முறை போன்ற அடிப்படையிலான நில உடைமை முறைமையோ இல்லாது எல்லாக் குடும்பங்களும் போதிய சமமான நிலவுடைமையைக் கொண்டிருந்த அமைப்பாகக் காணப்படுகின்றது.

வன்னியில் காணப்பட்ட மூவகை நிலவுடைமையான பாசனக் காணி, குடியிருப்புக்காணி, சேனைப் பயிர்ச்செய்கைக் காணி, ஆகிய மூன்றில் இரண்டையாவது இப் பகுதி மக்கள் சொத்துடைமையாகக் கொண்டிருந்தனர். இப் பகுதிகளில் ஊழிய மிகையை எடுத்துக் கொள்ளல், உழைப்பை உறுஞ்சுதல், உழைப்பை அடிமைக்கு ஒப்பாக்குதல் என்பன குறைவாகவே காணப்பட்டது.

இங்கு ஒரு கிராமத்தின் உற்பத்தி ஓரளவு அதன் சுயதேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருந்தது. பாரம்பரிய கிராமத்தின் கட்டமைப்பு நவீனத்துவம் புகுந்து சீர்குலைக்கப்பட்டாலும் அவை முற்று முழுதாகச் சிதைவுறாது இருப்பதை அவதானிக்கலாம். இங்கு ஊழியச் சுரண்டல் இடம் பெறாததற்கு முக்கிய காரணம் நேரடியாக ஊழியம் பயன் படுத்தப்படாமல் பண்டமாற்று அடிப்படையிலும், வேலைக்கு, வேலைசெய்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பல வன்னிக் கிராமங்களில் ஊழியம் பயன் படுத்தலானது கூட்டு முயற்சியின் அடிப்படையிலேயும், தொழிலைப் பகிர்ந்து செய்தல் அடிப்படையிலேயும், இடம் பெற்றிருந்தன. இந்த ஊழியப் பகிர்வு முறையைப் பரத்தை போடுதல் என்பர். கூட்டு முயற்சிக்கு உதாரணமாக பலகை அடித்தல் அருவி வெட்டுதல். சூடு அடித்தல், வீடு வேய்தல், புலவு கொத்துதல் போன்றவற்ரைக் குறிப்பிடலாம். இன்னுமோர் முறை ஊழியப் பகிர்வு அதாவது அதிக நிலவுடைமையாளன் ஒருவன். குறைந்த நிலவுடைமையாளன் ஒருவனுடன் சேர்ந்து உற்பத்தியில் ஈடுபடுதல்.

வன்னிப்பிரதேசத்தில் பெண்களின் ஊழியம் நேரடியாகப் பயன்படுத்தாவிட்டாலும் மறைமுகமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன. அதாவது உற்பத்தியிலீடுபடும் கணவனுக்கும் கூட்டுத் தொளிலாளர்கட்கும் உணவு சமைத்தல் உணவை வயலுக்கு எடுத்துச் சென்று பரிமாறுதல். கணவன் இளைப்பாறும்போது மனைவி அருவி வெடடுதல் உப்பட்டி கூட்டுதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப்பிரதேசங்களில் அமைந்திருக்கும் கோவில்களும் பொருளாதார மையங்களாக விளங்குகின்றன. திருவிழா. பொங்கல் காலங்களில் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தும் களமாக இவை விளங்கின. உதாரணமாக வற்றாப்பளை. ஒட்டுசுட்டான், புதூர் போன்ற கோவில்கள். இன்னுமோர் ஆய்வாளரின் கருத்துப்படி வன்னி மக்கள் வாணிபத்தை விலக்கி வாழ்ந்திருக்கின்றார்கள். இவர்கள் விவசாயத்தைவிட வேறு தொழில் செய்வதைத் தரக்குறைவாகவும் வன்னிமைகளின் சமூகத்தில் வியாபாரத்திற்கு மதிப்புக் குறைவாகவும் காணப்பட்டது. 1965ம் ஆண்டு வரைக்கும் பிற பிரதேச மக்களே வியாபார நிறுவனங்களை நடாத்தி உள்ளார்கள். இவர்கள் பொருட்களை வண்டில்களில் கொண்டு வந்து வியாபாரம் செய்தனர். பொட்டளிக்காரன் என்று சொல்லப்படும் நபர் புடைவைகளை துவிச்சக்கர வண்டியில் கொண்டு திரிந்து விற்கும் வியாபாரியைக் குறிப்பதாகும். இதே போன்று மற்றும் பொருட்களையும் வண்டிலில் கொண்டு வந்து வியாபாரம் செய்தனர். அண்மைக் காலங்களில் குறைந்தளவு வன்னி மக்களே வியாபார முயற்சிகளில் ஈடுபட்டனர்.

## கல்வி

வன்னிப் பிரதேசத்தில் கல்வியில் பின் தங்கிய காரணத்தை ஆராய்ந்த ஆய்வாளர்கள் பின் வரும் காரணத்தை கூறுகின்றனர். இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் அதிகளவில் நிலவுடைமையையும். பொருளாதாரத்தில் தன்னிறைவும் கொண்டிருந்ததால் கல்வி கற்கும் தேவை அவசியமாகப்படவில்லை. தமது விவசாயத்தில் ஈடுபடும் நாட்டம் கொண்டவர்களாகவே இவர்கள் காணப்பட்டனர். அத்தோடு கல்வி கற்பிக்கும் அமரிக்கன் மிஷன் போன்ற நிறுவனங்களும் பெரியளவில் தோற்றம் பெறவில்லை. திண்ணைப் பள்ளிகளே இங்கு நடைமுறையில் இருந்தன. மக்களின் மதம் மாறாமை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டமையும், ஆசிரியர்களின் பற்றாக் குறையும், ஒரு காரணமக இருந்தது. பின்பு கிராமங்களில் தோற்றம் பெற்ற பாடசாலைகளில் படிப்பிப்பதற்கு தேவையான ஆசிரியர்கள் பிற பிரதேசங்களிலிருந்து வந்தே படிப்பிக்கும் நிலை ஏற்பட்டது. இவ் ஆசிரியர்களிடத்தில் அக்கறையின்மையும், விசுவாசமற்ற தன்மைகளும் காணப்பட்டன. வன்னிப்பிரதேசத்தில் போதிய நிலம் கிடைக்கப் பெற்றமையை பயன் படுத்தி படிப்பித்தல் தொழிலைவிட விவசாயம் செய்வதில் அக்கறை கொண்டனர். வன்னி மக்களின் மனித நேயம், பண்பாடுகளை தவறாக பயன் படுத்திக் கொண்டனர். வன்னி மக்களிடையே இருந்த மரபுகளில் ஒன்று புது வருட தொடக்கத்தில் அல்லது தீபாவளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைப்பொங்கல் கொண்டாட்டங்கள் முடிந்து பாடசாலை ஆரம்பிக்கும் முதல் நாள் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு சில சன்மானங்கள் வழங்கி கௌரவிப்பது வழக்கம். இம் மரபை தவறாகப் புரிந்து மாணவர்களிடமிருந்து சன்மானம் எதிர்பார்ப்பவர்களாக விளங்கினர். மாணவர்களுடைய அறியாமையை பயன்படுத்தி தமது வயல்களில் வேலை செய்வித்தனர். சில ஆசிரியர்கள் வீட்டு வேலையை கூட மாணவிகளைக் கொண்டு செய்வித்தனர். கல்வி கற்பிக்கும் ஆசிரியர் என்பதால் வன்னி மக்கள் உயர்ந்த மதிப்பும், மரியாதையும் கொடுத்தனர். குடும்பச் சுமை காரணமாக அவதியுறும் ஆசிரியர்களுக்கு தாமே நிலம் வழங்கி விவசாயம் செய்வதற்கு ஊக்குவித்தனர். திங்கள் பாடசாலைக்கு வரும் ஆசிரியர்கள் வியாழன் மாலை பஸ் ஏறி வீடு போய் சேர்ந்து விடுவார்கள். மாணவர்களின் கல்வியைப் பற்றி அக்கறை கொள்ள மாட்டார்கள். கல்வி வளர்ச்சியில் 1920ம் ஆண்டுவரை ஒரு பின்தங்கிய நிலையே காணப்பட்டது. 1930ம் ஆண்டின் பின்னால் இப்பிரதேசத்தில் ஒரு பரிணாம வளர்ச்சி ஏற்பட்டு 1950 - 1965 க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கல்வியில் பெரும் மாற்றம் ஏற்பட்டு இப்பிரதேச மக்களாலேயே கல்வி புகட்டும் நிலை ஏற்பட்டிருந்தது. இந்த நிலை தோன்றிய பின்னால் இப்பகுதிப் பாடசாலைகள் வன்னிப்பிரதேச மக்களைக் கொண்ட தன்னிறைவான ஆசிரியர்களைக் கொண்டு விளங்கியது. இதன் காரணமாக இன்று கிராமங்கள் தோறும் பட்டதாரிகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

## வர்க்க வேறுபாடும் சாதி அமைப்பும்.

வன்னிப் பிரதேசங்களில் வர்க்க வேறுபாடும், தீண்டாமையும் பெரிதும் காணப்படவில்லை. இதற்கு நிலவுடமைச் சமநிலை காணப்பட்டதே காரணமாகும். எல்லோரும் விவசாயத்தொழிலையே செய்து வந்தனர். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு பிரதேசங்கள் போன்று நிலவுடமையின் கீழ் உழைப்பை உறிஞ்சுதல், சுரண்டல், உழைப்பாளர்-நிலவுடமையாளர்களுக் கிடையே பெரும் வர்க்க வேறுபாடுகள் போல் வன்னிப் பிரதேசத்தில் காணப்படவில்லை. ஆனால் வன்னி அரசர்களின் நிர்வாகக் கட்டமைப்பு சீர்குலைந்து ஆங்கிலேயர் வசம் மாறிய பின்னர் ஆங்காங்கே வர்க்க வேறுபாடுகள் காணப்பட்டன. இதற்குப் புதிய குடியேற்றங்களே காராணமென ஆய்வாளர்கள் காட்ட முற்படுகின்றனர். இவ் ஆய்வாளர்கள் முதலியார்களும், உடையார்களும் அதிகளவு சுரண்டலில் ஈடுபட்டனர் என வெளிப்படுத்துகின்றனர். ஆனால் இதனை ஏற்றுக்கொள்வதற்கில்லை. இவர்கள் அதிகளவில் நிலவுடமை கொண்டிருந்தார்களே தவிர சுரண்டல், உழைப்பை உறுஞ்சுதல் போன்றவற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் வன்னியில் ஒரு பாரம்பரிய குடும்பம் தன்னிறைவு பெறும் அளவிற்கு போதியளவு உற்பத்தி நிலங்களைக் கொண்டிருந்தார்கள். ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் உடையார், முதலியார்கட்கு அதிகளவு அதிகாரம் கொடுக்கப்பட்டதால் நிர்வாகத்தில் அதிக அக்கறை உள்ளவர்களாக விளங்கி ஆங்கில நிர்வாகத்துக்கு விசுவாசமாக நடந்து கொண்டார்களே ஒழிய சுரண்டலில் ஈடுபடவில்லை.

சாதியமைப்பைப் பொறுத்தவரை குறைந்த அளவிலான சாதி அமைப்பு காணப்பட்டமையை ஆய்வாளர்கள் வெளிப்படுத்துகின்றனர். ஆனால் யாழ்ப்பாணத்தைப் போன்று ஒரு இறுக்கமான சாதி அமைப்போ, சாதித்தீண்டாமையோ வன்னியில் காணப்படவில்லை. வன்னியில் உள்ள பாரம்பரிய மக்கள் அல்லது குடிகள் தமக்கு குடிமைகளைக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் கௌரவப்படுத்தப்பட்டனர். ஒவ்வொரு சாதியினருக்கு என்றும் தனியான கிராமங்களை கொண்டிருந்தனர். நிலவுடமை, நிலப்பங்கீடு என்பனவற்றில் வேற்றுமையின்றி தமக்கென தனியான நிலங்கள், கால்நடைகள், குளம், கோயில்களை கொண்டிருந்தனர். பிற்காலத்தில் சாதித் திண்டாமை காரணமாக வந்து குடியேறியவர்களை வரவேற்று குடியமர்த்தி அவர்களுக்கு தனியான கிராமம், கோயில்கள் என்பனவற்றை பெற்று கொடுத்தனர். தற்போது ஏற்பட்ட போராட்ட சூழ்நிலையில் போராளிகளால் ஏற்படுத்தப்பட்ட நிர்வாக, சமூக கட்டமைப்பு வன்னிப் பிரதேசத்தில் வர்க்க வேறுபாடுகள், சுரண்டல்கள், சாதித் தீண்டாமை என்பன ஓரளவு இல்லாது ஒழிக்கப்பட்டுள்ளமை பலரும் அறிந்ததே.

## நிர்வாகம்

வன்னிப் பிரதேசத்தின் நிர்வாக அமைப்பு, பொருளாதார சமூக கலாச்சார கட்டமைப்பைப் பேணுவதற்கு இலகுவாகவும் மானிட நேயத்தைப் பராமரித்து ஒரு கட்டுக்கோப்பான சமூக அமைப்பை உருவாக்கி தனித்துவம் பெற்றிருந்தது. ஒல்லாந்தர் போத்துக்கேயர் காலத்திற்கு முன்பே வன்னி மன்னர்கள் சிறந்த நிர்வாக அமைப்பை உருவாக்கியிருந்தனர். வீரம் செறிந்த நிர்வாகக் கட்டமைப்பை அடங்காப் பற்று என்றே அழைத்தனர். வன்னியின் நிர்வாகம் பத்து பற்றுக்களாகும். பின்பு ஏழு பற்றுக்களாகப் பிரித்து ஆளப்பட்டது. வன்னியின் சிற்றரசனாக விள்ஙகிய கைலாய வன்னியன் காலத்தில் ஒல்லாந்தருக்கு பன்னிரண்டு ஆண்டுகள் வரி செலுத்தாது அவர்களோடு போர் செய்வதையும் தவிர்த்து சீரான நிர்வாகக் கட்டமைப்பில் ஆட்சி செலுத்தியிருக்கின்றான். இக் காலத்தில் மக்கள் சிறப்போடு வாழ்க்கையை அனுபவித்தனர். பல சிற்றரசர்கட்குத் தலைவனாகவும் விளங்கியிருக்கிறான். ஆனால் பண்டாரவன்னியன் காலத்தில் நிர்வாகக் கட்டமைப்பு சீர் குலைந்திருந்தது, காரணம் ஆங்கிலேயருடன் ஏற்பட்ட யுத்தங்களும் சிற்றரசர்களது சுயநலப் போக்கும் அதிகார ஆசையும் காரணமெனக் குறப்பிடலாம். பிற்காலத்தில் ஜே. பி. லூயிஸ் அவர்களால் நிர்வாகம் சீர்திருத்தப்பட்டு உடையார், விதானையார், போன்ற நிர்வாக அதிகாரிகள் தோற்றுவிக்கப்பட்டனர். பிற் காலத்தில் இப் பிரதேசங்களின் பாரம்பரியம், தனித்துவங்களை பாதுகாக்கும் விதத்தில் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கி அரசாங்கத்தின் நிர்வாக ரீதியான வன்னி என்ற தேர்தல் நிர்வாகத்தை உருவாக்கினர். இன்றய போராட்ட நிகழ்வுகள் வன்னியின் பழய பாரம் பரியங்களுக்கு இட்டுச் செல்கின்றதா? என பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

## வன்னிப் பிரதேசத்தின் கலையும் கலாச்சாரமும்

வன்னிப் பிரதேச கலாச்சாரத்தின் உட் கூறுகளாகிய நாட்டுப்புறக் கலைகள் அழகியல் சார்ந்தவை கிராமிய மணத்தோடு படித்தவர்கட்கு மட்டுமின்றி பாமர மக்கட்கும் உரியவை. தனிமனித கற்பனை கூட்டுக்கு வழிவகுப்பவை எளிமையான உள்ளடக்கமான வன்னிப்பிரதேசக் கலைகள் மக்களின் வாழ்வோடு இணைந்தவை. இந்தப் பண்பாட்டுக் கலை வடிவியல்கள் மக்களின் சமய சடங்குகளோடு பின்னிப் பிணைந்து நல்ல பொழுது போக்காவும் இருக்கின்றன. ஆனாலும் இக் கலைகள் வன்னிப் பிரதேசத்தில் நம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணெதிரே நசிந்து கொண்டிருக்கின்றன. இக் கலை வடிவங்களைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டியது தமிழர்களின் கடமையாகும்.

சினிமாக் கலாச்சாரத்தின் தாக்கம் எமது நாட்டுப் புறக் கலைகளில் ஊடுருவி அவற்றை அழித்து வருகின்றன. வன்னிப் பிரதேசத்தின் கலைகள் முற்று முழுதாக நகர்ப்புற கலைகளோடு ஒட்டிப்போனவைகள் அல்ல. இவர்களின் கலை வடிவங்கள் நாட்டுக் கூத்து, வில்லுப்பாட்டு, கோலாட்டம், உடுக்கடித்து பாடுதல், கும்மி, குதிரையாட்டம், நாடகம் போன்றவையாகும்.

வன்னி மக்கள் பரதநாட்டியக் கலையில் நாட்டம் அற்றவர்களாகவே காணப்பட்டனர். அக்கலையை நேசித்தார்களே தவிர, இற்றைவரைக்கும் வன்னிப்பிரதேசத்தில் ஓர் பூர்வீக வன்னியைச் சேர்ந்த எவரும் இக் கலையை பயின்றதற்கான சான்றுகள் இல்லை. இதனைப் புறக்கணித்ததற்கான காரணம் இது வரையும் கண்டறியப் படவில்லை. யாழ்ப்பாணத்தில் கூட மிக அண்மைக் காலத்திலேயே இக் கலையைக் கற்க ஆரம்பித்தார்கள். வன்னியிலே இக் கலையை சின்ன மேளம் என்றே அழைத்தனர். இந் நாட்டியக் கலை பரதநாட்டியம் என்ற பெயர் வடிவம் பெற்றதன் பின்னர் யாழ்ப்பாண மக்கள் இதனைக் கற்க ஆரம்பித்தனர் என்று கலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். பிற்காலத்தில் வன்னியில் முள்ளியவளைப் பிரதேசத்தில் ஓரிரு மக்கள் பயின்றிருந்தனர். வன்னிப் பிரதேசத்திற்குக் குடி பெயர்ந்து வாழும் மக்கள் தமது பிள்ளைகட்குப் பயிற்றுவித்து வருகின்றனர். வன்னிப் பிரதேச கூத்து முறைகள், யாழ்ப்பாண, மன்னார், மட்டக்களப்பு கூத்து முறைகளில் இருந்து சற்று வேறுபட்டவையாக் காணப்படுகின்றன. இக் கூத்துக்கள் முற்றிலும் புராண, இதிகாசங்களைப் பிரதிபலிப்பவையாகவே காணப்பட்டன.

வன்னிப் பிரதேசக் கூத்துக்கள் கட்டியக் காரன் என்ற பாத்திரப் படைப்போடு ஆடப்படுகின்றன. ஹார்மோனியம், மத்தளம், சல்லாரி போன்ற கருவிகள் பாவிக்கப் படுகின்றன. இக் கூத்துக்கள் வன்னிப் பிரதேசத்தில், முல்லைத்தீவு, முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, ஒமந்தை பகுதிகளில் உள்ள கிராமங்களில் அண்ணாவியார் என அழைக்கப் படுபவரால் கூத்து ஆடுபவர்கட்குப் பயிற்றுவிக்கப் பட்டது. வன்னிப் பிரதேசத்தில் ஆடப்படும் கூத்துக்கள் வடக்கத்திய பாணியில் ஆடப்படுகின்றது. தெற்கத்திய கூத்துக்களின் செல்வாக்கு இங்கு மிகக் குறைவாகவே உள்ளது. இது மட்டக்களப்பு பிரதேசத்திலேயே ஆடப்பட்டு வருகிறது. தெற்கத்திய பாணியிலான கூத்து தமிழ்நாட்டிலே தென்னாற்காடு, புதுச்சேரி மாவட்டங்களில் தோன்றிய ஒரு கலையென்றும் இது புராண இதிகாசங்களையும், மக்களின் அன்றாட வாழ்வை பிரதிபலிக்கக் கூடிய கதை அம்சங்கள் கொண்டதாகவும் இருக்கும். வடக்கத்திய பாணியிலான கூத்து வடார்க்காடு, திருவண்ணாமலை, செங்கல்பட்டு மாவட்டங்களில் ஆடப்படுவதும், புராண, இதிகாசங்களாகிய இராமாயணக் கதைகளும், அரசர்களின் சரித்திரங்களை கதையாகக் கொண்டும் ஆடப்படுவதாகும். கூத்தில் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழும் அடங்கப்பெற்றிருக்கும். முக அலங்காரம், ஜொலிக்கும் உடையலங்காரம், சலங்கையொலியுடன் கூடிய ஹார்மோனியம், மத்தளம், மிருதங்கம் போன்ற வாத்தியக் கருவிகளுடனும் சேர்ந்து பிற்பாட்டும் கூத்துக்கு சுவையூட்டும். இதில் குறிப்பிடக்கூடிய அம்சம், கட்டியக்காரன் பார்வையாளர்களுக்கும், நடிகர்களுக்கும் பாலமாக இருந்து சுவைபடப் பேசி கதையை விளங்கவைப்பதும் நகைச்சுவையூட்டு வதுமாகும். இக்கூத்துக்கலை ஒரு தமிழ் கலை, இதை அழியாது பாதுகாப்பது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.

## வில்லுப்பாட்டு

வில்லுப்பாட்டும் ஒரு தமிழ்க்கலையே இதுவும் வன்னிப்பிரதேசத்தில் அநேகமாக கோயில் திருவிழாக்களில் நடைபெறும் நிகழ்ச்சியாகும். முள்ளியவளை, புதுக்குடியிருப்பு போன்ற இடங்களில் இக்கலைவடிவம் திகழ்ந்தது இப்போது அருவி விட்டது. இக்கலையானது மூங்கிலால் வளைக்கப்பட்ட வில்லில் இருபக்கங்களும் கெட்டியான பானைகளை கட்டியிருப்பார்கள். வில்லில் மணிகள் தொங்க விடப்பட்டிருக்கும். கதை சொல்பவர் வில்லின் நடு நாயகமாக அமர்ந்து வீசு கோலால் தட்டி பாடல்கள் மூலம் கதை சொல்வார் அவரைச் சுற்றி இருப்பவர்கள் அவருக்கு ஆஹா, ஓஹோ, ஆமா என பிற்பாட்டு பாடியும் பக்க வாத்தியங்கள் இசைத்தும் ஒத்தாசை புரிவர். பக்கவாத்தியங்களாக ஹார்மோனியம், தபேலா, மிருதங்கம் உபயோகிப்பார்கள். "தந்தனத் தோம் என்று சொல்லியே வில்லினில் பாட வந்தருள்வாய் கணபதியே" என்ற காப்பு பாடலுடன் தொடங்கும் இக்கலை இப்போது அரிதாகிவிட்டது.

## உடுக்கடித்துப்பாடுதல்

இக்கலை அநேகமாக வன்னியில் எல்லா இடங்களிலும் காணப்படுவதாகும். வேப்ப மரத்தினால் செய்யப்பட்ட உடுக்கு உடும்புத்தோலால் இருபக்கமும் மூடப்பட்டு இருக்கும். ஒருவர், அல்லது குழுவாகச் சேர்ந்து கிராமிய வணக்கமுறைப் பாடல்களும், முத்துமாரி அம்மன் பாடல்கள், பன்றிப்பல், குருவிச்சிந்து, முருங்கையன் சிந்து, அம்மன் சிந்து போன்ற பாடல்கள் பாடுவர்கள். "பெற்றெடுத்த தாயே மாரியம்மா நான் உடுக்கடித்து பாடவந்தேன்" என்ற பாடல் வன்னிப் பிரதேசத்தில் பிரபல்யம் பெற்றது. மேலும் வன்னியில் நாட்டார் பாடல்கள் விவசாயத்துடன் தொடர்புடயதாகவே அநேகம் இருந்தன. ஆனால் இக்கலை இப்போது முற்றிலும் கை விடப்பட்டு அழிந்துள்ளது. வன்னியில் இப்போது உடுக்கடித்து பாடத் தெரிந்தவர் யாரும் இரார் என்றுதான் சொல்ல வேண்டும். அறுவடைக்காலங்களில் கூடுதலாக இப்பாடல்கள் பாடப்படும். நாடகக்கலையும் இங்கு மேன்மையடைந்த போதிலும் தொலைக்காட்சி, சினிமாக்களின் வருகை இவற்றை பாதிப்படையச் செய்துள்ளன. எனினும் இன்றும் சில இடங்களில் இக்கலை இருக்கத்தான் செய்கிறது. குதிரையாட்டம் கோவில் திருவிழாக்களில் குறிப்பாக சூரன்போரின்போது ஆடப்படுவதாகும் இக்கலை தற்போது முற்றாக அழிந்து விட்டது என்றே கூறலாம்.

## கலாச்சாரம் பண்பாடு

பல்வேறு காலப் பகுதிகளில் இடம் பெற்ற அன்னிய படையெடுப்புகளால் வன்னி மக்களது கலாச்சாரம், பாரம்பரியத்தில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை. இவர்களின் வாழ்க்கைமுறை விவசாய விளை நிலத்தை அடிப்படையாகக் கொண்டதும், வசிப்பிடங்கள் பனை ஓலை, வைக்கோல் கொண்டு வேயப்பட்ட தாழ்வான கூரைப்பத்திகளைக் கொண்ட, மண்ணாலான வீடுகளைக் கொண்டதாயும் இருந்தன. பிரதான வீட்டின் முன்புறம் "மால்" எனப்படும் வரவேற்பு மண்டபம் கொண்டதாக இருக்கும். இம் மண்டபத்தில்தான் இவர்களிடையே நடைபெறும் சடங்குகள், வைபவங்கள் நடாத்தப்படும். இப்பகுதிகளின் போக்குவரத்துக்கு மாட்டு வண்டில்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன் படுத்தப்பட்டன. வருடத்தில் நான்கு, ஐந்து மாதங்கள் கடின உழைப்பும் பின் ஓய்வையும் கொண்டே வாழ்ந்தார்கள். பிரதான உணவாக பச்சையரிசிச் சோறும் மரக்கறியும், மாமிசம். பால், தயிர் போன்றவை காணப்படுகின்றன. மாரி காலத்திற்கு தேவையான உணவுகளை முன்கூட்டியே சேகரித்து வைத்துக் கொள்வார்கள்.

வன்னியின் பாரம்பரியக் கிராமங்களான தண்ணீரூற்று, முள்ளியவளை, சாஸ்திரி கூழாங்குளம், ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பு, நெடுங்கேணி போன்ற கிராமங்களுக்கு இடையே திருமண உறவுகள் காணப் படுகின்றன. உதாரணமாக நெடுங்கேணி மக்களுக்கும் தண்ணீரூற்று மக்களுக்கும் பன்னெடுங் காலமாக திருமணத் தொடர்புகள் வைத்திருந்தனர். அதே மாதிரியாக ஒட்டுசுட்டான் மக்கள் இடைக்காட்டிலும், மட்டுவிலிலும் திருமணத்தொடர்புகள் வைத்திருந்தனர். தென்னமரவடி, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய் மக்களுக்கு வல்வெட்டித்துறை, கரவெட்டி போன்ற இடங்களில் திருமணத் தொடர்புகள் இருந்தன. வன்னியிலிருந்து ஒரு வெளிபிரதேசத்தில் திருமண பந்தம் ஏற்படுத்திக் கொள்ளும் ஆணோ, பெண்ணோ வன்னியிலேயே தமது வாழ்க்கையை தொடர்ந்தார்கள். இதற்குக்காரணம் இங்கு காணப்பட்ட போதிய நிலம் கிடைக்கக் கூடிய காரணிகளேயாகும் என கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் ஆய்வில் காணக்கூடியதாக இருக்கிறது.

தொடர்ந்து இங்கு காணப்பட்ட வைத்திய முறைகள் சித்த, ஆயுள்வேத, மூலிகை வைத்தியங்களும், மந்திர உச்சாடன முறைகளுமே காணப்பட்டன. இப்படியான வைத்தியர்கள் பரம்பரையாக தந்தை, மகன் என்ற மரபு வழியில் மேற் கொள்ளப்பட்டு வந்தது. யாழ்ப்பாண மக்களுக்கும், வன்னிமக்களுக்குமான தொடர்புகள் திருவிழாக் காலங்களில் வந்து போதல், அல்லது தங்கிச் செல்லல், திருமண பந்தங்கள், கல்விகற்க போனதாலும், யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட இறுக்கமான சாதியமைப்பு முறைகளால் இடம் பெயர்ந்தமை விவசாய ரீதியாக, வன்னியில் அறுவடை முடிந்த பின்னால் வயல்களில் வளரும் ஒட்டுகளை மாட்டுக்கு உணவாகப் பயன்டுத்தி யாழ்ப்பாணத்தில் இருந்து மாடுகளை கொண்டு வந்து மேய்த்தல் மூலமான தொடர்புகளாலும் இங்கும் அங்குமான உறவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படியான தொடர்புகளின் பின்னால்தான் திராவிடத் தழிழரின் கிராமியக் கலாச்சாரத்தைக் கொண்ட வன்னி மக்களின் கலாச்சாரத்தில் குறிப்பாக சமயத்தில் மாற்றங்கள் தென்பட்டன. உதாரணமாக, பெண் தெய்வங்களினதும், வைரவர், ஐயனார், பிள்ளையார், வன்னித் தெய்வங்களின் வழிபாட்டையே பாரம்பரியமாகக் கொண்டிருந்தவர்கள் யாழ்ப்பாண மக்களின் வருகையின் பின் முருகன் கோவில்கள் அதிக மாக நிறுவப்பட்டன.

கிராமங்களில் பிள்ளையார் கோயில்கள் குளக்கட்டில் அநேகம் காணப்பட்டன. இவை வயல் நிலங்களின் காவல் தெய்வமாக கமக்காரர்கள் வழிபட்டனர். பின்னர் கிராமங்களில் பிள்ளையார் கோயில் அமைத்து வணங்கப்பட்டன. பிராமணர் அல்லாதோரால் பூசைகள் செய்யப்பட்டு வந்தன. காலப் போக்கில் இம்முறை மாறத்தொடங்கி பிராமணர்கள் பூசை செய்யும் முறை கொண்டு வரப்பட்டது. இக்காலப் பகுதிகளில் பெண் தெய்வங்களான வன்னி நாச்சியார் எனும் தெய்வ வழிபாடு முற்றிலும் கைவிடப்பட்டுள்ளது என்றே சொல்லலாம். வன்னியில் மன்னாகண்டல் என்னும் இடத்தில் இருக்கும் வன்னி நாச்சியார் கோயில் அழிந்து போகும் நிலையில் காணப்படுகிறது. வன்னியில் நடைபெறும் பொங்கல்கள் அதிகமானவை பெண் தெய்வங்களுக்கே. இப்பொங்கல்கள் வைகாசி மாதங்களிலேயே அதிகம் நடைபெறும். இங்குள்ள அம்மன் கோயில்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன. வன்னி விழாங்குளம் முத்துமாரி அம்மனில் தொடங்கும் பொங்கல் முறையே கல்லிருப்பு, கற்கிடங்கு, வற்றாப்பளை என தொடர்ந்து பனைநின்றானில் முடிவடையும்.

## திருமண முறைகள்

வன்னிமக்களின் திருமணங்கள் கூட பிராமணர் இல்லாமலே நடாத்தப்பட்டன. மணமக்களின் பெற்றோர் அவர்கள் இருவரினதும் கையைப்பிடித்துக் கொடுப்பதன் மூலம் திருமணம் நிறைவேற்றப்பட்டது. மிக அண்மைக்காலத்தில்தான் பிராமணர்கள் கிரியை செய்யும்முறை கொண்டு வரப்பட்டது. முன்பின் அறியாதவர்கள் எதிர்ப்பட்டு காதல் கொள்கின்ற களவு நெறியையும் பின்னர் ஊரறியத் திருமணம் செய்து வாழும் மரபும் இருந்ததாக மூதாதையர் வாய் மொழி மூலம் அறியக் கிடக்கிறது. ஆனாலும் அநேக திருமணங்கள் பெற்றோர் பேசி முடிப்பவையே. சில சந்தர்ப்பங்களில் காதல் வயப்பட்ட இருவரும் பல்வேறு சூழ்நிலைகளில் யாரும் அறியாமல் ஓடிப்போய்விடுகிற உடன் போக்கு நிலையும் ஆங்காங்கே காணப்பட்டிருக்கிறது.

திருமணச் சடங்குகள் மணமகள் இல்லத்திலேயே நடைபெறும். இங்கு வரதட்சணை இருக்கவில்லை இருவீட்டாரும் தம் பிள்ளைகளுக்கு வேண்டிய காணிநிலங்களையும், கால்நடைகளையும் மனமுவந்து பரிசளித்து அவர்கள் புதுவாழ்வு தொடங்க உறுதுணையாக இருப்பர். சிறிது காலம் தாய், தந்தையருடன் இருந்துவிட்டு பின்பு தனிக்குடித்தனம் நடாத்துவர். வன்னியில் பணம், நகை சீதனமாக வளங்குவது இடைக்காலத்திலேயே வழக்கத்திலிருந்து வருகிறது.

பண்டைய வன்னித் தமிழரின் திருமண மரபு முறையை சுருக்கமாக காட்ட விரும்புகிறேன். இந்த திருமணச்சடங்குகள் வன்னியில் முன்பு மணவறைகள் அமைத்து நடாத்தும் முறை இருக்கவில்லை. முன்பு குறிப்பிட்டது போல் மால் எனப்படும் வரவேற்பு மண்டபத்தில் வெள்ளை கட்டப்பட்ட பந்தலில், மாவிலை தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு அரசாணியில் கன்னிக்கால் நடப்பெற்று நிறைகுடங்கள் வைக்கப்பட்ட பகுதியில் நடாத்தப் பட்டன. இப் பகுதியின் மத்தியில் மணமகன் அமர்ந்திருப்பார். மணமகளின் தந்தை கன்னிக்கால் எனப்படும் கலியாண முருக்கில் இருந்து வளமான ஒரு முள் எடுத்து மணமகனின் தந்தையிடம் கொடுப்பார். தந்தை மகனின் காதில் துவாரமிட்டு சபையோர் முன்னிலையில் கடுக்கன் போட, தாயார் அதை இறுகப் பூட்டுவார். இது அந்த ஆண்மகன் திருமணம் ஆனவர் என்பதைக் குறிக்கவே இச்சடங்கு நிகழ்த்தப்படுகிறது. இதைத்தான் இன்றும் வன்னி மக்களது பேச்சில் உனது மகனுக்கு எங்காவது திருமணம் செய்து வைக்கலாம் என்பதை உனது மகனுக்கு எங்காவது கடுக்கன் பூட்டிவிடு என்கிறார்கள். இப்படியான திருமணங்கள் நடைபெறும் வேளை திருமணப் பந்தலின் முன்னால் பசுக்கன்று ஒன்றைக் கட்டியிருப்பார்கள். கடுக்கன் பூட்டும் வைபவம் முடிந்ததும் கை பிடித்து கொடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைபவம் இடம் பெறும். மணமகனின் கையை மணமகனின் பெற்றோரும், மணமகளின் கையை மணமகளின் பெற்றோரும் பிடித்துக் கொடுப்பார்கள். சபையோர் சாட்சியாக பெற்றோர்கள் தலைவனுக்கு, தலைவியை தானம் பண்ணிக் கொடுக்கிறோம் என்ற வாசகத்துடன் கை பிடித்துக் கொடுப்பார்கள். கை பிடித்துக் கொடுத்ததும் வாசலில் கட்டியிருக்கும் பசுக்கன்றுக்கு திருநீறு பூசி பொட்டிட்டு அவிழ்த்து விடுவார்கள்.

வன்னிப்பிரதேச மக்களிடையே திருமணத்தின் பின்னால் கணவன் மனைவி பிரிந்து வாழ்வது மிக அரிதாகவே காணப்படுகிறது. ஒரு சமயம் அப்படிப் பிரிந்து வாழ நேர்ந்தாலும் விவாகரத்து பெறமாட்டார்கள். வீட்டையும் விட்டு வெளியே போய் வாழ முற்படமாட்டார்கள். கணவன் மனைவி ஒருவரோடொருவர் பேசாது விடினும் மனைவி சமைத்து வைப்பதை கணவன் தானாகவே சாப்பிட்டுவிட்டு தனது வேலைகளைக் கவனிப்பார். வீட்டுத் தேவைகளை கணவன் பார்த்துக் கொள்வார். கதை பேச்சு மட்டும் இருவருக்குமிடையே இருக்காது. சில வேளைகளில் இறக்கும் வரை இப்படி இருப்பார்கள். யாராவது இருவரில் ஒருவர் இறக்க நேர்ந்தால் உரிய முறைப்படி கடமைகள் செய்வார்கள். வன்னி மக்கள் கோபத்தை இலகுவில் மறக்க மாட்டாதவர்கள். ஆனாலும் பிரிந்து வாழ்வது இழிவென நினைப்பவர்கள். வன்னியில் அன்னிய ஆதிக்கம் உண்டான பிற்பட்ட காலத்திலேயே இப்படியான பிரிவுகளும் இடம் பெற்று இருக்கின்றன. ஆனால் தற்போதும் பூர்வீக வன்னிக் குடும்பங்களில் இது மிகவும் குறைவாகவே காணப்படுகிறது.

தமது உறவினர்களுடன் குடும்பத் தகராறு ஏற்பட்டு பகை வரும் சந்தர்ப்பங்களில் வருடம் முழுவதும் கதைக்க மாட்டார்கள். தமிழ் புதுவருடம் முடிந்த பின்னால் பகை வீடாக இருந்தாலும் பரஸ்பரம் வீடுகளுக்கு போய் வருவார்கள். இதனால் இரு பக்கமும் பகை மறந்து மீண்டும் உறவுகள் தொடரும். இப்பகுதிகளில் ஒரு வீட்டில் இருக்கும் பெண் ருதுவாகி விட்டால் உறவினர் எல்லோருக்கும் தெரிவிக்கப்படும். உறவினர்கள் சீனட்டி நெல்லும், எள்ளும் பிற தானியங்களுடன் சென்று பெண்ணுக்கு புத்திமதி கூறி ஏகுவர், வன்னி மக்கள் தாம் வாழ்ந்த கிராமத்தின் மீதும், மண்ணின் மீதும் ஆளமான பற்றும் தம் கலாச்சாரத்தை நேசிப்பவர்களாகவும், தம் சமுதாயத்தை கட்டுக்கோப்பாக வைத்திருப்பதில் முனைப்பானவர்களாகவும் திகழ்ந்தனர். இவற்றை உற்று நோக்கும் போது வன்னிப்பிரதேசத்தின் பண்புகள் தனித்துவமானவையாக திகழ்கின்றன.

<u>உசாத்துணை நூல்கள்:</u>


1. *கைலாசபதி நினைவேடு.*
2. *Sri Lankan Tamil Society and Politics*
   *Prof. Karthigasu Sivathamby*
3. *யாழ்ப்பாண வைபவமாலை.*
4. *கொம்பறை வன்னி விழா மலர்-97.*
5. *கட்டுரை - குமாரவேலு தம்பையா,*


# என்று தீரும் எம் அவலம்?

எம்இனிய தேசத்தில் எழில் மும்மாரி பொழிய
எம் தேசிய வளங்கள் செழித்து சிந்தை மகிழ
முத்தமிழில் மூழ்கி முன்னேற்றப் பாதையதில்
முக்குடையுயர்த்தி வீரிய வரலாறு- கண்ட
எந்தயராண்ட பூமியதில் எத்தர்களாலிருள்
எய்த நிலையினை எண்ணியே பார்க்கிறேன்
எம்மண்ணிற்கு இன்னும் விடிவில்லை
என்று தீரும் எம் அவலம்.........

ஆண்ட இனம் அவனியெங்கும் அகதி
சொந்த மண்ணில் சொந்தங்கள் புதைகுளியில்
பொன் விளையும் பூமியெல்லாம் மனிதப் பிணங்கள்
மண்ணில் வீடுகட்டி அளைந்தொழுகிய எம் தேசம்
வெடிகுண்டு விதைப்பில் சின்னா பின்னமாக்கப்பட
இரக்கமில்லா இராணுவத்தாரின் ஈனச்செயலால்
ஈழத்திரு நாடெங்கும் இரத்த வெள்ளம்
என்று தீரும் எம் அவலம்........

பூத்துக்குலுங்கிய பச்சை வயல் வெளிகளெல்லாம்
விழுகின்ற ஷெல் இடிகளால் பற்றி எரிகின்றது
தென்றல் காற்று வீச வசந்தம் வருடிய தேசம்- இன்று
புயல் காற்று வீச பிண வாடை வீசுகின்றதே
பேரின வாத பெரும் போர் தேசத்தை இருட்டாக்க
பேய்கள் உறங்குதே! வாழும் வீடெங்கும்
காடுகள் நோக்கி வழியின்றி எம் மக்கள்
என்று தீரும் எம் அவலம்........

நீதி தேவன் கண்பொத்தி வாய்பொத்தி நிற்க
அப்பாவிகள் அடைக்கப்பட்ட சிறைச்சாலைகளின் உள்ளே
உடல் ஓடைகளில் இரத்த வெள்ளம்
பெருக்கெடுத்துப்பாய்கிறது
கட்டிவைத்து கண் தலை எடுக்கின்றார்கள்
நீதி கேட்டு ஊன் இன்றி இருந்தோரையும்
புத்தனின் தர்ம சக்கரங்கள் புரட்டுகின்றன!
உலகத்தின் மனு நீதியும் அழிந்துவிட்டது
என்று தீரும் எம் அவலம்........

வரலாறு கண்ட வன்னி மண்ணில்- இன்று
வானமே கூரையாக வழியோரம் விழி நீர் சோர
வற்றிய வயிற்றுடன் எலும்பு போர்த்த கூடுகளாய்
நாதியற்று நாவறண்டு நாளும் சாகும் அவலங்கள்
நாளைய விடியலை எழுத நீளும் கதிர்களாய்
நஞ்சு மாலைக் குப்பிகளை கழுத்தில் அணிந்து
விடுதலை வேள்வியில் ஆகுதியாகும் வேங்கைகளின் சாவு
என்று தீரும் எம் அவலம்.......

- வனிதா இராஜேந்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MAX Automotive





நவீன உபகரணங்களைப் பாவித்து கொம்பியூட்டர் உதவியுடன்
சகல வேலைகளும் உரிய முறையில் செய்து தரப்படும்.

**COMPUTERIZED SERVICES WITH MODERN EQUIPMENTS**

☞ 24 மணிநேர ரோவிங் வசதி உண்டு. ☞ **24 Hours Towing Available**

- AUTO REPAIRS
- BODY WORK
- PAINTING
- TOWING SERVICES
- COMPLETE EXHAUST & MUFFLER
- CAR INTERIOR & EXTERIOR SHAPOOING

ஒரே இடத்தில் சகலவிதமான வாகனத்திருத்த வேலைகளுக்கும், பராமரிப்பு
வேலைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்

**சிவா - Siva**
**185 Midwest Road, Scarborough, Ontario, M1P 3A6.**

Tel: (416) 285-8425
Pager: (416) 812-3360
Fax: (416) 285-0749

# All Insurance & Financial Services

- Life Insurance
- Auto Insurance
- RRSP'S
- Business
- Children's Education Fund Plans



# *Logan Kanapathi*

**1231 Ellesmere Road Unit 203**
Scarborough, Ontario
M1P 2X8
Tel: (416) 288-14176

**100 Conslium Place Suite 100**
Scarborough, Ontario
Tel: (416) 296-1040
Pager: (416) 339-4329

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் கண்ட வன்னிச்சி

- இரா தணி

பௌர்ணமி நிலவு கீழ்வானத்தில் இருந்து மேலாக எழுந்து கொண்டிருக்க வன்னியின் பனங்காமம் நிலப்பரப்பு போர்க்கோலம் பூண்டு நின்றது. விடிந்தால் இரத்தக் களரி ஓடப் போவதற்கு அறிகுறியாக காட்டின் நடுப்பகுதியில் இருந்து கோட்டான்கள் பயங்கரக் கத்தல் கத்திக்கொண்டிருந்தன.

போர்வீரர்கள் தங்கியுள்ள கூடாரங்கள் ஒவ்வொன்றையும் மிக அவதானமாகவும் நுட்பமாகவும் ஆராய்ந்த வண்ணம் வெளியே வந்த தளபதி சுந்தர வன்னியன் மனநிறைவுடன் ஆகாயத்தை அண்ணாந்து நோக்கினான் மனதில் ஒரு நிறைவு. நிலவில் ஒரு முகம் அவனின் கண்களில் பட்டதுபோல் இருந்தது. மீண்டும் நிலவை நோக்கினான்.

பனங்காமத்து இளவரசி கோதை நாச்சியாரின் மலர்ந்த முகம் பௌர்ணமி முழு நிலவில் சுந்தர வன்னியனுக்குத் தெரிந்தது. வீர உணர்வு பொருந்திய கோதை நாச்சியாரின் காதல் கொளிக்கும் காந்தருபக்கண்களும், அவளின் மோகனப புன்னகையும், மிடுக்கான நடையும் மன எண்ணத்தில் ஓடி அவனைக் களிப்புற வைத்தன. இடையில் தொங்கிய பட்ட வாளைத் தொட்டுப்பார்த்தவன் இப்போதே வெள்ளைக் காரன் பாசறைக்குள் புகுந்து எதிரிகளை வெட்டிச்சாய்க்க வேண்டும் போல்த் துடித்துக் கொண்டிருந்தான். எதற்கும் காலை இருட்டோடு தன்படையை நடத்த முன் கோதை நாச்சியாரைப் பார்த்துவிட அவனின் மனம் துடித்தது.

இதே மனநிலைதான் கோதை நாச்சியாருக்கும். விடிந்தால் பனங்காமத்தில் போர்ப்புயல் கிளம்பப்போகிறது. வன்னி மண்ணின் தலைவிதியை நிர்ணயிக்க வேண்டிய சூழ்நிலைக்கு பனங்காமம் தள்ளப்பட்டு விட்டது. ஒட்டுசுட்டான் பகுதியில் பயங்கர யுத்தம் நடந்து கொண்டிருக்கின்றது. பண்டார வன்னியன் பல வழிகளிலும் வெள்ளையர் படையைக் கதிகலங்க வெட்டிச் சாயத்துக் கொண்டிருந்தான். வடக்கே இருந்து வந்த வெள்ளையர் படையைச் சுற்றி வளைத்துத் தாக்கிக்கொண்டிருந்தான்.

இதே நேரம் றொபேட் என்ற வெள்ளையன் தலைமையில் வந்த ஒரு பிரிவுப்படை பனங்காமம் சிற்றரசை நோக்கி நகர்த்தப்படுவதாகப் பனங்காமத்து இளவரசியும் பண்டார வன்னியனின் சகோதரியுமான கோதை நாச்சியாருக்குச் செய்தி எட்டியது. உடனே போருக்கான ஆயத்தங்கள் பனங்காமத்தில் செய்யப்பட்டது.

வெண்புரவியில் இருந்து பாய்ந்து இறங்கினாள் இளவரசி கோதை நாச்சியார். மறைவிடத்தை விட்டு வெளியே வந்த சுந்தர வன்னியன் கோதை நாச்சியாரை நோக்கி விரைவாக நடந்தான். சுந்தர வன்னியனைக் கண்ட கோதைநாச்சி "ஏது தளபதியார் கண்ணும் கருத்துமாக இருக்குமாப்போல இருக்கே" என்றாள் புன்னகையுடன். இளவரசியின் பேச்சு சுந்தர வன்னியனுக்குப் பிடித்து விட்டது. மரியாதையாக "நான் என் கடமையைச் செய்கின்றேன்" எமது வன்னிமண்ணின் வீரத்தை உணராமல் கால் பதித்துள்ளான் வெள்ளையன். ஏகப்பட்ட இலங்கையின் சிற்றரசுகள் எல்லாம் தமக்குப் பணிந்து விட்டதாம். வன்னி மட்டும் பணிய வில்லையாம்". "வன்னியைப் பணியவைக்கவெனக் கங்கணம் கட்டி வந்து இருக்கிறான் கப்டன் றொபேட். இவன் இந்தியாவில் வெள்ளையருக்கு அடிபணிய மறுத்த பாளையக்காரருக்கு எதிராகப் படை நடத்தி அடிபணிய வைத்தவன், தந்திரசாலி" என்றான் சுந்தர வன்னியன் யோசனையுடன்.

சுந்தர வன்னியனின் பேச்சைக் கேட்ட கோதை நாச்சி முத்துக்கள் கொட்டியது போல் கல கல வெனச் சிரித்தாள். தொடர்ந்த கோதைநாச்சியின் சிரிப்பு காடே அதிரும்படி அட்டகாச மான சிரிப்பாக மாறியது. "சுந்தர வன்னியரே" என்றாள் கடுமையாக அவளின் முகபாவ மாற்றத்தை உணர்ந்த சுந்தர வன்னியன் பயந்தே போனான். அவனை விலத்திக் கொண்டு ஒவ்வொரு பாசறையாக வந்தவள் திடீரென நின்றாள். தன் பின்னால் வந்த சுந்தர வன்னியனை நோக்கி, "புதிதாக ஆறுபேர் எமது படையில் இணைந்தவர்கள் இங்கேதானே இருக்கிறார்கள்" என்றாள். ஆம் என்று சொன்ன சுந்தர வனனியன் ஏதும் புரியாமல் விழித்தான்.

திடீரெனக் கூடாரத்திற்குள் புகுந்த இளவரசி கோதை நாச்சி அங்கே உட்கார்ந்து கதைத்துக் கொண்டிருந்த ஆறு இளைஞர்களை நோக்கினாள். ஆறு இளைஞர்களும் திடுக்கிட்டு எழுந்து நிற்க, அடேய் ஓநாய்களே வன்னி மண்ணில் பிறந்து அந்நியனுக்குத் துணைபோகும் துரோகிகளே உங்களை மன்னிக்க முடியாது உண்மையைச் சொல்லாவிட்டால் உங்கள் தலைகள் இந்த பாலை மரத்தில்த்தான் தொங்கும்" என்றாள் கண்களில் கோபக்கனல் தெறிக்க.

ஆறு இளைஞர்களும் செய்வதறியாது விக்கித்து நிற்க, திடீரென வந்த சில வீரப்பெண்கள் அறுவரையும் பின்னால் கட்டிப்போட்டார்கள். புன்னகையுடன் திரும்பிய கோதை நாச்சி தளபதியை நோக்கி "இப்பொழுதே நம்படை றொபேட்டின் கூடாரத்தை நோக்கி நகரட்டும் நானும் உடன் வருகின்றேன் அவனின் திட்டத்தை நாம் முறியடிக்க வேண்டும்" என்றாள் அமைதியாக.

விபரம் புரியாமல் விழித்த தளபதியை வெளியே கூட்டி வந்த இளவரசி இந்த ஆறுபேரும் காக்கை வன்னியனின் ஆட்கள். ஒற்றர்கள் மூலம் விபரத்தை அறிந்தேன். கடைசி நேரத்தில் வெள்ளையரின் திட்டத்தை அறிய முடிந்தது. விடி வெள்ளி வரும் வேளை றொபேட் எமது பனங்காமத்தைச் சுற்றி வளைத்துத் தாக்கத்திட்டமிட்டுள்ளான். ஆனால் அதற்கு முன் எமது படை அவனின் பாசறையைச் சுற்றி வளைத்து அதிரடித் தாக்குதல் நடத்தி முறியடிக்க வேண்டும். முடியுமானால் சிறைபிடித்து அவர்களை பண்டார வன்னியர் முன் நிறுத்த வேண்டும்" என்றாள் ஆவேசமாக.

இதைக்கேட்ட தளபதி சுந்தரவன்னியன் படை நடாத்த உசாரானான். போக எத்தனித்த தளபதியைக் கையால் மறித்த இளவரசி கோதை நாச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தளபதியாரே நீங்கள் என்மீது கொண்டிருக்கும் காதல் எனக்குப் புரியாததல்ல, ஆனால் நான் வன்னி மீது கொண்டுள்ள பற்றை நீங்கள் உணரவேண்டும். வெற்றி நிச்சயமானால் உங்கள் காதல் ஈடேறும்". என்றவள் படை நகரட்டும் என்றாள்.

வீர மங்கை கோதை நாச்சியின் நாட்டுப்பற்றும், வீர உணர்வும் சுந்தர வன்னியனை மெய்சிலிர்க்க வைத்தது. படைக்குத்தலைமை தாங்கி அவள் போகும் அழகுதான் என்னே எதிரிப்படையைச் சின்னா பின்னமாக்கும் வீர உணர்வுடன் முன்னணியில் சென்று கொண்டிருந்தாள் களம் கண்ட வன்னி நாச்சி.

அதிகாலை றொபேட்டின் கூடாரம் இரத்த வெள்ளத்தில் மிதந்தது. வன்னி வீரர்கள் வெற்றிக் களிப்பில் இளவரசி கோதை நாச்சியை வாழ்த்தினார்கள். ஒரு வெள்ளையனைக்கூட உயிரோடு விட்டு வைக்கவில்லை வன்னியின் வீரம். களம் கண்டாள் கோதை நாச்சி. வெற்றிக்களிப்போடு பனங்காமம் திரும்பினாள்.

# முகம் மாறிய என் அழகிய கிராமம்

எங்கள் கிராமத்தின்
எழிலுறும் காட்சிகள்
மனக்கண் முன் விரிகிறது என்
மனதில் நறுமணத்தை கமழ்கிறது
இன்று நடை பயிலுகிறேன்
நான் பிறந்த கிராமத்திலே

நெஞ்சோ வலி எடுக்கிறது
பாதங்களோ பட படக்கிறது
முகம் மாறிப்போயிருக்கும்
என் கிராமமதில் கால் பதித்து
நிற்கின்றேன்

அன்று பாடிப் பறந்து திரிந்து-ஒலி
எழுப்பிய பறவைகள் ஒன்றையும் காணோம்
வெடிகுண்டு பயத்தினால்
எம் இனத்தவர் போல்
இடம் பெயர்ந்து போயினவோ

அன்று செழித்து வானோங்க வளர்ந்து
நின்ற மரங்கள் ஒன்றையும் காணோம்
பட்ட மரங்களாய் நீட்டி நிமிர்ந்து
நிற்கின்றன விறகுக்குக் கூட பயனற்றவையாய்

அன்று மருதங்குளத்துள்
நீச்சலடிக்கும்போது நான் தொலைத்த
அறுணாங்கயிறு இன்று நான்
முக்குளித்தால் கிடைக்குமோ கிடைக்காதோ

இப்போது எந்தன் சுவாசப்பையில்
நிறைந்திருப்பது வெடிகுண்டுப புகை கலந்த
அடர்த்தியான காற்றோ அல்லது
இறந்த உடல்களின் துர்நாற்றம்
கலந்த புதிய காற்றோ
இங்கே கேள்விக் குறிபோல்
வளைந்து நின்று விறகு முறிக்கும்
மூதாட்டிகள் யார் நான் சிறுவயதில்
கூடி விளையாடிய பெண்களோ அல்லது
முப்பது வயதில் முதுமைக்கு வந்தவர்களோ

அன்று நான் கிட்டிப் புள்ளு
விளையாடிய வீதிகள் இன்று
இருக்கின்றனவோ இல்லையோ
முள்கம்பி வேலிகளோ அல்லது
இராணுவத்தின் காவலரண்களோ

வில்வையடி வினாயகர் கோயிலை
விரிவாக்க பாடுபட வினாயக மூர்த்தியண்ணை
சமூகத்தொண்டை சலிக்காமல்
செய்துவந்த மங்களம்
அரோஹரா என்றவாறு சைக்கிளில் கிராமத்தை
வலம் வரும் அன்பான ஆறுமுகத்தப்பா
ஒட்டைச்சிவிங்கியை ஒரு முறை
நினைவுபடுத்தும் ஒட்டிய உடல்வாகு
உள்ளமோ தீம்பாகு கிருபை இவர்கள் இன்று
இருக்கிறார்களே இல்லையோ?

ஏக்கமே பெருமூச்சாய் என்னுள் எழுகிறது
ஓ..இங்கு குரைப்பதற்குக் கூட
நாய்கள் இல்லை அவை இராணுவ
முகாம்களில் பிணம் தின்பதற்காய்
காத்து கிடக்கின்றனவோ அல்லது
பிணம் தின்னும் அவதியில் குரைப்பதற்கு
மறந்துவிட்டனவோ
நான் நிற்பது சந்திரனிலோ செவ்வாயிலோ
ஆனாலும்
நம்பிக்கையுடன் தேடுகிறேன்
என் இனிய கிராமத்தை.

**- கணபதிப்பிள்ளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Nano Micro computers Inc

## SALES - SERVICE - UPGRADES - REPAIRS

பல வருடம் கொம்பியூட்டர் துறையில் அனுபவம் மிக்க பட்டதாரிகளால் நடாத்தப்படும் நிறுவனம்

- COMPUTERS
- FAX MODEMS
- MEMORY
- PRINTERS
- MONITORS
- HARD DRIVES
- NOTE BOOKS

எம்மிடம் கொம்பியூட்டர் வாங்குபவர்களுக்கு இலவச கொம்பியூட்டர் வகுப்புகள் நடாத்தப்படும்.

**BEST PRICE – BEST QUALITY**
**FINANCING**
**PROGRAMMERS AVAILABLE**
**COMPUTER UPGRADE & REPAIR**



**55 Nugget Avenue # 230, Scarborough, Ontario**
**Tel: (416) 332-1022 Fax: (416) 332-1024**

# BARRISTER & SOLICITOR



- குற்றவியல் வழக்குகள்
- அகதி நிலை விசாரணைகள்
- மனிதாபிமான விண்ணப்பங்கள்
- வீடு, வியாபார ஸ்தாபனங்கள் வாங்குதல்-விற்றல்
- குடும்ப வழக்குகள்
- வாகன விபத்து நஸ்டஈடு கோருதல்



**P. KAYILASANATHAN**
**B. A (CEY) LLB (CEY)**

**பொ. கயிலாசநாதன்**
கனடிய பாரிஸ்டர்
**2401 Eglinton Avenue East Suite 302, Scarborough, Ontario, M1R 2M5.**

**Tel: (416) 752-9561**
**Fax: (416) 752-7262**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்வாசனை

- Dr. V. J. Figurado MD, CCFP

இலங்கையின் வடமேல் கரையில், இந்தியாவின் தென்கோடி தூத்துக்குடியிலிருந்து ஏறத்தாழ 18 மைல் தொலைவில் உள்ளது மன்னார்த்தீவு. இது கோட்டை மன்னாரிலிருந்து தலைமன்னார் வரையிலான 20 மைல்கள் நீளத்தையும் ஏறத்தாழ 4 மைல் அகலத்தையும் கொண்டது. மன்னார் மாவட்டம் இத்தீவினையும் அதனை அடுத்த பெருநிலப்பரப்பையும் தன்னகத்தே கொண்டுள்ள பிரதேசமாகும். இது வடக்கே முழங்காவிலை அடுத்துள்ள வேலன் பிட்டிவரையும் கிழக்கே பறையனாலங்குளம் வரைக்கும் தெற்கே சிலாவத்துறை வலைக்குமுள்ள நிலப்பரப்பகும். முல்லைத்தீவு, வவுனியா, மதவாச்சி, ஆனைமடு ஆகிய மாவட்டங்களை எல்லைகளாகக் கொண்டுள்ளது.

நான் சிறுவனாக இருந்தபோது எனது தந்தை சுங்கத்திணைக்களத்தில் வேலைசெய்ததால் நாங்கள் கடற்கரையை அண்டிய அரசமனையில் தங்கியிருந்தோம். உருண்டு திரண்டு விழுந்து எழுந்து வெண் நுரைதனை பேரொலியுடன், விரிந்து பரந்து காணப்படும் வெண்மணற் பரப்பின் கரையோரத்தில் சேர்க்கின்ற நித்திலம் குரைத்திடும் கடலோசை ஆர்ப்பரிக்க வெண்ணிலவின் ஒளியினிலே மிளிர்கின்ற மணற்பரப்பில் அமர்ந்திருந்து, இராமேஸ்வரத்தின் கரையிலிருந்து புறப்பட்டு தூரத்தே வெண்பொட்டாகத் தோன்றிப் பின்னர் மின் விளக்குகளோடு அலங்காரப்பவனி வருகின்ற கப்பலின் காட்சியின் அழகே தனி. திட்டுத்திட்டாக எல்லையின்றி வியாபித்திருக்கும் மணற்குன்றுகள் மீது உருண்டு புரண்டு விளையாடிய நாட்கள் எத்தனை எத்தனை.

பேசாலைக்கிராமம் மீன்பிடிக்குப்பெயர் போனது. அங்கு 1967இல் மீன் தகரத்தில் அடைக்கும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டது. நிலக்கீழ் எண்ணெய் கண்டு பிடிப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்வதற்கான குடி இருப்புக்கள் நிறுவப்பட்டு சோவியத் நாட்டு ஆய்வளர்கள் தங்கவைக்கப்பட்டனர். இம்முயற்சி பயன் தருவதைவிட செலவே மேலானதாகக் காணப்படும் என்பதனால் இத்திட்டம் இடை நடுவே கைவிடப்பட்டது.

பேசாலையை அண்டி அமைந்துள்ள இடம் ஐந்தாம் கட்டை என அழைக்கப்படும் இடமாகும். சங்கிலி மன்னனின் காலத்தில் கத்தோலிக்க மதத்தைத் தழுவிய இக்கிராமத்தவர்கள் துரோகிகளாகக் கருதப்பட்டு மகாபாரதத்தில் கண்ணனின் கீதை உபதேசம் கேட்டு தன் கடமையைச் செய்யவேண்டும் என்னும் நோக்கத்தைக் தலையாகக் கொண்டு தன் சகோதரர்கள் உறவினர்களை எல்லாம் கொன்று வீழ்த்திய அர்ச்சுனன் போன்று இந்து மதத்தைப்பாதுகாப்பது தன் கடமையெனத் துணிந்து தன்குடிமக்களை எல்லாம் கொலை செய்து புதைத்த இடத்தில் பின்னர் அவர்களின் நினைவாக நிறுவப்பட்டதே இங்கு அமைந்துள்ள தேவ சாட்சிகள் ஆலயமாகும்.

ஒல்லாந்தர் தமது பாதுகாப்புக்காக நிறுவப்பட்ட கோட்டை இங்கு உள்ள காரணத்தால் 'கோட்டை மன்னார்' எனவும் அழைக்கப்படுகின்றது. மன்னார் நகருக்குள் பிரவேசித்தால் அரசினர் வைத்தியசாலை, அரச பணிமனைகள் போன்ற பொதுச்சேவை நிலையங்களைக் கொண்ட மையமாக விளங்குகின்றது. இதன் அருகே கடற்கரையோரமாக உள்ள பள்ளிமுனைக் கிராமத்தில் அமைந்துள்ளதே புனித லூசியா தேவாலயமாகும். இது 1946ல் நிறுவப்பட்டது. இது மிகப்பிரமாண்டமானதாகவும் உட்புறத்தே தூண்கள் எதுவும் இன்றியும் அழகிய சித்திர வேலைப்பாடுகளோடு கூடியதாகவும் இலங்கையிலேயே மிகவும் பருமனான பெருக்க மரத்தைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது.

தென்னை. மரமுந்திரிகை (கஜு") பனை போன்றவையே இங்கு முக்கிய பயிர்களாகக் காணப்படுகின்றன. மன்னார்த்தீவு 'தள்ளாடி' என்னும் இடத்தில் பாலமொன்றினால் இணைக்கப்பட்டுள்ளது. இங்கு முன்னர் நிறுவப்பட்டிருந்த இராணவ முகாம் பெரிதாக விஸ்த்தரிக்கப்பட்டதன் காரணமாக இங்கு காணப்பட்ட அந்தோனியார் தேவாலயமும் இராணுவ முகாமுக்குள் முடக்கப்பட்டு விட்டதால் அங்கு செவ்வாய்க்கிழமை தோறும் சென்று வந்த பெருந்திரளான பக்தர் வெள்ளத்திற்கும் அணைபோடப்பட்டு அதன் பூரிப்பையும் பொலிவையும் இழந்து காட்சி தருகின்றது.

தள்ளாடியின் வடக்கே 2 மைல் தொலைவில் பாலாவி என்றழைக்கப்படும் புராதன கீர்த்தியும் பெருமையும் கொண்ட இந்துக்களின் புனித யாத்திரைத்தலமான 'திருக்கேதீஸ்வரம்' என்றழைக்கப்படும் இந்து சமயக் குரவர்களினால் பாடல் பெற்ற சிவன் ஆலயம் அமைந்துள்ளது. சிவராத்திரி தோறும் விழாக்கோலம் பூண்டு ஒளி பரப்பும் இப்புராதன ஆலயம் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக தனது சோபையை இழந்து அமைதியாகத் தூங்கிக் கொண்டு இருக்கின்றது. 'மாந்தை' என அழைக்கப்படும் இதனை அடுத்துள்ள கிராமத்தில் சங்கிலிய மன்னனுக்கு அஞ்சி மறைவிடம் பார்த்துவைத்து வணங்கப்பட்ட 'லூர்த்துமாதா' ஆலயம் அமைந்துள்ளது. இங்கிருந்து வடக்கே காணப்படும் பாலி ஆற்றங்கரையில் அமைவுற்றுள்ள கிராமகங்களே விடத்தல் தீவு, இலுப்பைக்கடவை என்பன. இவை கடல்வளம் மண்வளம் நீர்வளம் நிறைந்த பிரதேசங்களாகும். முப்போககங்களும் நெற் பயிற் செய்கை மேற்கொள்ளப்படும் செழிப்பும் வனப்பும் கொண்ட கிராமங்களாகக் காட்சி தருகின்றன.

திருக்கேதீச்சரத்திலிருந்து கிழக்கே 5மைல் தொலைவில் உள்ளது தான் என்னை மிகவும் கவர்ந்த 'அடம்பன்' கிராமமாகும். அதிகாலை வேளை துயில் எழுப்பும் காட்டுக்கோழிகளின் கத்தும் ஒலியும், குயில்களின் இன்னிசை நாதமும், குருவிகளின் கீச்சொலியும், மயில்களின் அகவலொலியும், தேனுண்ணும் வண்டுகளின் ரீங்காரமும், பச்சைப் பசேலென இளந்தென்றற்காற்றில் அசைந்தாடுகின்ற நெற்பயிர்களின் அழகும் அதன் கலகலப்பொலியும் உள்ளத்தைத் தொட்டு நிற்கும் நீங்காத நினைவலைகளாக இன்றும் பசுமை மாறாத காட்சிகளாக என் மனக்கண்முன்னே காட்சி தருகின்றன. குளக்கரையில் கிளைபரப்பி நிற்கும் அடப்ப மரத்தில் ஏறி குளத்தில் குதித்து நீராடிய நாட்கள்தான் எத்துணை இனிமையானவை. ஆலமரத்தின் கீழ் அமர்ந்து 'சலசல' வென்று ஓடுகின்ற அணைநீரிலே இடையிடையே 'கிறுக்' 'கிறுக்' கென்று துள்ளி எழுகின்ற மீன் இனங்களின் ஓசையும் கண்ணைப் பறிக்கின்ற காட்சியும் அம்மரத்தின் மேலிருந்து பறவைகள் எழுப்புகின்ற இனிய ஒலியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்க இதயத்திலிருந்து எத்தனை கவிதைகள்தான் பிறந்து வரும்.

மன்னாரின் கீழ்ப்பாகத்தில் யானைகளும், சிறுத்தைகளும், மான்களும், மரைகளும் வாழுகின்ற காட்டுப்பகுதியின் நடுவண் அமைந்து உள்ளதே ஈழத்தில் பிரசித்தி பெற்ற மடுமாதா ஆலயமாகும் இன மத பேதமின்றி பல்லாயிரக் கணக்கான மக்களால் விழா எடுத்துக் கொண்டாடப்பட்டு வந்த மடுமாதா ஆலயம் இன்று அகதிகளாக வந்துள்ள ஆயிரக் கணக்கான தமிழ் மக்களுக்க அடைக்கல நிலையமாக விளங்குகிறது.

தள்ளாடியில் இருந்து தென்பகுதிக்குப் போகும்போது கடல் வளமும் நிலவளமும் கொண்ட வங்காலைக் கிராமமும் அதைத் தொடர்ந்து அருவியாற்றின் மறுகரையில் அரிப்பு, சிலாபத்துறை போன்ற கிராமங்கள் காணப்படுகின்றன. அரிப்பு மிகவும் புராதன கிராமமாகும் இங்கு 'அல்லிராணிக் கோட்டை' என அழைக்கப்படும் ஒரு சிறிய கோட்டை இடிந்த நிலையில் இன்றும் காட்சிதருகின்றது. அல்லி ராணி என்ற அரசி இக்கோட்டையில் இருந்து ஆட்சி செய்ததாக கதைகள் வாயிலாக அறியக்கிடக்கின்றது. முத்துக்குளிக்கும் துறைமுகப் பட்டினமாக விளங்கியதே சிலாபத்துறை. இதனால் இதனை முத்துச்சிலாபம் என்றே அழைத்து வந்தனர். இதனையண்டிய கடலின் நடுவே 'குதிரைமலை' என்றழைக்கப்படுகின்ற சிறிய வெண்மணற் தீவொன்று கடல் நீர் மட்டத்தின் கீழேயமைந்து உள்ளது. கடலலைகள் ஓய்ந்த பெருக்கற்ற(Tidal wave) நேரங்களில் மட்டுமே வெளியே இத்தீவு காட்சி தரும். இது வெண்ணிலவின் ஒளியினிலே வெண்ணிறப்பளிங்கு போன்று ஒளிர்வதாகக் கூறுகின்றார்கள்.

இலங்கையில் மிக வரண்ட பிரதேசமாகக் காணப்பட்டாலும் 'இராட்சதகுளம்' அல்லது 'கட்டுக்கரைக்குளம்'' எனப்படும் இப்பிரதேசத்தின் வளத்திற்கு மெருகூட்டுவதோடு பல்வேறு சிறு, சிறு நீர்ப்பாசனக்குளங்கள், அக்குளங்களின் பெயர்களோடு அமைந்த கிராமங்களின் செழிப்புக்குக் காரணமாக மூன்று போகப் பயிர்ச்செய்கையை மேற்கொள்ளும் வாய்ப்புக்களைத் தந்து நிற்கின்றன. ஏனினும் இன்றய "போர்" காரணமாக தங்கள் சொந்த மண்ணை விட்டு அகதிகளாக வாழ்வதோடு பார்க்குமிடமெங்கும் மண்மூடைகள், பதுங்கு குளிகள் நிறைந்த தரிசு நிலங்களாகக் உள்ள காட்சி நெஞ்சை ரணமாக்கி மனக்கண்ணில் இருந்து இரத்தம் வடிந்தோட வைக்கின்றது.

மன்னார் மண் படைப்பிலக்கியத்திலும் பின்நின்றதில்லை. தமிழில் பல அரிய நாட்டார் பாடல்கள், நாடகங்கள், கூத்துக்கள் உன்னத நிலையை அடைந்திருந்தது. 'மாதோட்ட மரபு' என்ற தனித்துவமான இராக நடையில் பல கூத்துப் படைப்புக்கள் மண்ணின் மைந்தர்களான புலவர்களினால் இயற்றப்பட்டு மேடை ஏற்றப்பட்டன. இந்நாடகங்கள் மன்னாரில் மட்டுமன்றி இலங்கையின் பலபாகங்களிலும் மேடையேற்றப்பட்டுப் புகழ் பெற்றன. இவ்வரிய படைப்பிலங்கியங்கள் இன்று அழிந்து போகக்கூடிய ஆபத்தில் உள்ளன. எனவே எமது மண்வாசனை அழிந்து விடாது பாதுகாப்பது மன்னார் மக்களது மட்டுமன்றி வன்னிமக்களினதும் ஏன் எல்லாத்தமிழ் மக்களதும் தலையாய கடமையாகும்.

மன்னார் மண்ணின் இன்னோர் முக்கிய அம்சம் அங்கு தனியுரிமை கொண்டு வாழுகின்ற மன்னார்க் கழுதைகளாகும். இதைத் தொடாது விட்டால் இக்கட்டுரை நிட்சயமாக பூரணமானதாக அமையாது. என் இளமைப்பருவத்தில் குதிரை ஏற்றம் பயின்றதெல்லாம் இந்தச் சோம்பேறிக் கழுதைகளின் மேலேயே. இக்கட்டுரையை கழுதைக்கான ஒரு கவிதையோடு பூரணப்படுத்தலாம் என விரும்புகின்றேன்.

*''கத்தும் குரலாலென் காதைக் கிழியவைத்து*
*நித்தமு மென் நித்திரைக்கு நீவேட்டுவைத்து விட்டு*
*புத்தம் புது மேனிதன்னைப் புழுதியிலே புரட்டி விட்டுத்*
*தந்தோமென்றதாளத்தோடு தாவியோடும் கழுதை தான் நீ''*

## வீர மன்னன் பண்டாரவன்னியன்....

பொங்கும் தமிழ் பூத்த பெரு
பொழில் சூழ் வன்னி நாட்டில்
தக்க தொரு வீரமண்ணின்-தனித்த
தலைவன் பண்டாரவன்னியன்.

ஆனை கட்டிப் போரடித்து
ஆண்டாண்டு காலம் வாழ வென
விளைச்சலுடன் வீரமும் ஊட்டி-அங்கே
வித்திட்ட வீரனே நீ சாகவில்லை

நினைவு தனிலும் நித்திரையிலும்
நீ சிம்ம சொற்பனமாக விருந்தும்
விரட்டி யடித்த வெள்ளையனே-உன்
வீரத்தை மெச்சி முத்திரை பதித்தான்.

களனிகள் மட்டும் காணவில்லை
களம் கண்டோடிய எதிரிகள்
உன்னை வீழ்த்த திட்டம் - தீட்டியே
உறவாடினர் காக்கை வன்னியோடு

எட்டப்பர் கூட்டம் அன்று மட்டுமல்ல
எம்மினத்தோடு ஒன்றிவிட்ட தொன்று
முளையோடு கிள்ளி எறிய - யார்
முனைந்தும் முடியவில்லை சாபக்கேடு.

படை பல நடத்தி வீரம் கண்டு
பக்தருள்ளம் குளிர கோயில் குளம் கட்டி
வீர நங்கை குருவிச்சி நாச்சியின் - மலர்
விழிகளுக்கு விருந்தாகிய வீரனே.

இறுதி வரை தமிழும் மண்ணும்
இரு விழி யெனக் கொண்டு முல்லை
கோட்டையை வென்றெடுத்து - எம்
மான மதைக் காத்த வன்னி மன்னா

சுதந்திரமே தாகமென வாழ்ந்த உன்னுடல்
சுடலையில் எரிந்து சாம்பரே யானாலும்
மக்கள் மனதிலும் கள மெதிலுமே - நீ
மீண்டுமுயிர்த் தெழுந்து நிற்கின்றாய்.

கீதா புஸ்பாகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# BALA SELVAM

**AUTHORIZED EXPRESS MONEY TRANSFER**

**Since 1987**




**துரித பணமாற்றுச் சேவையில் நீண்ட காலம் மக்கள் நன்மதிப்பைப் பெற்றவர்கள்.**

- கோலாலம்பூர்
- பாங்கொக்
- சிங்கப்பூர்
- இலங்கையில்,
  கொழும்பு, வவுனியா, மன்னார், மற்றும் யாழ்ப்பாணம்
- இந்தியாவில்
  தமிழ்நாடு (சென்னை)
- மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும்

**மிகவும் துரிதமாக பணமாற்றம் செய்து கொடுக்கப்படும்.**

**3 Lord Roberts Drive**
**Scarborough, Ontario**
**M1K 3W1.**

**☎ Tel: (416) 264 4000**
**(416) 265 0055**
**Fax: (416) 264 5596**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் மயக்கும்!

புதுவெள்ளம் பாய்ந்துவரப்
புரண்டுவரும் மீனினங்கள்
எதிர்செல்ல மீனடிக்கும்
இளைஞர்களின் மகிழ்ச்சிபொங்கும்

பனிக்காலம் வாய்க்காலில்
பாவைர்கள் அயிரையினைத்
தனிக்கவனத் துடன் வாரித்
தம்சேலை நிறைத்திடுவர்

குளக்கரையில் மரநிழலில்
குந்தியிருந்தே தூண்டில்
களைப்போட்டு மீன்பிடிக்கும்
காட்சிகளோ மனம்மயக்கும்

கஞ்சிக் கலையத்தைக்
கழுத்துமுக்கச் சுமந்துகொண்டு
பஞ்சியென்றால் என்னவென்றே
பார்த்தறியாப் பாவையர்கள்

நடைவரம்பில் வரப்பார்த்து
நாவினிக்க உடல்சிலிர்க்கக்
கடைவாயில தேனூறும்
காதலர்கள் பார்ப்பதனால்

வெற்றிலையால் சிவந்திட்ட
வெள்ளுதடு துடிதுடிக்கக்
கற்பனையில் மனம்லயிக்க
கண்கள் சிவந்திடுமே

கச்சைக் கட்டோடு
கலப்பையினைத் தோள்சுமக்க
அச்சமின்றி நடந்துவரும்
ஆணழகன் தோற்றமும்

களைபறிக்குங் காரிகையர்
கையசைவும் கண்ணசைவும்
விளைவறுக்கும் வீரர்களின்
விரலசைவும் வீறாப்பும்

அரிவுவெட்டி அங்கெறியும்
அழகும் அவர்பாடும்
பரிவுமிகு பாடல்களின்
பாவனையும் பாவளமும்

உப்பட்டி கூட்டி
ஒன்றாக்கி மாவக்கையாய்
அப்படியே அள்ளி
அணைக்கின்ற அழகுகளும்

மாவக்கையை அள்ளி
வயல் மூட்டில் பத்திரமாய்க்
காவிவந்து வைத்திருக்குங்
கட்டக் கந்தின் அழகுகளும்

கட்டக்கந்துகள் பிரித்துக்
கட்டி அதை ஓரிடத்தில்
சூடாக வைத்திருக்குஞ்
சுந்தரநற் காட்சிகளும்

சூடடித்துப் பொலிநிறுத்தித்
தூற்றி குவத்திருக்கும்
நெற்குவிய லின்அழகும்
நிமிர்ந்த உழவன் அழகும்

எருமைக்கடா பூட்டி
இழுத்தடிக்கும் பலகையின்மேல்
ஏறிநின்று ஓ.. கோ... கோ
எனஒலிக்கும் இசைஒலியும்

முற்றத்தில் உரல் நிறுத்தி
முழுநிலவில் நெல்குற்றுஞ்
சத்தத்தில் பிறக்கின்ற
சங்கீதப்பாட் டொலியும்
பூக்களிலே தேன்குடிக்கப்
புறப்பட்ட வண்டுகளின்
பாக்களிலே பிறக்கின்ற
பலநூறு சங்கதியும்

தினைப்புனத்துத் தேவதைகள்
தினையுண்ணும் பறவையினம்
அனைத்துமே கலைக்கின்ற
ஆலோலப் பாட்டொலியும்

வக்கடைகள் நிரம்பி
வழிந்தோடும் நீரொலியும்
கொக்கினங்கள் கூடிக்
குதூகலிக்கும் பேதொலியும்

'சில்' லென்று ஒலிக்கின்ற
சில்வண்டுகளின் ஒலியும்
பல்வேறு தேனீக்கள்
பாடுகின்ற பாட்டொலியும்

தென்றலிலே மிதந்துவரும்
தெம்மாங்குப் பாட்டொலியும்
கன்றுகட்டிப்பால் கறக்கக்
கலயத்தில் விழுமொலியும்

பச்சைப்புல் வெளிகளும்
பரந்த வயற் கழனிகளும்
இச்சைக் குகந்தநல்ல
இனிய கனிவகைகளும்

கண்முன்னால் நின்று
கவிபாடு என்றுசொல்லி
எண்ணத்தை நிறைத்து விட
எழுதிவிட்டேன் இக்கவிகள்

பேரிருட்டுப் போயொழிந்து
பொங்குமொளி பிரவகித்தால்
ஊர்மனைகள் முன்போல
உல்லாசமாய் வாழும்

-கவிஞர் அகளங்கன்--
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியின் மண்வகைகளும் அவற்றின் பயன்பாடுகளும்

நடா. இரங்கநாதன் B.A (Hons)

வன்னிப் பிரதேசத்தின் வளங்களைப்பற்றிய நுண்ணியல்புகளை ஆராயும் ஆரம்ப முயற்சியாக இக்கட்டுரை அமைந்துள்ளது. மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களின் மண்வகைகளைப் பாகுபடுத்தி அதன் விவசாயத்தேவையின் முக்கியத்துவத்தின் கனபரிமாணத்தைத் தாங்கியதாக விவசாயிகள் பயனுறவும் மேலும் வன்னிவளநாட்டின் மண்வளத்தைப் புவிச்சரிதவியலோடு தொடர்புபடுத்தி ஆய்வுகள் மேற்கொள்ளவும் இப்பணிகளை மேற்கொள்வோரின் இதயத்தைத் தொடக்கூடியதாகவும் இக்கட்டுரை தரப்படுகின்றது.

இலங்கையின் வடபுலத்தில் அமைந்துள்ள பகுதிகளில் வன்னி என்னும் தனித்துவமான நிலப்பரப்பு தனக்கே உரித்தான பல விசேடித்த பண்புகளையும், உயர் விழுமியங்களையும் கொண்டு பல ஆயிரம் வருடங்களாக இனம் காணப்பட்ட தொன்றாகக் காணப்படுகின்றது. முல்லைத்தீவு, மன்னார், வவுனியா என்னும் மூன்று நிர்வாக மாவட்டங்களும் இணைந்த வன்னி என்னும் தேர்தல் மாவட்டம்தான் வன்னிமை என்னும் சிறப்பைப் பெறுகின்றது. முல்லைத்தீவு 1966.1 சதுர கிலோ மீற்றர் பரப்பினையும், வவுனியா 2645.2 சதுர கிலோ மீற்றர் பரப்பினையும், மன்னார் 2002.1 சதுர கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டும் வடக்கே கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என்னும் நிர்வாக மாவட்டங்களையும் கிழக்கே இந்து மகா சமுத்திரத்தினையும் தெற்கே அனுரதபுர மாவட்டம், புத்தளம், திருகோணமலை என்னும் நிர்வாக மாவட்டங்களையும் மேற்கே இந்து மகா சமுத்திரததினையும் எல்லைகளாகக் கொண்டு வன்னி என்னும் பிரதேசம் வரையறை செய்யப் படுகின்றது. இப்பிரதேசமானது சனத்தொகை அடிப்படையில் முல்லைத்தீவு 77,512 பேரையும், வவுனியா 95,904 பேரையும், மன்னார் 106.940 கொண்டுள்ளது.

புவிச்சரிதவியல் அடிப்படையில் கண்ட நகர்வு ஏற்பட்ட காலத்தில் "பஞ்சியா" என்னும் பெரு நிலத்திணிவு உடைந்து நகர்த்தப்பட்ட போது தெற்காக நகர்த்தப்பட்ட கண்டத்திணிவில் இந்திய துணைக்கண்டத்தில் இருந்து பிரிந்து இந்தியாவுக்குத் தெற்காக தற்போதைய இடத்தில் நிலை கொண்டுள்ள "தப்ரபேன்" என்று அழைக்கப்பட்ட இலங்கை ஏனைய பாறைப்படைகளைப் போலவே 12 கோடி ஆண்டுகட்கு உட்பட்ட இளம் பாறைப் படைகளைக் கொண்டதாகவே காணப் படுகின்றது. வன்னியின் பாறைப் படைகளும், அவற்றில் இருந்து உருவான மண் வகைகளும் இத்தகைய இளம் பாறைகளில் இருந்து உருவாக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன.

இலங்கையின் மண்வகைகளை ஆராய்ந்த மண்ணியலாளர் 'பாணபொக்கே' என்பவர் இலங்கையின் வடபுல மண் வகைகளைச் சிறப்பானதொரு வகைக்குள் அடக்கியதுடன் வரண்ட வலயத்தில் காணப்படும் ஆறரித்த சமவெளியுடன் கூடிய வண்டல் சார் மண்தொகுதிகள் இங்கு காணப்படுவதாகக் கூறி இருப்பதுடன் இம் மண்தொகுதிகள் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதாகவும் கூறியிருக்கின்றார்.

பாணபொக்கேயின் கருத்துப்படி இலங்கையில் 14 வகையான மண்தொகுதிகள் காணப்படுவதாகவும் (soil and fertilizer use in Sri Lanka) இதில் எட்டுவகையான மண்வகைகள் வன்னிப்பகுதியில் அடையாளம் செய்யக்கூடியதாக உள்ளதாகவும் அவர் விதைந்துரைக்கின்றார். மேலும் வன்னியில் உள்ள மண்தொகுதிகளை பின்வருமாறு வகைப்படுத்தி உள்ளார்:

- செங்கபில நிற மண்
- செம்மஞ்சள் லற்றசோல்ற் மண்
- உருமாறிய சொலனேட் மண்
- றெக சோல் மண்
- கிறம் சோல்ற் மண்(கருமண்)
- குறை வடிகால் கொண்ட வண்டல் மண்
- வண்டல் மண்
- கடற்கரையில் உள்ள சிலிகேட் மண்

மண்தொகுதிகளின் வேறுபாடுகளுக்கேற்ப அவற்றின் பௌதீக, இரசாயன இயல்புகளும் வேறுபடுகின்றன. மேற்படி மண்ணின் இயல்புகட்கேற்பவே பயிர்ச் செய்கையும் கைத்தொழில் நடவடிக்கைகளும் வேறுபடுகின்றன. வன்னியின் மட்தொகுதிகள் 90% மானவையும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகட்கு உட்படும் பாங்கும் மீதி 10%மும் கைத்தொழிற் பொருளாதாரத்துடன் தொடர்பு பட்டிருப்பதனையும் அவதானிக்கலாம். மேற்படி மண்வகைகள் அவை காணப்படும் இடங்களையும் அவற்றின் தன்மைகளையும் தனித்தனி ஆய்தல் பொருத்தமான தாக அமையும்.

## செங்கபில மண்

இம்மண்வகை முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் பரந்து காணப்படுகின்றது. மன்னார் மாவட்டத்தின் கிழக்குப்பகுதியிலும் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. செங்கபில நிறமுடைய இம் மண்வகை உலர் நிலையில் கடினமானதாகவும், ஈர நிலையில் ஒட்டும் தன்மையும் கொண்டிருக்கும். இதன் குறுக்கு வெட்டு முகத்தைத் நோக்கும் போது தெளிவான படை அமைப்புக்களை அவதானிக்கலாம். வன்னியின் மிகச்சிறப்பான பயிர் விளைச்சலை இம் மண்வகையே தருகின்றது. தானியவகைகள், மரக்கறி வகைகள், பருப்பு வகைகள், மிளகாய், வெண்காணம் எலுமிச்சை, தோடை என்னும் பயிர் வகைகள் இங்கு தனித்துவமான சாகுபடி நிலைகளைக் கொண்டு இருக்கின்றன.

## செம்மஞ்சல் லற்றசோல்ற் மண்

இம்மண்வகயானது இலங்கையில் புத்தளம் தொடங்கி கரையோரமாக யாழ்ப்பாணம் வரை சென்று பின் தெற்காகத் திரும்பி முல்லைத்தீவு, கொக்கிளாய் வரை பரந்துள்ளது. கிட்டத்தட்ட 1000 ச.மை. வரை பரந்துள்ள இம்மண் வகை நல்ல நீர்வடிப்புத் தன்மையைக் கொண்டுள்ளது. நீர்ப்பாசனத்தில் கால்வாய், கிணறு என்பவற்றின் உதவியுடன் மிளகாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்காயம், தோடை, எலுமிச்சை, மா, பலா என்னும் பயிர் வகைகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றன.

## உருமாறிய சொலனேட் மண்

இம் மண்வகையானது கடற்கரையை அண்டியுள்ள வெள்ளப் பெருக்கு ஏற்படும் பகுதிகளில் காணப்படகின்றது. அதாவது ஆறு கடலோடு கலக்கும் பகுதிகளில் காணப்படுகின்றது. முல்லைத்தீவில் தொடங்கி கொக்கிளாய், ஆண்டான்குளம், மன்னாரில் ஆட்காட்டி வெளி, வெள்ளாங்குளம் ஆகிய இடங்களில் இம்மட்தொகுதி பரம்பியுள்ளது. இம்மண்வகை அவ்வளவு வளமானதல்ல. கால்நடைகட்கு ஏற்ற தீவனங்கள் பயிரிட ஏதுவான மண்ணாகக் காணப்படுகின்றது.

சூழல் பாதுகாப்பு முகாமைத்துவ நடவடிக்கை நிலைமைகளை விருத்தி செய்யும் நோக்கில் இப்பிரதேசங்கள் தேக்கு, சவுக்கு, யூக்கெலிப்ரஸ், போன்ற மரங்களை மீள் வனமாக்கும் திடடத்தின் அடிப்படையில் நாட்டி பயன் பெற ஏற்ற தரையமைப்பையும், பரந்த சமவெளித்தன்மையையும் இங்கு காணக்கூடியதாக இருப்பதால் பொருத்தமான திடடமிடல் அடிப்படையில் பயன் படுத்தக்கூடிய மட்பிரதேசமாகக் காணப்படுகின்றது.

## றேகசோல் மண்

இம்மண்வகையானது இருவாட்டித் தன்மை கொண்டது. கடற்கரையை அண்டிய பகுதிகளில் இது சிறப்பாகக் காணப்படுகின்றது. நிலத்தடி நீர் நல்ல நிலையிலும், பயிர்ச் செய்கைக்கு வாய்ப்பானகாகவும் காணப்படுகின்றது. முல்லைத்தீவின் கரையோரப் பகுதிகளில் இம் மண்வகை காணப்படும் இடங்களில் சிறப்பான தென்னைப் பயிர்ச்செய்கை நடைபெறுவதுடன் மரமுந்திரிச் செய்கைக்கும் உவப்பான மண் வகையாகவும் காணப்படுகின்றது. மன்னாரில் இம் மண்வகை காணப்படும் இடங்களில் மரமுந்திரிகைச் செய்கை சிறப்பாக நடைபெறுகின்றது. வவுனியாவின் வடபாகம், முல்லைத்தீவின் பெரும்பகுதி என்பன இம் மண்வகையைச் கொண்டிருப்பதால் சிறப்பான உப உணவுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப் படுகின்றது.

## கிறம் சோல் மண்

வன்னிப்பகுதியில் துணுக்காய், முருங்கன், கூழாமுறிப்பு ஆகிய இடங்களில் இம்மணவகை காணப்படுகின்றது. கருமை நிறமுடைய இம்மண் வகை மிகக்குறைந்த நிர்வடிப்புத்தன்மையைக் கொண்டிருக்கின்றது. நீர்ப்பாசன உதவியுடன் நெற்சாகுபடி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அத்துடன் கைத்தொழில் நடவடிக்கைகள் மூலம் சீமேந்து, மட்பாத்திரங்கள், ஓடு, செங்கல், உருவச்சிலைகள், அடுப்பு வகைகள் என்பன செய்யப் பயன் படுத்தப்படுகின்றது.

## குறைவடிகால் கொண்ட வண்டல் மண்

பள்ளத்தாக்குகள், தாழ்நிலங்கள் போன்ற இடங்களில் இம்மண்வகை காணப்படுகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இம் மண்வகை தண்ணீரூற்று, முள்ளியவளை, வற்றாப்பளை போன்ற இடங்களில் 250-300 ஏக்கர் வரை காணப்படுகின்றது. இப்பிரதேசங்கள் மூன்றுபோக நெற்செய்கை மேற்கொள்ள வாய்ப்பாக உள்ளது. நீர் வடிந்தோடும் திறன் குறைவாகவும், மண்வளம் குறைவாகவும் காணப்படகின்றது. நெல்லைத் தவிர வல்லாரை, பொன்னாங்காணி, கங்குல் பொன்ற பயிர் வகைகளும் இம் மண்வகையில் பயிரிட முடியும். இம் மண் காணப்படும் இடங்களில் தாவரவியல் தொடர்பான நீர்த்தாழை இனங்கள், பெறுமதி மிக்க ஆயுர்வேத மூலிகைகள் போன்றன இயல்பாகவே வளர்வதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## வண்டல் மண்

வன்னிப்பிரதேசத்தில் மணலாறு, பேராறு, பாலியாறு, பறங்கியாறு, கனகராயன் ஆறு, நாயாறு போன்ற ஆற்றங்கரையோரங்களிலும், வேறும் பல சிற்றாறுக்ள பாயும் இடங்களிலும் இம் மண்வகை காணப்படுகின்றது. சேதன அடையல்கள் அதிகம் உள்ள இம் மண்வகை சிறப்பன நீர்வடிப்புத்தன்மையைக் கொண்டிருக்கின்றது. இம் மட்பிரதேசங்கள் நல்ல நெற்சாகுபடி நிலங்களாகக் காணப்படுகின்றன. இத்துடன் சிறப்பான உப உணவுப் பயிர்கள் உற்பத்தி செய்யப்படும் இடங்களாகவும் காணப்படுகின்றன.

## சிலிக்கேட் மண்

இம் மண் வகையானது முல்லைத்தீவின் கடற்கரை ஓரமாகப் பரம்பியுள்ளது. பயிர்ச் செய்கைக்கு உவப்பானதாக இல்லாவிட்டாலும் கைத்தொழில் அடிப்படையில் கண்ணாடிப் பாத்திரங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், மரத் தளபாடகங்கள் மினுக்கப்பயன்படும் மணற்கடதாசிகள் எனபன உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்றன.

மேற்காட்டப்பட்ட எட்டு வகையான மண் வகைகளும் வன்னிப்பகுதியில் சிறப்பாக அடையாளம் செய்யப்பட்டிருப்பினும் நுணக்கமாக ஆராயுமிடத்து மேலும் சில மண் தொகுதிகளை அடையாளம் காண முடியும். முல்லைத்தீவு மாவட்டத்தில் நாவற்காடு, புதறிகுடா, மாவடிப்புலவு போன்ற இடங்களில் காணப்படுவது போன்று வளம் குறைந்த வெண்மணல் மண் வகையும், சில சுதுப்பு நில மண்வகைகளும் குறிப்பிடத்தக்கனவாகும்..

வன்னிப் பிரதேசமானது பண்டைய காலம் தொட்டே மண்வளத்தையும், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளையும் நம்பியுள்ள பிரதேசமாகும். இதனால் அனுபவமுள்ள விவசாயிகள் பொருத்மான இடங்களில் பொருத்தமான பயிர்ச் செய்கை நடவடிக்கைகளையும், வாழ்விடங்களையும் தேர்ந்தெடுத்துள்ளனர். உதாரணமாக வன்னிப்பகுதியில் சன அடர்த்தி கூடிய பிரதேசங்களாக இவை காணப்படுகின்றன. இதற்கு எடுத்துக் காட்டாக பூர்வீகமாக வன்னியில் வாழும் மக்களை விட 1960, 1970 களில் மேற்கொள்ளப் பட்ட முத்தையன் கட்டு, விசுவமடு, வவுனிக்குளம், பாவற்குளம் போன்ற விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் அமைந்துள்ள இடங்கள் நல்ல செழிப்பான இருவாட்டி மண் வகையையும், குளத்து, கால்வாய் நீர்வசதியையும் கொண்டுள்ளது. இதனால் இத்திட்டங்கள் நெல் மற்றும் உப உணவுப்பயிர்ச் செய்கை முயற்சிகளையும் மேற்கொள்ளும் திட்டங்களாகக் காணப்படுகின்றன.

பொதுவாக நோக்குமிடத்து வளமான வன்னியின் மட்பாகுபாடுகளும், அவற்றின் பயன்பாடுகளும் என்னும் விடய நோக்கானது அது கொண்டிருக்கும் கனபரிமாணம், மிகப்பெரியதாகும். ஆயினும் முழுமையான. முறையான, நுணக்கமான மண் ஆராய்ச்சி, பயிர் ஆராய்ச்சி, நீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகாமைத்துவம், நவீனத்துவமும். பிரயோகமும், திட்டமிடலும் முகாமைத்துவமும் போன்ற விடய தானங்கள் இப் பகுதிகட்கு மிகவும் குறைவாகவே கிடைக்கின்றன என்று கூறலாம்,

மிகவும் மோசமான உணவுநெருக்கடி, நிலம் துண்டாடல், காணிப்பற்றாக்குறை என்னும் ஆபத்தான நிலையை எதிர் கொள்ளும் நிலை இப்பகுதியை அச்சுறுத்தும் பேரபாயமாகத் தோன்றியுள்ளது, ஆயினும் மட்பாகுபாடு, பயன்பாடு என்பன மட்டுமன்றி பொருத்தமான திட்டமிடல், முகாமைத்துவம் என்பனமூலமாக வன்னியின் மண் பாதுகாக்கப்படுவதுடன் அபிவிருத்தியும் செய்யப்படல் வேண்டும்.

## உயிர்ப்பேன் பலமுறை!

முலைப்பாலூட்டி உயிர் மொட்டவிழ்க்கும் தாயை
கலை அமுதூட்டி பிள்ளைத் தளிர் வளர்க்கும் தந்தையை
விலையில்லா சுகம்தந்து நிலம் வியக்கவைக்கும் மழலையை
தலையில்லாச் சடலாமாய்ச் செங்குருதியிலே படுத்தினாய்!

நீலம் நிறைந்த வானும் கடலும் நிம்மதியைத்தரும்!
சாலம் பண்ணும் குயில்களும் கிளிகளும் சங்கீதம் தரும்!
கோலம் போடக் கோதையருடன் குருவிகளும் வரும் மண்ணில்
காலம் பகைக்கக் கோட்டான் நீ கோல் எடுத்தாய்!

தோளை நிமிர்த்தி நின்று தோட்டம் செழிக்க இறைத்துப்
பாளை வெடிக்கும் நாளைப்பார்த்துக் கனவுகள் காண
வேளை பிளைத்துப்போய் வாழை சரித்து வீழ்த்த
தேளை ஒத்த நீ மூளையற்று வாளையெடுத்து வந்தாய்!

சரிந்தது வாழை என்று வெற்றிப்பேரிகை இட்டாய்!
விரிந்தது தமிழீழ வாசல் உனக்கென்று கோஷமும் இட்டாய்!
எரிந்தது எங்கள் மனம் மட்டுமல்ல தாய் மண்ணின் அடிவயிறும்!
சொரிந்தது அவள் கண்கள் கண்ணீருடன் நீ ஓடவிட்ட குருதியையும்கூட!

தாய் சொரிந்த கண்ணீர் இப்பிறவி மட்டும் வாட்டும்!
பேய் வந்து தாய் மண் எரிக்கையில் பார்த்திருந்தும்
வாய் மூடி மௌனித்தால் எழுபிறப்பும் இடர் காட்டும்!
தோய்கின்ற குருதி எதிரித்தோல்வழி வரும் வேளை அவள் சோகம் தீரும்!

கண் வழி வழிந்தோடும் அவள் செங்கங்கை நிறம்மாறப்
புண்பட்ட அவள் நெஞ்சையும் பூவால் வருடிவிடப்
பெண்ணோடு ஆணும் நிமிர்ந்திடுவோம் ஒன்றாய்!
விண் வரையில் விரைந்திடும் எங்கள் வெற்றிப்பண் விரைவில்!

வாழும் முறை தெரிந்து வையம் போற்ற வாழும் எமைப்
பாழும் சூழ்ந்து எமனின் பாதம் வீழ வைத்ததனால்
வீழும் எம்மண் உன் அடியில் என வீணாய் எண்ணாதே!
சூழும் பகை விரட்ட நிஜமாய் உயிர்ப்பேன் நான் பல முறை!
நீ வீழ்த்த வீழ்த்த உனக்கே எமனாய் உயிர்ப்பேன் பல முறை!

-கோதை அமுதன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Quality Bread Bakery

Different Kinds of Bread, Buns, Cakes,
Muffins & Much More........



*For your parties you can order short eats.*

**1221 Markham Road Unit #13,**
**(Markham/Ellesmere)**
**Scarborough, Ontario**
**M1P 3A6.**

**Tel: (416) 431-9829**

# GOPAL DESIGN FURNITURE





***UMA or NATHAN or NESAN***

**1600 Brimley Road, Unit #9**
**Scarborough, Ontario**
**M1P 3H1**

**Tel: (416) 321-0996**
**Fax: (416) 321-0504**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறாத வடுக்கள்

சு. மகேந்திரராசா
(பாவற்குளம், வவுனியா)
கனடா.

வழக்கம்போல வேலைமுடிந்து வரும்போது தபால் பெட்டியைத் திறந்தேன். வெளிநாட்டுக் கடிதமும் ஒன்று அதனுள் இருப்பதைக் கண்டு முதலில் அதனைப் பார்த்துவிடவேண்டும் என்ற அவாவில் பிரித்துப் படிக்கத் தொடங்கினேன்.

அன்பின் தம்பிக்கு....
என வழக்கமான பல்லவியுடன் தொடங்கிய கடிதத்தின் வரிகளை மேலோட்டமாக ஓடி, ஆனால் என்று தொடங்கும் வரிக்குச் செல்கையிலே.....
என் மனம் சிறிது பட படக்கத் தொடங்கியது. ஒருவாறு என்னைச் சமாளித்துக் கொண்டு மேலே படிக்கத் தொடங்கினேன். "அப்பாவுக்குத்தான் கடுமையாக" என்பதைக் கண்டவுடனேயே பட படத்த சதுரம் வேர்க்கத் தொடங்கியது. கடிதத்தை அப்படியே கையில் பிடித்தவண்ணம் சோபாவில் சிறிது நேரம் இருந்தேன். அப்போது என் நினைவெல்லாம் அப்பாவின் கடந்த கால செய்கைகளையும் எங்களது வீட்டையும்தான் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தது.

இவற்றிற்கிடையே இரண்டு மாதங்கள் முன்னதாக வந்த கடிதத்தின் வரிகளும் ஞாபகத்திற்கு வந்து, வந்து போய்க்கொண்டே இருந்தது. அந்தக் கடிதத்தில் உடல் நிலை நல்லாயில்லை என்று எழுதியிருந்தது. இப்போ கடுமை என்று எழுதினால் அதன் அர்த்தம்......

ஏதோ இது நடக்கக் கூடாதது நடந்து விட்டதுபோல என்று என் மனம் பதகளித்துக் கொண்டது.

அந்த நேரத்தில் டொக்..டொக்..என்று கதவில் தட்டும் சத்தம்.......

வேலை முடியும் நேரம், சங்கர்தான் வந்திட்டான் என்று எண்ணியவாறே கதவைத் திறந்தேன்.

என்ன இப்பத்தான் வந்தனியோ? என்று கேட்டவாறு உள்ளே வந்த சங்கர் என்ன முகமும் ஒருமாதிரிக் கிடக்குது என்று கேட்காமலும் விடவில்லை. ஒன்றுமில்லை என்று சொன்னாலும் அவன் விடவும்மாட்டான். நானும் அவனுக்கு ஒன்றும் ஒழிக்கிறதும் இல்லை.

இல்லையிடாப்பா என்று தொடங்கமுன்னே கண்கள் பொல பொலவெனச் சொரியத் தொடங்கியது. என்ன, என்ன விசயத்த சொல்லன் என்று நெருக்கியபடியே சோபாவில் அமர்ந்தான் சங்கர்.

அப்பாவுக்கு எண்டதுமே என்ன ஏதாவது சிக்கலோ என்று பதபதைத்து எழும்பிய அவன் சொல்லு, சொல்லு என்று அந்தரப்பட்டுக் கொண்டே நின்றான். நான் நிற்கும் நிலையில் எப்படி இவனைச் சமாளிக்கப்போறன் என்று யோசித்தவாறே......

சேச! சேச! அப்பிடி பயப்பிடுற அளவுக்கு ஒன்றுமில்ல, அப்பாதான் என்னை ஒருக்கால் பாக்கக்போறாராம், கனகாலம் கண்டு, எண்டு ஆசைப்படுறாராம். அதுதான் என்று ஒருவாறு சொல்லி முடிச்சன். ஆனால் அவனோ என்னை முழுவதாய் நம்பவில்லை என்றதும் எனக்குத் தெரியும்.

அப்பிடியெண்டால் நீ ஒருக்கால் போய்வாவன். ஏதேனும் உதவி செய்யோணும் எண்டால் சொல்லு செய்துதாறன் என்று கூறியவாறே அறைக்குள் சென்றான் சங்கர். இதைப்பற்றியே தொடர்ந்து யோசித்துக் கொண்டிருந்தால் சங்கருக்கும் கரவாயிருக்கும் என்று நானும் உடுப்புக்களை மாற்றிவிட்டு குளிப்பதற்குத் தயாரானேன். இதற்குள் நான் வருவதாக ஒரு அறிவித்தலை வீட்டிற்குக் கொடுக்கவேணுமே என்றும் யோசித்து, குளியலை முடித்துக் கொண்டு, முதலில் தொலைபேசி முலம் வவுனியாவுக்குத் தொடர்பு கொண்டு, நான் வரும் செய்தியை அனுப்பிவிட்டு சங்கரையும் கூட்டிக்கொண்டு பயண ஒழுங்குகளைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டோம். மிகுந்த சிரமத்தில் எனது பயணம் மறுநாளே வெளிக்கிடுவதற்குச் சரியாகி விட்டது.

பயணம் தொடங்கி இரண்டு நாட்களில் வவுனியா நகரத்தைச் சென்றடைந்த நான் இரவு பத்து மணிக்கு எனது கிராமம் ஞானியார் ஊருக்குச் செல்லும் கடைசி பஸ்சையும் தவற விட்டுவிட்டேன். வீட்டிற்கு உடனே செல்ல வேண்டும் என்ற ஆதங்கத்தில் ஒரு ஓட்டோவை பிடித்துக் கொண்டு, இரவு பதினொன்றரை மணியளவில் வீட்டுப் படலையில் இறங்கினேன். படலையைத் திறந்து கொண்டு உள்ளே செல்லும் போது, படலையடித்த சத்தத்தில் யாரது? என்று கேட்டுக் கொண்டு வெளிச்சம் ஒன்றுடன் ஒருவர் என்னை நோக்கி வருவதைக் கண்டேன். அடுத்த கேள்வி கேட்பதற்குள் நான் அது பாபு என்று சொன்னதுதான், பாபு என்று சொல்லிக் கொண்டு விரைவாக வந்த அக்கா என்னைக் கட்டிப்பிடித்து அழும்போதுதான் யோசித்தேன் ஏதோ நான் நினைத்தது சரியாகிவிட்டதுதானென்று.

அக்காவின் அழுகையில் மனம் நெகிழ்ந்த நான் ஒருவாறு என் நிலையினைச் சுதாகரித்துக் கொண்டு, இப்ப என்ன நடந்தது? ஏன் அழுறாய்? என்று கேட்டவாறே அக்காவையும் கூட்டிக் கொண்டு வீட்டு வாசலில் ஏறும்போது அங்கிருந்த சிறிய குப்பி விளக்கின் மங்கல் வெளிச்சத்தில் அயலவர்கள் பலர் கூடியிருப்பதைக் கண்டேன். திண்ணையில் இருந்த அவர்களையும் கடந்து வீட்டுக்குள் காலடி எடுத்து வைக்கும்போது அப்பா படுத்திருப்பது தெரிந்தது. அப்பாவின் அருகே சென்ற நான், அப்பா, அப்பா நான் பாபு வந்திருக்கிறன் என்று கூறியபோது, மூடியிருந்த கண்கள் சிறியளவில் அசைந்தன. அப்பா கண் திறந்து என்னைப் பார்க்க ஆசைப்படுகின்றார் என்பது எனக்கு விளங்கியது. ஆனால் அவரால் கண்களைத் திறக்கவே முடியவில்லை. நான் நின்ற பக்கமாக கையை சிறிதாக ஆட்டி ஏதோ தேடுவதுபோல் தடவினார். அப்போது என் கையை அவரது கையில் முட்டியதுதான் தனது கையைச் சாடையாகக் உயர்த்தி என் கையைப் பற்றிக்கொண்டார்.

அவர் என் கையைப் பற்றியதுதான், கண்கள் பொல, பொலவெனச் சிந்தத் தொடங்கின. அந்நேரத்தில் அப்பாவின் கண்களிலிருந்து ஒரு சொட்டுத்துளிதானும் கண்ணீர் வரவில்லை.

"இறக்கும்போதும் அழுகின்றான் பிறக்கும்போதும் அழுகின்றான்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பாடிய கவிஞரின் பாட்டுக்கு இவர் ஒரு விதிவிலக்காய் இருப்பாரோ என்று எண்ணிய என் மனம் நான் நினைத்தவை தவறாய்ப்போச்சு என்று எண்ணாமலும் விடவில்லை.

என் வரவைப் பாத்திருந்த அப்பா என்னைக் கண்ணால் காணாவிட்டாலும், என்னுடன் போசாவிட்டாலும், என் கையைப் பற்றியவுடன் எதை எதையோவெல்லாம் யோசிக்கிறார் போல என்று எண்ணிக் கொண்ட என் மனம், எதைத்தான் யோசிக்கிறாரோ என்றெண்ணியபோது.....

அன்றொரு நாள் மாலை நான்கு மணியிருக்கும் இந்தியராணுவம் எங்களது கிராமத்து வீதி வழியாக நடந்து வந்துகொண்டிருந்தனர். அவர்களைக் கண்ட எங்கட சனங்களெல்லாம் கையசைத்து வரவேற்றனர். பதிலுக்கு அவர்களும் கையசைத்து உங்கள் வரவேற்பை ஏற்றுக் கொள்கின்றோம் என்ற பாணியாகச் சென்றார்கள். மறுநாள் காலையில் கேள்விப்பட்டோம் அந்த இராணுவத்தினர் எங்கட ஊர்ப்பள்ளிக்கூடத்தினைத் தங்களது நிரந்தர தங்குமிடமாக்கியுள்ளார்கள் என்று. அங்கே நாங்கள் சென்று பார்த்தபோது அப்பப்பா எத்தனை இராணுவ வாகனங்கள், எத்தனை ஆமிக்காரர்கள், பாடசாலை வளவைச் சுற்றி எத்தனை பாதுகாப்பரண்கள். அப்போது ஊர் மக்கள் யாரைப் பார்த்தாலும் அவ் இராணுவத்தினர் வருகையை மனம் மகிழ்ந்து வரவேற்றுப் பேசியவர்களாகவே எங்கும் தென்பட்டனர். அவர்கள் இந்திய இராணுவத்தினை வரவேற்றதுக்கு காரணம் இல்லாமல் இல்லை. சிங்கள கிராமமான வாரிக்குட்டியூர், பழையவூர் என்பவற்றை அயல் கிராமமாகக் கொண்டிருந்த எங்களது கிராம மக்கள் அடிப்படைப் பிரச்சனைகள் அரசியல் பிரச்சனைகளாக மாற்றமடைவதற்கு முன்பிருந்த காலந் தொட்டே அயல் கிராமத்து சிங்கள மக்களால் பல்வேறு விடயங்களிலும் துன்பங்களுக்காளாகி வாழ்க்கையோட்டி வந்தவர்கள். இப்போது இங்கு இந்திய இராணுவம் குடிவந்துவிட்டதனால் தங்களுக்கு சிங்களவர்களால் ஏற்படும் சிக்கல்கள் தீர்ந்துபோகும் என்று எண்ணினார்களே தவிர அரசியல் பக்கமாக என்ன சிக்கல்கள் பிற்பட ஏற்படவுள்ள என்பதனைச் சிந்திக்கத் தவறிவிட்டார்கள்.

ஒரு நாள் அதிகாலை ஐந்து மணியிருக்கும் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டுக் கண்விழித்தேன். அந்நேரம் கீழ்வானம் வெளித்துக் கொண்டுமிருந்தது என்பதனை என்னால் உணரமுடிந்தது. அப்பா மெல்ல எழுந்து அம்மாவையும் எழுப்புவதற்காக கமலம், கமலம் என்று கூப்பிட்டவாறே முற்றத்தில் இறங்கி நின்று எங்களது வீட்டு முன் றோட்டுப் பக்கமாகவே பார்த்துக் கொண்டுநின்றார். இவ்வளவற்றையும் படுத்த படுக்கையாகவே பார்த்துக்கொண்டிருந்த நான் திரும்பளி அப்பா வீட்டுக்குள் வருவதையும் கண்டேன். என்னருகே வந்த அவர் என்னைத் தட்டி பாபு, பாபு எழும்பு றோட்டெல்லாம் ஆமிக்காரர் ஊரைச் சுத்தி வளைக்கிறாங்கள் போல கிடக்குது. நீ பின்வளவுக்குள்ளால ஓடி எங்கையாவது தப்பு என்று சொன்னதுதான், வீட்டிற்குப் பின்புறமாக சென்று வேலியைத் தாண்டி அங்கிருந்த சிறிய காட்டுக்குள் ஒழித்துக் கொண்டேன்.

நான் காட்டுக்குள் ஒழித்தாலும் என் கவனம் முழுவதும் ஆமிக்காரர்கள் எங்க போறார்கள் வாறார்கள் என்பதிலேயே இருந்தது. காட்டுக்குள் இருந்து பார்க்கும்போது ஆமிக்காரங்கள் வீடுகளுக்குள் போவதும் ஆக்களைப் பிடித்துக்கொண்டு போவதுமாக இருந்தது. இரண்டு ஆமிக்காரர்கள் எங்கட வீட்டிற்கும் வந்து எல்லாரையும் முத்தத்தில் இருக்கவைச்சு ஒவ்வொருவராக தனித்தனியே கூட்டிச் சென்று விளக்கம் வைப்பதனை பார்த்தபோதுதான் நானும் யோசித்தேன் தம்பி வயதில் குறைந்தவன் என்று விட்டுட்டு வந்தது பிழையாகிவிட்டதென்று. அதேநேரத்தில் வேறும் ஆமிக்காரங்கள் எங்களது வளவுக்குள் எனக்கு நன்கு தெரிந்த ஊர்ப்பெடியளை கையைப் பின்பக்கமாகக் கட்டி கொண்டுவருவதனையும் கண்டேன். அவர்கள் எங்களது முற்றத்திற்கு வந்தவுடன் தம்பியையும் கைகட்டி கொண்டுபோவதற்கு ஆயத்தமானார்கள். அப்போது தம்பி கையைக் கட்டுவதற்கு மறுத்தபோதே கண்டபடி அடிக்கத் தொடங்கினார்கள்.

இவற்றையெல்லாம் ஒரு பக்கத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த அம்மா ஆத்திரம் பொறுக்கமுடியாமல் ஆவேசமாக எழுந்து இராணுவத்தினரை வாய்கு வந்தபடி பேசி அவர்களது கையைப் பிடித்திழுத்து விடுங்கோடா என்ர மோனை. என்றவாறு மல்லுக்கட்டினா. அப்போது ஓர் இராணுவத்தினன் அம்மாவின்ர கையைப் பிடித்திழுத்து பலமாய்த் தள்ளிவிட்டான். அந்தத் தள்ளலில் விழுந்தவதான் மீண்டும் அம்மா எழும்பியதைக் காணவில்லை. அம்மா விழுந்தவுடன் அப்பா அம்மாவைக் காப்பாற்கிற முயற்சியில் நின்றாரே தவிர தம்பிக்கு என்ன நடக்கப்போகுது எண்டத சிந்திக்கவேயில்லைப் போலும். இராணுவத்தினர் எல்லாருடைய கைகளையும் பின்னுக்குப் பிடித்துக் கட்டிப்போட்டு ஏதோ சொல்லியிருக்கிறார்கள். கை கட்டியபடியே எல்லாரும் பக்கத்து வெறுங்காணிக்கால ஒடுறதக் கண்டேன். இருந்தாப்போல திடீரென வெடிச்சத்தங்கள் சரமாரியாக என் காதைப் பிளந்தன. அந்த நேரத்தில் என் யோசனை முழுவதும் தம்பியையும் கூட்டிக்கொண்டு வந்திருந்தால் அவன் உயிரைக் காப்பாற்றியிருக்கலாம் என்றுதானிருந்தது. இருந்தும் பொடியள் ஓடின பக்கமாக பார்க்கிறேன். நிலத்தில் பட்ட சன்னங்களினால் கிளப்பப்பட்ட புழுதி யாரையுமே தெரியாதபடி மறைத்துவிட்டது. வெடிச் சத்தத்தில் மலைத்துப் போய் நின்ற அப்பாவாவது என்ன நடந்தது என்று பாத்திருப்பார்தானே என்று என் மனம் ஓர் பக்கத்தால் ஆறுதலடையாமலும் இல்லை. சிறிது நேரம் கழித்து ஓர் இராணுவ வாகனம் ஒன்று எங்களது வீட்டு வாசலில் வந்து நின்றதும் அதிலிருந்து எட்டுப் பத்து இராணுவத்தினர் குதித்திறங்கி தம்பியாக்களைச் சுட்ட பக்கமாக ஓடுகிறார்கள். ஓடிய அவர்கள் இரண்டு, மூன்று பேராக உடல்களைத் தூக்கிக் கொண்டுபோய் வாகனத்தில் எறிந்தார்கள். எறியும்போதுதான் நான் முடிவெடுத்தேன் தம்பியின் பாடும் முடிந்து விட்டதென்று.

உடல்களை ஏற்றிய இராணுவ வண்டி சிறிது நேரத்தில் அங்கு நின்ற இராணுவத்தினர் யாவரையும் ஏற்றிக் கொண்டு புறப்பட்டுவிட்டது. இராணுவ வாகனச் சத்தங்கள் அடங்கிவிட்டது என்றதன் பின் நான் காட்டுக்கால மெதுவாக வெளிக்கிட்டு வீட்ட போனபோது அம்மாவின் இறந்த உடலைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணமுடிந்தது. அதேநேரத்தில் அப்பாவும் பக்கத்தில் அறிவற்ற நிலையில் அக்காவின் மடியில் படுத்திருப்பதைக் கண்டேன். மட்டை ஒன்றினால் படுத்திருந்த அப்பாவுக்கு விசுக்கியபடி பாபு ஓடிப்போய் பரியாரியைக் கூட்டிக்கொண்டு வா என்று கூறியதுதான், நான் நொடிப் பொழுதில் எங்கட ஊர்ப் பரியாரியாரைக் கூட்டிக்கொண்டு வந்ததும், அவர் ஏதோ கையைப் பிடித்துப் பாத்துவிட்டு தண்ணி மருந்தொண்றைக் கொடுத்தார். அந்தளவுதான் அப்பா சிறிதளவு நேரத்தில் கண்விழித்து அம்மா எப்படி இருக்கிறா என்று கேட்டமாத்திரத்திலே அங்கு கூடியிருந்த சனத்தைக் கண்டதும், அத்தோடு அழுகைச் சத்தத்தையும் கேட்டு தானே முடிவெடுத்துவிட்டார் என்ன நடந்துவிட்டதென்று. அப்பாவுக்கு எவ்வளவோ ஆறுதல்கள் கூறியும் எங்களால் அவரைத் தேற்றவே முடியவில்லை. அம்மாவைப் பிரிந்த மன வேதனையால் மீண்டும் கண்களை மூடிக் கொண்டவர்தான் எம்மை விட்டு அவர் பிரியும் வரையிலும் படுத்த படுக்கையால் எழும்பவேயில்லை.

அம்மாவினது சடங்குக் கடமைகள் யாவையும் நல்லபடியாக முடித்து ஆறு மாதங்கள் ஓடிவிட்டன. ஓர் நாள் போராளி இளைஞன் ஒருவர் ஓர் கடிதத்தினைக் கொண்டு வந்து வீட்டில் தந்தார். அப்போது பயப்பீதியுடன் அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தபோதுதான், தம்பி உயிருடன் இருப்பது தெரியவந்தது. அந்தச் சந்தோசத்தினால் அக்கா அப்பாவுக்கும் கடிதத்தைப் படித்துக்காட்டத் தொடங்கினா.

சுகங் கூறி சுகம் விசாரித்த தம்பி, அன்று நடந்த அனர்த்தத்தில் நானும் இன்னும் இருவருமாக உயிர் தப்பியோடி தற்போது தாய்நில விடுதலைப் போராட்டத்தில் எம்மை அர்பணித்துள்ளோம் எனத் தொடர்ந்த வரிகள், அன்று எங்களுடன் ஓடி மரணமடைந்த மற்றயவர்களது குடும்பங்களுக்கும் எனது அனுதாபத்தைத் தெரிவித்து விடவும் என எழுதி, அண்ணா எனத் தொடங்கிய அடுத்த வரி.....

நீ வீட்டில் நிற்பது புத்திசாலித்தனமல்ல. உனது உயிருக்கும் உத்தரவாதம் எத்தனை நாளைக்கு என்று தெரியவில்லை. இந்த இந்திய இராணுவம் இதேவேலையை எங்களது கிராமத்தில் திரும்பவும் செய்யும். எனவே நீ தாய் மண் விடுதலைக்காகவாவது உன் உயிரைத் தியாகம் செய் என்ற வரிகளுடன் திவ்வியன் என வேறொரு பெயரிட்டு முடித்துக் கொண்டான் கடிதத்தினை. இவற்றை வாசிக்கக் கேட்டுக் கொண்டிருந்த அப்பா தம்பி உயிருடன் இருக்கிறான் என்ற சந்தோசத்தின் மறுப்பக்கத்தில் மற்றப்பிள்ளையின் உயிரையும் விரைவாகப் பறிகொடுத்து தான் தவித்துப் போவேனோ என்று யோசித்தாரோ? என்னவோ, நீ வெளிநாட்டுக்குப் போ என்று அன்றுதொடக்கம் வற்புறுத்திக்கெண்டே இருந்தார். அவரது வற்புறுத்தலின் பேரில், தம்பியின் கொள்கைக்கு இணங்கிய நான் நற்பணியொன்றில் என்னை ஈடுபடுத்த முடியாமல் அப்பாவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டே சம்மதம் தெரிவித்தேன்.

அப்பாவும் இருந்த நிலம், புலங்களையெல்லாம் விற்று ஒரு வாரிசையாவது காப்பாற்றி விடவேண்டும் என்ற எண்ணத்தில் என்னைக் காப்பாற்றினாரோ என்று எண்ணும் போது, அப்பா என்னைப் பிடித்திருந்த அவரது கைப்பிடி தளர்ந்து போய்க் கொண்டிருப்பதை உணர்ந்து அவரது முகத்தைப் பார்க்கிறேன். தலை சரிந்து விட்டது. கை கீழே விழுந்து விட்டது.

அப்போதுதான் நான் யோசித்தேன், என்னைக் காணவென்று தங்கியிருந்த உயிர் தன் மனக்கண்ணால் என்னைக் கண்டவுடன் பிரிந்துவிட்டதென்பதை. அது மாத்திரமல்ல தனக்குக் கொள்ளி வைக்கத்தான் என்னைக் காப்பாற்றியிருக்கின்றார் என்பதையும் நான் எண்ணாமல் விடவில்லை. பெற்ற தாய் தந்தையர் இந்தப் பிள்ளைக் கடனை எதிர்பார்ப்பது இயற்கைதான் என்றுணர்ந்து, அவரது ஆத்மா சாந்தியடைய என் கடன் யாவையும் செவ்வனே முடித்துவிட்டு, அக்காவின் வேண்டுகோள்களை எல்லாம் தலையினில் சுமந்தபடி, பொறுப்புணர்ந்து, வேதனை மிகுந்த மனநிலையோடு மீண்டும் திரும்பினேன் கனடாவுக்கே. மிஞ்சியிருப்பது அக்காவின் வாழ்க்கைதான். இனி எல்லாமே எனக்கு அவதான்......

## காண்பரோ தீர்வு?

சூர்மையான யுக்தியில்
நாளினில் கண்டுவிடும்
தீர்வுக்கே யிருதசாப்தம்
காணப்படா தீர்வினையே
கண்டுவிட எண்ணியே
பாழும்மன்றத்தார்க்கு
ஸ்ரீலங்காவிலே
பெல்பாஸ்ட் பிஸரும்
தலைவியார் கம்பலும்
(அ)இடித்துரைத்தாலும்
இரு கட்சியாரும்
காண்பரோ தீர்வு

குரோதமுடனே
இழுப்பர் இருவரும்
இரு திசை நோக்கியே
இவர்கட் கிடையே
புத்த மங்குகள்
கொடாதே உரிமை
தமிழர்க்கே என்று
இனவாதப் பன்னீர்
தெளித்திட எங்கும்

அடுத்த தேர்தலை
மனதேயிருத்தி
ஆட்சியைத் தாமே
கொண்(று)டுவிட
கௌசனம் கட்டி
வீதிக்கே வந்து
மங்குடன் சேர்ந்தே
பேசிடும். வாதம்
தமிழரை அழிக்கும்
தீர்வினைத் தராது.

வை. அரிராசா
பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MILAN AUTOS CENTRE

MLAC

## HAND CAR WASH





All kind of Mechanical Works Experts in,

- Exterior Interior and Engine Shampooing.
- New & Used Tire Changing.
- We do Touch-up Paint
- Rust Proof and Undercoating.

## கையால் கார் கழுவும் நிலையம்

**என்ஜின் சம்போ, இன்ரேரியல் சம்போ, பொலிசிங், (b)வொடி வேர்க் மற்றும் பெயின்ரிங், ரின்ரிங், புதிய பழைய உதிரிப் பாகங்களுக்கும் மற்றும் சகல திருத்த வேலைகளுக்கும் பிரதம மெக்கானிக், 35 வருடம் அனுபவமுள்ள முல்லைத்தீவு அருளானந்தம் கராஜ் உரிமையாளர் திரு. ஜெயா,
அத்துடன் பல வருடம் அனுபமுள்ள மெக்கானிக் செல்லத்துரை.**

தொடர்புகளுக்கு:

☞ Call: Rajah

Tel: (416) 752-6608

**1680 Midland Avenue Unit #11
Scarborough, Ontario
M1P 2C6.**




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களின் வாழ்க்கையும் அவர்களின் பேச்சு வழக்குகளும் பற்றிய ஒரு பார்வை......

திருமதி கேதீஸ்வரன் மல்லிகாதேவி B.A (Linguistic)

வன்னி மாவட்டமானது வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக உள்ள போதிலும்இக்கட்டுரையில் முல்லைத்தீவு, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் பகுதிகளை உள்ளடக்கிய கிராமத்து மக்களின் வாழ்க்கை முறையும், அவற்றைப் பிரதிபலிக்கும் பேச்சு வழக்குகளும் ஆராயப் படுகின்றன. பேச்சு வழக்கை நாம் சமூக, மொழியியல் அடிப்படையில் எடுத்து நோக்கலாம். ஒரு சமுதாயத்தின் வாழ்க்கை நடைமுறைகள் அந்த சமுதாயத்தின் பேச்சு வழக்குகளில் பிரதி பலிப்பது மனிதவியலாளர், மொழிபற்றிய ஆய்வாளர்களால் காணப்பட்ட உண்மை. சமூக அடிப்படையில் மொழிக் கூறுகளை இனம் கண்டு வகைப்படுத்தலாம். ஒரு சமுதாயத்தின் அடுக்கு நிலை, வாழ்கைப் படிநிலை என்பனவற்றின் அடிப்படையிலும், சமூக மரபியல் அடிப்படையிலும் பாகு படுத்தலாம். இதனை மொழி எவ்வாறு பிரதிபலிக்கிறது, என்பதனை இக் கட்டுரை விளக்குகின்றது. உதாரணமாக இந்தியத் தமிழுக்கும், இலங்கைத் தமிழுக்கும் இடையிலேயே பேச்சு வழக்குகளில் பல வித்தியாகள் உண்டு. ஒரே மொழியை பேசுகின்ற இருவர், ஒருவர் இலங்கைத் தமிழர், மற்றவர் இந்தியத் தமிழராக இருந்தாலும் ஒருவர் பேசுவதை மற்றவரால் பூரணமாகப் புரிந்து கொள்ளமுடியாமல் போகிறது. காரணம், அவர்கள் உபயோகிக்கும் வெவ்வேறு சொற்பதங்களும், உச்சரிப்புக்களுமேயாகும். இலங்கையை எடுத்துப் பார்க்கும் போது யாழ்பாணத் தமிழ், மட்டக்களப்புத் தமிழ், கண்டித் தமிழ், கொழும்புத் தமிழ், மலையகத் தமிழ், வன்னித் தமிழ் என்று வேறுபடுகின்றது. ஒவ்வொரு பகுதியில் வாழும் தமிழ்ப் பேசும் மக்களும் தங்களுக்கென்று பாரம்பரிய பேச்சு வழக்குகளைக் கொண்டுள்ளனர். சில பேச்சு வழக்குகள் எல்லாத் தமிழ் பேசும் மக்களுக்கும் பொதுவானவையாகவும், ஒரு சில சிலவற்றிற்கே உரியனவாகவும் காணப் படுகின்றன.

சமுதாய மொழியியலாளர் மொழி வழக்குகளை அச்சமூகத்தின் மரபுபியல்புகளுக்கு ஏற்றவகையில் பண்பாட்டுக் கூறுகள் அடிப்படையில் பின்வருமாறு ஆராய்கின்றனர்.

1) சமூகத்தைப் பொதுவாகப் பிரதிபலிக்கும் மொழிவழக்குகள்.

2) தொழிலை அடிப்படையாக கொண்ட வழக்குகள். (சமூகப் பிரிவுகள் அடிப்படையிலான வழக்குக்குகள் உள்ளடங்கும்)

3) உறவு முறை வழக்குகள். அதில் ஆண்பால் - பெண்பால் வழக்குகளை வேறுபடுத்தும் வழக்குகள், பொதுப்பால் வழக்குகள்.

4) மக்களின் வாழ்கையோடு ஒன்றிணைந்த காலநிலை, பயிர், செடிகொடிகள், மிருகங்கள் என்பனவற்றோடு தொடர்புடைய வழக்குகள்.

5) நம்பிக்கை, இறைவழிபாடுகளை வெளிப்படுத்தும் பேச்சுவழக்குகள்.

வன்னிப் பிரதேசமானது காடுகளும், வயல்களும் நிறைந்த நிலப்பரப்பைக் கொண்ட மருதநிலப் பிரதேசமாக உள்ளது. இங்கு வாழும் மக்களில் பெரும்பான்மையினர் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டுள்ளனர். தங்களுடைய தேவைகளை தங்கள் நிலங்களில் பயிர் செய்து அத்தியாவசிய தேவைகளைச் சுயமாகப் பூர்த்தி செய்து வாழ்ந்தனர். இங்கு வாழ்ந்த மக்கள் அடுத்தவர்களை சார்ந்திருக்கும் தன்மை குறைந்தவர்களாகவும் கபடமில்லாத உண்மையான வாழ்க்கை வாழ்ந்தவர்களாகவும், வீரம் செறிந்தவர்களாகவும், ஒற்றுமையுணர்வு கொண்டவர்களாகவும் வாழ்ந்துள்ளனர். வன்னிப்பகுதியில் வாழ்ந்த பெரும்பான்மையினமான மக்கள் தங்களுக்கு என்று ஒரு தொழில் வைத்திருந்தாலும் விவசாயத்தையும் ஒரு தொழிலாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர். அவர்களுக்குத் தேவையான உணவு, உறைவிடம் இரண்டையும் அவர்களாலேயே தேட முடிந்துள்ளது. பெரும்பான்மை இனமானோர் சொந்த காணிகளில் ஓலைகளாலான வீடுகள் என்றாலும் அமைத்து சொந்த தொழில், சொந்த வீடு என்று ஒரு நம்பிக்கை நிறைந்த, நிறைவான இயல்பு வாழ்க்கை வாழ்ந்தனர். அதில் ஒரு புனிதம் இருந்தது, உண்மை இருந்தது, நம்பிக்கை இருந்தது, வீரம் இருந்தது, ஒரு யதார்தமான வாழ்க்கையை எம் வன்னி மக்கள் வாழ்ந்ததினால் வன்னித்தமிழ் பேச்சுகளில் பிறமொழிக்கலப்பு ஆங்கில மொழித்தாக்கம் என்பவை மிக அரிதாகவே காணப்பட்டது. பிறமொழி வழக்குகளில் இல்லாத ஒரு தனி வழக்கு வன்னித்தமிழ் வழக்கு. வன்னித்தமிழ் மக்களின் தனித்துவத்தையும், ஒற்றுமையையும், மண்ணின் பற்றையும் எடுத்துக் காட்ட உதாரணமாக இன்று வரை அவர்களில் பெரும்பான்மையானோர் தமது உறவினர் அல்லாதோரை வெளியிடங்கட்குச் சென்று திருமணம் செய்து கொள்வதை விரும்புவதில்லை. வன்னி பகுதியிலேயே திருமணம் செய்யவேண்டும் என்று இன்றும் இருப்பதைக் காணமுடிகிறது.

வன்னிப் பகுதிகளில் பாரம்பரியமான விவசாயக் கிராமங்களிலே மிகப் பெரும்பான்மையினர் சொந்த நிலங்களிலேயே வீடுகள் அமைத்து அங்கேயே தோட்டங்கள், வயல்கள் செய்து வாழ்ந்தவர்களாகவே காணப்பட்டனர். அவர்களின் பேச்சுகளும் அவற்றை பிரதிபலிப்பதாகவே காணப்பட்டது. மற்றய பிரதேச பேச்சுத் தமிழ் வழக்குகளில் "தோட்டம்" என்பது பயிர். செடி. கொடிகள் பயிரிடும் இடத்தையே குறிக்கும். ஆனால் வன்னிப்பகுதிமக்கள் அதனைப் "புலவு" என்றே அழைத்தனர். உதாரணமாக தென்னம்புலவு, கொத்தியாம்புலவு, பூதன்புலவு என்று இன்றும் அழைக்கப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. வன்னிப்பிரதேச வீடுகள் பெரிய நிலப்பிரதேசங்களில் அமைந்தனவாகவே காணப்பட்டன. வீடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்துள்ள காணிகளுக்குள்ளேயே தென்னை, வாழை, பலா, கமுகு, தோடை, எலுமிச்சை, பப்பாளி, மா, பனை போன்ற பிரயோசனமான மரங்கள் இருந்தன. இதனாலேயே அவர்கள் வீடும், பிரயோசனம் தரும் பயிர்வகைகளும் உள்ளிட்ட இடங்களை "வளவு" என்று இன்றும் அழைத்து வருகின்றனர்.

வன்னிப்பகுதி மக்களின் பேச்சுக்களில் பிறமொழிக்கலப்பற்ற, தமக்கென்றே ஒரு தனித்துவமான பேச்சு வழக்கை உபயோகித்தார்கள் என்பதற்கு உதாரணமாகக் "குசினி" என்பது பிறமொழிச் சொல். இது சமையல் செய்யும் பகுதியை குறிக்கும். இதனை ஏனைய பகுதி வழக்குகளில் அனேகமாக குசினி என்றே உபயோகித்தார்கள். ஆனால் வன்னிப் பேச்சுகளில் குசினி என்ற சொல் உபயோகபடுத்தப்படாமல், "அடுப்படி" என்ற சொல்லே வழக்கில் இருந்து வருகின்றது. ஆனால் இன்று குசினி என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வந்தாலும், அடுப்படி என்ற இச்சொல்லும் வழக்கில் இருந்து கொண்டுதான் வருகிறது. இது போன்ற பல சொற்கள் இருக்கின்றன. உதாரணமாக:

| | |
|---|---|
| விளக்குமாறு | - கூட்டுமாறு |
| சம்பல் | - பச்சடி, விண்இடி |
| சொதி | - வெண்ஆணம் |
| கேற்றடி | - படலையடி |
| பவுடர் | - புசல்மா |
| போர்வை | - துப்பட்டி |

இவற்றை விட அவர்கள் சாதரணமாக ஒருவரோடு ஒருவர் உரையாடும் போது "கதைத்தனான" என்பதற்குப் பதிலாக "கதைச்சனான்" என்ற சொல்லையும், "சாப்பிட்ட" என்பதற்குப் பதிலாக "திண்ட" என்ற சொல்லையும், "வந்தவர்கள், போனவர்கள்" போன்ற உயர்திணை இறந்தகால வினைச் சொற்களுக்குப் பதிலாக "வந்தவை, போனவை" அல்லது "வந்தவினை, போனவினை" என்ற பேச்சுவழக்குச் சொற்களையும், "போட்டுவருகிறேன்" என்பதற்கு "நடக்கிறன்" என்ற சொல்லையும் உபயோகித்துள்ளனர். இவற்றில் சில இன்று நாகரீகமற்ற சொற்களாகக் கருதப்பட்டு வழக்கொழிந்து போனாலும் முற்றாக அழிந்து விட்டன என்று சொல்வதற்கில்லை. இன்றும் வழக்கில் இருந்து கொண்டுதான் இருக்கின்றன.

பாரம்பரிய வன்னிமக்கள் சில சொற்களை தகுதி வழக்குகளாகவே உபயோகித்துள்ளனர். வயல் சார்ந்த பகுதிகளில் வயலில் வேலை செய்யும் போதும் வயல் விதைக்க, அரிவி வெட்ட, சூடு அடிக்கத் தேவையான பொருட்களை எடுத்துச் சென்று உபயோகிக்கும் போதும், அவற்றைச் சாதரணமாக உபயோகிக்கும் சொற்களைக் கொண்டு அழைப்பதில்லை. இதற்குப் பதிலாக வேறு சொற்களை வழக்கில் கொண்டிருந்தனர். இவற்றை "ஐதீக வழக்குகள்" என்றழைப்பர். வயல்களில் வேலை செய்யும் போது மட்டுமே இவ் ஐதீக வழக்குகளை உபயோகித்தனர். வீட்டில் வழக்கமான சொற்களையே உபயோகித்தனர். இதற்கு காரணம் இதே சொற்களை வயலில் பாவிப்பதால் வயற் பண்பாட்டின் புனிதம் கெட்டு விடும் என்றும், சூடு அடிக்கும் போது நெல்லுப் பொலியாது, அதாவது கூடிய விளைச்சல் கிடைக்காது என்ற அச்சம் காரணமாகவும் இவ் ஐதீக வழக்குகளை உபயோகித்தனர். இன்றும் இவை நடைமுறையில் இருந்து வருகின்றன. உதாரணமாக உபயோகிக்கும் சொற்கள்:

| | |
|---|---|
| சுளகு | - சுல்லம் |
| கடகம் | - பெருவாயன் |
| கயிறு | - கறவாயன் |
| சோறு | - அமுது |
| நெல்லு | - சூரன் |
| சாப்பிடுதல் | - கொட்டாவித்தல் |
| பாம்பு | - நெடுவாலன் |
| மாடு | - நடையன் |

போன்றனவையாகும்.

வன்னிமக்கள் நெல்லு மூட்டைகளை வீட்டில் அடுக்கி வைப்பதற்காகக் "கோற்காலி" செய்து அதற்கு மேல் நெல் மூட்டைகளை அடுக்கி வைப்பார்கள். இதனைப் "பரண்" என்றும் அழைப்பார்கள்.

இதை விட அடுத்த வருடத்திற்குரிய விதை நெல்லை பூச்சி, புழுக்களில் இருந்தும் மழை, வெயில் போன்றவற்றிலிருந்தும் பாதுகாப்பதற்காக வீட்டு முற்றத்தில் பலகைக் குற்றிகளால் பரண் அமைத்து வெப்பல் கொடியால் வட்டமாக அமைத்து, பசுச்சாணம், மண் போன்றவற்றால் மெழுகி இதற்கு மேல் பனை ஓலையால் வேய்ந்து எதுவும் உட்புகாதபடி பாதுகாத்து வைப்பார்கள். இதைக் "கொம்பறை" என்று அழைப்பார்கள். முன்னைய காலங்களில் எல்லோருடைய வீடுகளிலும் கொம்பறை காணப்பட்டது. ஆனால் தற்போது மிகவும் அரிதாகவே காணப்படுகிறது.

வன்னிப்பகுதிகளில் சாதி அமைப்புகள் இருந்ததற்கான சான்றுகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டது. வன்னிப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் எல்லோரும் வன்னியர்கள் என்றே அழைக்கப்பட்டனர். வேறு பிரதேச மக்கள் தொழிலுக்காக வந்து குடியேறிய பிற்பாடுதான் சாதி வேறுபாடுகள் பரவத் தொடங்கின. பாரம்பரிய வன்னி மக்கள் தங்களுக்கு தெரிந்த தொழில்களை தாமே செய்து வந்துள்ளனர். மீன், இறால், நண்டு என்பனவற்றை பிடிப்பதற்குப் பாரம்பரிய முறைகளான 'கரப்புக் குத்துதல்', 'தூண்டில்' போடுதல் போன்ற முறைகளைக் கையாண்டனர். தாமே இத்தொழிலைச் செய்து தமக்குத் தேவையான மீன் உணவுகளைத் தாங்களே பிடித்தும், இறைச்சி வகைகளை வேட்டையாடியும் உணவாக உட்கொண்டனர். ஆரம்பகாலங்களில் வன்னிப்பகுதியின் கரையோரங்களில் வாழ்ந்த மக்களே கூடுதலாக மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டனர். வன்னிப் பகுதிகளில் பல்வேறு தொழிலை அடிப்படையாக கொண்ட மக்கள் வாழ்ந்து வந்தாலும் பெரும்பான்மையினமான மக்கள் விவசாயத்தையும் ஒரு தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர். பிற்காலங்களில் பல்வேறு சாதி அமைப்புக்கள் இருந்த போதிலும் அங்கு வாழ்ந்த மக்கள் மிகவும் பண்பாட்டுடனும் மரியாதையானவர்களாகவும் ஒற்றுமைப் பண்புடையவர்களாகவும் வாழ்ந்துள்ளனர். மற்றைய வழக்குகளில் இல்லாத சில சாதி பேச்சு வழக்குகள் உதாரணமாக கமக்காரன், கமக்காரிச்சி உடையார், பரியாரி என்பன வன்னிப்பகுதிகளில் இருந்துள்ளதைக் காணமுடிகிறது.

உறவு முறைகளை அடிப்படையாக கொண்ட பேச்சு வழக்குகளை எடுத்து பார்க்கும் போது அவற்றில் பிறமொழித்தாக்கம் மிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவாகவே காணப்பட்டது. வன்னிப்பிரதேச பாரம்பரிய மக்கள் இயல்பாகவே தங்கள் உறவுமுறைகளைப் பின்வருமாறு அழைத்தனர்.

உதாரணமாக :-

| | |
|---|---|
| தாய் | - ஆச்சி, |
| தகப்பன் | - அப்பு, அப்பச்சி, அப்பையா. |
| சிறிய தகப்பன் | - குஞ்சி, குஞ்சிஅப்பு. |
| சிறிய தாய் | - குஞ்சிஆத்தை, குஞ்சாச்சி. |
| மாமன் | - அம்மான். |

இவற்றில் சில ஏனைய வழக்குகளுக்கும் பொதுவாக உள்ளன.

இவற்றை விட ஆண்பால், பெண்பால் வழக்குகளை வேறுபடுத்திக்காட்டும் வழக்குகளும் உள்ளன.

உதாரணமாக:-

பெண்பிள்ளை - பெட்டை, தங்கச்சி, பிள்ளை.
ஆண்பிள்ளை - பெடியன், தம்பி, ராசா.

என்பனவும்,

பொதுப்பால் வழக்குகளாக "மோனை" என்ற சொல் ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டுக்கும் பொதுவாகவும், அன்பாக அழைக்கும் இடத்திலும் இச்சொல்லைப் பயன்படுத்தியுள்ளனர். இன்று வரையும் இச் சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஏனைய வழக்குகளில் மோனை என்ற சொல் இருந்தாலும் இது ஆணுக்கு மட்டுமே பாவிக்கப்படுகின்றது.

இதே போல் "எணை" என்ற சொல்லும் கணவன் மனைவி இருவரும் ஒருவரை ஒருவர் அழைக்கும் இடத்தில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இன்றும் இது அழிந்து விடாமல், வழக்கிலுள்ளது.

வன்னி மக்கள் வாழ்க்கை அமைதியான எளிமையான இயற்கையோடு ஒன்றிய ஒரு வாழ்க்கையாகும். அதனால் அவர்களின் வாழ்க்கையில், காலங்கள், காலநிலை, மரம், செடிகொடி, வளர்ப்பு பிராணிகள் என்பனவற்றிற்கு இடையே ஒரு நெருக்கமாக ஒன்றிவிட்ட உறவு இருந்தது. அது அவர்களின் பேச்சுக்களிலும் யதார்த்தமாக எடுத்துக் காட்டப்படுவதை காணமுடிகிறது. மாரிகாலம், கோடைகாலம் என வரும் காலங்களை விதைப்புக் காலம், அறுவடைக்காலம் என்று அழைததனர். (மதிய நேரம்) நல்ல வெயில் காலங்களை "கொண்டை வெயில்", "உச்சி வெயில்", "கானல் வெயில்" எனவும், மாலை நேரங்களை "பொழுது கருக்கல்", "பொழுது விழுதல்", "கருக்கல் பட்டநேரம்" எனவும் காலை நேரங்களை "வெள்ளாப்பு", "நிலவோடை", "வெள்ளணை", "விடிய" போன்ற பேச்சு வழக்குகளையும் உபயோகித்தனர்.

இதே போலத் தங்களுக்கு பிரயோசனம் தருகின்ற மரங்களையும், மிருகங்களையும் தங்கள் குடும்பங்களில் ஒருவரைப் போல் நேசித்திருக்கிறார்கள். இதனால் தான் அவற்றிற்கும் பெயர் வைத்துள்ளார்கள். பலா மரங்களை "வரிப்பலா", "பொச்சுப்பிலா", "சிவத்தப்பிலா", "தேன்பிலா", எனவும், தென்னைமரங்களை "கட்டைக்கண்டான்", "எண்ணைகண்டான்", "அடைப்பான்", "கிணற்றடியான்" எனவும் பரம்பரை வழியாக அழைத்து வருகின்றனர்.

இவற்றை எல்லாம் பார்க்கும் போது எம் வன்னி மக்கள் மண்ணை மட்டுமல்ல, மண்ணில் உள்ள அனைத்தையும் நேசித்தார்கள் என்பதைக் காணமுடிகிறது.

பாரம்பரிய வன்னி மக்களுடைய வாழ்க்கையில் நம்பிக்கை தான் அவர்களுடைய வாழ்க்கையின் மூலாதாரமாக இருந்திருக்கிறது. பெரும்பாலான மக்கள் விவசாயத் தொழிலில் ஈடுபடுவதால் அவர்கள் தங்கள் தொழிலை செய்யும் போது அதில் ஒரு நம்பிக்கை வைத்தார்கள். அதாவது தெய்வ வழிபாட்டு நம்பிக்கை அதன் அடிப்படையிலேயே தங்கள் தொழில்களை செய்து வந்துள்ளனர். இன்றும் அதையே செய்து வருகின்றனர். கிராமப் பகுதிகளிலே ஆங்காங்கு குளக்கரை, வயல் தோட்டங்களை அண்டிய பகுதிகளிலே கல்லினாலான தெய்வங்களை வைத்து வழிபட்டு வந்தனர். இவற்றிற்கு மண்டபங்களோ, குடிசைகளோ எதுவும் அமைப்பதில்லை. இவை ஏதாவது ஒரு மரத்துக்கு கீழேயே காணப்படுகின்றன. இவற்றில் இங்குள்ள மக்கள் அசையாத நம்பிக்கை வைத்துள்ளனர். பயிர்ச்செய்கை ஆரம்ப காலங்களிலும், அறுவடைக் காலங்களிலும் மக்கள் அத் தெய்வங்களுக்கு நேர்த்திக் கடன், நன்றிக் கடன் என்று பூசைகள், படையல்கள் செய்வார்கள். இவற்றிற்கு நிறமணி, மடை, பொங்கல், அமுது படைத்தல் போன்ற சொற்களை உபயோகித்தார்கள். இதற்குத் தேவையான பூசைப் பண்டங்களை அவர்கள் வீடுகளிலேயே செய்து கொண்டு சென்று அம் மரங்களுக்கு கீழேயே வாழை இலையில் கற்பூரம் கொழுத்தி வழிபட்டு அந்தத் தெய்வங்களுக்கு நன்றிக்கடன் செலுத்துவார்கள். இத் தெய்வங்களுக்கு நித்திய பூசையோ அல்லது தனிப்பட்ட பிராமணரோ இல்லை. யாராவது ஒரு ஆண்பிள்ளையினால் இந்த பூசை செய்யப்படும். இது தவிர பேய், பிசாசு என்ற நம்பிக்கையும் அவர்களிடத்தில் இருந்தது. இதனால் நூல் போடுதல், தண்ணி ஓதுதல், குழை அடித்தல், திருநீறு போடுதல், பலி கொடுத்தல் போன்ற சொற்பதங்களையும் உபயோகித்தனர்.

எல்லோருடைய வீட்டு வாசல் படிகளிலும் ஓலையாலான அல்லது சுரக்குடவையில் வெட்டப்பட்ட திருநீற்றுக் குட்டான் ஒன்று கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். ஏதாவது நேர்த்திக்கடன் என்றால் அதனுள் காசு போட்டு வைப்பார்கள். பின்பு நேர்த்திக் கடனை நிறைவேற்றுவார்கள். ஆரம்ப காலங்களில் பெண்களை வயலுக்குள் அனுமதிப்பதில்லை. காரணம் வயலின் புனிதம் கெட்டு விடும் என்ற நம்பிக்கை. இப்படியாக அவர்களின் வாழ்க்கை நம்பிக்கையின் அடிப்படையிலேயே இருந்து வந்திருக்கிறது.

இவற்றை எல்லாம் நோக்கும் போது வன்னிப்பகுதி மக்கள் பிற வழக்குகள் கலக்காத தனித்துவமான பேச்சு வழக்குகளையும் அதில் ஆங்கில மொழித் தாக்கமோ, பிற மொழிக் கலப்புகளோ அற்ற வழக்குகளையும் கையாண்டு வன்னிப் பேச்சு வழக்கு என்ற ஒரு மொழி மரபை பேணி வன்னிப் பண்பாட்டுக் கருவூலங்களை நன்கு பாதுகாத்து வந்துள்ளனர். ஒரு புனிதமான, யதார்தமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர் எம் வன்னி மக்கள் என்பதை மொழி வழக்குகள் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது. ஆனால் இன்று ஆங்கில மொழி கலப்பு வன்னிப் பேச்சுக்களிலும் கலந்துள்ளதை காணமுடிகிறது. இவற்றை அழியாமல் பேணிப் பாதுகாப்பது எம் கடைமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ELLESMERE

## Fish & Meat Market


**Direct Importers of Fresh Fish from Florida, Trinidad and Sri Lanka.**

**Mutton, Beef, wild Boar Meat, Fresh and Frozen Chicken, Country Chicken, Chicken Legs, Sea Food, Shrimps, Crabs, Squids, etc.......**

**ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, மரை இறைச்சி, காட்டுப்பன்றி இறைச்சி, ஊர்க்கோழி, கடலுணவு, இறால், நண்டு மற்றும் பற்பல வகைகள்**

**கிடைக்கும் இடம்:**
**Ellesmere Fish & Meat Market.**
1243 Ellesmere Road, Scarborough, Ontario, M1P 2X8. (Ellesmere/Midland)

Tel: (416) 285-8558



# Yarlnagar trade'a'rs



- ◊ இலங்கை-இந்திய உணவுப் பொருட்கள்
- ◊ உடன் மரக்கறி வகைகள்
- ◊ திருமணம் மற்றும் விசேட பூசைக்குரிய மாவிலை, வாழையிலை, அறுகம்புல், முடித்தேங்காய் வாசனைத் திரவியங்கள்
- ◊ இறக்குமதி செய்யப்பட்ட சுமித்மிக்சி(Smith Mix), றைஸ் குக்கர்(Rice Cooker)
- ◊ ஓடருக்கு பலகார வகைகள்

**மக்கள் தேவையுணர்ந்து மேற்குறிப்பிட்ட பொருட்களைத் தரமான முறையிலும், குறைந்த விலையிலும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே தரிப்பு ஸ்தாபனம்.**

யாழ்நகர் ரேடர்ஸ்
1239 எல்ஸ்மயர் வீதி
ஸ்காபரோ, ஒன்ராறியோ, M1P 2X8

தொலைபேசி: (416) 285-0587




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டாரவன்னியன் இயக்கம்

கலாகீர்த்தி, பேராசிரியர், கலாநிதி,
பொன். பூலோகசிங்கம்.

எழுவான் திரிகோணமலை மாவட்டம், படுவான், மன்னார் மாவட்டம், வடக்கு, யாழ்ப்பாணக் கடலேரி, தெற்கு, அருவியாறும், நுவரகலவிய (அநுராதபுர) மாவட்டமும் இந்த நான்கு எல்லைகளுக்குள்ளே பரந்துகிடந்தது வன்னிநாடு. அதன் வடபகுதி, முல்லைத்தீவு மாவட்டம், தென்பகுதி, வவுனியா மாவட்டம். கடல்சார் பிரதேசங்கள், பள்ளத்தாக்குகளாக அமையினும், அவை உள்நாடு நோக்கி உயர்ந்துயர்ந்து நடுவிலே பீடபூமி ஒன்றினை உருவாக்கியுள்ளன. மலைகள் என்று கூற முடியாவிட்டாலும், குன்றுகளும், குன்றுத் தொடர்களும் ஆங்காங்கே பீடபூமிக்கு ஆரஞ்சூட்டி அலங்கரிக்கின்றன. விளாங்குளம்(வவுனியா) குளக்கட்டில் நின்று வியக்கக் கூடியதாகத் தோன்றும் மண்டுக்கோட்டைத் (மடுக்கந்தை) தொடரும், அதனைத்தழுவப் பெரியபுளியங்குளத்தில் இருந்து நீளும் தொடரும் வவுனியா மாவட்டத்திலே குறிப்பிடத்தக்கவை. பிறிதொன்று ஈறற்பெரியகுளத்திலே துருத்திக் கொண்டு முடியும் தொடர். முல்லைத்தீவு மாவட்டத்திலே தென்பகுதியில் குருந்து மலை, மண்கிண்டி மலை, கும்பகர்ணன் மலை, ஒதியமலை என்பன அணி செய்கின்றன. துணுக்காயிலிருந்து கொக்குத்தொடுவாய்வரை நீளும் தொடர் புலிபாஞ்ச கல்லிலே முடிவடைகின்றது.

செட்டிகுளப் பகுதியிற் கப்பாச்சியை ஒட்டிய வௌவாலை நீங்கலாக நன்னீர் கேணிகள் இயற்கையாக வன்னியில் தோன்றியுள்ளன என்பதற்கில்லை. ஆனால் செயற்கையான குளங்களும், குட்டைகளும் வன்னியிலே ஏராளம். தண்ணீரூற்று, முள்ளியவளை, குமாரபுரம், என்னும் கிராமங்களிலே நல்ல நீர்ச்சுனைகள் வயற்பாசனத்திற்கு உதவுமளவிற்கு சுரந்துகொண்டிருக்கின்றன. முல்லைத்தீவுப் பிரதேசத்திலே நன்னீர், உவர்நீர் வில்லுகளும் காணப்படுகின்றன. இவற்றிலே பல கோடையிலே வற்றிவிடினும், முல்லைத்தீவு, செம்மலைப் பாதையிலே கோடையிலும் வற்றாத ஓரிரு வில்லுகள் இருந்தன. முல்லைத்தீவு கடலோரத்திலே சுண்டிக்குளத்திலிருந்து கீழ்நோக்கி எத்தனையோ கடலேரிகள், சாலை, மாத்தளன், நந்திக்கடல். செம்மலை, கொக்கிளாய் என்னபன அவற்றிலே பெரியவை. சுண்டிக்குளம், மாத்தளன், அம்பலவன்பொக்கணை. செம்மலை, அளம்வில், குமுழமுனை, பெரும் உப்பளங்களைக் கொண்டிருக்கின்றன.

வறள்வலயமான வன்னியின் ஆறுகள் மாரியிலே பெருக்கெடுத்துப்பாய்வன. கோடையிலே அருவியாகவும் ஆற்றொழுக்காகவும், குட்டையாகவும் கருமணல் வெண்மணல் திடல்களாகவும் காட்சி தருவன. வன்னியின் கனகராயன் ஆறு சேமமடுவிலே தோன்றி ஆனையிறவிலே போய்விழுகின்றது. நெத்தலியாறு முதலாம் வேறுமோரிரு ஆறுகளும் யாழ்ப்பாணக் கடலேரியிலே சங்கமமாகின்றன. வங்காளவிரிகுடாவில் பேராறு, நாயாறு, பறையனாறு (மாஓயா), போன்றவை கலக்கின்றன. அருவியாறு (மல்வத்தோயா), பறங்கியாறு. பாலியாறு என்பன அராபிக்கடலில் சேர்கின்றன.

மாரியின் நீர்வளத்தைப் பேணி, அதனைத் தேக்கங்களிலே அகப்படுத்தி, பாசனத்துக்குச் சேமித்து, குளங்களாக நிறுத்தி வறள் வலயத்தினைப் பொன் விளையும் பூமியாக வன்னி மக்கள் மாற்றியுள்ளனர். இரணைமடு, வவுனிக்குளம், முத்தையன்கட்டு, தண்ணிமுறிப்பு, கனகராயன் குளம், மாமடு, மருதமடு, ஈறற்பெரியகுளம், பெரிய இராட்சதக் குளம் (கட்டுக்கரைக் குளம்) என்று அடுக்கிக் கொண்டே போகலாம். 1890ம் ஆண்டிலே வவுனியா மாவட்டத்திலே 533 குளங்களும், முல்லைத்தீவு மாவட்டத்திலே 178 குளங்களுமாக 700க்கு மேற்பட்ட குளங்கள் நிலவின.

குளநீர் சேதாரமாக்கப்படாத பட்சத்திலே காலபோகம், இடைப்போகம், சிறுபோகம் என்ற முப்போகமும் சில குளங்களின்கீழே செய்யக் கூடியதாக இருந்திருக்கின்றது. மானாவாரி நிலங்கள் புழுதி விதைப்புக்கு உகந்ததாக அமைய, குளக்காணிகள் சேத்து விதைப்புக்கு உரியதாயின. பொதுவாக மானாவாரி நிலங்கள் மணல் தறையாகவோ அல்லது உவர்த் தறையாகவோ அமைய, குளக்காணிகள் களித் தறையாகவோ அல்லது இருபாட்டுத் தறையாகவோ விளங்கின. இதனால் குளக்காணிகளின் விளைச்சல் அதிகமாக இருந்தன.

வயல் வெளிகளை அடுத்த காடுகளிலே கருங்காலி, முதிரை, யாவரணை, சமண்டலை, மருது, பாலை, வேம்பு, வீரை முதலாம் எத்துனை பயன்மிக்க பெறுமதிமிக்க மரங்கள் செழித்து வளர்ந்துள்ளன. அவற்றோடு யானை, சிறுத்தை, காட்டுப்பன்றி, கரடி, மான், மரை, முதலாம் வனவிலங்குகளும் பெருகின. நீர்நிலைகளிலே எருமைகளும், முதலைகளும், பல்வேறுவகை மீன்களும் பல்கிப் பெருகின. பசுமாடுகள் பட்டி,பட்டியாக நின்றன. இயற்கைவளத்தால் வஞ்சிக்கப்படாத வன்னி , இலங்கை காலனித்துவ ஆட்சியிலிருந்து 1948ம் ஆண்டில் விமோசனமடைந்தபோது. எப்படிக் காட்சியளித்தது? பெருங்காடுகள் விழுங்கிய குக்கிராமங்களை - தாவாடிக்கிராமங்களை - உடையதாய் மக்கள் தொகை அருகியதாய், உடல் உழைப்பினையே நம்பி வாழ்ந்தும் இகரபரத்திலே சலித்து நின்ற சமுதாயத்தினைத் தாங்கியதாய் தோற்றம் தந்தது. இந் நிலைமைகட்கான காரணங்கள் யாவை? பின்னோக்கிப்பார்க்க வேண்டும்.

வன்னி நாடு, வடக்கே பதினான்காம் நூற்றாண்டிலே உருவாகிய ஆரியச் சக்கரவர்த்திகளின் அரசுக்கும், தென் திசை நோக்கிச் சென்ற சிங்கள அரசுக்குமிடையே - முண்டாக - இடைநிலைப் பிரதேசமாக - அமைந்திருந்தமை அதன் நிலைப்பாட்டினை வெகுவாகப் பாதித்தது. ஆரியச் சக்கரவர்த்திகள் வன்னியைத் தம்மாணைக்கு உட்பட்ட பிரதேசமாக வைத்திருக்க விரும்பினர். ஆனால் அது வலுவுள்ள வரோதயசிங்கை ஆரியன் போன்ற ஒரு சில ஆரியச் சக்கரவர்த்திகளாலேயே ஆகக்கூடியதாக இருந்தது. அவர்கள் தெற்கே படையெடுத்த காலங்களிலும் வன்னியிலே பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டன. மார்த்தாண்டசிங்கையாரின் (1359) கம்பளை அரசின்மீது படையெடுத்தபோதும், திரிகோணமலை வன்னிமைத் தலைமையை 1551,1552ல் இழந்து நின்றகாலை சங்கிலி அதனைச் சுவீகரிக்கப் புறப்பட்டபோதும் வன்னியின் அமைதிக்கும், உடைமைக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். கோட்டை அரசின் பிரதிநிதி செண்பகப்பெருமாள் 1450லே யாழ்ப்பாண அரசினைத் தாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிமைப்படுத்துவதற்கு முன்பு வன்னியரை அடக்கி முன்னேறியதாகக் கூறப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பிரதேசம் போத்துக்கேயர், ஒல்லாந்தர் வசம் சிக்கியபோது (1620-1795), அவர்கள் கண்டியரசுக்கு வன்னியர் உதவாது இருப்பதிலே மிகுந்த அக்கறை செலுத்தினர். இதனால் வன்னியரை அதிகம் தம் எதிரணிக்குள் தள்ளாமல் பார்த்துக் கொண்டனர். ஆயினும் அந்தக் கொள்கை அதிகம் பலனளிக்கவில்லை. இதனால் 1782ல் ஒல்லாந்தர் திட்டமிட்டு வன்னி நாட்டைத் துவம்சம் செய்தனர். இந்நிகழ்ச்சியை ஆங்கிலேயர் கூறி முதலைக் கண்ணீர் வடிக்கும்போது ஒல்லாந்தர் எவ்வளவு மூர்க்கத்தனமாக வன்னியின் அழிவுக்கு வழிகோலியிருப்பர் என்பதைக் கூறிவேண்டியதில்லை. ஆங்கிலேயர் காலணித்துவ ஆட்சியின் (1796-1947) ஆரம்பத்திலேயே கண்டியரசுக்கு வன்னியர் துணைபோவதை முற்றாகத் தடுக்க முனைந்தனர். தமிழ் வன்னிகளுக்கும், சிங்கள வன்னிகளுக்கும் இடையே இருந்த உறவு கண்டி அரசுக்குச் சாதகமாய் முடிந்தது. பண்டாரவன்னியன் 1811லே உடையாவூர் போரிலே படுகாயமுற்றுப் பனங்காமத்திலே உயிர் துறந்தபோது ஆங்கிலேயர் கண்டியருசுக்கு வன்னியர் துணைபோவதை முற்றாக நீக்கிவிட்டனர். வன்னி நாட்டினையும் சீரழித்து விட்டனர். அடங்கப்பற்று அடங்கிவிட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னியை ஊடறுத்து ஏனைய இடங்களுக்குச் சென்ற ஆங்கிலேய படைப்பிரிவுகளின் பாதையிலே எதிர்ப்பட்ட மக்களும் அவர்களுடைய உடைமைளும் காலா காலமாக பெரும் அழிவுக்குட்பட்டன. இதனால் அவர்கள் போகும் பாதைகளைவிட்டு மக்கள் ஒதுக்குப்புறங்களை நாடி ஒளித்து வாழவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

வன்னி முண்டாக - இடைநிலைப் பிரதேசமாக - அமைந்தததால் பல்வேறு இன மக்களும் வன்னியிலே குடியேறும் சூழல் உருவானது. தெற்கேயுள்ள நுவரகலவிய பகுதியில் இருந்து சிங்கள மக்கள் வவுனியா பகுதியிலே வந்து குடியேறினர். மண்டுக்கோட்டை (மடுக்கந்தை), ஈறற்பெரியகுளம், மாமடு, ஒலுக்குளம், மருதமடு முதலிய கிராமங்கள் சிங்கள மக்கள் வாழ்கிராமங்களாயின. சூடுவெந்தபுலவு, பட்டானிச்சி புளியங்குளம், ஆனைவிழுந்தான், சின்னச்சிப்பிகுளம், ஆண்டியாபுளியங்குளம், மாங்குளம், ஆகிய வவுனியாக் கிராமங்கள் இஸ்லாமியர் வாழும் கிராமங்களாயின. நீர்கொழும்பு, பேசாலை, முதலாம் இடங்களிலிருந்து கடற்தொழில் செய்ய வந்தவர்களிலே பலர் முல்லைத்தீவின் கரையோரக் கிராமங்களிலே வசித்து வருகின்றனர். பிற்காலத்திலே யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்தும், மலைநாட்டிலிருந்தும் பல குடும்பகள் வன்னியிலே வந்து குடியேறியுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.

வன்னி நாட்டின் மக்கள் வாழ்க்கை பயிர்ச் செய்கையை மையமாகக் கொண்டது. வில்லுகளும், கடலேரிகளும், கடல் பரப்பும் இருந்தபோதும் மீன்பிடித்தல் முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை. நீர்கொழும்பு. போசாலை முதலிய இடங்களிலிருந்து மீனவர் மீன்பிடிக்கும் பருவத்திலே முல்லைத்தீவிலே வந்து தங்கியிருந்து தொழில் செய்தனர். வன்னி மக்கள் குளங்களிலும், குட்டைகளிலும், ஆறுகளிலும் தமக்குத்தேவையான விரால், பனையேறி முதலானவற்றைப் பிடித்துக்கொண்டனர்.

வன்னியின் பயிர்ச்செய்கை பத்தொன்பதாம் நூற்றாண்டிலே மிகவும் குறைவடைந்தது. பெருமழையாலும், புயலாலும் வன்னியிலே எத்தனையோ குளங்கள் உடைப்பெடுத்தன. 1802. 1805 முதலாக பாரிய புயல்களால் பொங்கியெழுந்த வெள்ளப்பெருக்கு வன்னியின் குளங்களில் சரிபாதிக்குமேல் முறிப்பெடுத்தன. 1890லே இரு மாவட்ங்களிலும் உள்ள 711 குளங்களிலே 479 குளங்கள் உடைப்பெடுத்தன என்று ஜே. பி. லூயிஸ் கூறியிருக்கிறார் (பக். 153). நீர்ப்பாசனம் குறைந்ததினால் முன்பு பயிர்விளைந்த கிராமங்கள் பல தாவாடிக் கிராமங்களாயின. வரட்சியைத் தாக்குப்பிடிக்க முடியாமல் பயிர்ச்செய்கை வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அடிக்கடி தோன்றிய மாட்டு நோய்களால் விதைப்புக்கு மாடுகள் இல்லாத நிலைமை தோன்றியது. இந்தப் பற்றாக் குறையான காலத்திலும் காலனித்துவ ஆட்சியின் படையினருக்கு ஒவ்வொரு குடும்பமும் எட்டிலொரு பங்கு மாட்டினைச் சொற்ப விலைக்குக் கொடுக்க வேண்டியிருந்தது. வாரக் குடிகளும், இடம் பெயர்வதாலும் வேறு வேலைகளை நாடுவதாலும் குறைந்து கொண்டு சென்றன. விதை நெல்லுப் பற்றாக்குறையும், பயிர் நோய்களும் கூட பயிர்ச் செய்கையை அதிகம் பாதித்தன. நெற்களஞ்சியமாக விளங்கிய வன்னி பற்றாக்குறையினால் திண்டாடியது.

விளை நிலங்கள் சுருங்க, குளங்கள் உடைப்பெடுக்க, காடுகள் அவற்றைக் கபளீகரம் செய்தன. இதனால் மனிதசஞ்சாரம் குறைந்தபோது யானை முதலிய காட்டு விலங்குகள் பெருகி. அவற்றாலும் சொற்ப விளைச்சல் சேதத்திற்குள்ளாகின.

வன்னியின் சனத்தொகை போர் நிலைமைகளால் மட்டுமன்றி, அடிக்கடி ஏற்பட்ட பஞ்சத்தினாலும் பாதிப்படைந்தது. வறுமையினாலும் அதனால் உண்டுபட்ட வலுவின்மையாலும் தாக்கப்பட்ட மக்களைக் கொடிய நோய்களும் விட்டுவைக்கவில்லை. மலேரியா நோய் அதிகரித்துக் கொண்டு வந்ததனால் அதனை தாங்கிக்கொள்ளும் ஆற்றல் குறைந்தது. கால்ரா நோய் அடிக்கடி எத்தனையோ கிராமங்களைப் பலி கொண்டது. தமிழ் நாட்டில் இருந்து 1803ம் ஆண்டு முதலாக வீதிகள் அமைக்கவும் 1823ம் ஆண்டு முதலாக பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்கும் கூலிகளைக் கால்நடையாகத் தலைமன்னாரிலிருந்து வவுனியா மாவட்டத்தின் தென்பகுதியை ஊடறுத்துக் கொண்டு சென்றபோது பிராமணாலங்குளம், மடு. பெரியகட்டு, செட்டிகுளம், மாங்குளம், முதலாம் பகுதிகளிலுள்ள உயிர்கள் எத்தனையோ காலராவினால் பாதிக்கப்பட்டன. மடு யாத்திரிகரிடையேயும் காலராநோய் உண்டுபட்டிருக்கிறது. பறங்கி நோயும் புதுக்குடியிருப்பு. கொக்கிளாய் ஆகிய இடங்களில் சில காலம் நீடித்திருந்தது. இவை போதாதென்று கிராமங்களைச் சூறையாடிய கொள்ளையர் மணம் முடித்த பெண்களையும், பெண்பிள்ளைகளையும் கண்டிராச்சியத்திலே அடிமைகளாக விற்பதற்குக் கடத்திச் சென்றிருக்கிறார்கள்.

வர்தகத்தினை நம்பி வாழ்ந்த இஸ்லாமியர் கல்விக்குச் சிறப்பிடம் கொடுக்காமல் ஒரு காலத்தில் இருந்தார்கள். அதேபோல விவசாயத்தினை வாழ்வாகக் கொண்ட வன்னி மக்களும் கல்வியைப்பற்றி அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. மேலும் கல்வி விருத்திக்குரிய வசதிகளும் வன்னியிலே இருக்கவில்லை. மேனாட்டு மிஷனரிமார் கிறிஸ்தவப் பரம்பலுக்கு ஊடகமாகக் கல்விச்சாலைகளைப் போட்டிபோட்டுக் கொண்டு சிற்சில பிரதேசங்களில் நிறுவினார்கள். ஆனால் வன்னியிலே கிறீஸ்தவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பல் அதிகம் ஆதரவு பெற்றிருந்ததாகக் கூறுவதற்கில்லை. இதனால் கத்தோலிக்க கோவில்கள் எழுந்த ஊர்களில் கூட பொதுவாகச் சுதேசிய பாலர் கல்விக்கு அப்பால் எதுவும் இருக்கவில்லை. சேர்ச் மிஷன் சங்கமும் வவுனியா, சூடுவெந்தபுலவு, குமுழமுனை, புதுக்குடியிருப்பு போன்ற சில இடங்களிலே ஆரம்பப் பாடசாலைகளை நடத்தியது. இந்து சபை (Hindu Board) உருவாகிய பின்பு வன்னியிலே ஓரிரு சைவப்பாடசாலைகளும் தோன்றின. ஆயினும் நாற்பதுகளிலே குறிப்பிடத்தக்க கல்விச்சாலை எதுவும் வன்னியில் இல்லை. ஐம்பதுகளை ஒட்டித்தோன்றிய வித்தியானந்தாக் கல்லூரி ஒன்றுதான் க.பொ.த (சாதாரண) தேர்வு வகுப்பினை வன்னியிலே நீண்ட காலம் நடாத்திய கல்லூரியாகும். வவுனியா மகாவித்தியாலயம் முதலானவை அறுபதுகளிலிருந்தே அவ்வகுப்பினை நாடாத்தத் தொடங்கின.

காலனித்துவ நிர்வாகத்திலிருந்து தொடர்ச்சியாக, வன்னியின் நிர்வாகம், தனிப்பட்ட பண்பாட்டு நிலையிலுள்ள சமுதாயத்தினையுடையது என்பதனை மனங்கொண்டு நடாத்தப்பெறவில்லை. ஆரம்பித்து "அமில்டார்கள்" எவ்வளவு வரி அறவிடமுடியுமோ அவ்வளவு அறவிடுவதிலேயே கவனம் செலுத்தினர். யாழ்ப்பாண நிதி, வர்த்தக அதிபரின் கீழ் சிறிது காலம் (1806-1807) விடப்பட்ட வன்னிப் பிரதேசம் தனி மாவட்டமாகச் சில வருடம் இயங்கி (1807-1818) பின்பு யாழ்ப்பாணம், மன்னார், திரிகோணமலை மாகாணங்களிடையே கூறுபோடப்பட்டது. முல்லைத்தீவும், வவுனியாவும் ஒரே உதவி அரசாங்க அதிபரின் கீழ் இரு மாவட்டங்களாக 1880களிலே மீண்டும் அமைக்கப்பெற்றது. அப்பொழுதுதான் சில பெரிய குளங்களும், சிறிய குளங்களும் புனருத்தாரணம் செய்யப்பெற்றன. ஆயினும் எத்னையோ குளங்களைக் காலணித்துவ அரசு செலவின் காரணமாகத் திருத்தம் செய்யாமல் விட்டுவிட்டது.

இலங்கையிலே 1948ம் ஆண்டிலே பாராளுமன்றம் தோன்றுவதற்கு முன்பு சட்டசபை (State council) 1931ம் ஆண்டு முதல் நிலவியது. அதற்கு முன்பு சட்ட நிரூபணசபை (Legislative Council) ஒன்று நிலவியது. அதற்குச் சேர். பொன்னம்பலம் இராமநாதன் 1911ம் ஆண்டிலே "கற்ற இலங்கையர்" பிரதிநிதியாகத் தெரிவு செய்யப் பெற்றவர். இரு சபைகளையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்போது தம்பையா முதலியார் சபாரெத்தினம் ஒருவரே வன்னிப்பகுதியைப் பிரதிநிதித்துவப் படுத்துபவராகக் காணப்பட்டார்.

1948ம் ஆண்டிலே விடுதலை வந்தபோது இலங்கையின் பல இடங்களிலும் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. ஆனால் வன்னி மக்கள் பொட்டிழந்து, பூவிழந்து நின்றார்கள். விடுதலையின் தாற்பரியத்தினை உணரமுடியாது நின்றார்கள். வன்னியிலே அப்பொழுது சமுதாயத்தினை வழிநாடாத்தக் கூடிய மத்தியதர வகுப்பு எதுவும் உருவாகவில்லை. கல்வி வசதிகள் இல்லாததால் கல்வி கற்றுத் தம் வாழ்க்கைத் தரத்தினை வகுத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றவர்கள் இருக்கவில்லை. பெரும்பான்மையான வன்னி மக்கள் எளிமையும், வறுமையும் உடையவர்களாக அன்றாடச் சீவியத்தினை நடாத்தும் அளவிலேமட்டும் இருந்தனர். வசதி படைத்த குடும்பத்தவர் சிலரே வன்னியிலிருந்து ஏனைய பிரதேசங்களை நாடிச்சென்று கல்வி கற்று அதன் பயன்களை அனுபவிக்கும் வாய்ப்பினைப் பெற்றனர். அத்தகையோரைக் கைவிரலால் எண்ணிவிடலாம். அவர்கள் தம்முடைய சமுதாயத்திலே செல்வாக்குடைய மத்தியதர வர்க்கத்தினை உருவாக்குவதற்குப் போதுமான எண்ணிக்கையைப் பெற்றிருக்கவில்லை.

1947ம் ஆண்டு முதல் இலங்கைப் பாராளுமன்றத்திற்கு நடந்த தேர்தலில் வன்னிமக்கள் தம்பிரதேசத்திலே இருந்து ஒருவரைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கவில்லை. சட்டசபைக்கு முன்பு ஸ்ரீபத்மநாதன், தியாகராசா, ஞானமுத்து போன்றோரைத் தெரிவுசெய்ததுபோல சி. சுந்தரலிங்கத்தினைத் தெரிவு செய்தனர். அவர் 1952 மே, 1956 ஏப்பிரல், 1960 மார்ச் தேர்தல்களிலும் வெற்றிபெற்று வவுனியா, முல்லைத்தீவுப் பிரதிநிதியாக பன்னிரண்டு வருடங்கட்கு மேலாக இருந்தார்.

சுந்தரலிங்கம் அவர்கள் கொழும்பினை வாசஸ்தலமாகக் கொண்டவர், அங்கிருந்து மாதத்திலே இருமுறை சனி, ஞாயிறுகளிலே அவர் வன்னிக்கு விஜயம் செய்வார். மருதானையிலிருந்து வெள்ளியிரவு சரக்கு வண்டியிலே புறப்பட்டுச் சனி காலை வவுனியா வந்து சேர்வார். வவுனியாவை சனிக்கிழமை கவனித்துவிட்டு இரவு நெடுங்கேணி வழியாகத் தண்ணீரூற்றுக்குச் செல்வார். முல்லைத்தீவு மக்களை ஞாயிறன்று கவனித்துவிட்டு மாங்குளம் சென்று இரவு வண்டியிலே கொழும்புக்கு திங்கட்கிளமை காலையில் வந்துவிடுவார். வவுனியா, முல்லைத்தீவு - மக்களுக்கு பிரத்தியேகமாக எத்தனையோ பிரச்சனைகள் எழுந்திருக்கின்றன. உள்ளூர் ஆசிரியர்களுக்கு இடம் கொடுத்தே வேற்றிடத்து ஆசிரியர்கட்கு இடங்கொடுக்க வேண்டுமென்ற நியதியைப் பாராளுமன்றப் பிரதிநிதி ஆதரிக்காததனால் நயினாமடுவில் 1959லே கூட்டம் கூட்டி, மந்திரிக்கு அனுப்பிய தூதுக்குழு பாராளுமன்றப் பிரதிநிதி ஆதரவு இல்லாததால் வன்னியில் மட்டும் தோல்வி கண்டது. வவுனியா பட்டினசபைப் பிரிவுக்குள்ளே நிர்வாகிகள், பாரம்பரியமாக வாழ்ந்து வந்த வன்னி மக்களுக்கு வதிவிடக்காணிகள் வழங்காமல் அடாவடித்தனம் செய்தபோதும் பாராளுமன்றப்பிரதிநிதி பராமுகம் காட்டினார். தமக்கென ஒரு சொந்தப் பிரதிநிதி வேண்டும் என்ற உணர்வு வன்னிமக்களுக்கு உருவாகியது. இதற்கு அப்போது உருவாகிக் கொண்டிருந்த மத்தியதர வர்க்கமும் ஒரு காரணமாகும். வெளியூர் சென்று கல்விகற்று அரசாங்கசேவையிலும், கல்விச்சேவையிலும், ஏனைய தொழில்துறைகளிலும் வன்னியர் சந்ததியினர் இடம்பெறத் தொடங்கிவிட்டனர். பல்கலைக்கழகத்திலே கூட அனுமதி பெறத்தொடங்கிவிட்டனர். இந்தச் சூழ்நிலையிலேதான் முல்லைத்தீவு மாவட்டத்தினைச் சேர்ந்த திரு. தா. சிவசிதம்பரம் அவர்கள் 1960ம் ஆண்டு ஆடித் தேர்தலில் வவுனியா-முல்லைத்தீவு பாராளுமன்றப் பிரதிநிதியானார்.

வன்னி மக்கள் மறந்துவிட்ட தம் வரலாற்றினை - தம் வேர்களை - தம் பாரம்பரியங்களைத் தேடவேண்டிய சூழல் உருவாக்கப்பட்டது. அரசியலில் பெற்றுக்கொண்ட பிரதிநிதித்துவமும் அந்நியரின் அவமதிப்பும் மட்டுமின்றி, தமிழினங்களிடையே தோன்றிய பாரம்பரிய உணர்வலைகளும் இதற்குக் காரணமாயின.

இந்நூற்றாண்டின் ஐம்பதுகளிலே வீரபாண்டிய கட்டப்பொம்மன், புலித்தேவன், மருது பாண்டியர், முதலியோர் அந்நியரை எதிர்த்த வீரப்பெருமக்களாகத் தமிழ் நாட்டிலே பிரபல்யப்படுத்தப்பட்டனர். 1959ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டிலே சிவாஜிகணேசன் அவர்கள் வீரபாண்டிய கட்டப்பொம்மனாக ராஜகம்பீரம், ஆத்மீகம், ஆண்மைவீரியம், செயல் தீவிரம் என்பவற்றையெல்லாம் வெள்ளித்திரையிலே புலப்படுத்தி தமிழ் உணர்வலைகட்கு வேகம் அளித்தார். 1968ம் ஆண்டு தைமாதம் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு இலங்கையரல்லாத தமிழ்த் தொண்டர்கட்குச் சிலையெடுத்துக் கௌரவித்தபோது, இலங்கைத் தமிழர்களிடையேயும் உணர்வலைகளை வீசியெறிந்தன. 1969ம் ஆண்டு ஜுன் 29ம் திகதி யாழ்ப்பாணத்து நல்லூரிலே முருகன் கோவிலுக்கு அருகிலே ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலருக்கு (1822 - 1879) மணிமண்டபம் நிறுவி அவருடைய சிலையும் எழுந்தருளிவிக்கப்பட்டது. சுவாமி விபுலானந்தரின் (1892 - 1947) திருவுருவம் அவர் அவதரித்த மட்டக்களப்பு காரைதீவிலே 1969ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8ந் திகதி நிறுவப்பட்டது.

இந்தக் காலகட்டத்திலே வன்னியர் தம் பாரம்பரியங்களுக்குச் சிறப்பும், பெருமையும் தரக்கூடிய தலைவன் ஒருவனை இனங்கண்டு கொண்டனர். அவ்வினங்காணல் சிறுவித்தாகத் தோன்றிப் பெருவிருட்சமாக உயர்ந்து பரந்து பெருமிதத்தினை உண்டுபண்ணியது. ஆம் பண்டாரவன்னியன் இயக்கம் அறுபதுகளிலே கால்கொண்டு எண்பதுகளிலே பூரணத்துவமடைந்தது.

அறுபதுகளின் ஆதியிலே, கற்சிலைமடுவிலே கப்டன் வொன் றிபேர்க் பண்டாரவன்னியனை வெற்றிகொண்டதைக் கூறும் நடுகல்லைக் கண்ட ஆர்வத்தினாலே, முல்லைமணி வே. சுப்பிரமணியம் அவர்கள் பண்டாரவன்னியன் வரலாற்றுச் செய்திகளைத் தேடினார். அவருக்குக் கிடைத்த செய்திகளை வைத்து அவர் 1964ம் ஆண்டிலே இலங்கைக் கலைக் கழகம் நடாத்திய நாடகப் போட்டிக்குப் பண்டாரவன்னியன் நாடகத்தினை எழுதிச் சமர்ப்பித்தார். பரிசுபெற்ற அந்த நாடகம் பல்வேறு இடங்களிலும் மேடையேறி ஆதரவு பெற்றது. வன்னி நாட்டின் வீரபுருஷனை அறிமுகஞ் செய்துவைத்த பெருமை முல்லைமணி வே. சுப்பிரமணியத்துக்கே உரியதாகும். 1968ம் ஆண்டில் முள்ளியவளையிலே பண்டாரவன்னியன் கழகம் உருவானது. அதன் தலைவர் முல்லைமணி வே. சுப்பிரமணியம் அவர்கள், இணைச் செயலாளர் இரா. வரதராஜா அவர்கள், அதன் போஷகர் தா. சிவசிதம்பரம் அவர்கள். (பண்டாரவன்னியன் விழாமலர், வவுனியா மாவட்ட அபிவிருத்திச்சபை வெளியீடு, 1982 , பக், 87)

பண்டாரவன்னியனது வரலாற்றை மட்டுமன்றிப் புகழ் பூத்த வன்னிமண்ணின் காவலர்களது வரலாறு பற்றியும், வன்னியின் வரலாறு பற்றியும் ஆராய்ச்சி செய்வதும் அறிமுகம் செய்வதுமே நோக்கமாகக் கொண்டு இக் கழகம் இயங்கியது.

1968ம் ஆண்டு ஐப்பசி மாதக் கடைசியிலே பண்டாரவன்னியன் விழா கற்சிலைமடுவிலே கொண்டாடப்பட்டதைத் தொடர்ந்து வருடாவருடம் பண்டாரவன்னியன் வீழ்ந்த அந்த நாளிலே, அவன் பெருமையை - சிறப்பினை எண்ணிக் கௌரவிக்கும் முகமாகப் பண்டாரவன்னியன் கழகம் விழாவெடுத்து வந்தது.

1970ம் ஆண்டு ஆடி மாதம் 24ம் திகதி முள்ளியவளை வித்தியானந்த கல்லூரி அரங்கிலே முல்லைமணி வே. சுப்பிரமணியம் அவர்களின் பண்டாரவன்னியன் நாடகம் வெளியிடப் பெற்றது. அந்த நாடக வெளியீட்டு விழாவினை, கிளிநொச்சியிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "கண்ணியம்" என்ற பெயர் தாங்கிய பத்திரிகை கண்ணியம் மறந்து கேலிசெய்ததோடு தலைமைதாங்கிய எங்களையும் தமிழறியாத பெருமாளாக நகையாடியது.

ஆங்கில ஏகாதிபத்தியத்தினை ஈழத்தின் தமிழ்ப்பிரதேசத்திலே தன் இறுதிமூச்சுவரை நிலைகுலைய வைத்தவன் பண்டாரவன்னியன். கண்டிராச்சியத்தினை ஆங்கிலேயர் கபளீகரம் செய்ய முற்பட்டபோது கண்டியரசனுக்கு படையனுப்பி உதவியவன் பண்டாரவன்னியன். கண்டியரசினைக் கைப்பற்றவேண்டுமானால் அதற்குக் கிடைக்கும் வெளியுதவிகளை முற்றாக நீக்கவேண்டும் என்று ஆங்கிலேயரை துணிந்து செயற்படவைத்தவன் பண்டாரவன்னியன். ஆங்கிலேயரை முல்லைத்தீவுக் கோட்டையிலிருந்து 1803ம் ஆண்டிலே ஓட வைத்தவன் பண்டாரவன்னியன். அவ்வாண்டு ஐப்பசி மாதம் 31ம் திகதியிலே திருகோணமலை, யாழ்ப்பாணம், மன்னார் என்னும் மூன்று திசைகளிலும் இருந்துவந்த மூன்று படையணிகளால் தோல்விகண்டபோது எதிரியே தோற்கடித்த விபரத்தினைப் பெருமையாகக் கல்லிலே பொறித்துவைக்குமளவிற்கு அசுர சூரனாக விழங்கியவன் பண்டாரவன்னியன். 1810ம் ஆண்டிலும், 1811ம் ஆண்டிலும் தொடர்ந்து ஆங்கிலேயர் ஏகாதிபத்தியத்திற்குத் தலையிடி கொடுத்தவன் பண்டாரவன்னியன். உடையாவூர்ச் சண்டையிலே 1811ம் ஆண்டிலே படுகாயமுற்று பனங்காமத்திலே உயிர்துறக்கும்வரை ஆங்கிலேயருக்குப் பணியாதவன் பண்டாரவன்னியன். அவனோடு அடங்காப்பற்று அடங்கிவிட்டது. இத்தகைய வீரபுருஷனை அல்லாமல் வன்னிமக்கள் வேறொருவனை உதாரணபுருஷனாகக் கொள்ளமுடியுமா?

1960ம் ஆண்டுமுதல் 1970ம் ஆண்டுவரை வன்னிமக்களிடையே கெம்பிய பெருமிதம், 1970 - 1977ம் ஆண்டுக்கட்டத்திலே பின்வாங்க வேண்டியிருந்தது. அரசியல் சதியினால் பிரதேச உணர்வுகள் கண்டுகொள்ளப்படாத கட்டமது. உலையேற்றிய பானை கொதித்துக்கொண்டிருந்த கட்டமது. அந்நிலை 1977ம் ஆண்டு ஆடித் தேர்தலால் மாறியது. அத்தேர்தலில் முல்லைத்தீவும், வவுனியாவும் தனித் தனித்தேர்தல் தொகுதிகளாப் பங்குபோடப்பட்டன.

வவுனியா 1982ம் ஆண்டு ஆடி மாதம் 16ம், 17ந் திகதிகளில் விழாக்கோலம் பூண்டது. கச்சேரிவளவிலே பண்டாரவன்னியன் வீரச்சிலை 16ம் திகதி திரைநீக்கம் செய்யப்பட்டபோது வன்னிமக்கள் நெஞ்சுவிம்ம இறும் பூதெய்தினர். அந்த நிகழ்ச்சியினை இன்று நினைக்கும்போதும், பசுமையாகவேயுள்ளது. அடுத்தநாள் 17ந் திகதி சனிக்கிழமை வவுனியா நகராண்மைக் கழகமண்டப மைதானம் பல்வேறு நிகழ்ச்சிகட்கும் களமாக அமைந்தது. பண்டாவன்னியன் நினைவுச் சொற்பொழிவை ஆற்றும் கௌரவம் எமக்கு அளிக்கப்பட்டது. அந்தப்பேச்சிலே முன்வரிசையிலே இருந்த எதிக்கட்சித்தலைவரை நோக்கி நாங்கள் காக்கைவன்னியர் அல்லர் உங்களிடையேதான் காககைவன்னியர்கள் இருந்தனர். அவர்களை நீங்கள் இனங்காணவில்லை. சுவாமி ஞானப்பிரகாசர் கண்டிருக்கிறார். என்று எள்ளி நகையாடியது இன்னும் ஞாபகத்திலுண்டு.

"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவவானில் நனிசிறந்தனவே"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாராஜாஸ் (F)பான்ஸி பலஸ்

கலை, கலாச்சார பாரம்பரியப் பொருட்களின் அழகுக் களஞ்சியம் என எம்மின மக்களால் அங்கீகரிக்கப்பட்ட தமிழர் ஸ்தாபனம்

**DEALERS IN:**

- RELIGIOUS BOOKS
- MUSICAL INSTRUMENTS
- DEVOTIONAL CASSETTES
- BHARATHA NATIYA ITEM
- STICKERS
- WALL HANGINGS
- GREETINGS CARDS
- HANDDY CRAFTS and much more.......
- GAR LANDS
- COSMETICKS
- LADIES ARTICLES





**மகாராஜாஸ் FANCY PALACE**
1235 Ellesmere Road
Scarborough, Ontario.


Tel: (416) 751-2832
Fax: (416) 284-6406

# பயனியர் ரிப்டொப் பஷன்

- சிறுவர், சிறுமியர்களுக்கான சிங்கப்பூர் அமெரிக்க இந்திய உடைகள்!
- நங்கையர் விரும்பும் நவநாகரீக உடைகள்!
- ஆண்களுக்கான Shirts, Pants மற்றும் இதர உடைகள்!
- பெண்களுக்கான பஞ்சாபி உடைகள், ஒப்பனைப் பொருட்கள்!
- Gift Items, விளையாட்டுச் சாமான்கள், எவர்சில்வர் பாத்திர வகைகள்

இவை மட்டுமன்றி உங்கள் தேவைகளுக்கான இதர பொருட்களையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம்.

**PIONEER TIP TOP FASHIONS**
1235 Ellesmere Road
Scarborough, Ontario
Tel: (416) 757 9431






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களங்காணும் வன்னி

-பொன். பார்த்திபன்--சென்னை.

என் இனிய வன்னித் தாயே
நினைத்துப் பார்க்கிறேன்
உன் மடி வாழ்வை
அன்னிய தேசத்தில்
ஆடம்பரச் சிறைகளை
உடைத்துக்கொண்டு-மீண்டும்
உன் கர்ப்பப்பைக்குள்
கருத்தரிக்க மனம் ஆசைப்படுகிறது

பலகையடிக்க சேற்றுழவில்
புளித்துப்போன - உன்
களனிகளின் மண் வாசம்
தரும் சுகம் இனி வருமா?
கொக்கும் நாரையும்
மஞ்சள்க் குருவியும்
கொற்றாமட்டையும் அன்று
என் விளையாட்டுத் தோழர்கள்
கோடைச் செம்புழுதியும்,
மாரிச் செந்நீரும்
பண்டாரவன்னியன்
குல வீர நினைவுகளும்
அடி வானின் கொடி மின்னல்
ஆர்ப்பரிக்கும் இடியோசை
மறத் தமிழன் வானொலியாய்
ஆர்ப்பரித்து உணர்வுகளை
உசுப்பிவிடும்

மானிடனின் ஒலி கேட்டுக்
கவர் எடுக்கும்
மானினமும், மரையினமும்
சொல்லித் தருவதெல்லாம்
செருக்களத்தின் தந்திரத்தை
கரிகாலன் படையணிகள்
கருக் கொள்ளும் கருவறை நீ,
களமான பூமியும் நீ,
அன்று சொன்னார் அடங்காத்தமிழன்
நீர் கால் வைத்த மண்ணில்
வேர்புதைத்த மரங்களும்
போர்தொடுக்கும்
பொய்க்கவில்லை அவர் கூற்று

மண்ணே உன் மைந்தர்
உயிர் குடிக்கும் சிங்களம்
உனைத்தனதாக்க
ஊடறுக்க எண்ணி
உருக்குலைந்து போன
செய்தி உவகை தருகிறது.
பாதை திறக்கிறாராம் பரிதாபம்.
வன்னியே உறுதியின் உறைவிடம் நீ

வந்தாரை வாழவைக்கும்
வன்னி மண்ணே நீ பெற்ற
மைந்தர்கள் தேசத்தை வாழ
வைப்பார்.
வன்னியிலே வாழ்வதற்கு
மணியோடர் தேவையில்லை
மனித வளம் மாண்பு பெறும்
என்ன வளம் இல்லை உன்னிடத்தில்
நீரும், நிலபுலமும், தேனும், மீனும்,
ஆற்றுநண்டும் உன்னிடத்தில்
பஞ்சமில்லை.

உன் களஞ்சியம் காலியானால்
தேசத்தில் உயிர் இல்லை,
சிங்களம் சிதைத்தாலும்
நீ சிறந்து வளர்கிறாய்

நவீன நகரமைப்பும்
கனவூர்திகளும் உனக்குக் களையூட்ட
இன்ரநெற்றிலும் உன் வாழ்வு புகுகிறது.
கல்விச்சாலைகளும் பல்கலைக்கழகங்களும்
வலுவாய் வளர்த்து வனப்புக் கொள்கிறாய்
மாழும் தமிழ் மொழியை காத்து வளர்க்கிறாய்
கூத்தும் நாடகமும் பாட்டும் பரதமும்
பட்டை தீட்டி பரிணாமம் செய்கிறாய்.

விடிந்தபின் தேசம்
உனக்கொரு பாட்டெழுதும்.
இப்போது பாமரன் நான் எழுதும்
பாட்டும் ஒரு பாட்டோ?.

# உயிர்ப்பேன் பலமுறை........

பிறந்த மண்ணில் சிறந்து வாழ நிறைந்த மனமில்லாமலே
சிறந்த கல்வி அமைந்த கருமம் குறுமனதில் தடுத்திங்கே
நிறைந்த கொடுவினை தொடர்ந்து தந்தே உயிர் வருடிட
உறைந்த கொடுமைகள் எரித்திட உயிர்ப்பேன் மறுமுறையும்.

என் தமிழ் மொழி தவித்திட மிதித்த வனை அங்கே
என் தாய் மொழி அழித்திட எழுந் தவனை அடித்திட
என் மூச்சிழந்து மெய் தமிழ் மண்ணை முத்த மிடினும்
இன் பத் தமிழ் காத்திட உயிர்ப்பேன் மறு முறையும்.

தாய் மண்ணைக் கவர்ந்திடவே எதிரி படை மார்புதட்டி
பாய் உதிரம் ஆறாயிட போரினிலே இறுதி மூச்சென்று
மாய் துவிட என்னுயிரை மண்ணுக் குரமாகி யங்கே
மெய் புதிது பூண்டிங்கு உயிர்ப்பேன் மண்ணுக்காக.

நெஞ்சினில் வஞ்சங் கொண்டே வெற்று மதியுடனே
அஞ்சிடும் மக்கள் மீதே சொரிந் திடும் மாரிக் குண்டு
மிஞ்சிடும் எச்சங்கள் கூடவே என்னையு மழித்திடின்
காத்திட மக்கட் செல்வமதை உயிர்ப்பேன் மறு கணம்.

இல்லிட மின்றியே தன்னல முடனே துரத் திடு மெதிரி
நல்லிட மின்றியே பல விட மலைந் திடும் பாவியரை
எள்ளிடம் தமிழுக் கேதென்றே கொலை யிடலில்
இழப்பினு மென் னுயிர் உயிர்ப் பேன் தமிழுக் கென்றே.

கூடப் பிறந்தவனை பரிதவிக்க கொன்று குவித்தவனை
வாழப் பிறந்தவளை யவள்மறுக்க வஞ்சிக் கெடுத்தவனை
ஞாலப் பொருளைத் துகழ்விடா தெரித்துத் தொலைத்தவனை
மரணித் தாலும் மறு கணம் உயிர்த்தே கொல்வேன.

உரிமை மறுத்து உணர்வைக் கெடுத்து வறுமை தந்து
திறைமை மறுத்து மதியைக் குறைத்து செழுமை கெடுத்து
பகைமை கொண்டு இனத்தை யழித்து தகைமை தராத
பொதுமை யற்ற சிறுமையரசை யழிக்க உயிர்ப்பேன் பலமுறை.

க. தவசீலன், கணுக்கேணி.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# முருகன் புத்தகசாலை

முருகன் புத்தகசாலை உங்களை வரவேற்கின்றது.

**முருகன் புத்தகசாலை உங்களை வரவேற்கின்றது.**

**இலங்கை, இந்தியாவில் இருந்து நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகள் இறக்குமதி செய்து விற்கின்றோம்.**

- பத்திரிகைகள்: வீரகேசரி, தினமுரசு, தினகரன், உதயன், சஞ்சவி, சரிநிகர், ஜனனி, மித்திரன், மற்றும் ஆங்கில பத்திரிகைகள்.
- இந்திய பத்திரிகைகள்: தினத்தந்தி, தினமலர், தினமணி, Hindu, Indian Express, மலையாள பத்திரிகைகள், சஞ்சிகைகள்.
- கதைப்புத்தகங்கள்: ரமணிசந்திரன், சிவசங்கரி, லக்சுமி, சுஜாதா, பாலகுமாரன், சாண்டில்யன், கல்கி, கண்ணதாசன், இந்துமதி, புஸ்பா தங்கத்துரை, மற்றும் இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகள். அகிலன், கருணாநிதி, அண்ணாத்துரை, ஜெயகாந்தன், உதயமூர்த்தி, ஒசா, மேளவின், கிருபானந்தவாரியார்,
- நடன, ஆராய்ச்சி, சமய, தேவார, சோதிட, சமையல் மற்றும் சினிமா பாட்டுப் புத்தகங்கள், பஞ்சாங்கம், இந்திய வரைபடங்கள், வாழ்த்து மடல்கள்.
- தென் இந்திய இசைக்கருவிகள்:வயலின், புல்லாங்குழல், வீணை, சுருதிப்பெட்டி, மிருதங்கம், நாதஸ்வரம்.
- மலையாளத் திரைப்படங்கள் விற்பனைக்கும் வாடைகைக்கும் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் தமிழ்த் திரைப் படங்கள், ஓடியோ கசட், சீடிகசெட்டும் பெற்றுக் கொள்ளலாம்.
- உங்கள் விருப்பத்திற்கு விரும்பிய இடத்திற்கு தேவையானவற்றை அனுப்பி வைப்போம்.

**தொடர்புகளுக்கு:**
**Murugan Book Depot**
1241A Ellesmere Road, Scarborough, Ontario, M1P 2X8.
Web Site: www.muruganbookdepot.com

Tel: (416) 285-9118
Fax: (416) 285-0570
Email: MBDI@SHAW.WAVE.CA

# *BALA INCOME TAX SERVICES*



ELECTRONIC

E FILE SERVICE

**பாலா வருமான வரி சேவைகள்!**

**Contact for any Immigration Matters**

**தொடர்புகளுக்கு:**
P. Balasubramanium B.A (Bala)
50 Brookmill Blvd, Unit 8, Scarborough, Ontario, M1W 2L4.

Tel: (416) 491-6784
Fax: (416) 491-8453




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் நிலவும் நாட்டு வைத்தியமுறைகளின் சிறப்புப்பயன்பாடு

டாக்டர். சி. வ. பரராஜசிங்கம்.

இன்றைய விஞ்ஞான வழர்ச்சியின் உச்சநிலைப் பிரயோகத்தின் விளைவாகப் பெறப்படும் அதிசிறந்த மருத்துவப் பெறுபேறுகள், ஆதிகால வைத்திய முறைப் பிரயேகங்களை விஞ்சியவையாகத் தென்படினும் அவைகள் பிறந்த இடம் கிராமப் புற வைத்தியப் பிரயோகங்களின் பாற்பட்டதென்பதை முழுவதாக மறுத்துவிட முடியாது. மனித சமூகத்தின் வளர்ச்சிப்படிகள் மேம்படுத்தப்படுவதற்கு முன் அது கிராமப்புற வாழ்வியலில் தம்மையிணைத்து அச் சுற்றாடலுக்கு இசைவுபட்ட வகையிலேயே வழங்கியது. காலப்போக்கில் ஏற்பட்டுச் சென்ற சமூக வளர்ச்சியில் விஞ்ஞானத்தின் அதீதச் செல்வாக்கு பல்வேறு துறைகளிலும் மனித வாழ்வை இலகுபடுத்திச் செல்ல, கிராமப்புற வைத்திய முறையின் பிரயோகங்கள் மக்களிடையே குறைவு படத் தொடங்கின இருப்பினும் அவ் வைத்திய முறையின் இறுக்கத் தன்மை, மருத்துவ செலவீட்டுக் குறைவுகள், நீண்ட காலரீதியிலான பக்கவிளைவு பாதிப்பின்மைகள் போன்ற இன்னோரன்ன காரணிகள் அதனது பிரயோகத்தினை இன்றும் மக்கள் வாழ்வில் நிலை பெறச் செய்கின்றது.

வன்னிப்பிரதேசத்தில் பல்வேறு நாட்டு வைத்தியமுறைகள் கையாளப்பட்டிருந்திருக்கின்றன. இவற்றில் மிகப் பிரபல்யமானவையும் மக்களுக்கு அதிக நன்மை பயப்பனவற்றையும் இங்கு விபரிக்கின்றேன். இங்கு காணப்பட்ட வைத்தியர்கள் அதிகமாக 'சித்த வைத்திய' முறையையே கையாண்டு வந்தனர். காரணம் இந்த வைத்தியத்தில் அதிகம் பச்சிலை மூலிகைகளும், ஓரளவு ஜீவ உப்புக்களும், ஒருசில சுத்தி செய்த பாஷாணங்களுமே பாவிக்கப்படும். அதிக தாவரங்கள் உள்ள பிரதேசமாகையால் மூலிகைகள் எடுப்பதில் அதக சிரமமில்லை. உப்புக்கள் புடம்போட்டு சுத்திசெய்யப்படும் பாஷாணங்கள் முறையே கோமயம், நெல் முதலியவறிறில் அவித்தும். பாலில் அவித்தும் சுத்திசெய்யப்படும். இப்படிச் சுத்தி செய்யாவிடில் அவை கொடிய விஷங்களாக நொடியில் எவரையும் கொன்றுவிடும் தன்மை வாய்ந்தவை. நோயைப்பரிசீலித்து அதன் குணங்களைக் கண்டுபிடிப்பதும், மருந்தை முறைப்படி தயாரிப்பவர்களும் இச்சித்த வைத்தியர்களே. எனவே இப்பிர தேசத்தில் பிரபல்யமாக விளங்கிய வைத்தியர்கள் எவ்வளவு திறமைசாலிகளாக இருந்கிருப்பர் என்பதை நாம் ஓரளவு அனுமானிக்க முடியும். ஔடதம் தயாரித்தல், மூலிகைகளை தேர்ந்தெடுத்தல் முதலியவற்றில் தமது செயற்பாட்டில் சற்று அவதானங்குறைந்தாலும், மக்களே அவர்களை தண்டித்துவிடுவர் என்பதை எவரும் விளங்கிக் கொள்ளலாம். பண்டைக் காலம் முதல் இப்பிரதேசத்தில் 'மலேரியா' என்னும் நோய் பரவலாகக் காணப்பட்டது. இது நுளம்பால் பரவும் பயங்கர நேயாகும். இதற்கு முத்தகியமாக வேப்பம் பட்டையும், நிலவேம்புக் கசாயமும் கொடுக்கப்படும். அதிக சுரமாகில் பட்படாகம், திரிகடுகு முதலியனசேர்த்து கசாயம் கொடுக்கப்படும். சுர வேகத்தை உடன் குறைக்க குளிர்ந்த நீரை தலைக்குக் கீளிருந்து உள்ளங்கால் வரை ஒத்தடங் கொடுத்து நோயாளியை சுற்றிவர குளிர் நீர் தேக்கிய மட்பாத்திரங்களை வைத்து அவரை நடுவில் குருத்து வாழை இலை மேல் கிடத்துவார்கள். சில நிமிடங்களில் சுரம் நீங்கிவிடும். சுரம் குணமடைந்த பின் அதிக கபம் காணப்பட்டால் அதிமதிரம், கரிசலாங்கண்ணி முதலியன சேர்த்து குடிநீர் கொடுக்கப்படும். புளி சேராத உணவு வகையே அவர்கட்கு உணவாகக் கொடுக்கப்படும். ஏனனில் சுரம் கல்லீரலைத் தாக்கி ஏற்பட்ட காரணத்தால் புளி கல்லீரலை தாக்கி அதனை மேலும் கெடுத்து விடும் என்பதாகும். இந்த வைத்தியத்தில் பத்தியம் மிக முக்கியமானதாகும், ஆரம்பத்தில் நீராகாரம், அதன் பின் பொரித்த அரிசி, புளுங்கல் அரிசி நன்கு சமைத்து கடைந்த 'கிச்சடி' என்னும் மசித்த சோறும், பால் விட்டு காச்சிய மென்மையான பிஞ்சு மரக்கறி வகைகள், சிறிய மீன்வகை, சிறிய கோழிக் குஞ்சு அல்லது மணிப்புறா இறைச்சி முதலியனவாம். இப்படியாகச் சில நாட்கள் உணவு அருந்தி உடல் நன்கு தேறிய பின்பே படிப்படியாக உணவு வகைகளைக் கூட்டுவார்கள். சற்று நோய் குணங்கண்டதும் கடினமான உணவுகளைக் கொடுத்து நோயாளி குடல் அழர்ச்சி அல்லது பேதியால் பீடிக்கும் நிலையினைத் தவிர்த்துவிடுவார்கள். ஆதிகமாக நேய்த்தாகம் காணப்பட்டால் பொரித்த அரிசியை நீரில் ஊறவிட்டு அதில் நிலவேர் (நாக்களிப்புழு.) முசுறு முட்டை இவற்றையும் அவித்து அந்த நீருடன் சமன் சேர்த்துக் கொடுப்பார்கள். உடன் தாகமும் தீரும். சுரமும் குறையும். தற்போதய விஞ்ஞான முறைப்படி அதிக 'அமிநோ அசிட்' (Amino Acid) உடலுக்கு அதிக சக்தியைக் கூட்டி எதிற்புச் சக்தியை அதிகரித்து சுரத்தை நீக்குகின்றது என்று கண்டுள்ளனர். இதுவும் அப்படி ஓர் முறையெனக் கருதலாமல்லவா? சில சமயங்களில் அதிகம் கல்லீரல் பாதிப்படைவதால் மஞ்சள் காமாலை நோய் தோன்றலாம். (Jaundice) அதாவது பித்த தொந்தம் ஏற்படும் ஆபத்து வருவதும் உண்டு. இதற்குப் பலவித உலோகங்களைப் புடம் போட்டுத் தயாரித்த 'பற்பங்கள்', ' செந்தூரங்கள்', அதிக மிருக புரதத்தில் தயாரித்த 'மெழுகுகள்' முதலியவற்றை முறையான பத்தியத்துடன் கொடுப்பதோடு, கீழ்காய் நெல்லியை பசும்பாலில் சேர்த்து இருவேளை கொடுப்பர். அத்துடன் இளநீர் அதிகமாகக் கொடுப்பர்கள். இப்படிப் பத்தியமாக இருந்தால் நோய் ஒருசில நாட்களில் குணமாகிவிடும். இதைத் தவிர நோயாளி சில நாட்களுக்கு 'இச்சாபத்தியமாக' இருக்கப் பணிக்கப்படுவார். இதன் பிரகாரம், சிலநாட்கள் கடினமான உணவு உண்ணாமல்,அதிகம் உடலையும் மனத்தையும் பாதிப்படைய விடாது, நன்கு ஓய்வெடுத்தல், பாலியலில் ஈடுபடாதிருத்தல் முதலியன மிக முக்கியமான கவனங்களாகும். இவை உடம்பு நன்கு தேறி சுயநிலைக்கு வருவதற்கு பெரிதும் உதவும். வாத, பித்த, சிலேஷ்ம, தொந்தங்களை நாடி பரிசோதனை மூலம் அறிந்து தகுந்த சிகிச்சை அளித்தல் வைத்தியரின் தலையாய கடனாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்ததாக இப்பிரதேச மக்களைப் பெரிதும் பாதிப்பது விஷகடியாகும். காட்டை அடர்த்தியாக கொண்ட பிரதேசமாகையால் இப் பிரதேசத்தில் பாம்பு, சிலந்தி, நட்டுவக்காலி, குழவிகுற்றல் முதலியன அதிகமாக நிகழும் விபத்துக்களாகும். இப்பிரதேசத்து மக்கள் இந்த விஷ ஜெந்துக்களின் கடியைப்பற்றி அதிகம் பயம் கொள்வதில்லை. அவர்களின் 'கை வைத்தியமே' பலரையும் குணப்படுத்திவிடும். எந்த விஷம்பட்டாலும் கடிவாய்க்கு சுமார் மூன்று அங்குலத்திற்குமேல் மஞ்சள் பூசிய துணியால் மென்மையாகக் கட்டியபின் கடிவாயைச் சுத்த ஜலம் கெண்டு கழுவியபின் 'அறுகம்புல்லை' நன்கு மெழுகுபோல் அரைத்துக் காயத்தின் மோல் அப்பிக் கட்டி அவ்விடத்தில் காந்கல் ஏற்படும் வரை விடுவார்கள். காந்தல் ஏற்பட்டால் விஷம் நீங்கிவிட்டது என்று அர்த்தமாகும். விஷம் இறங்கியதும் அடுப்பில் வெந்த செங்கல்லை மென்மையான சூட்டில் அவ்விடத்தில் வைத்துக் கட்டிவிடுவார்கள். விஷம் இறங்கும்வரை விஷம் தீண்டியவரைத் தூங்கவிடமாட்டார்கள். தாகத்திற்கு வாழைத்தண்டுச் சாறு கொடுப்பார்கள். ஆதிகமாக வெற்றிலையில் மிளகு வைத்து மென்று தின்னச் செய்வார்கள். நட்டுவக்காலி கடித்தால் கடிவாயில், தலை முடியைக் கருக்கி மஞ்சள் நீரில் கரைத்து அதனைப் பூசி குணமடையச் செய்வார்கள். மறு நள் வீக்கம் கண்டால் அவ்விடத்தில் பிள்ளைக்கற்றாளையைச் சுட்டு அதனுடன் வறுத்த களிமண்ணையும் சேர்த்து ஒரு அளவு சூடாகக் கட்டுவார்கள். சிலந்திக் கடியாகில் அதாவது புலிமுகச்சிலந்திக் கடிக்கு பருத்தி இலையையும், பழப்புளியும் அரைத்துக் கடிவாயில் கட்டிக் குணப்படுத்துவார்கள்.

குழவி குத்தினால் காண்டை இலையும், பழப்புளியும் பூசி சற்று சூடேற்றி குணப்படுத்துவார்கள். சில சமயங்களில் விஷம் அதிகரித்தால் வைத்தியரின் உதவி தேவைப்படுத்தப்படும். அப்போது நோயாளியை வைத்தியரிடம் கொண்டு செல்வதிலும் பார்க்க நோயாளி இருக்கும் இடத்திற்கு வைத்தியரை அழைத்து வருவார்கள். தற்போது விஞ்ஞான முறைப்படி ஒரு விஷம் தீண்டியவரை அசைப்பதால் உடம்பில் விஷம் பரவும் ஆபத்து அதிகம் எனக் கண்டுள்ளனர். ஆனால் இந்த முறை பாரம் பரியமாக இப் பிரதேசத்தில் கையாளப்படும் முறையாகும். இப் பிரதேசத்து வைத்தியர்கள் அழைக்க வரும் தூதரிடம் சில குறிகளைக் கண்டே நோயாளியின் நிலையைச் சொல்லி விடுவார்கள். அதைத் 'தூதன் குறி' என்பர். இது பல முறைகளில் பார்க்கப்படும்.

வைத்தியருக்குத் தூதுவன் வரும் போது 'சரம்' என்னும் சுவாசமானது எப்படி ஓடுகின்றது என்பதைக் கணித்துச் சொல்வதாகும். அதாவது எமக்கு சுவாசமானது இரண்டு மூக்குத் துவாரங்களிலும் ஒரே வேகத்தில் ஓடுவதில்லை. சுமார் இரண்டரை மணிக்கு ஒரு முறை மூச்சானது ஒரு துவாரத்தில் பலமாகவும் அதன் பின் மறு துவாரத்தில் பலமாகவும் ஓடியவண்ணம் இருக்கும். இதனைக் கணிப்பீட்டில் கொண்டு வைத்தியர்கள் மனோதத்துவ ரீதியில் நோயாளிக்குக் குணமாகி விட்டது, அல்லது நோயாளி ஆபத்தான நிலையில் உள்ளார் அல்லது நோயாளியைக் குணப்படுத்தலாம் என்று கூறுவார்கள். இதனை விளக்க ஒரு பாடல் பின்வருமாறு

'ஓடிவந்த தூதனுமே சூனியத்தில்
உரைத்துடனே பூரணத்தில் ஒதுங்கி நிற்கில் நாடிவந்த
தூதனுரை விஷங்களில்லை நடந்திடுகில் பூரணத்தில்
மீளாதென்க'

இதன் படி வந்த தூதுவன் வைத்தியருக்கு அதிகம் சரம்(மூச்சு) ஓடாத பக்கத்தில்('சூனியம்') நின்று கூறிப் பின் மாறி அதிகம் சரம் ஓடும் பக்கத்தில்(பூரணம்') நின்றால் 'விடம் இல்லை', ஆனால் அந்தத் தூதுவன் அப்படி நிற்காது பூரணமான பக்கத்திலேயே நடந்தால் விடந் தீண்டியவருக்கு விஷம் அதிகம் என்று கூறிவிடுவர்.

'கண்டில்லை என்றொருவன் பிரளியாக கடியினுட
லட்ஷணத்தை சொல்வீரென்றால்
உண்டில்லையென்றறிய அவனைநோக்கி உரைத்தகுறி
இன்னதென்று அறியவேண்டில்
துண்டில்லை தலை, உடல், கால் மூன்றிலேதான்
தொடச்சொல்லு தொட்ட இடம் தலையேயானால்
கொண்டில்லை என்றுசொல்லு, உடல்கால்தொட்டால்
கூறிடுவாய் விடமென்று குறிப்பாய்த்தானே'

என்று கூறுகிறது விட ஆருடம். அதாவது வந்த தூதுவன் விடம் தீண்டப்பட்டவனுக்கு விடந்தீண்டிற்றோ? ஏன்று சந்தேகத்துடன் கேட்டால் அதை அறிவதற்கு அவனை அவனது தலை, உடல், கால் எப்பாகத்தையாவது தொடச் சொன்னால் அவன் தலையில் தொட்டால் அது விடமில்லை என்றும், உடம்பு, அல்லது காலில் தொட்டால் அது விடமாகும் என்றும் கூறப்படுகிறது. இதை எப்படி அறியமுடியும் என்று வியக்கிறீர்களா? இது மனித மானுஷ்ய சக்தியின் பலத்தாலாகும். இந்த மானுஷ்ய சக்தியின் பலத்தால் (Telepathy, Man-magnetic power) இந்த விபரம் உணரப்படுகிறது. தற்போதைய விஞ்ஞானத்தில் பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் மனிதர்களின் உணர்ச்சிகளை மனோபலம் கூடிய ஒருவர் மூலமாகத் தூண்டிவிடமுடியும் எனக் கண்டறிந்திருக்கின்றனர். தூரதேசத்தில் வாழும் ஒருவரின் நோயைக் கூட மாற்றமுடியும் என்றும் அவருக்காகப் பிரார்த்திக்கிறார்கள். ஆது அவர்களுக்கு முடியுமானால், இது ஏன் எமது மனோபலம் படைத்த சித்தர்களால் முடியாது?

இப்படிக் கண்டறிந்த பின் நாடியை முறையே பரீட்ஷித்து நோயாளியின் நிலையைக் கண்டறிவார். நாடியானது 'வாத, பித்த, சிலேஷ்ட்மம்' என்னும் மூன்று வகைகளைக் கொண்டதாகும். இதை மணிக்கட்டில் பெரும்பாலும் உணரலாம். இதிலிருந்து விஷமானது எப்படிச் செயற்படுகின்றது என்று உணரலாம். விடமானது வாயுவேகம், தேயுவேகம், வர்ணவேகத்தில் உடம்பில் வியாபிக்கும். வாயுவேகம் என்பது அதிகமாக நாகபாம்பால் தீண்டப்பட்டால் ஏற்படும். 'Neurotoxic' என்னும் நரம்பைத்தாக்கும் விஷமாகும். இதை எம்மவர்கள் மூளைக்கு விடம் ஏறுகிறது என்பர். இது அதிவேகமாக வியாபித்துவிடும். இதற்கு வெகு விரைவாக சிகிச்சை அளிக்கவேண்டும். சற்றுத் தாமதித்தாலும் நோயாளியைக் காப்பாற்ற முடியாது. அதிகமாக நோயாளி அறிவில்லாது மூர்ச்சித்தே இருப்பார். இதற்கு "நசியம்", 'கண்-மை', 'குடோரி' முதலிய மருந்துகள் கடினமான கௌரி பாஷாணம், துரிசு, 'துத்தம்', எட்டிவிதை முதலிய மருந்துகளைக் கொண்டு தயாரித்த மருந்துகளே பாவிக்கப்படும். விஷமானது வருணவேகம், தேயுவேகத்தில் வியாபித்தால் அவை உடம்பின் தசையையும், இரத்தம் முதலியவற்றையம் பாதிக்கும். ஆங்கிலத்தில் இதனை 'ஹிமோலிசிஸ்' (Heamolysis) என அழைப்பர். 'Heamotoxic' என்பது இரத்தத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறையும் தன்மையை அழித்து வியாபிக்கும் விஷமெனப்படும். இவற்றிற்கு சுத்தி செய்த பலவகை மூலிகைகள், அதாவது அவுரி, சிறியாநங்கை, நத்தைகொல்லி, எட்டிவிதை, நிர்விஷம், தைவேளை, துத்த நாகம், நேர்வாளம், முதலியனவற்றை கொண்டு தயாரித்த 'பரஞ்சோதி-மை', 'சுடுகாடு மீட்டான் வில்லை', 'நீலகண்ட-மை' முதலியன பாவிக்கப்படும். விடத்தின் தன்மையை விபரிக்கும் வஷஆரூடம் பின்வருமாறு விளக்குகிறது

'பாவனைக்கொரு பற்பட்டால் பறக்குமே பல்விடந்தான், மா இருபற்கள்பட்டால் மந்திரத்தாலும் தீரும், மூவகை பற்கள் பட்டால் முயல் கிரியையுந்தான் வேண்டும் தேவதையோகஞ்செய் மந்திர மருந்திவையாங்காணே, நாலுபற்பட்டதென்றால் நல்லதோர் காலம் வேண்டும் வேலவன் அருளுண்டாகில் மிகுமறைமருந்து யோகம் சாலவேபயனுண்டாக தற்கதோர் மார்க்கமுண்டு மேலதை உலகத்தோர்க்கு விளங்கிட விளம்புவேனே'

என்று விளக்குகிறது. இதன் படி ஒரு பல்லெனும் 'காளி' என்னும் பற்பட்டால் நோயாளியின் மனோதிடத்தாலேயே மாறிவிடும், இரண்டாது பல்லாகிய 'களாஸ்திரி' என்னும் பற்பட்டால், மந்திர உச்சாடனத்தால் தீரும். மூன்றாவது பல்லாகிய 'யமன்'என்னும் பற்பட்டால் அது மந்திரம், மருந்து, தெய்வ அனுகூலம் இவற்றால் மாறும், நான்காவது பல்லாகிய 'யம-தூதன்' என்னும் பற்பட்டால் நோயாளி ஆயுட்பலம் உள்ளவராகவும் வேலாயுதம் ஏந்திய அபயம் கொடுக்க வல்லவராகிய முருகப்பெருமானின் அருளும் இருப்பின் மந்திரம், மருந்துயாவும் நன்கு வேலைசெய்து நோயாளி பிளைப்பார் என்றும் 'திருநீலகண்டாரூடம்'. 'சிவாரூடம்','தேவியாரூடம்', 'கெருடாரூடம்' போன்ற விஷ ஆரூடங்கள் விபரிக்கின்றன.

கடித்த இடம் நாவற்பழம் போல் கறுத்தும், வீங்கியும் இருந்து கழுநீர் போன்ற இரத்தம் கசிந்தவண்ணம் இருத்தல் விஷம் மிககொடியது எனஉணரலாம். சிறுபிள்ளைகளின் சிறு நீர், வாழைத்தண்டுச் சாறு முதலியன தாகத்திற்குக் கொடுக்கப்படும்.

நோயாளியை நெருப்புத் தீவறைக்குப் பக்கத்தில் வைத்திருத்தலும் விடத்தை உடம்பில் பரவாது
துடுக்கலாமென நம் சித்தர்கள் கண்டறிந்த ஓர் சிறந்த முறையாகும். தற்போதைய நவீன விங்ஞானம் தேகத்தை வெப்பமூட்டுவதனால் விஷத்தை கட்டுப்படுத்தும் என்றும், 'கரி' எந்தவித தீங்குவிளைக்கும் நச்சுத் தன்மையையும் நீக்கவல்லது என்று விளக்குகின்றது.

விடம் தீண்டி அதிக நேரம் சென்று நோயாளி அடங்கி மூர்ச்சித்திருந்தாலும் சித்த வைத்திய முறையில் எழுப்ப முடியும் என்பதை பின்வரும் செய்யுள் விளக்குகிறது

"அடக்கமென்றறிந்த போதே அவர் தலை உச்சி கீறி, குடத்தின் ராயோடமுத்திக் கொடும் புரை அடைத்தபின்னர், வெடித்திடும் வேழச்சாற்றை விட்டு மேல் ஒட்டைவைத்துக்கடுக்கென ஊதின் மீண்டும் கடுவிடம் கடிவாய் காணும்"

இதன் பிரகாரம் அடக்கமாக மரணித்ததுபோல் இருக்கும் ஒருவரின் உச்சியில் சருமத்தை நெருப்பில் காய்ச்சிய கூரிய கத்தியால் கீறி அதன் மேல் ஒரு குடத்தின் வாய்பக்கத்தை எடுத்து வைத்து அதற்கும் தலைக்கும் இடையில் உள்ள 'புரை' என்னும் இடவெளியை கழி மண்ணால் நன்கு அடைத்தபின், நன்கு முத்திய தைவேழைச் சாற்றை(வேழச்சாறு) விட்டு அதன்மேல் தணல் நிரப்பிய தீச்சட்டியை வைத்து விரைவாக அந்தச்சாற்றை கொதிக்கச் செய்தால், விடமானது மூளையிலிருந்தும் உடம்பிலிருந்தும் இறங்கிக கடிவாய்க்கு வரும் 'என்பதாம்.

முற்காலத்தில் நவீன விஞ்ஞான முறைகள் இல்லாவிடினும் எம்மூதாதையர் தம்மால் இயன்றளவு நோயாளியைக் காப்பாற்ற முயன்றிருக்கிறார்கள் என்பதற்காகவே இவற்றைக்குறிப்பிடுகிறேன். தற்போது நவீன சத்திரசிகிச்சை ஆயுதங்கள்.தொற்று நீக்கிகள் இருக்கையில் இப்படியான முறைகளை ஏற்க்கொள்பவர்கள் அரிதாகவே உள்ளனர். எனவே எமது பரம்பரிய வைத்தியமுறைகள் ஆர்வத்துடன் ஆராட்ஷி செய்யப்பட்டு நவீனப்படுத்தப் படவேண்டும் என்பதே நம்மோரின் விருப்பமும் அதுவே எம் சித்தர்களின் ஆணையுமாகும்.

எம் வைத்தியர்கள் மந்திர உச்சாடனங்களிலும் சிறந்தவர்கள். இப்படிப் பிரபல்ய ரானவர்களில் முற்காலத்தில் வாழ்ந்த 'நெளுக்குளம் வைத்தியம் கார்த்திகேசு முதலியார். குமுளமுனை காங்கேசு வைத்தியர். அவர் மகன் நல்லையாவைத்தியர், வவுனியா அம்மிவைத்தான் வைத்தியர், நெடுங்கேணி ஒதியமலை கோவிந்தப்பா வைத்தியர், அவ்விடத்தைச் சேர்ந்த கதிரவேலு வைத்தியர், பம்பைமடு அருணாசலம். அவரின் மகன் பூலோகசிங்கம் வைத்தியர், சாஸ்த்திரி கூளாங்குளம் பத்மநாதன் வைத்தியர், அவரின் மகன் சத்தியநாதன். வவுனியா நெளுக்குளம் வேலுப்பிள்ளை வைத்தியர். அவர் மகன் சிவசேகரம் வைத்தியர். மடுகந்தை. ஈறர்ப்பெரியகுளம் முறிவுதறிவு வைத்தியாகள். காக்குவெளி விசர் நாய்கடி வைத்தியர். முரங்கன் நானாட்டான் கனகசிங்கம் வைத்தியர். இசமாலத்தாழ்வு சிமியோன்பிள்ளை வைத்தியர்ஆகியோர் சில பிரபல்யமான வைத்திர்களாகும். இவர்கள் அதிகமாக விஷம் நீக்க மந்திர உச்சாடனம் செய்வர்.தாம் சிவனாக இருந்து விஷத்தை திருநீலகண்ட மந்திரத்தால் நீக்குவது திருநீல கண்ட முறை. இதில் பாவிக்கப்படுவது 'புரோம் கிரீம் டம்'என்னும் மூலமந்திரம். இதன் விளக்கம் 'உருப்பெறு 'புரோமென்றாக்கால்' உடல் காக்கப்பட்டு நன்றாம். கருப்பெறு 'நிரீமென்றாக்கால்' கடுநீக்க இதுவே நன்றாம். மருப்பெறு 'டம்மென்றாக்கால்' வாழ்வுடன் இருக்க நன்றாம் கிருப்பெரும் மூன்று சொல்லால்ச்சிவன் செயலாகும் நன்றே.

இன்னும் சில வைத்தியர் தாம் கெருடனாக இருந்து 'கெருடபஞ்சாட்ஷர' மந்திரத்தைச் செபித்து விஷம் நீக்குவர். வேப்பிலையால் 'குழைஅடிப்பர்'. இது நோயாளிக்கு தற்போதய செயற்கைச்சுவாசம் *(Cardio-Pulmonary Resurrection- CPR)* என்னும் முதல் உதவிச்செயற்பாட்டை ஒத்தது. இது நோயாளிக்கு அதிக உற்சாகங் கொடுக்கல்லது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# APPLEMORE AUTOMOTIVE

**சகல விதமான உட்புற, வெளிப்புற, பராமரிப்பு வேலைகளுக்கும், உங்களின் வாகன திருத்த வேலைகளுக்கும் நீண்டகால அனுபவமிக்க எங்களை நாடுங்கள்.**



- ☑ **REPAIRS**
- ☑ **SAFETY CERTIFICATION**
- ☑ **UNDER COATING & RUST PROOFING**
- ☑ **EXTERIOR WASH & WAXING**
- ☑ **INTERIOR SHAMPOO**
- ☑ **MOTOR SHAMPOO**



## Tel: (416) 285-4998

**Address:**
**2500 Lawrence Avenue East Unit #11 (Midland/Lawrence)**
**Scarborough, Ontario**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி மக்களின் விளை நிலப்பயன்பாட்டு அரும் சொற்கள்

திரு. தங்கராசா சிவபாலு B.Ed.(Hons) M.A.

வன்னிப் பெருநிலப்பரப்பு எனக் கொள்ளப்படும் வவுனியா முல்லைத்தீவு மன்னார் கிளிநொச்சி மாவட்டங்களையும் திருகோணமலை மாவட்டத்தின் வடபுலத்தையும் உள்ளடக்கிய விவசாயப் பிரதேசத்தில் காலாகாலமாக விவசாயத்தோடு ஒட்டி அதன் தூய்மை கருதிப்பாவிக்கப்பட்டு வந்த தூய தமிழ்ச் சொற்கள் இன்று வழக்கொழிந்து மறக்கப்பட்டு வருவது அவதானிக்கப்பாலது. இத்தூய தமிழ்ச் சொற்களையும் அதன் கருத்துக்களையும் அழிந்து விடாது பாதுகாக்க நாம் முயற்சிகள் செய்தல் வேண்டும். இதனை நினைவு கூரத்தக்க வகையில் பொருத்தமான மண்வாசனையுடைய மக்களுக்குச் சென்றடையக் கூடிய மிகப் பொருத்தமான ஊடகமாக கொம்பறை என்னும் அரிய வன்னிவிழா மலர் அமைந்துள்ளது. இவ் அருஞ் சொற்கிளவிகளை அறிந்து வைத்திருப்பதற்கான ஆரம்ப முயற்சியாக இது அமைகின்றது. தொடர்ந்து இம்முயற்சி வளர்வுபெற இப்பிரதேச மக்களின் ஒத்துழைப்பு ஆவலுடன் வரவேற்கப்படுகின்றது.

வன்னி மானிலத்தில் வாழ்ந்தோரும் வாழ்ந்து வருவோரும் தமக்கே உரித்தான் பாணியில் பல சொற்களை தமது விவசாயத் தொழிலோடு தொடர்புபடுத்தித் தனித்துவமாக பயன் படுத்தி வந்துள்ளனர். அவற்றுள் பல இன்று வழக்கொழிந்துபோய்க் சொண்டிருக்கின்றன. எடுத்துக்காட்டாக காடுகளை அழித்து தற்காலிகமாக ஓரிருவருடங்களுக்கு மேற்கொள்ளும் பயிற் செய்கையைச் சேனைச் செய்கை எனக் கூறுவர். அவ்விதம் காடுவெட்டி புதிதாக ஆரம்பிக்கப்படும் நிலம் புலவு என அழைக்கப்படும். சேனைச்செய்கையில் நெல், எள்ளு, கொள்ளு, சோளம், குரக்கன், சாமை, தினை, இறுங்கு, உழுந்து,பயறு போன்ற தானியங்கள் முக்கியமானவை. பயிர்ச் செய்கைப் பருவங்களுக்கு ஏற்ப அவர்கள் உபயோகிக்கும் சொற்கள் தனித்துவமும் தூய்மையும் உள்ளனவாக அவர்களால் கருதப்பட்டு பயன் படுத்தப்பட்டன. சாதாரணமாக வீட்டில் பயன்படுத்தப்படும் அல்லது பொது வழக்கில் உள்ள சொற்களுக்குமிடையே உள்ள வேறுபாடுகள் அவற்றின் தூய்மை, மேன்மை. கருத்தாழம் என்பவற்றைக் கொண்டு அமைவதனை நாம் அவதானிக்கலாம். தமிழர்தம் பண்பாட்டில் வயதில் முதிர்ந்தவரகளையோ அல்லது வயது கூடியவர்களையோ பெயர் சொல்லி அழைத்தல் மரபன்று. அவ்விதம் அழைத்தல் முறைகேடானது அல்லது மதிப்பற்றது என்றே கருதப்பட்டு வருகின்றது. விளை நிலத்தை மிகவும் தெய்வாம்சம் பொருந்தியதாக, தூய்மையானதாக அவர்கள் மதித்து வந்தார்கள். அவ்விதமே பொன்செய் நன் நிலங்களாம் வயல்நிலங்களில் தொழில் செய்வோரையோ அல்லது தொழில் கொள்வோரையோ அவர்கள் பெயர் சொல்லி அழைப்பதை சிறுமை தருவதாகவோ அன்றி இழுக்கானதாகவோ கருதினர். அவ்விதம் அழைப்பதைத் தவிர்த்து கமக்காரன், போலன், போலி, பெரியபோலன், சின்னப்போலன் போன்ற பொதுச் சொற்களைக் கொண்டு அழைத் தொழுகினர் எனத் துணியலாம். மாடுகளை மிகத் தூய்மையானவையாக விவசாயிகள் கருதுவது தமிழர் பண்பாடு. மாடுகளுக்கு விழா எடுக்கும் உயர்ந்த பண்பு வன்னிமக்களின் வாழ்வியலுடன் ஒட்டிக்கொண்ட ஓர் அம்சமாகும். உளவு காலத்தில் உளவன் எனவும் சூடு மிரிக்கும் காலத்தில் போலன் என்றும் அழைத்து வருவதனை இன்றும் அவதானிக்கலாம்.

இவ்விதமாக தூய்மையுள்ள தமிழ்ச் சொற் பதங்கள் இன்று வழக்கொழிந்து அருகி வருவதனைக் காணலாம்.

*"எப்பொருள்யார்யார்வாய்க்கேட்பினும்*
*அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு"*

என்னும் வள்ளுவர் வாக்கைக் கருத்தில் கொண்டு வன்னி மக்களால் பயன் படுத்தப்பபட்டு வந்த மரபுவழித் தூய அரும் சொற்பதங்களைத் தேடிப் பெற்று அவற்றை நூலுருவில் உருவமைத்துக் காத்தல் எம் தலையாய கடனாகும். இவற்றிற்கு மேலாக வன்னியில் வாழ்ந்த கிராமிய வைத்தியர்கள் தாம் பரம்பரை பரம்பரையாக மேற்கொண்ட வைத்தியத் தொழிலினைப் பயின்று கொள்வதற்குப் பயன்படுத்திக்கொண்டு வந்த வாகடங்கள் இன்றும் ஏட்டு வடிவில் அவர்களது வாரிசுகளினால் பரம்பரை பரம்பரையாகப் பாது காக்கப்பட்டு வருகின்றன. ஓதியமலை என்னும் கிராமத்தில் வாழ்ந்த கோவிந்தர் என்னும் (விஷ) பாம்பு கடி வைத்தியர், குமளமுனையில் வாழ்ந்த செல்லையா வைத்தியர், காங்கேசு வைத்தியர், அழம்பிலில் வாழ்ந்த செல்லத்துரை என அழைக்கப்படும் மிக்கேற்பிள்ளை வைத்தியர், தண்ணீரூற்றில் வாழ்ந்த கைலாயபிள்ளை வைத்தியர் போன்றோரால் பாவிக்கப்பட்டுப் பேணிப்பாதுகாக்கப்பட்ட வைத்திய வாகட ஏடுகளும் கணுக்கேணியில் வாழ்ந்த இராமலிங்கம் சாத்திரியார், குமளமுனையில் வாழ்ந்த மாணிக்க விதானையார் போன்றோரால் பாவிக்கப்பட்டு வந்த சாத்திர ஏடுகளும் வற்றாப்பழை அம்மன் வரலாறு, குமாரபுர ஆலய வரலாறு, கொட்டுக்கிணற்று கழுத்து வெட்டி விநாயகர் வரலாறு, கோட்டகக் கேணி கை வெட்டிப்பிள்ளையார் வரலாறு, தென்னமரவடி அமரிவயல் கூன்பிள்ளையார் வரலாறு, புதூர் நாகதம்பிரான் வரலாறு போன்ற பழமையுறு தல வரலாறுகளும் அச்சுருப்பெற்ற நூலுருப்பெறல் வேண்டும். இப்பணி நிறைவேற்றி வைப்பது தமிழுக்கும் அதனை வரன் முறையாகப்பாவித்து வந்த வன்னி மக்களுக்கும் நாம் செய்யும் நன்றிக்கடனாகும். இதன் ஒரு ஆரம்ப முயற்சியாக சில அரும் சொற்களையும் அதற்கான விளக்கங்களையும் நாம் அங்கே தருவதற்கு எடுத்துக் கொண்டுள்ள ஆரம்ப முயற்சியாக இது அமைகின்றது எனலாம்.

விளைநிலப் பெயர்கள்

கமம்/தறை/வயல்:- *நெல் விளையும் நிலப்பரப்பு*

புலவு:- *புதிதாக விவசாயத்திற்குஉட்படுத்தப்பட்ட நிலப்பரப்பு*

பெரியவெளி:- *நெல் விளையும் பெரிய*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலப்பரப்பு
நடுத்துண்டு:- நெல் விளையும் நிலத்தின் நடுவே உள்ள துண்டம்
கண்டல்:- நெல் விளையும் கருமண் பரப்பு

நீர் நிலைகளின் பெயர்கள்
குளம்:- தோண்டப்பட்டோ அல்லது அணை கட்டப்பட்டோ ஆன நீர்த்தேக்கம்
குட்டை:-இயற்கையாகவோ அல்லது மனிதனால் ஆக்கப்பட்டோ அமைந்த மிகச் சிறிய குளம்(கோடைகாலத்தில் வற்றிவிடும்)
மோட்டை:-இயற்கையாவே அமைந்த சிறு நீர்த்தேக்கமடு-
மடு:- இயற்கையான ஆழம் கூடிய நீர்ப்பரப்பு
பூவல்:- குடிநீர்த்தேவைக்காக மக்களால் தோண்டப்பட்ட மிகச்சிறிய கிணறு அல்லது குளி
சுனை:- இயற்கை நீரூற்றுக் கொண்ட சதுப்பு நிலம்
கேணி:- மக்களால் வெட்டப்பட்ட சிறிய நீர்த்தேக்கம்
துரவு:- மாடு இறங்கி நீர் குடிக்கக் கூடியதான அல்லது தோட்டத்திற்கு நீர் இறைக்கக் கூடியதான ஆழமான, மாடுகள் இறங்கக் கூடிய நீர் நிலை(இலகுவாகத் தூர்ந்துவிடக்கூடியது)

பயிரிடும் காலத்தில் வயற் பரப்பில் உபயோகிக்கப்படும் சொற்பதங்கள்.

பெரும்போகம்/கால போகம்:- மாரிகாலத்தில் மேற்கொள்ளப்படும் விவசாயம்
சிறுபோகம்/கோடைப்போகம்:- கோடைகாலத்தில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கை
இடைப்போகம்:- மாரிப் போகத்திற்கும் கோடைப் போகத்திற்கும் இடைக்காலத்தில் மேற்கொள்ளப்படும் நெற் செய்கை
மானாவாரி:- மழையைநம்பி மேற்கொள்ளப்படும் நெற் பயிற் செய்கை
விதைப்பு:- நெல் எறிந்து மேற்கொள்ளும் பயிற் செய்கை
நெருக்கி எறிதல்:- நெல்லை மிக நெருக்கமாக வீசுதல் அல்லது எறிதல்
கைவிட்டெறிதல்:- மிக நெருக்கமாக விதைத்தல்
இறுக்கி விதைத்தல்:- மிக நெருக்கமாக எறிதல்
அய்தாக விதைத்தல்:- நெருக்கமின்றிஎறிதல்
பலகை அடிப்பு:- சேற்றில் உழுத பின் பலகையால் சேற்றைத் தடவி மட்டப்படுத்திய பின் விதைத்தல்
சுரி அடித்தல்:- நீர் பற்றாக்குறைகாரணமாக மாடுகளால் மிதித்துசேறாக்கிய பின் விதைத்தல்
உழுதல்:- மாடுகளால் கலப்பையால் நிலத்தை உழுதல்
சால் கட்டல்:-உழுவதற்காக நிலத்தை கூறாக்கி அடையாளமிட்டு உழுதல்
உளவு சால்:-உழுவதால் ஏற்படும் அடையாளம்
அணைத்துழுதல்:-மிக நெருக்கமாக உழுதல்
சால் பொருத உழுதல்:-மிக நெருக்கமாக ஒன்றுடன் ஒன்று சேரும் வண்ணம் உழுதல்
பெரு உழவு:-உழும் போது இரண்டு சால்களுக்கு இடையே ஏற்படும் இடைவெளி
மேவி வருதல்:-விட்ட இடைவெளியை நிரப்பி உழுதல்
மூன்றாம் மறை:-நெல் விதைத்தபின் மூன்றாம் நாள் உழுதல்
மூன்றாம் உழவு:- மூன்றாம் தரம் உழுதல்
ஏர்:- கலப்பை
ஏர்க்கால்:- கலப்பையில் உள்ள நீளமான தடி
இழுப்பாணி ஆணி:-ஏர்க்காலின் உள்ள குறுக்காக துவாரத்தில் உள்ள தடி இது நந்தை கொழுவி நுகத்துடன் இணைக்கப் பயன்படும்
மேழி:- கையால் பிடித்து உழும் கலப்பையின் பகுதி
படவாழ்:-கொழுப் பொருத்தும் மரத்தால் செய்யப்பட்ட பகுதி
கொழு:-இரும்பாலான நிலத்தினைப் பிரித்து உழவினை ஏற்படுத்தும் மிகக் கூரிய பகுதி
கொழு ஆணி:-கொழுவை படவாழுடன் இணைத்து இறுக்கமாக வைத்திருக்கப் பயன் படுத்தப்படும் இரும்பால் செய்யப்பட்டது
நுகம்:- மாடுகளின் தோழ்களில் வைக்கப்பட்டு கயிற்றால் கட்டப்பட்டு கலப்பையை அல்லது வண்டியை இழுக்கப் பயன் படும் நீளமான மொத்தமான தடி
நுகம் பிரட்டுதல்:- மாடுகள் உழவுக்கு அல்லது வண்டி இழுக்க மறுத்துத துரும்புதல்
பூட்டாங்கயிறு:- நுகத்தின் இருமுனைகளிலும் உள்ள துவாரங்களில் மாழகளின் கழுத்துடன் இணைத்துக் கடடப்படும் கயிறு
ஆப்பு:- மேழிக்கும் ஏர்க்காலுக்கும் இடையே வைக்கப்படும் ஆழமாகவோ அல்லது ஆழம் குறைத்தோ உழுவதற்குக் கலப்பையைச் சரிசெய்து கொள்ள உதவும்
நந்தை:- ஏர்க்காலையும் நுகத்தையும் இணைத்துக் கொழுவி விடும் கயிறு அல்லது கொடி
வரப்பு வரைதல்:- புதிதாக வரம்பு கட்டல் வரம்பு செருக்கல்-வரம்புகளைத் துப்புரவு செய்தல்வரம்ப சீவுதல்-வரம்பின் உட்புறங்களை வெட்டி மட்டப்படுத்துதல்
வரம்பு அறுத்துக்கட்டல்:- வரம்பின் உட்புறத்தை வெட்டி வரம்பை உயரமாக்குதல்
அழை வைத்தல்:-வயலில் இருந்து நீர் வடிந் தோடக்கூடியதாக வடிகால் அமைத்தல்
தாயழை:- வயலின் எல்லாப்பக்கங்களிலும் ஏற்படுத்தப்படும்கிளை அழைகள் ஒன்று சேர்ந்து நீர் வடிந்தோடக்கூடிய பிரதானமான வடிகால்
சேயழை:- பிரதான அழையின் கிளையழை.
கையழை:- கையால் வைக்கப்படும் அழை.
வக்கடவை:- நீர் வடிந்தோடக் கூடியதான வரம்பில் வெட்டி விடப்படும் கடவை அல்லது பாதை
தத்து வக்கடவை:-மேலதிக நீர் வடிந்தோடக்கூடிய கடவை
மடை திறத்தல்:- வயலில் மறித்து வைக்கப்பட்டிருந்த நீரைத் திறந்து வீடல்
அளவக்கை:- நீர்வடிந்தோடும் கால்வாய் அல்லது வாய்க்கால்
விதை நெல்:- விதைப்பதற்காகவைக்கப்பட்டுள்ள நெல்
முளை கட்டல்:- விதைப்பதற்கு முன்பு நெல்லைப்பரிசோதித்தல்
ஊறப்போடல்:- சேற்று விதைப்புக்காக நெல்லை நீரில் அமிழ்த்திவிடுதல்
நீர்வடிவு:- நெல் நன்கு நனைந்த பின் (12 மணித்தியாலங்கள்) நீரை வடிய விடுதல்
சோம்பு:- நெல் சூடேறி முளைவிடும் காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரும்பு:- நெல் மணியில் இருந்து முளை தோன்றும் காலம்
தப்புதல்:- பலகையால் சேற்றை மட்டப் படுத்திய பின் எஞ்சியவற்றை மண்வெட்டியால் கிளறி மிதித்துத் மட்டமாக்குதல்
விதைமுதல்:- விதைநெல்லு
கூரன்:- நெல் மணிகள்
மரக்கால்:-நெல் அளக்க பயன் படும் பிரம்பினால் பின்னப்பட்ட வட்ட வடிவமான பத்துக்கொத்து அளவு கொண்டது
முளை எறிதல்:-முளைகட்டப்பட்ட நெல்லை விதைத்தல்
மூலைகொத்தல்:-வரப்ப மூலைகள் விதைப்பின் பின்னர் நெல்தூவிக் கொத்துதல்
நடுகை:-பயிர்களை நாட்டல்
புளிக்கவிடுதல்:-சேற்றுவிதைப்புக்காக நீர்விட்டு உழுது விடுதல்
சிறகை அள்ளல்:-சிறகை என்னும் பறவை நீர் உள்ள இடத்தில் உள்ள நெற்களைத் தனது இறக்கைகளால் கூட்டி உண்ணுதல்
குருவிக்காவல்:-பறவைகளிடமிருந்துசேற்றில் விதைத்த நெல்லைப் பாதுகாத்தல்
முல்லையான் மேய்தல்:-நீரற்ற போது இளம் பயிர்களைக் கறையான் உண்ணல்
கவுண்வீசுதல்:-கவுண் எனப்படும் கயிற்றால் அல்லது நாரால் பின்னப்பட்ட ஆயதம் ஒன்றில் கல் வைத்து மிக தூரத்திற்கு வீசுதல்
கண்கழுவு:-சேற்று விதைப்பின் ஏழநாட்களின் பின் முதன் முதலில் நீர் பாய்ச்சுதல்
நீர்கட்டல்:-வயலில் நீரைத்தேக்கி வைத்தல்
விதை பெட்டி:-விதைப்பதற்குப்பயன்படும் பனை ஓலையால் இறுக்கமாக இழைக்கப்பட்ட பெட்டி அல்லது கடகம்
உமை மிரித்தல்:-வரம்பில் நண்டுகளால் எற்கடுத்தப்படும் நீர் செல்லக்கூடிய துவாரங்களை காலால் மிதித்து அடைத்தல்
மூன்றிலைப்பயிர்:-நெற் பயிரில் மூன்று இலைகள் கொன்றிய நிலை
கம்பிப்பருவம்:-பயிர் வளர்ந்து கருக்கட்டக் கூடிய நிலை
குடலை:-பயிர் கருவுற்ற நிலை
வெடி குடலை:-கதிர்கள் வெளியே வர ஆயத்தமான நிலை
விக்கல் கக்கல்:-கதிர்கள் வெளியே தோன்றும் காலம்
வானம் பார்த்தகதிர்:-நெற்கதிரகள் பூரணமாக வெளியே வந்தநிலை
பால் ஏறும் பருவம்:-நெல் மணிகளில் பால் காணப்படும் நிலை
தலை வணங்குதல்:-நெற்ககிர்கள் முற்றிச் சாயும் நிலை
செங்கல் மங்கல்:-நெல் முற்றிப் பழுக்கத் தொடங்குதல்
பெரும் பழுப்பு:-நெற்கதிர்கள் நன்கு பழுத்த நிலை
பூமி பார்த்த கதிர்:-நெல் நன்கு முற்றிச் சாய்ந்த நிலை
விளைவு:-நெல் நன்கு விளைந்த நிலை
நீர்ச்சாவி:-குடலையில் நீர் புகுந்து பழுதடைந்த நிலை
வெண்கதிர்:-நோய் காரணமாக அல்லது ஈக் குடித்ததன் காரணமாக அல்லது நீர் குடலையில் உட்புதந்ததன் காரணமாக பழுதடைந்த கதிர்
அறக்கொட்டியான் விழுதல்:-ஒருவகை ஈ நெற்கதிர்களை அதன் பாலைக் குடிப்பதால் நெற்கதிர்கள் பழுதடைதல்
ஈப்பார்த்தல்:-ஈப்பூச்சி நெற்கதிர்களில்உள்ள பாலைக் குடித்தல்
அறுவடை:-அருவிவெட்டல்-நெற்கதிர்களை அருவாள்கொண்டு அரிதல் அல்லது வெட்டுதல்
பரத்தை வெட்டு:-ஊரவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒருவருக்க இலவசமாக அருவி வெட்டிக் கொடுத்தல்
உப்பட்டி:-நெற்கதிர்களை வெட்டி காயக்கூடியதாகப் போட்டு விடுதல்
மாவக்கை:-காய்ந்த உப்பட்டிகளை ஒன்று சேர்த்து கையால் ஏடுத்துக் கட்டக்கூடிய வகையில் வைத்தல்
பிள்ளையார் பிடி:-முதன்முதலில் வெட்டி வைக்கப்படும் நெற் கதிர்
கட்டு:- மாவக்கைகளை ஒன்று சேர்த்து கயிற்றால் கட்டுதல்
களம்:-சூடு வழமையாக வைக்கப்படும் அல்லது வைத்த இடம்
களம் திருவுதல்:- சூடு வைப்பதற்காக சூடு வைக்கும் இடத்தைச் செருக்குதல்
தளம்:-சூடு வைப்பதற்காக உயரமாகப் போடப்படும் மேடை போன்றது
சூடுவைத்தல்:-நெற்கதிர்களை நீர் உட்புகாதவாறு அடுக்கிவைத்தல்
படைபோடுதல்:-சூடுவைக்கும் போது தகிர்களைபாடமாகஅடுக்குதல்
உட்கதிர் போடுதல்:-சுற்றிவர வட்டமாக அடுக்கப்பட்ட படையின் உட்பகுதியில் கதிர்களைப்பரப்பி அடுக்குதல்
தாவு கதிர் போடுதல்:-சூட்டின் வெளிப்புறத்தில் உள்ள கதிர்கள் வழுகாத வாறு கதிர்கள் பின்னக் கூடியதாக வைத்தல்
கும்பி போடுதல்:-சூட்டின் நடுப்பகுதி உயரமாக இருப்பதற்காக நெற் கதிர்களைக் குவித்து வைத்தல்
வளையக் கதிர் வைத்தல்:-படைகளுக்கு மேலாக வட்டமாகக் கதிர்களை அடுக்குதல்
முடி சூட்டுதல்:-சூட்டின் மேற்புறம் மழை நீர் உட்புகாத வண்ணம் கூர்வடிவில் வைத்தல்
பழுதை:-வைக்கோல் புரியினால் தடியின் தலைப்பாகத்தில் உள்ள கவர்கள் இறுக்கமாகப் பின்னப்பட்டு சூடு வைக்கும் போது வெளிப்புறம் மட்டமாக இருக்கும் வண்ணம் தட்ட உபயோகிக்கப்படும் தடி
பழுதைக்காரன்(மேத்திரி):-சூட்டின் வெளிப்புறம் வெளியே புடைக்காது தட்டி மட்டப்படுத்துபவர் பழுதைபோடுதல், பழுதையால் தட்டுதல், ஏற்றி அடித்தல், வெளியே வந்த கதிர்கள் உட்செல்லக்கூடிய வகையில் பலமாக அடித்தல்
போர் வைத்தல்:-சூடு வைத்து எஞ்சிய கதிர்களையோ அல்லது மழை வரும் என எதிர் பார்த்தோ சிறிதாக கதிர்களை அடுக்கிவைத்தல்
கட்டுதிரி:-சூடு வைக்கப்படும் போது கட்டுகளில் இருந்து உதிர்ந்து கொட்டுப்படும் நெல்
கதிர் பொறுக்கல்-கட்டுக்கள் கட்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் காணப்படும் தவறிய
கதிர்களைப் பொறுக்குதல்
சூடு அடித்தல்/ சூடு மிரித்தல்:-மாடுகளைக் கொண்டு மிரித்து நெற் கதிர்களில் இருந்து நெல் மணிகளை வேறுபடுத்துதல்
சூடு தள்ளல்:சூடு விழுத்துதல்-கதிர்களை மிரிப்பதற்காக சூட்டில் உள்ள கதிர்களைக் கழே விழுத்துதல்
வேலைகாரன்:-நெற்கதிர்களைக் கிளறுவதற்குப்பயன் படும் "ட" வடிவமான தடி
குல்லம்:- சுளகு
பெரு வாயன்:- கடகம்
பொலி/கூரன்:-நெல்லு
பொலிக் கொடி:-வைக்கோல்
முதற் பொலி:-தூற்றிய பின் முன்பாகத்தில் காணபபடும் நன்கு விளைந்த நெல்
முகப்பொலி- அரைவயிறன்-தூற்றியபின் பின்புறத்தில் காணப்படும் நிறை குறைந்த நெல்
அரைச்சாவி:-நீரின்றி நன்கு விளையாத நெல்
சப்பட்டை/பதர்/சப்பி:- அரிசி அற்ற கோதாகக் காணப்படும் நெல்
கூளம்:-தூசு போற்காணப்படும் கழிவுகள்
கூளமகற்றி/கூட்டுமாறு:-மரக் கொம்பர்களினால் கட்டப்பட்ட கூழத்தை அகற்ற பயன் படும்கூட்டுமாறு போன்றது
பட்டடை:- நெல்லைச் சேமித்து வைப்பதற்காகத் தற்காலிகமாக வைக்கோற் புரியினால் தடிகளை நாட்டி மிக இறுக்கமாகப் பின்னப்பட்டகொம்பறை போன்ற வடிவமைப்புக் கொண்டது
வைக்கோல் புரி:-வைக்கோலை அல்லது நாரைச் சேர்த்து முறுக்குவதன் மூலம் செய்யப்படுவது.
முக்காலி:-மூன்று தடிகளை ஒன்றாக்கி மேற்புறத்தில் கட்டி ஒருவர் அதன் மீது ஏறி நின்று நெல்லைத் தூற்றப் பயன்படுத்தப்படுவது
இளையன்:- சாக்கு
வாதுராயன்:-காற்று
மெல்லுதல்/அள்ளுதல்/கோலுதல்:- தூற்று வதற்கோ அல்லது தூற்றி முடிந்த பின்போ நெல்லை அள்ளுதல்
மெண்டுவா:- அள்ளி வா
கடகடப்பான்:- மாட்டு வண்டி
நெடுவாலன்-பாம்பு
நடையன்:- மாடு
கட்டையடியான்:- சூடுமிரிப்பதற்காகச் சூட்டுக் கட்டையில் கட்டப்படும் மாடு
வாட்டியான்:-சூடு மிரிக்கப்படும் போது வெளிப்புறத்தில் சுற்றிவரும் மாடு
போல்:- சாணம்
சலம்:-நீர்,சிறுநீர்
சாமக்கதிர்:-ஓர் இரவில் மிரிக்கப்படும் கதிரின் அளவில் அரைவாசி
முதல் இரவு:-சூடு மிரிக்க ஆரம்பித்த நாள்
பெருமிரி:- சூடு மிரியல் இறுதிநாள்
பொலி நிறுத்துதல்:- நெல்லையும் வைக்கோலையும் வேறுபடுத்தித் தூற்றுவதற்குத் தயாரான நிலை
அன்னம்:- அமுது-சோறு அல்லது பொங்கல்
பிளா:- நீர் குடிப்பதற்கு பனை ஓலையால் செய்யப்பட்ட பாத்திரம்
தட்டுவம்:- உணவு உண்பதற்காக பனை ஓலையால் செய்யப்பட்ட பாத்திரம்
கலையம்:- நீர் எடுப்பதற்கு அல்லது பால் கறப்பதற்குப் பயன் படும் மட்பாத்திரம்
வெளிச்சக்காரன்:- விளக்கு அல்லது தீப்பந்தம்
சூழ் கொழுத்துதல்:- தீப்பந்தம் கொழுத்துதல்
தீவறை:- விறகுகளை அல்லது மரக்குற்றிகளைச் சேர்த்து ஏற்படுத்தப் பட்ட நெருப்புச்சுவாலை
மினுக்கன்:- விடி வெள்ளி
களப் போர்:- கைம் பெண்களுக்கோ அல்லது மிகவும் வறியவர்களுக்கோ சூடு மிரியலின் இறுதி நாள் வழங்கப்படும் நெல்
களப் போலி:- களப்போர் வாங்க வந்துள்ள பெண்
பொழுது:- சூரியன்
கொழுக்கழட்டி:- மேற்குப் பக்கம்
கொழுக்கழட்டிக்கை மின்னுதல்:- மேற்கில் மின்னினால் மழை இல்லை என்று கருதப்பட்டது
ஈசானம்:- கிழக்குப்பக்கம்
ஈசானத்துக்குள் மின்னல்:- கிழக்கில் மின்னினால் மழை இவ்லை என்று கருதப்பட்டது

மாட்டு வண்டியுடன் தொடர்பான சொற்பதங்கள்

துலா:- வண்டியில் நீளமாக பனை வைரத்தினால் செய்யப்பட்டது அச்சுக்குத்தியுடன் இணைக்கப்பட்டு நுகம் கொழுவப் பயன் படும்
அச்சுக் குத்தி:- பாரம் குறைந்த மரக்குற்றியினால் அச்சை இறுக்கமாக வைத்திருப்பதற்காக செய்யப்பட்ட பகுதி
அச்சு:- இரும்பினால் செய்யப்பட்ட சில்லுகள் நின்று சுழல்வது
அச்சாணி:- அச்சுடன் துலாவைச் சேர்த்து இறுக்கி வைப்பது
பக்கச் சாவி:- சில்லுக்கள் கழராது இருப்பதற்கு எற்ப அச்சின் துவாரத்தில்போடப்படுவது
நுகம்:- வண்டியை இழுக்க துலாவில் பொருத்தி மாடுகளின் தோளில் வைத்துக்கட்டுவது
நுகத்தாணி:- நுகத்துடன் துலாவைச் சேர்த்து கொழுவி விடப்படுவது
கிட்டி:- நுகத்தின் இரு பக்கத்திலும் மாடுகளை பக்கம் சாயாமல் வைத்திருக்கம் தடிகள்
கடைக்கிட்டி:- நுகத்தின் வெளிப்புறத்தில் உள்ள கிட்டிகள் அல்லது தடிகள்
உள்க்கிட்டி:- நுகத்தின் உட்புறமாக உள்ள கிட்டிகள்
நாகவடம்:- துலாவின் முன்புறத்தில் நுகம் கொழுவுவதற்காக இரும்பினால் செய்யப்பட்டது
உச்சிப்பட்டம்:- நுகத்தின் முன்புறத்தில் மறைத்துப் பொருத்தப்படும் தகடு
உச்சி வளையம்:- கவளையம்-நுகத்தின் முன்புறத்திலும் பின்புறத்திலும் பாதுகாப்புக்காக இறுக்கிவிடும் இரும்பு வளையம்
பார்த்தட்டு:- பார்-வண்டியின் பலகையால் ஆன மேற்பரப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தகடு:- பார்ப் பலகைகளை இறுக்கமாக வைத்திருக்கப் பொருத்தப்பட்டுள்ள இரும்புத்தகடு
ஆசனம்:- வண்டி ஓட்டியின் இருக்கை
கிறாதி:- வண்டியின் இருமருங்கிலும் உள்ள பாதுகாப்பான படல் அல்லது தட்டி
கிறாதிச் சட்டம்:- கிறாதி பொருந்தி நிற்பதற்கான மரச் சட்டங்கள்
சில்லு:- வண்டி உருண்டோடும் சிற்கள்
சிலைக்கம்பு:- சில்லின் குடத்தையும் வளையக் குற்றியையும் இணைத்து நிற்கும் கம்பு
வளையக்குத்தி:- சிலைக்கம்பைக் தாங்கிநிற்கும் சில்லின் வெளி வட்டப் பகுதி
குடம்:- சிலைக்கம்பைப் பொருத்தி அச்சில் நின்று சுழலும் பகுதி
தோடு:- குடத்தின் நடுவே பொருத்தப்படும் இரும்பினாலான உருளைவடிவானது
வளையம்:- சில்லின் மேற்பரப்பில் உள்ள இரும்பாலான வளையம்
வளையம் சுடுதல்:- சில்லில் வளையத்தைப் பொருத்து வதற்காக வளையத்தை தீயிட்டு இளக வைத்தல்
பிடிகயிறு:- மாடுகளின் நாணயத்தில் பொருத்தி விடும் கயிறு
நாணயம்:- மூக்குக் கயிறு-மாட்டின் மூக்குத்துவாரத்தின் ஊடாகக் கொழுவிக் கட்டப்படும் கயிறு
கொம்பாணி:- மாடுகளின் கொம்புகளில் அழகுக்காக பொருத்தப்படும் கூர்வடிவானது
பிற்தாங்கு:- வண்டியின் பின்புறத்தில் பாரத்தைத்தாங்கக் கூடியதாக இருக்கும் சிறு குற்றி

முற்தாங்கு:- வண்டி நிலையாக இருப்பகற்கு மாடுகள் இல்லாத வேளை தாங்கிநிற்கும் இருதடிகள்
வெண்டயம்:- மாடுகளின் கழுத்துக்களில் கட்டி ஒலி எழுப்பும் உருண்டையான பெரியசதங்கை
ஏரி:- மாட்டின் தோளிற்கு மேற்புறம் உயரமாக உள்ள பகுதி
சவாரி:- மாட்டு வண்டி ஓட்டப்போட்டி
இலாடன் ஆணி:-இலாடன் பொருத்தப் பயன்படும் ஆணி
காயடித்தல்/நலமடித்தல்:-மாடுகளின் விதைகளை பிசைந்து கரைத்து விடுதல்
நலக்கிட்டி:- நலமடிக்கப்பாவிக்கப்படுமஇருதடிகள் இணைக்கப்பட்டது
தோழிலடித்தல்:- திடீரென நுகம் மாடுகளின் தோள்களில் பலமாக அடிப்பதால் ஏற்படும் நோவு
வலுக்காச்சியடித்தல்:- தோளில் ஏற்படும் காயகங்களை ஆற்ற மேற்கொள்ளப்படும் வைத்திய முறை
குறிசுடதல்:- மாடுகளுக்கு இரும்புக்கம்பியினால் சுட்டு அடையாளம் இடல்

# அளவானவர்கட்கு ஓர் அங்கி....

ஆளத் துடிக்கிறோம்
நம் தேசமதை
வாழத் துடிக்கிறோம்
நம் தேசமதில்

மேலை நாடென்ன
எம் சொந்த நாடா?
பிள்ளைகள் பண்பென்ன
ஐந்தறிவுடனா?

நான்கு சுவர் இரகசியங்கள்
நடுத் தெருவில்
நாளுக்கு நாள் அழியுது
நம் பண்பாடு

என்றும் சிந்தனை
ஈழத்தில் வாழ்ந்துவிட
எடுக்க ஓர் ஈழம்
துளியேனும் பங்கில்லை

விட்டிலுக்கேன் வெளிச்சம்
விடிந்தபின்னே?
பெற்றபின் உன் பங்கு
அங்கு போய் வாழ்வதா?

நீயே
சீர்தூக் கொருகணம்
அங்கே
பங்கோர் மறு கணம்

- சசி -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE CHILDREN'S EDUCATION TRUST OF CANADA

## உங்கள் மழலைச் செல்வங்களின் வருங்கால உயர்ச்சிக்கு!



(Non Profit Foundation)

- அரசாங்க அங்கீகாரம் பெற்ற, பதிவு செய்யப்பட்ட கல்வி சேமிப்புத் திட்டம்(RESP)
- அரசாங்க உறுதியுடன் கூடிய முதலீடுகள் மூலம் வருமானத்திற்கு வரிவிலக்கு (Tax Free) சலுகையுடன் பெருகும் தன்மை கொண்டது.
- 21 வயதிற்குள் எவருக்கும் மாற்றக் கூடியது.
- உலகில் எப்பாகத்திலும் இத்திட்டம் செல்லுபடியாகும்.
- எவரும் மிகச் சிறு தொகைமூலம் பயன் பெறக்கூடியது.
- தினமும் 31 சதவீதம் கணக்கிட்டு அதன் மாத அடிப்படையிலோ அல்லது தங்களுக்குத் தேவையான திட்டத்திலோ புதிதாக பிறந்த குழந்தைகளை இணைத்து சிறப்புப் பயன் பெற்றிடுவீர்.
- 13 வயதுக்குட்பட்டவர்கள் எவரும் சிறு தொகை மூலம் சிறப்பான பயன் பெறக் கூடிய திட்டம்.
- குழந்தை உயர் கல்வியை தொடர முடியாத சந்தர்பங்களில் கட்டிய பணத்தை நடைமுறை வட்டி விகிதத்துடன் பெறக்கூடியதான திட்டமும் உண்டு.

## கண்ணியம் வாய்ந்தது

எங்கள் வங்கி (Depository) - Royal Bank
நம்பிக்கை நிதியம் (Trustee) - Royal Trust
முதலீட்டு ஆலோசனை (Investment Advisor) - Scotia Mc Leod

## *Start your plan today for less than the cost of one cup of coffee per day!*

ஒழுங்கு படுத்தப்பட்ட சிறப்பான சேவையும் இலவச ஆலோசனையும் பெற தொடர்பு கொள்ளப் படவேண்டியவர்.

இ. ராஜ்குமார் B. Com (Hon), முகாமையாளர்
**R. RAJKUMAR – Manager**
Tel/Fax: (416) 332-8457
Pager: (416) 608-2432

Cell: (416) 704-2697




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றியுடன் நன்றி கூறுவோம்

சொல்லாலும், செயலாலும் ஒருமித்து உங்களது பொருளையும் நேரத்தையும் பொதுசேவைக்களித்து மக்களும், சங்கமும் நல்வளர்ச்சியினை எய்திட சகலவகையிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்திட்ட அனைத்துத் தமிழ் நெஞ்சங்கட்கும் முதற்கண் எனது நன்றியறிதல்களைச் சங்கத்தின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிலரது உழைப்பினால் மட்டுமல்லாமல், எல்லாவகையிலும் சகல பிரதேசமக்களினதும், எதுவித கருத்துத்து வேறுபாடுமின்றிப் பரிணமிக்கப்பட்ட ஆளுமைகளின் ஒட்டுமொத்த விளைவே சங்கத்தினது இன்றைய வளர்ச்சியாகும். அவ்வளர்ச்சியின் பயனாகக் கிடைத்த பெறுபேறுதான் இன்றைய வன்னிவிழாவும், இதுவரை நடந்தேறிய செயற்கரிய கருமங்களுமாகும் என்பதனை யாரும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

- இரண்டாவது வருடத்திலும் வன்னிவிழாவைக் கண்டுகளிப்பதன்மூலம் எமது மக்களது வளர்ச்சிக்கும், சங்கத்தினது வளர்ச்சிக்கும் உறுதுணையாகவிருந்து பேராதரவு வழங்கிய தமிழ் மக்களுக்கும்,
- வன்னிச் சங்கத்தின் ஆண்டு மலரை வெளியிடுவதற்கு விளம்பரமூலமாக நிதியுதவி வழங்கிய அனைத்து வர்தகப் பெருமக்கட்கும்,
- வன்னி விழாவினைச் சிறப்பு விழாவாக்கிய அனைத்து இயல், இசை, நாடகக் கலைஞர்கட்கும்,
- சகல போட்டி நிகழ்ச்சிகட்கும் மத்தியஸ்த்தம் வகித்த அனைத்துப் பேராளர்கட்கும், போட்டிகளில் கலந்து சிறப்பித்த போட்டியாளர்கட்கும்,
- ஆண்டு மலர் வெளியீட்டிற்குத் தேவையான கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வழங்கிய பெருந்தகையர்கட்கும்,
- பத்திரிகைமூலம் விளம்பரங்களை வெளியிட்ட ஆசிரியர்கட்கும், வானொலி மூலமாக விளம்பரம் செய்த வானொலி நிறுவனத்தார்க்கும்,
- வன்னி விழா சிறப்புற நடைபெறுவதற்கு விழா மண்டபத்தினை வழங்கிய Toronto நகரக் கல்விச் சபையினருக்கும்,
- முகப்புச்சித்திரத்தினை உயிர்ச் சித்திரமாக்கிய மரியா ஆட் சித்திரக் கலைஞருக்கும்,
- கொம்பறையின் - வர்ண வடிவமைப்புக்களைச் செய்துதந்த Digi Graphics நிறுவனத்தார்க்கும்,
- கொம்பறையினை அழகுற அச்சிட்டுத் தந்த விவேகா அச்சு நிறுவனத்தார்க்கும்,
- வன்னி விழா நிகழ்வுகளைப் புகைப்படமாக்கிய Raju புகைப்பட நிறுவனத்தார்க்கும், விழா நிகழ்ச்சிகளை ஒளியிளை நாடாவில் படமாக்கிய R. K. V. M Kumar நிறுவனத்தார்க்கும்,
- நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு இடவசதிகள் செய்துதந்த யாழ்ப்பாணம் பிளவுஸ் நிறுவன உரிமையாளர்கட்கும்,
- வன்னிச் சங்க நிர்வாக உறுப்பினர்களுடன் இனைந்து விழாவுக்கான சகல ஒழுங்குகளையும் செய்வதற்கு ஒத்துழைப்புத் தந்த முன்னாள் நிர்வாகசபை உறுப்பினர்கட்கும், ஏனைய தொண்டர்கட்கும்,
- வன்னி விழாத் தொடர்பான அனைத்து ஆக்கபூர்வமான உதவிகளையும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ எமக்களித்து விழாவினைச் சிறப்புற வைத்த அனைத்து நல் நெஞ்சங்கட்கும்,

நடா. ஜெயச்சந்திரன்,
நிதியாளர்,
க.வ.ந.சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னி விழா 1998ம் ஆண்டுக்காக நாடாத்தப்பட்ட போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபற்றி முதற் பரிசைப் பெற்றுக்கொண்டவர்கட்கான தங்கப்பதக்கங்கள் பின்வருவோர் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுள்ளது.

1. தண்ணீரூற்று, முள்ளியவளையைச் சேர்ந்த அமரர் உயர் திரு. வைத்திலிங்கம் பாலசிங்கம் (இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தரும், ஓய்வு பெற்ற திடீர் மரணவிசாரனை அதிகாரியும்) அவர்களின் ஞாபகார்த்தமாக (பிறப்பு 31-10-1930 சிவபதம் 29-06-1984) பாலசிங்கம் மயில்வாகனம் குடும்பத்தினரால் (கனடா) வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

2) குமுழமுனை முள்ளியவளையைச் சேர்ந்த செல்வப் புத்திரி பத்மநாதன் சௌமி அவர்களின் ஞாபகார்த்தமாக (பிறப்பு 25-09-1995 சிவபதம் 06-01-1997) திரு. திருமதி. பத்மநாதன் குடும்பத்தினரால் (கனடா) வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

3) கோவில் புளியங்குளம் நெடுங்கேணியைச் சேர்ந்த அமரர் உயர்திரு. நல்லதம்பி செல்லையா (இளைப்பாறிய கிராமசேவை அலுவலர்) அவர்களின் ஞாபகார்த்தமாக (பிறப்பு முள்ளியவளை 28-12-1929 சிவபதம் நெடுங்கேணி 29-01-1969) ஜெயா மங்களசேவை உரிமையாளர் திரு. இந்திரன் அவர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

4) வவுனியா வைரவர் புளியங்குளத்தைச் சேர்ந்த அமரர்கள் உயர்திரு. தா. சிவானந்தன், திருமதி. மாலினி சிவானந்தன் அவர்களின் ஞாபகார்த்தமாக (பிறப்பு 14-07-1958 சிவபதம் 02-03-1995, பிறப்பு 06-01-1961 சிவபதம் 02-03-1995) திரு. திருமதி. நடராஜா குடும்பத்தினரால் (இலண்டன், இங்கிலாந்து) வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

5) முள்ளியவளையைச் சேர்ந்த அமரர் உயர்திரு. செ. குமாரசிங்கம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் ஞாபகார்த்தமாக (பிறப்பு 01-10-1929 சிவபதம் 10-04-1980) திருமதி. மங்கையற்கரசி குமாரசிங்கம் குடும்பத்தினரால் (எற்றோபிக்கோ) வழங்கிக் கௌரவிக்கப்பெற்றது.

## கவிதைப்போட்டியில் வெற்றி பெற்றோர் விபரங்கள்:-

1) திரு. க. அரிராசசிங்கம், மொன்றியல்.

2) திரு. க. தவசீலன், ஸ்காபுரோ.

3) திருமதி. வனிதா இராஜேந்திரன், ரொரன்ரோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னி விழா 98 பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:

### பாலர் பிரிவு


பத்மநாதன் சகானா


புஸ்பநாதன் துர்க்கா

### கீழ்ப் பிரிவு


யோகநாயகம் ஜெகதீஸ்வரன்


சதானந்தன் ஜதீபா


பூரம்பா அமுதன்

### மத்திய பிரிவு


யோகநாயகம் கேதீஸ்வரன்


யோகநாயகம் கோடீஸ்வரன்


ஆனந்தராசா சுவர்ணா

### மேற் பிரிவு


பரமேஸ்வரன் வத்ஸலா


நாகராசா திலீபா


ஸ்ரீதரன் உமாஜானு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலமைப் பரிசில் திட்டம்
## (வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்கள்)
## கனடா வன்னி நலன்புரிச் சங்கம்.

அன்புடன் நிதிவழங்க முன்வரும் பெருந்தகையாளர்கட்கு!

எமது பகுதியில் அன்றாட சீவியத்திற்கு எத்தனையோ குடும்பங்கள் கஸ்ரப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனை நாம் நன்கறிவோம். அதேவேளையில் எத்தனையோ மாணவர்கள் வீட்டிலுள்ள வறுமைநிலை காரணமாக ஆரம்பக் கல்வியையோ அல்லது பல்கலைக்கழகக் கல்வியையோ தொடர முடியாதவர்களாகவும் உள்ளனர். ஆனால் தமிழ்ப் பெற்றோர்களது சதா சிந்தனை, தாம் எத்தகைய கஸ்ரங்களை அனுபவித்தாலும் பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டும் என்ற அவா உடையவர்கள் என்பதனைத் தாங்கள் நன்கறிவீர்கள். சங்கத்தினது தற்போதைய நிதி நிலைமையினையும், நிதி வழங்க முன்வரும் பெருந்தகையாளர்களது பொருளாதார வசதியினையும் கவனத்திற் கொண்டு தற்போது கீழ்வரும் சிறிய திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதன் மூலம் வறிய குடும்பமொன்றின் கல்விச் செலவைக் குறைத்து அவர்களது வருமானத்தை உயர்த்தமுடியும் என்பதோடு, கற்ரோர் எண்ணிக்கையையும் உயர்த்தமுடியுமென நம்புகின்றோம்.

எனவே வெளிநாடுகளில் வாழும் தமிழர்களாகிய நாம் ஓர் வறிய குடும்பம் ஒன்றிற்கு உதவுவதன் மூலம் அவர்களையும் வாழ்வின் முன்னேற்றத்திற்குக் கொண்டுவர முயல்வோமாக!!

1) மிக வருவாய் குறைறைந்த குடும்பத்தைச் சார்ந்த பல்கலைக்கழக புகுமுக மாணவர்கட்கான புலமைப் பரிசில் திட்டம்.

2) மிக வருவா:ய் குறைந்த குடும்பத்தைச் சார்ந்த பல்கலைக்கழக புகுமுக மாணவர்கட்கான கற்கை நெறிகள் அடிப்படையிலான புலமைப் பரிசில் திட்டம்.

3) மிக வருவாய் குறைந்த குடும்பத்தைச் சார்ந்த பாடசாலை மாணவர்கட்கான புலமைப் பரிசில் திட்டம்.

4) பாடசாலை மாணவர்கட்கான பாடநெறிகள் அல்லது கற்கைத் துறைகள் அடிப்படையிலான புலமைப் பரிசில் திட்டம்.

5) மிக வருவாய் குறைந்த அல்லது பராமரிப்பற்ற 18 வயதுக்குக் குறைவான பிள்ளைகளைப் பராமரிக்குந் திட்டம்.

**மனமுவந்து புலமைப்பரிசில்களை வழங்க முன்வரும் பெருந்தகையாளர்களது கவனத்திற்கு:-**

1) நீங்கள் விரும்பிய மாவட்டத்தினைத் தெரிவுசெய்யலாம்.
2) நீங்கள் விரும்பிய கிராமத்தினைத் தெரிவுசெய்யலாம்.
3) நீங்கள் விரும்பிய பாடசாலையைத் தெரிவுசெய்யலாம்.
4) நீங்கள் விரும்பிய பாடநெறியைத் தெரிவுசெய்யலாம்.
5) நீங்கள் விரும்பிய துறையைத் தெரிவுசெய்யலாம்.
6) நீங்கள் விரும்பிய பல்கலைக்கழகத்தினைத் தெரிவுசெய்யலாம்.
7) நீங்கள் விரும்பிய கற்கைநெறியைத் தெரிவுசெய்யலாம்.
8) ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்காவது புலமைப் பரிசிலைக் கொடுப்பதற்கு முன்வருதல் வேண்டும்.
9) ஆகக் குறைந்தது மாதாந்தம் இலங்கை ரூபாயில் 1000.00 வரையில் கொடுப்பதற்கு முன்வருல் வேண்டும்.
10) புலமைப் பரிசிலினது பெயரை நிதியீடு செய்பவரே தனது சொந்த விருப்பத்தில் தீர்மானிக்கலாம்.
11) தாங்கள் விரும்புவீர்களாயின் ஒரு வருடத்திற்குரிய முழுப் புலமைப் பரிசில் பணத்தினையும் அல்லது புலமைப் பரிசில் காலத்திற்குரிய முழுப் பணத்தினையும் அல்லது மாதாந்தமாகப் பணத்தினைச் சங்கப் பொருளாளரிடம் சமர்ப்பித்துப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளளாம்.
12) தங்களது நிதியிலிருந்து புலமைப் பரிசிலினைப் பெறுபவரது விபரங்கள் அனைத்தும் தங்கட்குச் சமர்பிக்கப்படும்.
13) தங்களது புலமைப் பரிசில் நிதி தொடர்பான கணக்குகள் அனைத்தும் தங்களது பார்வைக்காக ஒப்படைக்கப்படும்.
14) தங்கட்கு வசதியீனங்கள் ஏற்படும்போது ஒரு வருடம் முடிந்தபின்னர் ஒரு மாத முன்னறிவித்தல் கொடுத்து புலமைப் பரிசில் கொடுப்பனவை இடைநிறுத்தலாம்.

மேற்படி புலமைப் பரிசில் திட்டத்தில் சேர்ந்து கனடா - வன்னி நலன்புரிச்ங்கத்தின் ஊடாக நிதியுதவி செய்ய விரும்பும் பெருந்தகையாளர்களும், யாருக்கு உதவி அவசியமாகத் தேவைப்படுகின்றது என்ற விபரங்களைத் தந்துதவுவதற்கும், நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி

#706
18 THORNKLIP PK
TORONTO (ONT)
Z2X 4F4
CANADA
(416)696-1375


#1507
100 PRUDENTIAL .DR
SCARBOROUGH (ONT)
M1P 4V4
CANADA
(416)7573007

University of Jaffna
135016
Library
135016
ARCHIVES
UNIVERSITY OF JAFFNA LIBRARY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்போது அதே நாளிலேயே கிடைக்கிறது....



SAME DAY SERVICE

# S.V.G

## துரித பணமாற்று சேவை

வவுனியா, திருகோணமலை, மன்னார் மாவட்டங்களுக்கு காலதாமதமின்றி உடனடியாகப் பணமாற்றுச் சேவை. யாழ்ப்பாணம், கொழும்பு, சென்னை, திருச்சி, லண்டன், சுவிஸ், ஜேர்மனி, பரிஸ் ஆகிய இடங்களுக்கு உடனடியான துரித பணமாற்றுச் சேவை வழங்கப்படுகிறது!!

582 PARLIAMENT STREET
(Wellesley & Parleament)
Toronto, Ontario
(416) 975-0723
Fax: (416) 975-9426

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org